ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

கம்பநாட்டாழ்வா ரருளிச்செய்தது.

ஆறுவது

உயுத்தகாண்டம்.

பெங்களூர். வேலுசோ[illegible]

ம-ா-ா-ஸ்ரீ- மெய்யூர்

சுப்பராயமுதலியார்

கேட்டுக்கொண்டபடி

திரிசிரபுரம்

தமிழ்த்தலைமைப்புலவராகிய

வி. கோவிந்தபிள்ளையவர்களால்

பலபிரதிகளைக்கொண் டாராய்ந்து

வழுஉக்களைக் களைந்து

புங்கத்தூர்

அருணாசலமுதலியார் குமாரர்

கந்தசாமிமுதலியாரால்

பால்குரிசி

குமாரையரவர்களது

கலாநிதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

உருத்திரோற்காரிஸு பங்குனிமீ

௳ இரண்டாம்புத்தகம்.



ஸ்ரீராமஜெயம்.

படல அட்டவணை.


படல அட்டவணை - முற்றிற்று.

பிழைதிருத்தம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௨	௧௨	௪	வேட்டுதி	வெட்டுதி
௯	௬௯	௩	பெருந்தே	பொருதே
௨௩	௬0	௩	றுன்றேடு	றுன்றொடு
௨௫	௭௬	௪	வெறன்ன	வேறன்ன
,,	௮௧	௧	சாத்தோடு	சாத்தொடு
௨௭	௯௩	௩	நிமிர்வாய	நிமிர்வாய்
௫௧	௪௯	௨	கதிா	கதிர்
௫௬	௯௬	௧	எரிசுடர்	எறிசுடர்
௫௯	௧௧	௩	சிங்கலினமிர்த	சிங்கலிலமிர்த
௬௧	௨	௪	தணணன்	தண்ணன்
௬௩	௧௭	௩	கரும்முற்றி	கருமமுற்றி
,,	,,	,,	யரனவண்	யானவண்
௬௭	௫௬	௧	கஸ்ணிர்	கண்ணீர்
௭௧	௯௪	௧	மெத்தின	மேத்தின்
௭௨	௨	௨	ம்வற்றி	மவற்றி
௧௧௧	௪௨	௪	வில்விர	வில்லிர
௧௨௨	௮௮	௧	கண்ண	கண்ணன்
௧௪௩	௪௫	௩	ஒனனே	ஒன்னே
௧௪௪	௩	௨	கிளலோ	கிளவலோ
௧௪௬	௨௨	௪	யீனற	யீன்ற
௧௪௭	௨௮	௧	முகத்தன்	முகத்தன
௧௪௧	௩௭	௩	டாக்க்	டாக்க
௧௫௫	௪0	௩	தேர்	தே்
௧௫௮	௬	௨	கேட்டி	கேட்டி
௧௫௯	௧௪	௨	குலவு	குவவு
	௮௪	௧	காமவை	கரமவை
	௧௧௭	௨	சதமுக	சதமக
• ௮௪	௨௩௮	௧	கேய	கேயு
௧௯௧	௫0	௩	ஔஞக்	றெஞக்
௧௯௭	௧௧0	௩	சென்ருலும்	சென்றுஅ
௨௨0	௩௧௧	௩	போன்	போல்
,,	,,	௪	வழுவிய	வழுவில
,,	௩௧௬	௨	துயிலுற	துயிலுற
௨௨௨	௩௩௪	௧	எவ்வெவ்	எவ்வெவ
௨௨௯	௩	௪	நருரு	நாரும்
௨௩௧	௧௭	௧	னின்ற	னின்ற
௨௩௩	௩௪	௪	தத்தம்	தத்தம

பிழைதிருத்தம்-முற்றிற்று.

ஹரிஓம்.



நன்றாக குருவாழ்க குருவேதுணை.

ஸ்ரீமதேராமானுஜாயநம:

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

௬-வது. யுத்தகாண்டம்.

௧௬-வது—படைத்தலைவர்வதைப்படலம்.

ஆர்த்தெழுமோசைகேட்டவரக்கருமுரசமார்ப்பப்
போர்த்தொழில்வேடம்பூண்டுபொங்கினர்புகுந்துமொய்த்தார்
தார்த்தடமார்பன்றன்னைத்தாவிடையென்னச்சார்ந்தார்
பார்த்தனன்முனிந்துமன்னனினையனபகர்வதானான். (௧)

மாபெரும்பக்கனோடுவான்புகைக்கண்ணன்வந்தா
னேவுதியெம்மையென்பார்தம்முகமினிதினோக்கிப்
போவதுபுரிதிரென்னப்புகறலும்பொழுதனூதர்
தேவமற்றிவர்கள்செய்கைகேளெனத்தெரியச்சொன்னார் (௨)

ஆனையும்பரியுந்தேருமரக்கருமமைந்தவாளித்
தானையும்வியநின்றதலைமகன்றனிமையோரா
மானவன்வாளிவாளியென்கின்றமழலைவாயார்
போனவர்மீளவந்துபுகுந்தனர்போலுமென்றார். (௩)

வேறு.

அற்றவர்கூறலுமாரழலிற்றாய்
முற்றியகோபமுருங்கமுனிந்தா
னிற்றிதுவோவிவர்சேவகமென்னாப்
பற்றுயிரென்றனன்வெம்மைபயின்றான். (௪)

என்றலுமெய்தினர்செங்கரனென்பார்
பின்றினவோராவலிந்துபிடித்தார்
நின்றனராயிடைநீலனிறுத்தான்
கொன்றிடுவீரலிர்கொண்மினிதென்றான். (௫)

ஏற்றமினிச்செயல்வேறிலையீர்வீர்
நாற்றுறுகாத்துயர்நாசியைநாமக்
கோற்றருதிண்பணைகொட்டினிர்கொண்டேர்
சாற்றுமினஞ்சினனொன்றுரைதந்தே (௬)

அக்கணனேயயில்வாளினர்நேரா
மிக்குயர்நாசியையீரவிரைந்தார்
புக்கனரப்பொழுதிற்புகழ்தக்கோய்
தக்கிலதென்றனன்மாலிதடுத்தான். (௭)

அஞ்சமமஞ்சியழிந்துளரானார்
வெஞ்சமம்வேறலும்வென்றியதன்றாய்த்
துஞ்சலுமென்றிவைதொல்லையவன்றே
நஞ்செனவாருளராண்மைதகைந்தார். (௮)

அந்தரமொன்றுமதிந்திலையன்றே
வந்தனநம்வயினெத்தனைமன்று
தந்திரம்வானவர்தானவரோடு
மிந்திரனஞ்சினனென்றுதியன்றே. (௯)

வருணனடுங்கினன்வந்துவணங்கிக்
கருணைபெறுந்துணையும்முயிர்கால்வா
னிருணிறவஞ்சகரெங்குளரொந்தாய்
பருணிதர்தண்டமிதன்றுபகர்ந்தால். (௧௦)

தொருநாளுபகுத்தபரப்பி
த்தனைவெள்ளமராக்கரவிந்தா
காத்தொருமூவர்பிழைத்தனருய்ந்தார்
ந்தகர்யாரினிவீரம்விளைப்பார். (௧௧)

பாசமுமிற்றதுபாதியின்மேலும்
நாசமுமுற்றதுநம்பிநடந்தாய்
பூசன்முகத்தொருகான்முளைபோத
நீசனைவேட்டுதியோநெடுநாசி (௧௨)

வாழியிலக்குவனென்னின்மறுக்குற்
றாழியாக்கர்தம்வாயிலடைப்பா
ரேழுகடற்றுணையோவிளிநாசி
யூழியழுத்திடினும்மலவாதால். (௧௩)

அறநடந்தவனைத்தொழுதந்நா
ளொருநெடுஞ்செருவஞ்சியுடைந்தார்
நிதிலர்நின்றவர்சேனையினின்றார்
பாதியின்மேலுளர்நாசிபடைத்தார். (௧௪)

விட்டிலைசீதையையாமெனில்வீர
ரொட்டியபோருளதோவொருநாளே
வெட்டுதிராசியைவெந்தொழில்வல்லோர்
பட்டிலவொன்றிலையென்றுபகர்ந்தான். (௧௫)

ஆறின்பின்னரழிந்தனரன்னார்
தேறினரன்னதுசிந்தையுணர்ந்தார்
சீறியநெஞ்சினர்செங்கணரொன்றே
கூறினர்தந்நிலைசெய்கைகுறித்தார். (௧௬)

உன்மகனொல்கியொதுங்கினனென்றே
மின்னகுவானிடையேகவிரைந்தா
னன்னதின்மாயையியற்றியகன்று
னிங்கணெய்தினனுய்ந்தனனேந்தாய். (௧௭)

இப்பகலொன்றினினானையிதெல்லா
முப்பகறீர்கிலமாவிமுடிப்போம்
வெப்பகலாவெரிவெந்தழல்வெந்த
செப்பகல்வெண்ணெயினேன்மைதெரிந்தோய். (௧௮)

விட்டனையெம்மைவிடுத்தினிவெம்போர்
பட்டனரென்றுபடுத்தனரொன்றே
கெட்டனவொன்பதுகேளலையென்று
வொட்டினராவிமுடிக்கவுவந்தார். (௧௯)

அன்னவர்தம்மொடுமையிருவெள்ள
மின்னுபடைக்கையரக்கரைவிட்டான்
சொன்னதொகைக்கமையானைசுடர்த்தேர்
துன்னவயப்பரியோடுதொகுத்தான் (௨௦)

நெய்யழல்வேள்விநெடும்பகைநேர்விண்
டைவருசூரியசத்துருவென்பான்
பெய்கழன்மாலிபிசாசனெனும்பேர்
வெய்யவன்வச்சிரம்வென்றவெயிற்றான் (௨௧)

என்றவரோடுமெழுந்துலகேழும்
வென்றவனேவலின்முன்னம்விரைந்தார்
சென்றனமாகரிதேர்பரிசெல்லக்
குன்றினமென்னநடந்தனகொட்பால். (௨௨)

விண்ணைவிழுங்கியதூளியர்வென்றோர்
கண்ணைவிழுங்குதலிற்கனகாணு
மெண்ணைவிழுங்கியசேனையையாரும்
பண்ணைவிழுங்கவுணர்ந்திலர்பண்பால். (௨௩)

பேரிகலித்தனபேருலகைக்கு
ழேரிகலித்தனவாமெனயானைக்
காரிகலிக்கடலோடுகலிப்ப
மாரிகலித்தெனவாசிகலிப்ப (௨௪)

சென்றனசென்றசுவட்டொடுசெல்லா
நின்றுபிணங்கியகவ்வையினில்லா
வொன்றினையொன்றுதுடர்ந்தனவோடைக்
குன்றுநடந்தனபோற்கொலையானை. (௨௫)

மாகநெடுங்கரம்வானின்வழங்கா
மேகநெடும்புனல்வீசிடமண்மேற்
போகவிலங்கினவுண்டனபோலாங்
காகநெடுங்களியானைகளிப்பால். (௨௬)

எரிந்தெழுபல்படையின்னொளிவீர
ரருங்கலமின்னொளிதேர்பரியானை
பொருந்தியபன்னொளிதாரொளிபொங்க
விரிந்தனபேரிருளெண்டிசைதோறும். (௨௭)

எய்தியசேனையையீசனெதிர்ந்தான்
வெய்திவண்வந்தவன்மாயையின்வெற்றி
செய்தவனைகொறெரித்திடியென்று
னெய்யெனவீடணனின்றிதுணர்த்தான். (௨௮)

வேறு.

முழைக்குலச்சீயம்வெம்போர்வேட்டதுமுனிந்ததென்னப்
புழைப்பிறையெயிற்றுப்பேழ்வாய்ப்பொருகளிறென்னவார்த்துத்
தழைப்பொழிவாளிப்புட்டில்கட்டிவிற்றுங்கிச்சார்வான்
மழைக்குரற்றேரின்மேலான்மாபெரும்பக்கன்மன்னோ. (௨௯)

வேறு.

சிகைசிறக்கனல்பொழிதெறுகட்செக்கரான்
பகைசிறத்தவருயிர்பருகும்பண்பினா
னகைசிறப்பெருங்கடல்வாயினக்குவான்
புகைசிறக்கண்ணவன்பொலம்பொற்றேரினான். (௩0)

பிச்சரிற்றிகைத்தவன்பெற்றபோரினான்
முச்சிரத்தயிலினன்மூரித்தேரினா
விச்சிரமும்மதேயெனவந்தெய்துவான்
வச்சிரத்தெயிற்றவன்மலையின்மேனியான். (௩௧)

காலையுமனத்தையும்பிறகுகாண்பதோர்
வாலுளைப்புரவியின்மடித்தவாயினான்
வேலையினார்ப்பினன்விண்ணைமீக்கொளுஞ்
சூலமொன்றுடையவன்பிசாசன்றோன்றுவான். (௩௨)

சூரியன்பகைஞனுஞ்சூரிதத்தேரின
னீர்தருமுழக்கினனெருப்பின்வெம்மையா
னாரியவேள்வியின்பகைஞனுமரோ
சோரியுங்கனலியுஞ்சொரியுங்கண்ணினான். (௩௩)

சாலிவண்கதிர்நிகர்புரவித்தானையான்
மூலிவெங்கொடுமையிற்றவத்தின்முற்றினான்
சூலியும்வெருக்கொளத்தேரிற்றோன்றுவான்
மாலியென்றடிமுறைவணங்கிக்கூறுவான். (௩௪)

ஆர்த்தெதிர்நடந்ததவ்வரியின்றானையுந்
தீர்த்தனைவாழ்த்தியுற்றிரண்டுசேனையும்
போர்த்தொழில்புரிந்தனர்புலவர்போக்கிலார்
வேர்த்துயிர்பதைத்தனர்நடுங்கிவிம்மியே. (௩௫)

கல்லெறிந்தனர்கடையுருமிற்காலென
வில்லெறிந்தனகணைவிசும்பின்மேகத்த
செல்லெறிந்தனவெனச்சிதறிவீழ்ந்தன
பல்லெறிந்தனதலைமலையின்பண்பென. (௩௬)

கடம்படுகரிபடக்கலினமாப்பட
விடம்படுசில்லியினீர்த்ததேர்பட
வுடம்படுமரக்கராயனந்தனுச்சியிற்
படம்படுமெனப்படுங்கவியின்கற்படை. (௩௭)

கொலையொடுங்காநெடும்புயத்தின்குன்றொடு
நிலைநெடுங்காலொடுநிமிர்ந்தவாலொடு
மலையொடுமரத்தொடுங்கவியின்வன்னெடுந்
தலையொடும்போம்விசைத்தெறிந்தசக்கரம். (௩௮)

ஆண்டகைகவிக்குலத்தலைவராக்கையைக்
கீண்டனபுலியினைக்கிழித்தமாக்கரி
தாண்டுவகுலப்பரிமனத்திற்றுவுவ
தூண்டினர்கைவிசைத்தெறிந்ததோமரம். (௩௯)

சில்லியந்தேர்க்கொடிசிதையச்சாரதி
பல்லுடைநெடுந்தலைமடியப்பாதகர்
வில்லொடுகழுத்திறப்பகட்டைவீட்டுமால்
கல்லெனக்கவிக்குலம்வீசுங்கல்லரோ (௪0)

நாகமுந்தியமலைமுழைமுயிற்கட்செவி
யூகமுந்தினவெனவொளிக்குமொள்ளிலை
யாகமுந்துறுநெடுங்கவியிருக்கையிற்
றாகமுந்தினரொடுத்தெறியுஞ்சூலமே. (௩௧)

வால்பிடித்தடிக்கும்வானரத்தைமால்கரி
கால்பிடித்தடிக்குமக்கரியினைக்கவி
தோல்பிடித்தரக்கரையெறியுஞ்சூர்முக
வேல்பிடித்தெறிவரம்முசலவெங்கணூர். (௩௨)

முற்படுகவிக்குலமுடுகவீசிய
கற்படக்களம்படுமரக்கர்கார்க்கடல்
பற்படுதலைபடப்படுவர்பாதகர்
விற்படுகணைபடக்குரங்கின்வேலையே. (௩௩)

எயிற்றொடுநெடுந்தலையிட்டகல்லொடும்
வயிற்றிடைப்புகப்பலபகழும்வைகிய
பயிற்றியராயினுந்தெரிக்கும்பண்பில
ரயிர்ப்பர்தங்கணவரையணுகியக்கலார். (௩௪)

இச்சுறுவிசிபடக்கிளர்பொற்றேர்க்கிழ
யச்சிறச்செல்கிலவாடல்வாம்பரி
யெச்சுறுதுயரிடையெய்தவித்துறு
முச்சறுவாட்கைகளைமுண்டுளோரென. (௩௫)

மீயவர்யாவரும்விளியவெங்கரி
சேயருங்குருதியிற்றிரிவசேர்வில
நாயகராளொடுமெலியநவ்விதம்
பாயொடுவேலையிற்றிரியும்பண்பென. (௩௬)

படையொடுமேலவர்மடியப்பல்பரி
யிடையிடைநரவிழுந்திழிந்தபண்பன
கடனெடுங்குருதியகனலிகாலுறு
வடவையையிகர்த்தனவுதிரவாயன. (௩௭)

வேறு.

தூமக்கண்ணனுமனுமனுமெதிரெதிர்தடர்ந்தார்
தாமத்தங்கதன்மாபெரும்பக்கனைத்தடுத்தான்
சேமத்திண்சிலைமாலியுநீலனுஞ்செறுத்தார்
வாமப்போர்வயப்பிசாசனும்பனசனுமலைந்தார். (௩௮)

சூரியன்பெரும்பகைஞனுஞ்சூரியன்மகனு
நேரொதிர்த்தனர்நெருப்புடைவேள்வியின்பகையு
மாரியன்றனித்தம்பியுமவரொதிரடர்ந்தார்
வீரவச்சிரத்தெயிற்றனுமிடபனுமிடைந்தார். (௩௯)

வெங்கண்வெள்ளெயிற்றரக்கரிற்கவிக்குலவீரச்
சிங்கமன்னபோர்த்தலைவரிற்றலைவராய்த்தெரிந்தா
ரங்கமர்க்களத்தொருவரோடொருவர்சென்றடர்த்தார்
பொங்குவெஞ்செருத்தேவருநடுக்குறப்பொருதார். (௫௰)

இன்னகாலையினீரைந்நூறுவெள்ளம்வந்தேற்ற
யின்னும்வெள்ளெயிற்றரக்கர்தஞ்சேனையைவீர
னன்னவெஞ்சமத்தாறுவெள்ளத்தையுமவித்தான்
சொன்னநாலையுமிலக்குவன்பகழியாற்றுலைத்தான். (௫௧)

உப்புடைக்கடன்மடுத்தனவுதிரநீரோத
மப்பொடொத்தனகடுத்திலவார்கலிமுழுதுஞ்
செப்புருக்கெனத்தெரிந்தனமீன்குலஞ்செருக்கித்
துப்பொடொத்தனமுத்திளங்குன்றியிற்றோன்ற. (௫௨)

தத்துநீர்க்கடன்முழுவதுங்குருதியாய்த்தழங்கச்
சித்திரக்குலப்பன்னிறமணிகளுஞ்சேர்ந்த
தொத்துவேறுருத்தெரியலவுயர்மதத்தோங்கன்
மத்தகத்துகுதரளமும்வளைசொரிமுத்தும். (௫௩)

அதிரவெஞ்செருவன்னதொன்றமைக்கின்றவளவிற்
கதிரவன்கொழுஞ்சேயொளிக்கற்றையங்கரத்தா
னெதிரிற்பல்வகைக்கரிசறுத்தெழுமுறைமூழ்கி
யுதிரவெள்ளத்துளெழுந்தவனுமெனவுதித்தான். (௫௪)

அரக்கனொன்றபேரிருளினையிராமனப்போரிற்
றுரக்கவெஞ்சுடர்க்கதிரவன்புறத்திருடுலைக்கப்
புரக்கும்வெய்யவரிருவரையுடையவர்போல
நிரைக்குநல்லொளிபரந்தனவுலகெலாநிமிர. (௫௫)

நிலைகொள்பேரிருணீங்கலுநிலத்திடைநின்ற
மலையும்வேலையும்வரம்பிலவயின்றொறும்பரந்த
துலைவிறன்மயத்தொன்றுவபோன்றனசோரி
யலைகொள்வேலையுமரும்பிணக்குன்றமுநிரவி. (௫௬)

நிலந்தவாதசெந்நீரிடைநிணக்கொழுஞ்சேற்றிற்
புலர்ந்தகாலையிற்பொறிவரியம்பெனுந்தும்பி
கலந்ததாமரைப்பெருவனங்கதிரவன்கரத்தால்
மலர்ந்ததாமெனப்பொலிந்தனவுலந்தவர்வதனம். (௫௭)

தேரும்யானையும்புரவியும்விரவினதேவ
ருருமானமுமுடிக்களுமுலகமுமலையும்
பெருமானவெங்காலத்துக்கால்பொரப்பிணங்கிப்
பாரின்வீழ்ந்தனபோன்றனகிடந்தனபரந்து. (௫௮)

எல்லிகற்றியமதிநிகர்முகத்தியரெரிவி
முல்லிகற்றியகோதையர்களம்புகுந்தடைந்தார்
புல்லிருற்றியவுயிரினர்பொருந்தினர்கிடந்தார்
வல்லிகற்றியமாமரநிகர்த்தனர்வயவர். (௫௯)

வணங்குநுண்ணிடைமலைமுலைச்செக்கர்வான்கூந்த
லணங்குவெள்ளெயிறாக்கியர்களத்துவந்தடைந்தார்
குணங்கொளுந்துணைக்கணவர்தம்பசுந்தலைகொடாது
பிணங்குபேய்களைப்பிளந்தனர்துடர்ந்தனர்பிடித்தார். (௬௦)

உடரும்வெள்வளைத்தோளிதன்கொழுநனைத்துடர்வா
ளுடலுமங்கமுங்கண்டுகொண்டொருவழியுய்யாள்
குடலுமீருங்கண்ணுமோர்குறுநரிகொள்ளத்
துடரவாற்றலணெடிதுயிர்த்தாருயிர்துறந்தாள். (௬௧)

பெரியவாட்டடங்கண்ணியர்கணவர்தம்பெருந்தோ
ளரியுமோரியுங்கவர்ந்தவாவணங்கவால்கா
விரியல்போவனதுடர்ந்தயலினப்படைகிடந்த
வரியநொந்திலவலத்தகச்சீறடியந்தோ. (௬௨)

நலங்கொணெஞ்சினர்தந்துணைக்கணவனைநாடி
விலங்கலன்னவான்பெரும்பிணக்குப்பையின்மேலோ
ரலங்கலோதியாருந்துணைபிரிந்துநின்றகவும்
பொலங்கொண்மாமயில்வரையினமேற்றிரிவனபோன்றார். (௬௩)

சிலர்தம்பெருங்கணவர்கள்சினத்தொழிற்சினத்தாற்
பலரும்வாய்மடித்துயிர்துறந்தார்களைப்பார்த்தா
ரலகில்வெள்ளெயிற்றுவிதழ்மறைத்துளதயலாள்
கலவியின்குறிகாண்டுமென்றுமெனக்கனன்றார். (௬௪)

நவைசெய்வன்றலையிழந்ததம்மன்பனைநணுகி
யவசமெய்திடமடந்தையருருத்தெரிந்தறியார்
துவசமன்னதங்கூருகிர்ப்பெருங்குறிதோண்மேற்
கவசநீங்கினர்க்கண்டுகண்டாருயிர்கழித்தார். (௬௫)

மாரியாக்கியகண்ணியர்கணவர்தம்வயிரப்
போரியாக்கைகணாடியப்பொருகளம்புகுந்தார்
பேரியாக்கையின்பிணப்பெருங்குன்றிடைப்பிறந்த
சோரியாற்றிடையழுந்தினரின்னுயிர்துறந்தார். (௬௬)

வேறு.

வரைநின்றுயர்தாணெடுமாருதியும்
புகையின்பொருகண்ணவனும்பொருவார்
மிகைசென்றிலர்பின்றிலர்வென்றிலராற்
றிகைசென்றதிரம்பியதீயுமிழ்வார். (௬௭)

ஐயஞ்சழல்வாளியழற்கொடியோன்
மெய்யஞ்சனைகான்முனைமேனியின்மேல்
வையஞ்சிலையாறுவழங்கினனால்
மொய்யஞ்சனமேகமுனிந்தனையான். (சுஅ)

பாழிப்புயமம்புருவப்படலும்
வீழிக்கனிபோற்புனல்வீசவெகுண்
டாழிப்பெருந்தேரையழித்தனனா
லூழிப்பெயர்கார்நிகரொண்டிறலான். (சுகூ)

சில்லிப்பொருதேர்சிதையச்சிலையோ
டெல்லிற்பொலிவிண்ணின்விசைத்தெழுவான்
வில்லிற்றிலக்குவன்வெங்கணையாற்
புல்லித்தரையிட்டனனேர்பொருவான். (எ0)

மலையிற்பெரியானுடன்மண்ணிடையிட்
டுலறக்கடருவியகால்கொடுதைத்
தலையிற்பருகிப்பகுவாயனல்கா
றலைகைக்கொடெறிந்துதணிந்தனனால். (எக)

மாபக்கனுமங்கதனும்மலைவார்
தீபத்தினெரிந்தெழுசெங்கணினார்
கோபத்தினர்கொல்லநினைந்தடர்வார்
தூபத்தினுயிர்ப்பர்துடர்ந்தனரால். (எஉ)

ஐம்பத்தொருவெங்கணையங்கதன்மா
மொய்ம்பிற்புகவுய்த்தனன்மொய்தொழிலான்
வெம்பிக்களியோடுவிளிந்தெழுதின்
கம்பக்கரியுண்டைகடாயெனவே. (எங)

ஊரோடுமடுத்தொளியோனையுறுங்
காரோடுநிகர்க்கதநாகமனான்
றேரோடுமெடுத்துயர்திண்கையினாற்
பாரோடுமடுத்தெறிபண்பிடையே. (எச)

வில்லைச்செலவீசிவிழுந்தழிய
மெல்லிற்பொலிதேரிடைநின்றிழியாச்
சொல்லிற்பிழையாதொருசூலமவன்
மல்லிற்பொலிமார்பின்வழங்கினனால். (எரு)

சூலம்மெனினன்றிதுதொல்லைவருங்
காலம்மெனவுன்னுகருத்தினனாய்
ஞாலம்முடையானதனாமறவோ
னாலம்முடையம்பினறுத்தனனால். (எசு)

உளந்தாவினையாதமுன்றுற்றுதவாக்
கிளர்ந்தாளையிரண்டுகிழித்துணையாய்ப்
பிளந்தாலுலகேழினொடேழுபெயர்ந்
தளந்தான்வலிநன்றெனவங்கதனே. (௭௭)

மாமாலியுநிலனும்வானவர்தங்
கோமானொடுதானவர்கோனிகலே
யாமாறமலைந்தனனொன்றிமையோர்
பூமாரிபொழிந்துபுகழ்ந்தனரால். (௭௮)

கல்லொன்றுகடாவியகாலையவன்
வில்லொன்றிருகூறுவிளைத்திடலுஞ்
செல்லென்றியவாளொடுதேரினனாய்
நில்லென்றிடைசென்றுநெருக்கினனால். (௭௯)

அற்றத்தொழிலெய்தலுமக்கணமே
மற்றப்புறநின்றவன்வந்தனுகாக்
கொற்றக்குமுதன்னொருகுன்றுகொளா
வெற்றப்பொருதேர்பொடியெய்தியதால். (௮௦)

தாளார்மரநிலனெடுத்தனதன்
வாளான்மடிவித்துவலித்தடர்வான்
றோளாசறவாளிதுரந்தனனால்
மீளாவினைநாறும்விடைக்கிளையான். (௮௧)

மின்போன்மிளிர்வாளொடுதோள்விழவுந்
தன்போர்தவிராதவனைச்சலியா
வென்போலியர்போரொனிலன்றிதுவோர்
புன்போரெனநின்றயல்போயினனால். (௮௨)

நீர்வீளாவலனெனதிர்நேர்வரவும்
பேர்வீரனைவாசிபிடித்தவனை
யார்வீரதையின்னசெய்தார்களெனுப்
போர்வீரருவந்துபுகழ்ந்தனரால். (௮௩)

வேழ்விப்பகையோடுவெகுண்டடருந்
தோள்வித்தகனங்கொர்சுடர்க்கணையால்
வாழ்வித்தனையென்றவன்மார்பகலம்
போழ்வித்தனனுயிர்போயினனால். (௮௪)

மல்லற்றடமார்பன்வடிக்கணையா
லெல்லொத்துயர்வேழ்வியிரும்பகைஞன்
வில்லற்றதுதோளொடுமேனியிருங்
கல்லற்றகழுத்தொடுகால்களொடும். (௮௫)

தன்றுணைதனையமுன்புதடுத்தொருநாள்
வென்றுணைவிலங்கலின்மேனியனைப்
பின்றுதவலத்துயர்பெற்றியனைக்
கொன்றான்கவியின்குலமாளுடையான். (௮௬)

இடபன்றனிவெஞ்சமமுற்றெதிரும்
விடவெங்கணையிற்றவன்விண்ணதிரக்
கடவுங்கதழ்தேர்கடவாளினொடும்
படவங்கொருகுன்றுபடைத்தனனால். (௮௭)

திண்டோழியச்சிலைவிட்டொருதன்
றண்டோடுமிழுந்துதலத்தினனா
யுண்டோவுயிரென்னவருத்துருமோ
டெண்டோளானுமுட்கிடவெற்றினனால். (௮௮)

அடியுண்டவனாவிகுலைந்தயரா
விடியுண்டமலைக்குவடிற்றனபோல்
முடியும்மெனுமெல்லையின்முர்தின( )
னெடியன்குறியன்னெனுநீர்மையினான். (௮௯)

கிடைத்தானிகன்மாருதியைக்கிளர்வா
னடைத்தானெனமீதுமராக்கையினைப்
படைத்தானைநெடும்புகழ்பைங்கழலான்
புடைத்தானவன்மார்புபொடிச்சிதற. (௯0)

எற்றிப்பெயர்வானையிடக்கையினாற்
பற்றிக்கிளர்தண்டுபறித்தெறியா
வெற்றிக்கிளர்கைகொடுமெய்வலிபோய்
முற்றித்தனிகுத்தமுடிந்தனனால். (௯௧)

காத்தோமரம்வீசுறுகைக்கதழ்வன்
போத்தோர்புலிபோற்பனசன்புரளக்
கோத்தோடநெடுங்குருதிப்புனறிண்
மாத்தோமரமார்பின்வழங்கினனால். (௯௨)

கார்மேலினனோகடன்மேலினனோ
பார்மேலினனோபகன்மேலினனோ
யார்மேலினனோவினவென்றறியோம்
போர்மேலினன்வாசியெனும்பொறியான். (௯௩)

நூறாயிரகோடிகொலன்றுகொலென்
றாறாயிரவானவரும்மறிவிற்
றேறாவகைநின்றுதிரிந்துளதாற்
பாறுடுகளத்தொருவன்பரியே. (௯௪)

கண்ணிற்கடுகும்மனனிற்கடுகும்
விண்ணிற்படர்காலின்மிகக்கடுகு
முண்ணிற்குமெனிற்புறனிற்குமுலாய்
மண்ணிற்றிரியாதவயப்பரியே. (௯௫)

மாப்புண்டரவாளியின்வட்டணையா
லாப்புண்டவனொத்தவனாயிலான்
பூப்புண்டரவாவிபுறத்தகலக்
கோப்புண்டனவானரவெங்குழுவே. (௯௬)

நூறும்பிருநூறுநொடிப்பளவி
னேறுந்நதிவேலினிறைப்பொழுதிற்
றேறுங்கவிசேனைசிதைக்குமெனா
வாறுந்திறலும்பருமஞ்சினரால். (௯௭)

தோற்றும்முருவொன்றெனவோறணியாக்
கூற்றின்கொலையாலுழல்கொள்கையனை
யேற்றுஞ்சிலையாண்மையிலக்குவன்வெங்
காற்றின்படைகொண்டுகடந்தனனால். (௯௮)

குலையப்பொருகுலனெடுங்கொலையு
முலைவுற்றிலவுய்த்தலுமோய்விலனொண்
டலையற்றுகவுந்தரையுற்றிலனா
விலையப்பரிகோளினிருக்கையினான். (௯௯)

இன்றாதியமுண்டெனவின்னகைபாற்
சென்றாதினநம்பிகடென்றிசையான்
வன்றாதருமெய்தினர்வஞ்சனையான்
றன்றாதருமெய்தினர்தன்னகர்வாய். (௧00)

ஏகித்தனிமன்னனிருந்துழிபுக்
கோகைப்பொருள்கேளெனவுற்றுழிவாய்
வேகத்தடல்வீரர்விளித்தவெலாஞ்
சோகத்தொடிறைஞ்சினர்சொல்லினரால். (௧0௧)

படைத்தலைவர்வதைப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௨௩௪௨.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

௨௦ - வது—மகரக்கண்ணன்வதைப்படலம்.

சொன்னாரவர்சொற்செவிபாற்றுடர்வோன்
இன்னாமனத்தினிலங்கையர்கோன்
வெந்நாகவுயிர்ப்பினன்விம்மினனா
லன்னாளிலைகண்டயலின்றறைவான். (௧)

முந்தேயெனதாதையைமொய்யமர்வா
யந்தோவுயிருண்டவனுருயிர்மே
லுந்தாயெனையாதமுணர்ந்திலையோ
வெந்தாயொருநீயிடர்கூருதியோ. (௨)

யானேசெலவென்றுவனைத்துதலாற்
றனேர்வதுநீதெனவேதணிவேன்
வானேவிலனேமுதன்மற்றமெலாங்
கோனேயெனைவெல்வதொர்கொள்கையதோ. (௩)

வேறு.

அருந்துயர்க்கடலுளாளென்னம்மனையமுதகண்ணன்
பெருந்திருக்கழித்தலாற்றுள்கணவனைக்கொன்றுபேர்ந்தோன்
கருந்தலைக்கலத்தினல்லாற்கடனதாகழியேனென்றுள்
பருந்திறுக்கினியவேலாயின்னருள்பணித்தியென்றுன். (௪)

அவ்வுலாமகரக்கண்ணனறைதலுமாக்கனைய
செவ்விதுசேறிசென்றுன்பழம்பகைதீர்த்தியென்றுன்
வெவ்வழியவனும்பெற்றவிடையினன்றேர்மேற்கொண்டான்
வவ்வியவில்லன்போனுன்வரம்பெற்றுவளர்ந்ததோளான். (௫)

தன்னுடைச்சேனைகோடியைந்துடன்றழுவத்தானை
மன்னுடைச்சேனைவெள்ளமோரைந்துமழையிற்பொங்கிப்
பின்னுடைத்தாகப்பேரிக்கடல்படப்பெயர்ந்தனுளி
பொன்னுடைச்சிமையத்துச்சிக்குச்சியும்புதையப்போனுன். (௬)

சோணிதக்கண்ணனேடுஞ்சிங்கனுந்தரிதத்திண்டேர்த்
தாண்முதற்காவல்பூண்டுசெல்கெனத்தக்கதென்னு
வாண்முதற்றனையோடுமனைவருந்துடரப்போனு
னண்முதற்றிங்கடன்னைத்தழுவியவனையநண்பால். (௭)

பல்பெரும்பதாகைபற்றிமீமிசைதொடுத்தபந்த
ரெல்லவன்சுடரொண்கற்றைமுற்றியநீழலீயத்
தொல்சினயானையங்கையாழிநீர்த்துவலைசுற்ற
வெல்பெருங்கவியின்சேனையமர்த்தொழிற்சிரமம்வீய்ந்த. (௮)

முழங்கினயானைவாசியொலித்தனமுரசின்பண்ணை
தழங்கினவயவரார்த்தாரொன்பதோர்முறைமைதள்ள
வழங்கினபதலையோதையண்டத்தின்வரம்பின்காறும்
புழுங்கினவுயிர்களியாவுங்கால்புகப்புரையின்றுக. (௯)

வெய்தினினுற்றதானைமுறைவிடாதூழில்வெம்போர்
செய்தனசெருக்கிச்சென்றுநெருக்கினர்தலைவர்சேர்ந்த
கையொடுகைகளுற்றுக்கலந்தனகல்லும்வில்லு
மெய்தனவெறிந்தயானையீர்த்தனகோத்தசோரி. (௧௦)

வானரவீரர்விட்டமலைகளையரக்கர்வவ்வி
மீனெறிமேகஞ்சிந்தவிசைத்தனர்மீட்டும்வீசக்
கானகமிடியுண்டென்னக்கவிக்குலமடியுங்கவ்விப்
போனகநுகரும்பேய்கள்வாய்ப்புறம்புடைப்போடார்ப்ப. (கக)

மைமிறவரக்கர்வன்கைவயிரவாள்வலியின்வாங்கி
மெய்மிறத்தெறிந்துகொல்வர்வானரவீரர்தங்கள்
கைமிறத்தெடுத்தகல்லுமாலுந்தங்கரத்தின்வாங்கி
மொய்மிறத்தெறிவரொற்றிமுருக்குவரரக்கர்முன்பர். (கஉ)

வண்டுலாவலங்கன்மார்பன்மகரக்கண்மழையேறென்னத்
திண்டிறலரக்கன்கொற்றப்பொற்றடஞ்சில்லித்தேரைத்
தண்டலைமருதவைப்பிற்கங்கைநீர்தழுவுநாட்டுக்
கொண்டன்மேலோட்டிச்சென்றான்குரக்கினப்படையைக்கொன்றான்.

இந்திரன்பகைஞனேகொலென்பதோரச்சமெய்தித்
தந்திரமிரிந்துசிந்தப்படைப்பெருந்தலைவர்தாக்கி
யெந்திரமெறிந்தவென்னவேவுண்டுபுரண்டாரொய்திச்
சுந்தரத்தோளினானைநோக்கிநின்றினையசொன்னான். (கச)

என்னுடைத்தாதைதன்னையின்னுயிருண்டாயென்று
முன்னுடைத்தாயதீயமுழுப்பகைமூவர்க்கின்றி
நின்னுடைத்தாயதன்றேயின்றதுநிமிர்வனென்றான்
பொன்னுடைத்தாதைவண்டுகுடைந்துண்ணும்பொலன்பொற்றான் (கரு)

நீயவன்பகர்ந்தமாற்றஞ்சேவகன்றெரியக்கேட்டா
னீகரன்புதல்வன்கொல்லாநெடும்பகைநிமிரவந்தா
யாயதுகடனேயன்றோவாண்பிறந்தமைந்தர்க்கைய
வேயதுசொன்னாயென்றானிசையினுக்கிசைந்ததோளான். (கசு)

உருமிடித்தென்னவின்றொனொலிபடுத்தன்றேயெந்தை
செருமுடித்தென்கணின்றசினமுடித்தனனவனென்னாக்
கருமுடித்தமைந்தமேகங்கான்முடித்தெழுந்தகாலம்
பெருமுடிக்கிரியிற்பெய்யுந்தாரைபோற்பகழிபெய்தான். (கஎ)

சொரிந்தனபகழியெல்லாஞ்சுடர்க்கடுங்கணைகடூவி
யரிந்தனனகற்றிமற்றையாண்டகையலங்கலாகத்
தெரிந்தொருபகழிபாயவெய்தனனிராமனேவ
னெரிந்தெழுபுருவத்தான்றன்விறற்றுற்றுநின்றதன்றே. (கஅ)

ஏவுண்டுதளக்கமெய்தாவிரத்தகப்பருதியீன்ற
பூவுண்டகண்ணன்வாயிற்புகையுண்டதுமிழ்வபோல்வான்
றேவுண்டகீர்த்தியண்ணறிருவுண்டகவசஞ்சேரத்
தாவுண்டவயிரவாளியாயிரந்தூவியார்த்தான். (க௯)

அன்னதுகண்டவானோர்திசயமுற்றாராழி
மன்னனுமுறுவல்செய்துவாயம்போராறவாங்கிப்
பொன்னெடுந்தடந்தேர்பூண்டபுரவியின்குரங்கள்போக்கி
வின்னடுவறுத்துப்பாகன்றலையையுநிலத்துவீழ்த்தான். (௨௦)

மார்பிடைமின்றவாளிவாயிடைவெயிலின்வாருஞ்
சோரியன்விசும்பினூடோரிமைப்பிடைத்தோன்றாநின்றான்
காருருமேறுங்காற்றுங்கனலியுங்கடைநாள்வையம்
பேர்வுறுகாலமென்னப்பெருக்கினன்றவத்திற்பெற்றான். (௨௧)

உருமுறையனந்தகோடியுதிர்ந்தனவூழிநாளி
னிருமுறைகாற்றுச்சீறியெழுந்ததுவிழுந்ததென்றாங்
கருமுறைநிறைந்தமேகங்கான்றனகல்லின்மாரி
பொருமுறைமயங்கிச்சுற்றுமிரியலிற்கவிகள்போன. (௨௨)

போயினதிசைகளெங்கும்புகையொடுநெருப்பும்போர்ப்பத்
தீயினமனையசெல்லுங்கல்லின்மாமாரிசிந்த
வாயிரகோடிமேலுமவிந்தனகவிகளையன்
மாயமோவரமோவென்றான்வீடணன்வணங்கிச்சொன்னான். (௨௩)

நோற்றுடைத்தவத்தினோன்மைநோக்கினர்கருணைநோக்கிக்
காற்றுடைச்செல்வன்றானுமழையுடைக்கடவுடானு
மாற்றலரீந்ததெய்வவரத்தினால்வந்ததென்றா
னாற்றிதட்கமலக்கண்ணனகற்றுவனொடியினென்றான். (௨௪)

காலவன்படையுந்தெய்வக்கடலவன்படையுங்காலக்
கோலவன்சிலையிற்கோத்துக்கொடுங்கணையோடுங்கூட்டி
மேலவன்றுரத்தலோடும்விசும்பினின்றெரிந்துவெய்தின்
மாலிருங்கடலின்வீழ்ந்துமறைந்தனமழையுங்காற்றும். (௨௫)

அத்துணையரக்கனோக்கியந்தாவானமெல்லா
மொத்தனவுருவேயாகித்தான்மறைந்தொளித்துச்சூலப்
பத்திகள்கோடிகோடிபரப்பினானதனைப்பார்த்த
வித்தகனொருவன்செய்தவினையமென்றினையசொன்னான். (௨௬)

மாயத்தால்வருத்தானியாண்டும்வரம்பிலாவுருவத்தானைத்
தேயத்தானென்னாவண்ணங்கரந்தனன்றெரிந்திலாதான்
காயத்தாலினையனென்றுநினையலாங்கருத்தனல்லன்
றீயொத்தான்றிறத்தினென்னைசெயலெனச்சிந்தைநொந்தான். (௨௭)

அம்பின்வாயாறுசோருமரக்கன்றனருளில்யாக்கை
யும்பரிற்பரப்பித்தான்வேறொளித்தனனென்னவோர்வான்
செம்புனற்சுவடுநோக்கியிதுநெறியென்றுதேவர்
தம்பிரான்பகழிதூண்டத்தலையற்றுத்தலத்தனானான். (௨௮)

அயின்மடித்தருமிற்செல்லுமம்பொடுமரக்கன்யாக்கை
புயல்படக்குருதிவீசிப்படியிடைப்புரள்தலோடும்
வெயிலெடுத்திருளையோட்டுங்காலத்தின்விளைவினோடுந்
துயில்கெடக்கனவுமாய்ந்தாலொத்ததுசூழ்ந்தமாயை. (௨௯)

குருதியின்கண்ணன்வண்ணக்கொடிநெடுந்தேரான்கோடைப்
பருதியினடுவட்டோன்றும்பசுஞ்சுடர்மேகப்பண்ப
னெரிகணைசிந்திக்காலினெய்தினான்றன்னோடேற்றான்
விரிகடற்றட்டான்கொல்லன்வெஞ்சினத்தச்சன்வெய்யோன். (௩௦)

அன்றிடிபோலும்வின்னாணலங்கற்றோளிலங்கவாங்கி
யொன்றலபகழிமாரியூழித்தீயென்னவுய்த்தா
னின்றவனெடியதாங்கோர்தருவினாற்கலக்கிநீக்கிச்
சென்றனன்பகழிமாரிக்கெதிர்படச்சீயமன்னான். (௩௧)

காத்தினிற்றிரியாநின்றமரத்தினைக்கண்டமாகச்
சாத்தினிற்றுணித்துவீழ்த்ததநுகனான்றன்னைநோக்கி
யுரத்தினைச்சுருக்கிப்பாரிநெருங்கினான்றன்னையொப்பர்
சிரத்தினிற்குதித்தான்றேவர்திசைமுகங்கிழியவார்த்தார். (௩௨)

எரியும்வெங்குன்றினும்பரிந்திரவில்லிட்டென்னப்
பெரியவன்றலைமேனின்றபேரொழிலாளன்சோரி
சொரியவன்கண்ணின்மூக்கிற்செவிகளின்மூளைதூங்க
நெரியவன்றலையைக்காலாலுதைத்துமாநிலத்திலிட்டான். (௩௩)

அங்கவனுலத்தலோடுமழற்கொழுந்தொழுகுங்கண்ணன்
செங்கண்வெங்கணையன்வில்லன்றுரணிதேரின்மேலா
னெங்கடாபோதியென்றுவெய்தினனெதிரிலாத
பங்கமின்மேருவாற்றற்பனசன்வந்திடையிற்பாய்ந்தான். (௩௪)

பாய்ந்தவன்றோளின்மார்பின்பல்லங்கணல்லபார்ப்போ
டேய்ந்தனவசனிபோலவையிரண்டழுந்தவெய்தான்
காய்ந்தனன்கனலிநெய்யாற்கனன்றதுபோலக்காந்தி
யேய்ந்தெழுதேரினோடுமிமைப்பிடையெடுத்துக்கொண்டான். (௩௫)

தேரொடுமெடுத்தலோடுநிலத்திடைக்குதித்தசெங்கண்
மேருவிற்றோற்றத்தான்றனுச்சிமேலதனைவீசப்
பாரிடைவிழுதலோடுந்தானவனும்பர்பாயச்
சோரியுமுயிருஞ்சோரத்துகைத்தனன்வயிரத்தோளான். (௩௬)

தராதலவேந்தன்மைந்தர்சரத்திலுங்கவியின்றானை
மராமரமலையென்றின்னவழங்கவும்வளைந்ததானை
பராவரும்வெள்ளம்பத்தும்பட்டனபட்டிலாதா
ரிராவணன்றூதர்போனார்படைக்கலமெடுத்திலாதார். (௩௭)

மகரக்கண்ணன்வதைப்படலம்-முற்றிற்று. ஆ திருவிருத்தம்-௨௩௭௧.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௨௧-வது—பிரமாஸ்திரப்படலம்.

கரன்மகன்பட்டவாறுங்குருதியின்கண்ணன்காவற்
சிரனெரிந்துக்கவாறுஞ்சிங்கனிற்சீறுஞ்சேனைப்
பரமினியுலகுக்காகாதென்பதும்பகரக்கேட்டான்
வரன்முறைதவிர்ந்தான்வல்லைதருதியென்மகனையென்றான். (௧)

ஆயினனுந்தையென்றார்குன்றெனக்குவிந்ததோளான்
போயினனிருதரியாரும்பொன்றினர்போலுமென்று
றேயினபின்னைமீள்வார்நீயலாதியாவரொன்று
மேயதுசொன்னார்கேட்டான்றந்தைபால்விரைவின்வந்தான். (௨)

வணங்கிநீயையநொய்தின்மாண்டனர்மக்களென்ன
வுணங்கலையின்றுகாண்டியுலப்பறுகுரங்கைநீக்கிப்
பிணங்களின்குப்பைமற்றையாருயிர்பிரிந்தயாக்கை
கணங்குழைச்சீதைதானுமமரருங்காண்பவென்றான். (௩)

வலங்கொண்டுவணங்கிவான்செலாயிரமடங்கல்பூண்ட
பொலங்கொடிநெடுந்தேரேறிப்போர்ப்பணைமுழங்கப்போனா
னலங்கல்வாளரக்கர்தானையறுபதுவெள்ளமியானைக்
குலங்களுந்தேருமாவுங்குழாங்கொளக்குழீஇயதன்றே. (௪)

கும்பிகைதிமிலைசெண்டைகுறடுமாப்பேரிகொட்டும்
பம்பைதார்முரசஞ்சங்கம்பாண்டில்போர்ப்பணவந்தூரி
கம்பலியுறுமைதக்கைகரடிகைதுடிவேய்கண்டை
யம்பலிகணுவையூமைசகடையோடார்த்தவன்றே. (௫)

யானைமேற்பறைசாலீட்டத்தறைமணியார்த்ததாழி
மானமாப்புரவிப்பொற்றார்மாக்கொடிக்கண்டைமானச்
சேனையோர்கழலுந்தாருஞ்சேடகப்புளகச்சில்லி
வானகத்தோடுவானையரியெனவளர்ந்தவன்றே. (௬)

சங்கொலிவயிரினோசையாகுளிதழங்குகாளம்
பொங்கொலிவரிகண்பீலிபேரொலிவேயின்பொம்மல்
சிங்கத்தின்முழக்கம்வாசிச்சிரிப்புத்தேரிடிப்புத்திண்கை
மங்குலினதிர்வுவானமழையொடுமலைந்ததன்றே. (௭)

வில்லொலிவயவரார்க்கும்விளியொலிதெழிப்பினோங்கு
மொல்லொலிவீரர்பேசுமுனையொலியுரப்பிற்றோன்றுஞ்
செல்லொலிதிரடோள்கொட்டுஞ்சேணொலிநிலத்திற்செல்லுங்
கல்லொலிதூரப்பமற்றைக்கடலொலிகரந்ததன்றே. (௮)

நாற்கடலனையதானைநடந்திடக்கிடந்தபாரின்
மேற்கடுத்தெழுந்ததூளிவிசும்பின்மேற்கெழுந்துவீச
மாற்கடற்சேனைகாணும்வானவர்மகளிர்மானப்
பாற்கடலனையவாட்கண்பனிக்கடல்படுத்ததன்றே. (௯)

ஆயிரகோடியிண்டோமார்க்கோனகரமென்ன
மேயவர்சுற்றத்தானோர்கொற்றப்பொற்றேரின்மேலான்
றூயவச்சுடர்களெல்லாஞ்சுற்றுறநடுவட்டோன்றும்
நாயகப்பருதிபோன்றான்றேவரைநடுக்கங்கொண்டான். (க0)

சென்றவெங்களத்தையெய்தச்சிறையொடுதுண்டஞ்செங்க
ணென்றியகழுத்துமேனிகாலுகிர்வாலோடொப்பப்
பின்றவில்வெள்ளத்தானைமுறைபடப்பரப்பிப்பேழ்வா
யன்றிலினுருவதாயவணிவகுத்தமைந்துநின்றான். (கக)

புரந்தரன்செருவிற்றந்துபோயதுபுணரியேழு
முரந்தவிர்த்தூழிபெருங்காலத்துளொலிக்குமோதை
காந்துவயிற்றுக்காலவலம்புரிகையின்வாங்கிச்
சிரம்பொதிர்ந்தமராஞ்சவூதினான்றிசையுஞ்சிந்த. (கஉ)

சங்கத்தின்முழக்கங்கேட்டகவிப்பெருந்தானைநள்ளிச்
சிங்கத்தினாதம்வந்துசெவிபுகவிலங்குஞ்சிந்தி
யெங்குற்றவென்றாவண்ணமிரிந்தனவிருந்தவ்வேழை
பங்கத்தன்மலைவிலென்னச்சிலையொலிபரப்பியார்த்தான். (கங)

கீண்டனசெவிகளெஞ்சக்கிழிந்தனவிளர்ந்துசெல்ல
மீண்டனகால்கள்கையின்விழுந்தனமரனும்வெற்பும்
பூண்டனநடுக்கம்வாய்கள்புலர்ந்தனமயிரும்பொங்கி
மாண்டனமன்றோவென்றவானரமெனவையுமாதோ. (கச)

செங்கதிர்ச்செல்வன்சேயுஞ்சமிரணன்சிறுவன்றானு
மங்கதப்பெயரினானுமன்னனுமிளையகோவும்
வெங்கதிர்மௌலிச்செங்கண்வீடணன்முதலாம்வீர
ரிங்கிவர்நின்றாரல்லதிரிந்ததுகுரங்கினீட்டம். (கரு)

படைப்பெருந்தலைவர்நிற்கப்பல்பெருந்தானைவேலை
யுடைப்புறுபுனலினோடவூழிநாளுவரியோதை
கிடைத்திடமுழங்கியார்த்துக்கிளர்ந்ததுநிருதர்சேனை
யடைத்ததுதிசைகளெல்லாமன்னவரகத்தரானார். (கசு)

மாருதியலங்கன்மாலைமணியணிவயிரத்தோண்மேல்
வீரனும்வாலிசேய்தன்விறல்கெழுசிகரத்தோண்மே
லாரியற்கிளையகோவுமேவநின்றமரர்வாழ்த்தி
வேரியம்பூவின்மாரிசொரிந்தனரிடைவிடாமை. (கஎ)

விடையின்மேற்கலுழன்றன்மேல்வில்லினர்விளங்குகின்ற
கடையின்மேலுயர்ந்தகாட்சியிருவருங்கடுத்தார்கண்ணுற்
றடையின்மேருவையுஞ்சாய்க்குமனுமனங்கதனன்றன்னார்
தொடையின்மேன்மலர்ந்ததார்தோளின்மேற்றோன்றும்வீரர். (கஅ)

நீலனைமுதலாயுள்ளநெடும்படைத்தலைவர்நின்றார்
தாலமுமலையுமேந்தித்தாக்குவான்சமையுங்காலை
ஞாலமும்விசும்புங்காத்தநானிலக்கிழவன்மைந்தன்
மேலமர்விளைவையுன்னிவிலக்கினன்விளம்பலுற்றான். (க௯)

கடவுளர்படையைநம்மேல்வெய்யவன்றுரந்தகாலந்
தடையுளவல்லதாகுந்தன்மையிரல்லிர்தாக்கிற்
கிடையுளதெம்பானல்கிப்பின்னிறைநிற்றிரீண்டிப்
படையுளதனையேயின்றெம்விற்றொழில்பார்த்திரென்றான். (உ0)

அருண்முறையவருநின்றாண்டகைவீராழி
யுருண்முறைதேரின்மாவினோடைமால்வரையினாழி
யிருண்முறைநிருதர்தம்மேலேவினரிமைப்பிலோரு
மருண்முறையெய்திற்றென்பர்சிலைவழங்கசனிமாரி. (உக)

தேரின்மேற்சிலையினின்றவிந்திரசித்தென்றோதும்
வீரருள்வீரன்கண்டான்விழுந்தனவிழுந்தவென்னும்
பாரின்மேனோக்கலன்றேற்பட்டனர்பட்டாரென்னும்
போரின்மேனோக்கலீதிவ்விருவரும்பொருதபூசல். (உஉ)

யானைபட்டனவோவென்றானிரதமிற்றனவோவென்றான்
மானமாவந்தவெல்லாமடிந்தொழிந்தனவோவென்றா
னேனைவாளரக்கரியாருமில்லையோவெடுக்கவென்றான்
வானுயர்பிணத்தின்குப்பைமறைத்தலின்மயக்கமுற்றான். (உங)

செய்கின்றாரிருவர்வெம்போர்சிதைகின்றசேனைநோக்கி
யையந்தானில்லாவெள்ளமறுபதுமவிக்வென்று
வைகின்றாரல்லவாகின்வரிசிலைவலத்தான்மாள
வெய்கின்றாரல்லவெந்தவிந்திரசாலமென்றான். (உச)

அம்பின்மாமழையைநோக்குமுதிரத்தினாற்றைநோக்கு
மும்பரினளவுஞ்சென்றபிணக்குன்றினுயர்வைநோக்குங்
கொம்பறவுதிர்ந்தமுத்தின்குப்பையைநோக்குங்கொன்ற
தம்பியைநோக்கும்வீரர்சுந்தரத்தோளைநோக்கும். (உரு)

மலைகளைநோக்குமற்றவானுறக்குவிந்தவன்கட்
டலைகளைநோக்கும்வீரர்சரங்களைநோக்குந்தாக்கி
யுலைகொள்வெம்பொறியினுக்கபடைக்கலத்தொழுங்கைநோக்குஞ்
சிலைகளைநோக்குநாணேற்றிடியினைச்செவியினேற்கும். (உசு)

ஆயிரந்தேரையாடலானையையலங்கன்மாவை
யாயிரந்தலையையாழிப்படைகளையறுத்துமப்பாற்
போயினபகழிவேகத்தன்மையைப்புரிந்துநோக்கும்
பாயும்வெம்பகழிக்கொன்றங்கணக்கிலாப்பரப்பைப்பார்க்கும். (உஎ)

அருபதுவெள்ளத்தாயவரக்கர்தமாற்றற்கேற்ற
வெறிவனவெய்யபெய்யவெற்றுருபடைகளியாவும்
பொறிவனம்வெந்தபோலச்சாம்பராய்ப்போவதல்லாற்
செறிவனவில்லாவார்த்தைசிந்தையாற்றெரியநோக்கும். (௨௮)

வயிறலைத்தோடிவந்துகொழுநர்மேன்மகளிர்மாழ்கிக்
குயிறலைத்துக்கவென்னக்குழைகின்றகுழைவைநோக்கு
மெயிறலைத்திடுக்கும்பேழ்வாய்த்தலையிலாவாக்கையீட்டம்
பயிறலைப்பறவையீட்டம்படிகிலாப்படியைப்பார்க்கும். (௨௯)

அங்கதானந்தகோடியுளனொறுமனுமனென்பாற்
கிங்கினியுலகமெல்லாமிடமிலைபோலுமென்று
மெங்குமிம்மனிதனொன்பாரிருவரோகொல்லென்றுன்னுஞ்
சிங்கவேறனையவீரர்கடுமையைத்தெரிகிலாதான். (௩0)

ஆர்க்கின்றவமரர்தம்மைநோக்குமங்கவர்களள்ளித்
தூர்க்கின்றபூவைநோக்குந்துடிக்கின்றதோளைநோக்கும்
பார்க்கின்றதிசைகளெங்கும்படும்பிணப்பரப்பைப்பார்க்கு
மீர்க்கின்றகுருதியாற்றோடியானையின்பிணத்தைநோக்கும். (௩௧)

ஆயிரகோடிதேருமரக்கருமொழியவல்லார்
மாயிருஞ்சேனையெல்லாமாய்ந்தனகண்டும்வல்லை
போயினகுரக்குத்தானைபுகுந்திலதன்றேபொற்றோர்த்
தீயவன்றன்மேலுள்ளமனத்தினார்கலக்கந்தீர்ந்தார். (௩௨)

தளப்பெருஞ்சேனைவெள்ளத்தறுபதுந்தலத்ததாக
வளப்பருந்தேரினுள்ளதாயிரக்கோடியாகத்
துளக்கமிலாற்றல்வீரர்பொருதபோர்த்தொழிலைநோக்கி
யளப்பருந்தோளைக்கொட்டியஞ்சனைமதலையார்த்தான். (௩௩)

ஆரிடையனுமனார்த்தவார்கலியசனிகேளாத்
தேரிடைநின்றுவீழ்ந்தார்சிலர்சிலர்படைகள்சிந்திப்
பாரிடையிழிந்துபோகப்பாரித்தார்மைம்பொனிஞ்சி
யூரிடைநின்றுளாருமுயிரினோடுதிரங்கான்றார். (௩௪)

அஞ்சினிர்போமினின்றோரார்ப்பொலிக்கிழியற்பாலிர்
வெஞ்சமம்விளைப்பதென்னோநீருமிவீரரோடு
அஞ்சினிர்போலுமன்றேயென்றவன்சுளித்துநோக்கி
மஞ்சினிற்கரியமெய்யானிருவர்மேலொருவன்வந்தான். (௩௫)

அக்கணத்தார்த்துமண்டியாயிரகோடிதேரும்
புக்கனநேமிப்பாட்டிற்கிழிந்தனபுவனமென்னத்
திக்கிடைநின்றயானைசிரம்பொதிறொறியச்சிந்தி
புக்கனவிசும்பின்மீன்களுதிர்ந்திடத்தேவருட்க. (௩௬)

வேறு. மாற்றமொன்றிளையவன் மழைவிற்செங்கரத்
தேற்றினன் வணங்கினின்றியம்புவானிக
லாற்றினனரவுகொண்டசைப்பவாரமர்
தோற்றனனென்றுகொண்டுலகஞ்சொல்லுமால். (௩௭)

காக்கவுங்கிற்றிலன் காதனண்பரைப்
போக்கவுங்கிற்றிலனொருவன்போய்ப்பிணி
யாக்கவுங்கிற்றிலன்வென்றியாருயிர்
நீக்கவுங்கிற்றிலனென்றுநின்றதால். (௩௮)

இந்திரன்பகையெனுமிவனையென்சர
மந்தரத்தருந்தலையறுத்திலாதெனின்
வெந்தொழிற்செய்கையன் விருந்துமாய்நெடு
மைந்தரிற்கடையெனப்படுவன்வாழியாய். (௩௯)

நின்னுடைமுன்னரிந்நெறியினீர்மையான்
றன்னுடைச்சிரத்தையென்சரத்திற்றள்ளினாற்
பொன்னுடைவனைகழற்பொலம்பொற்றோளினா
யென்னுடையடிமையுமிசையிற்றுமரோ. (௪0)

நெடியனவுலகெலாங்கண்டுநிற்கவென்
னடுசரமிவன்றலையறுத்திலாதெனின்
முடியவொன்றுணர்த்துவனுனக்குநான்முய
லடிமையின்பயனிகந்தறுவதாகென்றான். (௪௧)

வல்லவனவ்வுரைவழங்குங்காலையி
னல்லனிங்கினமெனவமரரார்த்தன
தொல்லையிலுலகமுமெவையுமார்த்தன
நல்லறமார்த்தனநமனுமார்த்தனன். (௪௨)

முறுவல்வாண்முகத்தினன்முளரிக்கண்ணனு
மறிவனீசெய்வனென்றமைதியாமெனி
னிறுதியுங்காவலுமியற்றுமீசரும்
வெறுவியர்வேறினிவிளைவதியாதென்றான். (௪௩)

சொல்லிதுகேட்டவன்றொழுதுசுற்றிய
பல்பெருந்தேரொடுமரக்கன்பண்ணையைக்
கொல்வனிங்கன்னதுகாண்டிகொல்லென
வொல்லையிலெழுந்தனனுவகையுள்ளத்தான். (௪௪)

அங்கதனார்த்தனனசனியேறென
மங்குனின்றதிர்ந்தனவயவன்றேர்வரு
சிங்கமுநடுக்குறத்திருவினாயகன்
சங்கமொன்றொலித்ததுகடலுந்தள்ளுற. (௪௫)

எழுமழுச்சக்கரமீட்டிதோமர
முழுமுரட்டண்டுவேன்முசண்டிமுவிலைக்
கழுவயக்கப்பணங்கவண்கல்கன்னகம்
விழுமழைக்கொட்டிவிட்டரக்கர்வீசினார். (௪௬)

மீனெலாம்விண்ணினின்றொருங்குவீழ்ந்தன
வானெலாமண்ணெலாமறையவந்தன
தானெலாந்துணிந்துபோய்த்தகர்ந்துசாய்ந்தன
வேனிலானனையவன்பகழிவெம்மையால். (௪௭)

ஆயிரந்தேரொருதொடையினச்சறும்
பாய்பரிக்குலம்படும்பாகர்பொன்றுவர்
நாயகர்நெடுந்தலைதுமியுநாமறத்
தீயெழும்புகையெழுமுலகர்தீய்ந்தற. (௪௮)

அடியறுந்தேர்முறாணுழியச்சிறும்
வடிநெடுஞ்சிலையறும்வாசிமார்பறும்
கொடியறுங்குடையறுங்கொற்றவீரர்தம்
முடியறுமுரசறுமுகிலுஞ்சிந்துமால். (௪௯)

இன்னதோருறுப்பிவையினையதேர்ப்பரி
மன்னவரிவருவர்படைஞர்மற்றுளோ
ரென்னவோர்தன்மையுந்தெரிந்ததில்லையாற்
சின்னபின்னங்களாய்மயங்கிச்சிந்தலால். (௫௦)

தந்தையர்தேரிடைத்தனையர்வன்றலை
வந்தனதாதையர்வயிரவான்சிரஞ்
சிந்தினகாதலர்தேரிற்சின்னமா
யந்தரத்தம்பொடுமற்றெழுந்தன. (௫௧)

செம்பெருங்குருதியிற்றிகழ்ந்தசெங்கண்மீன்
கொம்பொடும்பரவையிற்றிரியுங்கொட்பெனத்
தும்பையின்றொடையலார்தடக்கைதுணிவாங்
கம்பொடுந்துணிந்தனசிலையொடற்றன. (௫௨)

தடிவனகொடுஞ்சரந்தள்ளத்தள்ளுற
மடிவனகொடிகளுங்குடையுமற்றவும்
வெடிபடுகடலிகர்குருதிவெள்ளத்திற்
படிவனவொத்தனபறவைபன்மைய. (௫௩)

வேறு.

சிந்துரங்களிற்பருமமும்பகழியுந்தேருங்
குந்தவன்னெடுஞ்சிலைமுதற்படைகளுங்கொடியு
மிந்தனங்களாயிறந்தவர்விழிக்கனலிலங்க
வெந்தவெம்பிணம்விழுங்கினகழுதுகள்விரும்பி. (௫௪)

சில்லியூடறச்சிதறின சிலசிலகோத்த
வல்லியூடறமறிந்தனபுரவிகண்மடியப்
புல்லிமண்ணிடைப்புரண்டன சிலசிலபோராள்
வில்லிசாரதியொடும்பட்டதிரிந்தன வெறிய. (௫௫)

அலங்குபன்மணிக்கதிரனகுருதியினழுந்தி
விலங்குசெஞ்சுடர்விடுவனவளவின்றிமிடைந்த
குலங்கொள்வெய்யவர்மறுகிடத்தீயிடைக்குளித்த
விலங்கைமாநகர்மாளிகைநிகர்த்தனவிரதம். (௫௬)

ஆனகாலையினிராமனுமயின்முகப்பகழி
சோனைமாரியிற்சொரிந்தனனனுமனைத்தூண்டி
வானமானங்கண்மறிந்தெனத்தேரொலாமடிந்த
தானுந்தேருமேயாயினனிராவணன்றனையன். (௫௭)

பல்விலங்கொடுபுரவிகள்பூண்டதேர்ப்பரவை
வல்விலங்கல்போலரக்கர்தங்குழாத்தொடுமடிய
வில்விலங்கியவீரனைநோக்கினன்வெகுண்டான்
சொல்விலங்கலன்சொல்லினனிராவணன்றோன்றல். (௫௮)

இருவரொன்றொடுபொருதிரோவன்றெனினேற்ற
வொருவர்வந்துயிர்தருதிரோவும்படையோடும்
பொருதுபொன்றுதல்புரிதிரோவுறுவதுபுகலுந்
தருவனின்றுமக்கேற்றுளதொன்றெனச்சலித்தான். (௫௯)

வாளிற்றிண்சிலைத்தொழிலினின்மல்லினின்மற்றை
யாளுற்றெண்ணியபடைக்கலமெவற்றினுமமரிற்
கோளுற்றுன்னொடுகுறித்தமர்செய்துயிர்கொள்ளச்
சூளுற்றேனிதுசரதமென்றிலக்குவன்சொன்னான். (௬0)

முன்பிறந்தவன்றமையனைமுறைதவிர்த்துனக்குப்
பின்பிறந்தவனுக்குவன்பின்பிறந்தோயை
முன்பிறந்தவனுக்குவனிதுமுடியேனே
லென்பிறந்ததனாற்பயனிராவணற்கென்றான். (௬௧)

இலக்குவன்னெனும்பெயருனக்கிசைவதேயென்ன
விலக்குவன்கணைக்காக்குவனிதுபுகுந்திடையே
விலக்குவன்னெனவிடையவன்விலக்கினும்வில்லாற்
கலக்குவன்னதுகாணுமுன்றமையனுங்கண்டால். (௬௨)

அறுபதாகியவெள்ளத்தினரக்கரையம்பா
லிறுவதாக்கியவிரண்டுவில்லினருங்கண்டிரங்க
மறுவதாக்கியவெழுபதுவெள்ளமுமாள
வெறுவிதாக்குவனுலகினைக்கணத்திறேனோர்வில்லால். (௬௩)

கும்பகன்னனென்றொருவனீரம்பிடைக்குறைத்த
தம்பியல்லனாவிராவணன்மகனொருதமியே
னெம்பிமாருக்குமென்சிறுதாதைக்குமிருவிர்
செம்புனீர்கொடுகடன்கழிப்பேனெனத்தீர்ந்தேன். (சுச)

ஆக்கவொன்பதோர்பெயர்படைத்தவர்க்கெலாமடுத்த
புரக்குநன்கடன்செயவுளன்வீடணன்போந்தான்
காக்குமுர்லைதக்குநீசெயக்கடவனகடன்க
ளிரக்கமுற்றுனக்கவன்செயுமென்றனனிளையோன். (சுரு)

ஆனகாலையினயிலெயிற்றரக்கனெஞ்சழன்றான்
வானம்வையமுந்திசைகளுமியாவையுமறையப்
பானல்வேலையைப்பருகுவசுடர்முகப்பகழி
சோனைமாரியினிருமடிமும்மடிதூர்ந்தான். (சுசு)

அங்கதன்றன்மேலாயிரமவற்றினுக்கிரட்டி
வெங்கண்மாருதிமேனிமேல்வேறுளவீரச்
சிங்கமன்னவராக்கைமேலுலப்பிலசெலுத்தி
யெங்கும்வெங்கணையாக்கினனிராவணன்சிறுவன். (சுஎ)

இளையமைந்தன்மேலிராமன்மேலிராவணியிகலில்
விளையும்வன்றொழில்வானரவீரர்மேன்மெய்யுற்
றுளையும்வெஞ்சரஞ்சொரிந்தனனொழிகையொன்று
வளையமண்டிலப்பிறையெனநின்றதுவரிவில். (சுஅ)

பச்சிமத்தினுமுகத்தினுமருங்கினும்பகழி
யுச்சிமுற்றியவெய்யவன்கதிரெனவுமிழக்
கச்சமுற்றவன்கைத்தனைக்கடுமையைக்காணா
வச்சமுற்றனர்கண்புதைத்தொடுங்கினரமரர். (சுகூ)

மெய்யிற்பட்டனபடப்படாதனவெலாம்விலக்கித்
தெய்வப்பொற்கணைக்கத்துணைக்கத்துணைசெலுத்தி
யையற்காங்கிளங்கோளரியறிவிலாவறைந்த
பொய்யிற்போம்படிபோக்கினன்கடிதினிற்புக்கான். (எ0)

பிறகுநின்றனன்பெருந்தகையிளவலைப்பிரியா
னறமிதன்றெனவரக்கன்மேற்சரந்தொடுத்தருளா
னிறவுகண்டிலனிருவருமொருவனாயொருவார்
விறகின்வெந்தனவிசும்பிடைச்செறிந்தனவிசிகம். (எக)

மாடெரிந்தெழுந்திருவர்தங்கணைகளும்வழங்கக்
காடெரிந்தனகனவரையெரிந்தனகனக
வீடெரிந்தனவேலைகளெரிந்தனவிலங்க
லூடெரிந்தனவூழியினெரிந்தனவுலகம். (எஉ)

படங்கொள்பாம்பணைதுறந்தவற்கிளையவன்பகழி
விடங்கொள்வெள்ளத்தின்மேலன வருவனவிலக்கி
யிடங்கரோறனவெறுழ்வலியரக்கன்றேரிழுக்கு
மடங்கலையிருநூற்றையுங்கூற்றின்வாய்மடுத்தான். (௭௩)

தேரழிந்திடச்சேமத்தேர்பிறிதிலன்செறிந்த
ஊரழிந்திடத்தனிநின்றகதிரவனொத்தான்
பாரழிந்ததுபுரமெனும்படியவன்பகையின்
சூரழிந்திடத்துரந்தவன்சுடுசரஞ்சொரிந்தான். (௭௪)

அற்றதேர்மிசைநின்றுபோரங்கதனலங்கற்
கொற்றத்தோளினுமிலக்குவன்புயத்தினுங்குளிக்க
முற்றவெண்ணிலாமுரட்கணைதூர்த்தனன்முரட்போ
ரொற்றைச்சங்கெடுத்தூதினனுலகெலாமுலைய. (௭௫)

சங்கமூதியதசமுகன்றனிமகன்றரித்த
கங்கமார்பெருங்கவசமுமிற்றுடன்கழல
வெங்கொடுங்கணையையிரண்டுருமெனவீசிச்
சிங்கவேறன்னவிலக்குவன்சிலையைநாணெறிந்தான். (௭௬)

கண்டகார்முகில்வண்ணனுங்கமலக்கண்கலுழத்
துண்டவெண்பிறைநிலவெனமுறுவலுந்தோன்ற
வண்டமுண்டதன்வாயினாலார்மினென்றருள
விண்டதண்டமென்றுலைந்திடவார்த்தனர்வீரர். (௭௭)

கண்ணிமைப்பதன்முன்புபோய்விசும்பிடைக்கரந்தா
னண்ணன்மற்றவனைக்கைகண்டறிகிலனாகிப்
பண்ணவற்கிவன்பிழைக்குமேற்படுக்குநம்படையை
யெண்ணமற்றிலையயன்படைதொடுப்பதென்றிசைத்தான். (௭௮)

ஆன்றவன்னதுபுகறலுமறவனீமுனிந்தா
லீன்றவந்தணன்படைக்கலந்தொடுக்கவிவ்வுலக
மூன்றையுஞ்சுடுமொருவனுன்முடிகலதென்றான்
சான்றவன்னதுதவிர்ந்தனனுணர்வுடைத்தம்பி. (௭௯)

மறைந்துபோய்நின்றவஞ்சனுமவருடைமனத்தை
அறிந்துதெய்வவான்படைக்கலந்தொடுப்பதற்கமைந்தான்
பிறிந்துபோவதேகருமமிப்பொழுதெனப்பெயர்ந்தான்
செறிந்ததேவர்களாவலங்கொட்டினர்சிரித்தார். (௮0)

செஞ்சரத்தோடுசெம்மழைவிசும்பின்மேற்செல்லா
மஞ்சன்மாமழையோவியமாமெனமாற
வஞ்சினனகன்றானெனவறிந்தனரார்த்தார்
வெஞ்சினந்தருகளிப்பினர்வானரவீரர். (௮௧)

உடைந்தவானரச்சேனையுமோடநீருவரி
யடைந்ததாமெனவந்திரைத்தார்த்தெழுந்தோடித்
தொடர்ந்துசென்றதுதோற்றவன்யாவர்க்குந்தோன்றாக்
கடைந்தவேலைபோற்கலங்குறுமிலங்கையைக்கலந்தான். (௮௨)

எற்கொணான்முகன்படைக்கலமிவனென்மேல்விடாமுன்
முற்கொள்வேனெனுமுயற்சியன்முறைமுறைமொழிந்த
சொற்கொள்வேள்விபோய்த்தடங்குவானமைந்தவன்றுணிவை
மற்கொடோளவருணர்ந்திலரவன்றிறமறந்தார். (௮௩)

ஆர்த்தசேனையினமலைபோய்விசும்பினையலைக்க
ஈர்த்ததேரொடுங்கடிதுசென்றானகன்றிரவி
தீர்த்தன்மேலவன்றிசைமுகன்படைக்கலஞ்செலுத்தப்
பார்க்கிலேன்முந்திப்படுவதோவென்றெனப்பட்டான். (௮௪)

இரவுநன்பகலும்பெருநெடுஞ்செருவியற்றி
உரவுநம்படைமெலிந்துளதருந்துதற்குணவு
வரவுதாழ்த்ததுவிடைவல்லையினேகித்
தரவுவேண்டினனென்றனன்றாமரைக்கண்ணன். (௮௫)

இன்னதேகடிதியற்றுவனெனத்தொழுதெழுந்தான்
பொன்னின்மௌலியன்வீடணன்றமரொடும்போனான்
கன்னலொன்றிலோர்காலினின்வேலையைக்கடந்தா
னன்னவேலையினிராமனிதனையவற்கறைந்தான். (௮௬)

தெய்வவான்பெரும்படைகட்குவான்முறைதிருந்து
மெய்கொள்பூசனையியற்றினன்விடுமிதுவிதியா
லையநானிவையாற்றினன்வருவதோரளவுங்
கைகொள்சேனையைக்காவெனப்போர்க்களங்கடந்தான். (௮௭)

தந்தையைக்கண்டுபுகுந்துளதன்மையுந்தன்மேல்
முந்தைநான்முகன்படைக்கலந்தொடுக்குற்றமுறையுஞ்
சிந்தையுட்புகச்செப்பினனனையவன்றிகைத்தா
னெந்தையென்னினிச்செயத்தக்கதிசையெனவிசைத்தான். (௮௮)

தன்னைக்கொல்வதுதுணிவரோற்றனக்கதுதகுமேல்
முன்னரிற்கொலைமுயல்கவென்றறிஞரேமொழிந்தா
ரன்னப்போரவரறிவரும்வகைமறைந்தயன்றன்
வென்னப்போர்ப்படைவிடுதலேநலமிதுவிதியால். (௮௯)

தொடுக்கிற்றேனென்பதுணர்வரோவப்படைதொடுத்தே
தடுப்பர்காண்பரோற்கொல்லவும்வலந்தரத்தவத்தோ
ரிடுக்கொணாகின்றதில்லைநல்வேள்வியையியற்றி
முடிப்பனன்னவர்வாழ்வையோர்கணத்தென்றுமொழிந்தான். (௯0)

என்னையன்னவர்மறந்தனர்நின்றிகலியற்றத்
துன்னுபோர்ப்படைமுடிவிலாதவர்வயிற்றூண்டிப்
பின்னைநின்றதுபுரிவனென்றன்னவன்பேச
மன்னன்முன்னின்றமகோதரற்கிம்மொழிவழங்கும். (௬௧)

வெள்ளநூறுடைவெஞ்சினச்சேனையைவீர
வள்ளிலைப்படையகம்பனைமுதலியவரக்க
ரெள்ளிலெண்ணிலர்தம்மொடிவிரைந்தனையேகிக்
கொள்ளைவெஞ்செருவியற்றுதிமனிதரைக்குறுகி. (௬௨.)

மாயையென்றனவல்லனயாவையும்வழங்கித்
தீயிருட்பெரும்பாப்பினைச்செறிவுறத்திருத்தி
நீயொருத்தனேயுலகொருமூன்றையுநிமிர்வாய
போயுருத்தவருயிருகுத்துதவெனப்புகன்றான். (௬௩)

என்றகாலையினென்றுகொலேவுவதென்று
நின்றவாளெயிற்றரக்கனுமுவகையினிமிர்ந்தான்
சென்றுதேர்மிசையேறினனிராக்கதர்செறிந்தார்
குன்றுசுற்றியம்தகரிக்குலமன்னகுறியார். (௬௪)

கோடிகோடிநூறாயிரமாயிரங்குறித்த
வாடலானைகளணிதொறுமணிதொறுமமைந்த
வோடுதேர்க்குலமுலப்பிலவோடிவந்துற்ற
கேடில்வாம்பரிக்கணக்கையுங்கடந்தனகிளர்ந்த. (௬௫)

படைக்கலங்களும்பருமணிப்பூண்களும்பகுவா
யிடைக்கலந்தபேரெயிற்றிளம்பிறைகளுமெறிக்கப்
புடைப்பரந்தனவெயிற்களுநிலாக்களும்புரள
விடைக்குலங்கள்போலிராக்கதப்பதாதியுமிடைந்த. (௬௬)

கொடிக்குழீஇயனகொழுந்தெடுத்தெழுந்துமேற்கொள்ள
விடிக்குழீஇயெழுமழைப்பெருங்குலங்களையிரித்த
வடிக்குழீஇயிடுமிடந்தொறும்பிரிந்தெழுந்தார்த்த
பொடிக்குழீஇயண்டம்படைத்தவன்கண்ணையும்புதைத்த. (௬௭)

ஆனையென்னுமாமலைகளினிழிதருமருவி
வானயாறுகள்வாசியினுரையொடுமயங்கிக்
கானமாமரங்கல்லொடுமீர்த்தனகடிதிற்
போனபோக்கரும்பெருமையைப்புணரியிற்புக்க. (௬௮)

தடித்துமின்குலம்விசும்பிடைத்தயங்குவசலத்தின்
மடித்தவாயினர்வாளெயிற்றரக்கர்தம்வலத்திற்
பிடித்ததிண்படையங்கையால்விதிர்த்திடைப்பிறந்த
பொடித்தவெம்பொறிதோற்றினபோன்றனபோல்வ. (௬௯)

சொன்னநாலுடைவெள்ளமன்றிராவணன்றூர்ந்த
வன்னசேனையைவாயிலுமிழ்கின்றவமதி
முன்னம்வேலையுமுழுவதுங்குடித்தநமுறையி
தென்னமீட்டுமிழ்குறுமுனியொத்ததவ்விலங்கை. (௧௦௦)

சங்கபேரியுங்காளமுந்தாளமுந்தலைவர்
செங்கரநமுஞ்சிலையினாணொலிகளுஞ்சினமாப்
பொங்குமோதையும்புரவியினோதையும்பொலிதேர்
வெங்கணோலமுமாலெனவிழுங்கியதிலங்கை. (௧௦௧)

புக்கதாற்பெரும்போர்ப்படைப்பறந்தலைப்புறத்திற்
றொக்கதானெடுவானரத்தானையுந்துவன்றி
வொக்கவார்த்தனவுருக்கினதெழித்தனவுருமின்
மிக்கவான்படைவிடுகணைமாமலைவிலக்கி. (௧௦௨)

குன்றுகோடியுங்கோடிமேற்கோடியுங்குதித்த
வென்றிவானரவீரர்கண்முகந்தொறும்விலங்க
லொன்றினால்வருமைவருமிராக்கதருலந்தார்
பொன்றிவீழ்ந்தனபொருகரிபாய்பரிபொலந்தேர். (௧௦௩)

மழுவுங்குலமும்வலையமுநாஞ்சிலும்வாளு
மெழுவுமீட்டியுந்தோட்டியுமெழுமழுத்தண்டுங்
கழுவும்வேலொடுகணையமும்பகழியுங்காத்த
குழுவினோடுபட்டுருண்டனவானரக்குலங்கள். (௧௦௪)

முற்கரங்களுமுசலமுமுசண்டியுமுளையுஞ்
சக்கரங்களும்பிண்டிபாலத்தொடுதண்டுங்
கற்பணங்களுங்கணையமுங்கவண்விடுகல்லும்
வெற்பினங்களைநுறுக்கினகவிகளைவீய்த்த. (௧௦௫)

கதிரயிற்படைக்கலமவர்முறைமுறைகடாவ
வதிர்பிணப்பெருங்குன்றுகள்படப்படவழிந்த
வுதிரமுற்றபேராறுகடிசைதிசையோட
வெதிர்நடக்கிலராக்கினமரக்கருமியங்கார். (௧௦௬)

யாவராங்கெல்வானரராயினரொவருந்
தேவராகலினவரொடும்விசும்பிடைத்திரிந்தார்
மேவுகாதலின்மெலிவுறுமரம்பையர்விரும்பி
யாவியொன்றிடவிழைவினர்பிரிவுநோயகன்றார். (௧௦௭)

கரக்குமாயமும்வஞ்சமுங்களவுமேகடனா
மிரக்கமேமுதற்றருமத்தினெறிக்கொன்றுமிழியா
வரக்கரைப்பெருந்தேவர்களாக்கினவமலன்
சரத்தின்வேறினிப்பவித்திரமுளவெனத்தகுமோ. (௧௦௮)

அந்தகன்பெரும்படைக்கலமந்திரத்தமைத்தா
லிந்துவெள்ளெயிற்றரக்கருமியானையுந்தேரும்
வந்தவந்தனவானகமிடம்பெறுவண்ணஞ்
சிந்தினான்சரமிலக்குவன்முகந்தெரிந்திரிந்தான். (௧0௯)

கும்பகன்னனுண்டிட்டதுவயிரவான்குன்றின்
வெம்புவெஞ்சுடர்விரிப்பதுதேவரைமேனாட்
டும்பையின்றலைதுரந்ததுசுடர்மணித்தண்டொன்
றிம்பர்ஞாலத்தைநெளிப்பதுமாருதியெடுத்தான். (௧௧0)

வேறு.

காற்றன்றிதுகனலன்றெனவிமையோரிடைகாணு
வேற்றங்கடுவிசையோடுயர்கொலைநீடியவியல்பாற்
சீற்றந்தனியுருவாயிடைதேருதவதோர்மாறாய்
கூற்றங்கொடுமுனைவந்துளதென்னும்படிகொன்றான். (௧௧௧)

வெங்கண்மதமலைமேல்விரைபரிமேல்விடுதேர்மேற்
சங்கந்தருபடைவீரர்களுடன்மேலவர்தலைமே
லெங்குமுளனொருவன்னெதிர்திருநான்மறைதெரிக்குஞ்
செங்கண்ணவனிவனேயெனத்திரிந்தான்கலைதெரிந்தான். (௧௧௨)

இளர்ந்தாரையுங்கிடைத்தாரையுங்கிழித்தான்கனல்விழித்தான்
களந்தாழொருகுழம்பாம்வகையளைத்தானுருக்களைத்தான்
வளர்ந்தானிலையுணர்ந்தாருலகொருமூன்றையும்வலத்தா
லளந்தான்முனமிவனேயெனவிமையோர்களுமயிர்த்தார். (௧௧௩)

மத்தக்கரிநெடுமத்தகம்வகிர்ப்பட்டுகமண்மேல்
முத்திற்பொலிமுழுமேனியன்முகில்விண்டொடுமெய்யா
னொத்தக்கடையுகமுற்றுழியுறுகால்பொரவுமீன்
ஞெத்தப்பொலிகனகக்கிரிவெயில்சுற்றியதொத்தான். (௧௧௪)

இடித்தானிலம்விசும்போடெனவிட்டானடியெழுந்தான்
பொடித்தான்கடற்பெருஞ்சேனையைப்பொலந்தண்டுதென்வலத்தாற்
பிடித்தான்மதக்கரிதேர்முதற்பிழம்பானவைகுழம்பா
யடித்தானுயிர்குடித்தானெடுத்தார்த்தான்பகைதீர்த்தான். (௧௧௫)

நூறாயிரமதமாகரியொருநாழிகைநுவல்போ
தாறாய்நெடுங்கடுஞ்சோரியினளறும்வகையளைப்பா
னேறாயிரமெனலாயெழுவயவீரரையிடறித்
தேறுதுறுகொலைமேவியதிசையானையிற்றிரிந்தான். (௧௧௬)

தேரோறினர்ப்ரியேறினர்விடையேறினர்சினவெங்
காரோறினர்மழையேறினர்கலையேறினர்பல்வெம்
போரோறினர்புகழேறினர்புகுந்தார்புடைவளைந்தார்
நேரோறினர்விசும்பேறிடநெரித்தான்கதைதிரித்தான். (௧௧௭)

வேறு. அரிகுலமன்னனீலனங்கதனநுமன்சாம்பன்
பருவலிப்பனசனென்றிப்படைத்தலைவீரர்யாரும்
பொருசினர்திருகிவெற்றிப்போர்க்களமருங்கிற்புக்கா
ரொருவரையொருவர்காணாருயர்படைக்கடலினுள்ளார். (௧௧௮)

தொகும்படையரக்கர்வெள்ளந்துறைதுறையள்ளித்தூவி
நரும்படைத்தலைவர்க்கொல்லுநரசிங்கடந்ததென்ன
மிரும்படைக்கடலுட்செல்லுமாருதிவீரவாட்கை
யகம்பனைக்கிடைத்தான்றண்டாலரக்கரையரைக்குங்கையான். (௧௧௯)

மலைப்பெருங்கழுதையைஞ்ஞூற்றிரட்டியான்மனத்திற்செல்லும்
தலைத்தடந்தோள்வில்லன்றுருகனென்னுந்தன்மைக்
கொலைத்தொழிலவுணன்பின்னைபிராச்கதவேடங்கொண்டான்
நிலைத்தொழிற்குமரன்கொல்லத்தொல்லைநாட்செருவிற்றீர்ந்தான். (௧௨௦)

பாகசாதனனுமற்றைப்பகையடுந்திகிரிபற்று
மேகசாதனனுமுன்றுபுரமும்பண்டெரித்தவளோனும்
போகதாமொருவர்பற்றிக்குரங்கொடுபொரக்கற்றோ
யாககூற்றவியுண்பதிதனின்மேற்றுறுமென்றான். (௧௨௧)

யான்றடேனென்னின்மற்றிவ்வெழுகடல்வளாகமெல்லாம்
வான்றடாதரக்கனொன்றும்பெயரையுமாய்க்குமென்று
லூன்றடாவின்றவாளிமழைதுரந்துருத்துச்சென்றான்
மீன்றொடாவின்றதிண்டோளநுமனும்விலாவின்வந்தான். (௧௨௨)

தேரொடுகளிறுமாவுமரக்கருநெருக்கித்தெற்றக்
காரொடுகனலுங்காலுங்கிளர்ந்ததோர்காலமென்ன
வாரொடுந்தொடர்ந்தபைம்பொற்கழலினன்வருதலோடுஞ்
சூரொடுந்தொடர்ந்ததண்டைச்சுழற்றினன்வயிரத்தோளான். (௧௨௩)

எற்றினவெறிந்தவெல்லையெய்தினவெய்தபெய்த
முற்றினபடைகளியாவுமுறைமுறைமுறிந்துசிந்தச்
சுற்றினவயிரத்தண்டாற்றுலைத்தனனமரர்துள்ளக்
கற்றிலனின்றுகற்றான்கதையினல்வதையின்கல்வி. (௧௨௪)

அகம்பனுங்காணக்காணவையிருகோடிகைமா
முகம்பயில்கலினப்பாய்மாமுளையெயிற்றிட்டமூரி
நகம்பயிறேரிரேழுநூறுக்கினனூழிதீர்த்தா
னுகம்பெயருழிக்காற்றினலைவிலாமேருவொப்பான். (௧௨௫)

படுகளப்பரப்பைநோக்கிப்பாழிவாய்மடித்துநூழிற்
சுடுதழற்புகைவெங்கண்ணிற்றோன்றிடக்கொடித்தேர்தூண்டி
விடுகணைப்படைமாரிமழையினுமும்மைவீசி
முடுகுறச்சென்றுகுன்றின்முட்டினன்முகிலினார்ப்பான். (௧௨௬)

சொரிந்தனபகழிமாரிதோளினுமார்பின்மேலுந்
தெரிந்தனவசனிபோல்வசெறிபொறிபிதிர்வதிக்கின்
வரிந்தனவெருவைமானச்சிறைகளாலமரர்மார்பை
யரிந்தனவடிம்புபொன்கொண்டலைந்தனவாகுங்கண்ண. (கஉஎ)

மார்பினுந்தோளின்மேலும்வாளிவாய்மடுத்தவாயிற்
சோர்பெருங்குருதிசோரத்துளங்குவான்றேருமுன்னந்
தேரிரண்டருகுபூண்டகழுதையுமச்சுஞ்சிந்தச்
சாரதிபுரளவிரத்தண்டினாற்கண்டஞ்செய்தான். (கஉஅ)

வில்லினாலிவனைவெல்லவரிதெனநிருதன்வெய்ய
மல்லினாலியன்றதோளின்வலியினால்வானத்தச்சன்
கொல்லினாலமைந்ததாண்டோர்கொடுமுனைத்தண்டுகொண்டா
னல்லினால்வகுத்ததன்னமேனியான்கடலினார்ப்பான். (கஉகூ)

இன்றிவன்றன்னைவிண்ணொடேற்றிவாழிலங்கைவேந்தை
வென்றியனுக்கிமற்றைமனிதரைவெறியராக்கி
நின்றுயர்நெடியதுன்பமமரர்பானிருப்பனென்றுச்
சென்றனனரக்கனன்றுவருகெனவனுமன்சேர்ந்தான். (கஙo)

தாக்கினாரிடத்துமற்றும்வலத்தினுந்திரிந்தார்சாரி
யோக்கினாருழினார்ப்புக்கொட்டினார்கிட்டினார்கீட்
டேக்கினார்சுழற்றிமேன்மேற்சுற்றினாரொற்றவெற்ற
நீக்கினார்நெருக்கினார்போய்நீங்கினாரோங்கினார்மேல். (கஙக)

தட்டினார்தழுவினார்மேற்றாவினார்தரையினோடுங்
கிட்டினார்கிடைத்தார்வீசிப்புடைத்தனைகீழுமேலுங்
கட்டினார்காத்தாரொன்றுங்காண்கிலாரிறவுகண்ணுற்
றொட்டினார்மாதிவட்டமோடினாராதிபோனார். (கஙஉ)

மையொடுபகைத்துநின்றநிறத்தினன்வயிரமார்பிற்
பொய்யொடுபகைத்துநின்றகுணத்தினன்புகுந்துமோத
வெய்யவனதனைத்தண்டால்விலக்கினன்விலக்கலோடுங்
கையொடுமிற்றுமற்றைக்கதைகளுங்கண்டதன்றே. (கஙங)

கையொடுதண்டுநீங்கக்கடலெனக்கலக்கமுற்ற
மெய்யொடுநின்றவெய்யோன்மிடலுடையிடக்கைவீசி
யையனையலங்கலாகத்தடித்தனனடித்தலோடு
மொய்யெனவயிரக்குன்றத்துருமினேறிடித்ததொப்ப. (கஙச)

அடித்தவன்றன்னைநோக்கியசனியேறனையதண்டு
பிடித்துநின்றேயுமற்றான்வெறுங்கையான்பிழையிற்றென்று
மடித்துவாயிட்டுக்கையான்மார்பிடைக்குத்தவாயாற்
குடித்துநின்றுமிழ்வானென்னக்கக்கினன்குருதிக்கொள்ளை. (கஙரு)

மீட்டுமக்கையால்வீசிச்செவித்தலத்தெற்றிவீழ்த்தான்
கூட்டினூறுயிரைவிண்ணோர்குழாத்திடையரக்கர்கூட்டங்
காட்டில்வாழ்விலங்குமாக்கள்கோளரிகண்டவென்ன
விட்டமுற்றெதிர்ந்தவெல்லாமிரிந்தனதிசைகளெங்கும். (௧௬௬)

மாண்டனகம்பன்மண்மேன்மடிந்தனநிருதர்சேனை
மீண்டனர்குரக்குவீரர்விழுந்தனசினக்கைவேழந்
தூண்டினகொடித்தேரற்றுத்துணிந்தனதொடுத்தவாசி
யாண்டகையிளையவீரனடுஞ்சிலைபொழியுமம்பால். (௧௬௭)

ஆர்க்கின்றகுரலுங்கேளானிலக்குவனசனியேற்றைப்
பேர்க்கின்றசிலையினாணின்பேரொலிகேளான்வீர
ரேற்கின்றதாற்றதென்பதுணர்ந்திலனிசைப்போரில்லைப்
போர்க்குன்றமனையதோளான்வெய்யதோர்பொருமலுற்றான். (௧௬௮)

வீசினநிருதர்சேனைவேலையிற்றென்மேற்றிக்கின்
யோசனையேழுசென்றானங்கதனவனுக்கப்பா
லாசையினிரட்டிசென்றானரிகுலத்தலைவனப்பா
லீசனுக்கிளையவீரனிரட்டிக்குமிரட்டிசென்றான். (௧௬௯)

மற்றையோர்நாலுமைந்தும்யோசனைமலைந்துபுக்கார்
கொற்றமாருதியும்வள்ளலிலக்குவனின்றுகொற்ற
முற்றினவிரண்டுமூன்றுகாவதமொழியப்பின்னுந்
சுற்றியசேனைநீர்மேற்பாசிபோன்மிடையுர்துன்னி. (௧௭௦)

இளையவனின்றகுழலெய்துவன்விரைவினென்றே
றுளைவுவந்துள்ளத்தாண்டவூழிவெங்காலிற்செல்வான்
களைவருந்துன்பநீங்கக்கண்டனனென்பமாதோ
விளைவனசெறுவிற்பல்வேறுயினகுறிகள்மெய்யின். (௧௭௧)

ஆனையின்கோடும்பீலித்தழைகளுமாரத்தோடு
மானமாமணியும்பொன்னுமுந்தமுங்கொழித்துவாரி
மீனெனவங்குமிழ்க்கும்படைக்கலமிளிரவீங்கு
மானவெண்குடையவாயகுருதிப்பேராறுகண்டான். (௧௭௨)

ஆசைகடோறுஞ்சுற்றிமலைகின்றவரக்கர்தம்மேல்
வீசினபகழிபற்றத்தலையொடும்விசும்பைமுட்டி
ஓசையினுலகமெங்குமுதிர்வுறவூழிநாளிற்
காசறுகல்லின்மாரிபொழிவபோல்விழக்கண்டான். (௧௭௩)

மானவேலரக்கர்விட்டபடைக்கலமானவாரி
யானவன்பகழிசிந்தத்திசைதொறும்பொதிவோடற்ற
மீனினம்விசும்பினின்றுமிருளுகவீழ்வபோலக்
கானகத்துடர்ந்ததீயிற்கவெனபலவுங்கண்டான். (௧௭௪)

அருளுடைக்குரிசில்வாளியந்நரமெங்குந்தாளுய்த்
தெருளுறத்தொடர்ந்துவீசிச்செல்வனதேவர்காண
விருளுடைச்சுடலையாடுமெண்புயத்தண்ணல்வண்ணச்
சுருளுடைச்சடையின்கற்றைச்சுற்றெனச்சுடர்வகண்டான். (கசரு)

செய்யுறக்கொளுத்தப்பட்டநெருப்பெனப்பொருப்பினோங்கு
மெய்யுறக்குருதித்தாரைவிசும்புறவிளங்குகின்ற
வையனிக்கங்குன்மாலையரசெனவறிந்துகாலங்
கைவிளக்கெடுத்ததென்னக்கவர்ந்தத்தின்காடுகண்டான். (கசசு)

ஆளெலாமழிந்ததேருமானையுமாடன்மாவும்
நாளெலாமெண்ணினாலுந்தொலைவிலாநாதரின்றித்
தாளெலாங்குலையவோடித்திரிவனதாங்கலாற்றுங்
கோளிலாமன்னனாட்டிற்குடியெனக்குலைவகண்டான். (கசஎ)

மிடல்கொளும்பகழிமாரிவானினுமும்மைவீசி
மடல்கொளுமலங்கன்மார்பன்மலைந்திடவுலந்துமாண்டா
ருடல்களுமுதிரநீருமுடைப்படைக்கலமுமிற்ற
கடல்களுநெடியகானுங்கார்தவழ்மலையுங்கண்டான். (கசஅ)

சுழித்தெறியூழிக்காலிற்றுருவினன்றடருந்தோன்ற
றழிக்கொண்டகுருதிவேலைதாவுவான்றனிப்போண்டங்
கிழித்ததுகிழித்ததென்னுநாணுறுமேறுகேட்டா
னழித்தொழிகாலத்தார்க்குமார்கலிக்கிரட்டியார்த்தான். (கசகூ)

ஆர்த்தபேரமலைகேளாவனுகினனுமனெல்லார்
வார்த்தையுங்கேட்கலாகுமென்றகமகிழ்ந்துவள்ளல்
பார்ப்பதன்முன்னம்வந்துவணங்கினன்விசையப்பாவை
தீர்த்தனையிளையவீரன்றழுவினனினையசொன்னான். (கரு0)

அரிகுலவீரனையயாண்டையருக்கன்மைந்தன்
பிரிவினைச்செய்ததெவ்வாறங்கதன்பெயர்ந்ததெங்கே
விரியிருட்பரவைச்சேனைவெள்ளத்துவிளைந்ததொன்றுந்
தெரிகிலனுரைத்தியென்றான்சென்னிமேற்கையன்சொன்னான். (கருக)

போயினார்போயவாறுபோயினதன்றிப்போரி
லாயினாராயதொன்றுமறிந்திலனையயாரு
மேயினார்மேயபோதேதெரிவதுவிளைந்ததென்றான்
றாயினான்வேலையோடுமெயிந்திரப்பரவைதானே. (கருஉ)

மந்திரமுளதாலையவுணர்வுறுமாலைத்தஃதுன்
சிந்தையினுணர்ந்துசெய்யற்பாற்றெனிற்செய்திதெவ்வர்
தந்திரமிதனைத்தெய்வப்படையினாற்சமைக்கினல்லா
லெந்தைநின்னடியர்யாருமெய்தலர்பின்னையென்றான். (கருங)

அன்னதுபுரிவனென்னுவாயிராமத்தன்னை
றன்னையேவணங்கிவாழ்த்திச்சரங்களைத்தெரிந்துதாங்கிப்
பொன்மலைவில்லினான்றன்படைக்கலம்பொருந்தவேந்தி
மின்னெயிற்றரக்கர்தம்மேல்வீசினான்வில்லின்செல்வன். (௧௫௪)

முக்கணான்படையைமுட்டிவிடுதலுமூங்கிற்காட்டிற்
புக்கதோரூழித்தீயிற்புரந்திரேருருவம்போகா
தக்கணத்தெரிந்துவிழ்ந்ததரக்கர்தஞ்சேனையாழித்
திக்கெலாமிருளுந்தீர்ந்ததேவருமயக்கந்தீர்ந்தார். (௧௫௫)

தேவர்தம்படையைவிட்டானென்பதுசிந்தைசெய்ய
மாபெருமாயையீங்கமகோதரன்மறையப்போனான்
யாவருமிரிந்தாரெல்லாமினமழைகழியவார்த்துக்
கோவிளங்களிற்றைவந்துகூடினாராடல்கொண்டார். (௧௫௬)

யாவர்க்குந்தீதிலாமைகண்டுகண்டுவகையேறத்
தேவர்க்குந்தேவன்றம்பிதிருமனத்தையந்தீர்ந்தான்
காவற்போர்க்குரக்குச்சேனைகல்லெனக்கலந்துபுல்லப்
பூவர்க்கமிமையோர்தூவப்பொலிந்தனர்தூதர்போனார். (௧௫௭)

இலங்கையர்கோனையெய்தியெய்தியதுரைத்தார்நீர்கள்
விலங்கினிர்போலும்வெள்ளநூற்றையும்வில்லின்வேழக்
குலங்களினோடுங்கொல்லக்கூடுமோவென்னக்கொன்றை
யலங்கலான்படையினென்றானதேலாகுமென்றான். (௧௫௮)

வந்திலனிராமன்வேறோர்மலையுளானும்பிமாயந்
தந்தனதெரிவான்போனானும்பனதாழ்க்கத்தாழா
வெந்தையிதியன்றதென்னமகோதரவியாண்டையென்ன
வந்தரத்திடையானென்னவிராவணனழகிதென்றான். (௧௫௯)

வேறு.

காலமீதெனக்கருதியவிராவணன்காத
லாலமாமாமொன்றினைவிளைவினடைந்தான்
மூலவேள்விக்குவேண்டுவகலப்பைகண்முறையாற்
கூலநீங்கியவிராக்கதப்பூசுரர்கொணர்ந்தார். (௧௬௦)

அம்பினாற்பெருஞ்சமிதைகளமைத்தனரனலிற்
தும்பைமாமலர்தூவினர்காரியெட்சொரிந்தார்
கொம்புபல்லொடுகரியவெள்ளாட்டிருங்குருதி
வெம்புவெந்தசைமுறையினிட்டெண்ணையால்வேட்டார். (௧௬௧)

வலஞ்சுழித்துவந்தெழுந்தெரிநறுவெறிவயங்கி
நலஞ்சுரந்தனபெருங்குறிமுறைமையினல்கக்
குலஞ்சுரந்தெழுகொடுமையான்முறையினிற்கொண்டே
நிலஞ்சுரந்தெழுவென்றியென்றம்பரினியிர்ந்தான். (௧௬௨)

விசும்புபோயினன்மாயையின்பெருமையான்மேலைப்
பசும்பொனாட்டவர்நாட்டமுமுள்ளமும்படரா
வசும்புவிண்ணிடையடங்கினன்முனிவருமறியார்
தசும்புறுண்ணெடுங்கோளொடுகாவலுஞ்சார. (௧௬௩)

அனையனின்றனனவ்வழிமகோதரனறிந்தோர்
வினையமெண்ணினனிந்திரவேடத்தைமேவித்
துனைவலத்தயிராபதக்களிற்றின்மேற்றோன்றி
முனைவர்வானவரவரொடும்போர்செயமுண்டான். (௧௬௪)

அரக்கர்மானிடர்குரங்கெனுமவையெல்லாமல்ல
வுருக்களியாவுளவுயிரினியுலகத்தினுழல்வ
தருக்குறுபோர்க்குடன்வந்துளவாமெனச்சமைந்தார்
வெருக்கொளப்பெருங்கவிப்படைகுலைந்ததுவெருவி. (௧௬௫)

கோடுநான்குடைப்பானிறக்குன்றைமேற்கொண்டா
னாடலிந்திரனல்லவரியாவருமமரர்
சேடர்சிந்தனைமுனிவர்களமர்பொரச்சீறி
ஊடுவந்துற்றதென்கொலோகிபமெனவுலைந்தார். (௧௬௬)

அனுமன்வான்முகநோக்கினனாழியையகற்றித்
தனுவலங்கொண்டதாமரைக்கண்ணவன்றம்பி
முனிவர்வானவர்முனிந்துவந்தேயமர்முயன்ற
துனியிதென்கொலோசொல்லுதிவிரைந்தெனச்சொன்னான். (௧௬௭)

இன்னகாலையினிலக்குவன்மேனிமேலெய்தான்
முன்னைநான்முகன்படைக்கலமிமைப்பதன்முன்னம்
பொன்னின்மால்வரைக்குரீஇயினமொய்த்ததுபோலப்
பன்னலாந்தரமல்லனசுடர்க்கணைபாய்ந்த. (௧௬௮)

கோடிகோடிநூறாயிரங்கொடுங்கணைக்குழாங்கள்
மூடிமேனியைமுற்றுறச்சுற்றினமூழ்க
ஆடுசெய்வதொன்றுணர்ந்திலனுணர்வுபுக்கொடுங்க
வாடன்மாகரிசேவகமமைந்தெனவசைந்தான். (௧௬௯)

அனுமனிந்திரன்வந்தவனென்கொலிதமைந்தா
னினியவனெற்றுவன்களிற்றினோடெடுத்தெனவெழுவான்
றனுமனுமிரங்கோடிவெங்கடுங்கணைதைக்க
நினைவுஞ்செய்கையுமறந்துபோய்நெடுநிலஞ்சேர்ந்தான். (௧௭௦)

அருக்கன்மாமகனுடகக்குன்றமொன்றலர்ந்த
முருக்கின்கானகமாமெனக்குருதிநீர்முடுகத்
தருக்கின்வெஞ்சரந்தலைத்தலைமயங்கினதைக்க
வுருக்குசெம்பெனக்கண்ணினனெடுநிலமுற்றான். (௧௭௧)

அங்கதன்பதிறாயிரமயிற்கணையழுந்தச்
செங்கவேறிடியுண்டனெடுமலைஞ்சேர்ந்தான்
சங்கமேறியபெரும்புகழ்ச்சாம்பனுஞ்சாய்ந்தான்
அங்கமார்பையுந்தோளையும்வடிக்கணைதுளைக்க. (௧௭௨)

நீலனாயிரம்வடிக்கணைநிறம்புக்குநெருங்கக்
காலனார்முகங்கண்டனனிடபன்வின்கலந்தா
னாலமேயன்னபகழியாற்பனசனுமசைந்தான்
கோலின்மேனியன்கூற்றினுற்குமுதனுங்குலைந்தான். (௧௭௩)

வேலைகட்டினோனாயிரம்பகழியால்வீழ்ந்தான்
வாலிநேர்வலிமயிந்தனுந்தம்பியுமடிந்தார்
காலவெந்தொழிற்கவையனும்வானகங்கண்டான்
மாலைவாளியிற்கேசரிமண்ணிடைமறைந்தான். (௧௭௪)

விந்தமன்னதோட்சதவலிசுசேடணன்வினதன்
கெந்தமாதனனிடும்பன்வன்றதிமுகன்சரா
வந்தவார்கணைகோடிதம்முடலமுற்றுருவிப்பத்
தந்தநல்லுணர்வொடுங்கினர்மண்ணுறச்சாய்ந்தார். (௧௭௫)

மற்றைவீரர்களியாவரும்வடிக்கணைமழையால்
முற்றும்வீய்ந்தனர்முழங்குபெருதிரத்தின்முந்நீ
ரொற்றுவான்றிரைக்கடலொடும்பொருதுசென்றேறி
யொற்றைவான்கணையாயிரங்குரங்கினையுருட்ட. (௧௭௬)

தளைத்துவைத்தநாசதமுகன்பெரும்படைதள்ளி
யொளிக்கமற்றொருருபுகலிடமுணர்கிலருமின்
வளைத்துவித்தியவாளியான்மண்ணொடுதிண்ண
முளைப்புடைத்தனவொத்தனவானரமுடிந்த. (௧௭௭)

குவளைக்கண்ணினைவானவர்மடந்தையர்கோட்டித்
அவளப்பாரிடைக்கிடந்தனர்குருதிநீர்சுற்றித்
திவளக்கீழொடுமேல்புடைபரந்திடைசெறியப்
பவளக்காடுடைப்பாற்கடலொத்ததப்பரவை. (௧௭௮)

விண்ணிற்சென்றதுகவிக்குலப்பெரும்படைவெள்ளங்
கண்ணிற்கண்டனர்வானவர்விருந்தெனக்கலந்தா
ருண்ணிற்கும்பெருங்களிப்பினரளவளாயுகந்தார்
மண்ணிற்செல்லுதிரிக்கணத்தேயெனவலிந்தார். (௧௭௯)

பார்படைத்தவன்படைக்கொருபூசனைபடைத்திர்
நீர்படக்கடவீரவீர்வரிசிலைநெடியோன்
பேர்படைத்தவர்க்கடியவர்க்கடியரும்பெறுவார்
வேர்படைத்தவெம்பிறவியாற்றுவக்குறுவீடு. (௧௮௦)

நங்கள்காரியமியற்றுவானுலகிடைநடந்தீ
ருங்களாருயிரும்முயிருடல்பிறிதற்றீர்
செங்கணுயகற்காகவெங்களத்திடைத்தீர்ந்தீ
ரெங்கணுயகர்நீர்களென்றிமையவரிசைத்தார். (௧௮௧)

வெங்கண்வானரக்குழுவொடுமிளையவன்விளிந்தா
னிங்குவந்திலனிராமனிப்பொழுதெனவிசைத்தான்
சங்கமுதினன்றுதையைவல்லையிற்சார்ந்தான்
பொங்குபோரிடைப்புகுந்துளபொருளெலாம்புகன்றான். (௧௮௨)

இறந்திலன்கொலவ்விராமனென்றிராவணனிசைத்தான்
றுறந்துநீங்கினனல்லனேற்றம்பியைத்துலைத்துச்
சிறந்தநண்பரைக்கொன்றுதன்சேனையைச்சிதைக்க
மறந்துநீங்குமேமற்றவன்றிறனென்றான்மதலை. (௧௮௩)

அன்னதேயெனவரக்கனுமாதரித்தமைந்தான்
சொன்னமைந்தனுந்தன்பெருங்கோயிலைச்சூழ்ந்தான்
மன்னனேவலின்மகோதரன்போயினன்வந்தா
னென்னையாளுடைநாயகன்வேறிடத்திருந்தான். (௧௮௪)

செய்யதாமரைநாண்மலர்க்கைத்தலஞ்சேப்பத்
துய்யதேவர்தம்படைக்கெலாம்வரன்முறைதூக்கு
மெய்கொள்பூசனைமுறைமுறையியற்றிமேல்வீரன்
மொய்கொள்போர்க்களத்தெய்துவாமினியெனமுயன்றான். (௧௮௫)

கொள்ளியிற்சுடரனலிதன்பகழிகைக்கொண்டா
னள்ளிநீக்கலாவாரிருட்பிழம்பினையழித்தான்
வெள்ளிவெங்களப்பரப்பினிற்பொருக்கெனவிழித்தான்
றள்ளிருமரைச்சேவடிநடங்குறச்சார்ந்தான். (௧௮௬)

நோக்கினன்பெருந்திசைதொறுமுறைமுறைநோக்கி
லூக்கினன்றடந்தாமரைத்திருமுகத்துதிரம்
போக்கினனிணப்பங்கயத்தழுவத்தட்புக்கான்
காக்கும்வன்றுனைத்தலைவரைத்தனித்தனிகண்டான். (௧௮௭)

சுக்கிரீவனைநோக்கித்தன்றுமரைத்துணைக்க
ணுக்கநீர்த்திரளொழுகிடநெடிதுநின்றுயிர்த்தான்
றக்கதோவிதுநினக்கென்றுதனிமனந்தளர்வான்
பக்கநோக்கினன்மாருதிதன்மையைப்பார்த்தான். (௧௮௮)

கடல்புகுந்துபுக்கரக்கராக்கருவொடுங்கலக்கி
யிடர்கடந்துநானிருக்கநீநல்கியதிதற்கோ
வுடல்கடந்தனவேயுனையரக்கன்வில்லுதைத்த
வடல்கடந்தபோர்வாளியென்றுகுலித்தழுதான். (௧௮௯)

முன்னைத்தேவர்தம்வரங்களுமுனிவர்தமொழியும்
பின்னைச்சானகியுதவியும்பிழைத்தனபிறந்த
புன்மைச்செய்தொழிலென்வினைக்கொடுமையாற்புகழோ
டென்னைப்போல்பவராருளரொருவரென்றிசைத்தான். (கக௦)

புன்றொழிற்புலையரசினைவெஃகியென்பூண்டேன்
கொன்றொருக்கினெனெந்தையைச்சடாயுவைக்குறைத்தே
னின்றொருக்கினனித்தனைவீரனையிருந்தேன்
வன்றொழிற்கொருவரம்புமுண்டாய்வரவற்றே. (ககக)

தமையனைக்கொன்றுதம்பிக்குவானரத்தலைமை
யமையநல்கினனடங்கலுமவிப்பதற்கமைந்தேன்
கமைபிடித்துநின்றுங்களோயித்துணைகண்டேன்
சுமையுடற்பொறைசுமக்கவந்தனனெனச்சொன்னான். (ககஉ)

விடைக்குலங்களினடுவணோர்விடைகிடந்தென்னக்
கடைக்கண்மையுகவங்கதக்களிற்றினைக்கண்டான்
படைக்கலங்களைச்சுமக்கின்றபதகனேன்பழிபார்த்
துடைக்கலப்பொருள்காத்தவாறழகிதென்றழுதான். (ககங)

உடலிடைத்தொடர்பகழியினொளிர்கதிர்க்கற்றைச்
சுடருடைப்பெருங்குருதியிற்பாம்பெனச்சுமந்த
மிடலுடைப்பணமீமிசைத்தான்பண்டைவெள்ளக்
கடலிடைத்துயில்வானன்னதம்பியைக்கண்டான். (ககச)

பொருமினனகம்பொங்கினனுயிர்முற்றும்புகைந்தான்
குருமணித்திருமேனியுமனமெனக்குலைந்தான்
றருமமின்றுதன்கண்புடைத்தலம்வரச்சாய்ந்தா
னுருமினாலிடியுண்டதோர்மராமரமொத்தான். (ககரு)

உயிர்த்திலனொருநாழிகையுணர்ந்திலனென்றும்
வியர்த்திலனுடல்விழித்திலன்கண்ணிணைவிண்ணோ
ரயிர்த்திலன்கொலென்றஞ்சினரங்கையுந்தாளும்
பெயர்த்திலனுயிர்பிரிந்திலன்கருணையாற்பிறந்தான். (ககசு)

தாங்குவாரில்லைத்தம்பியைத்தழீஇக்கொண்டதன்னை
வாங்குவாரில்லைவாக்கினாற்றெருட்டுவாரில்லைப்
பாங்கராயுள்ளோரியாவரும்பட்டனர்பட்ட
தீங்கினாலிதுதமியனையார்துயர்தீர்ப்பார். (ககஎ)

கவந்தபந்தமுங்கழுதுந்தங்கணவரைக்காணாச்
சிவந்தகண்ணியர்தேடினர்திரிபவர்திரளு
முவந்தசாதகநீட்டமுமோரியினொழுக்கும்
நிவந்தவல்லதுபிறரிலைக்களத்திடைநின்றார். (ககஅ)

வானநாடியர்வயிறலைத்தழுதகண்மழைநீர்
சோனைமாரியிற்சொரிந்தனர்தேவருஞ்சொரிந்தா
ரோனைநிற்பவுந்திரிபவுமிரங்கினவெவையு
ஞானநாயகனுருவமேயாதலானடுங்கி. (௧௯௯)

முளைகயினுண்மலர்க்கிழவற்குமுக்கணான்றனக்கு
நகையுநீங்கிய திருமுகங்கருணையுநலியத்
தொகையினின்றவர்க்குள்ளதுசொல்லியென்றுடர்ந்த
பகையும்பார்க்கின்றபாவமுங்கலுழ்ந்ததுபரிவால். (௨௧௦)

அண்ணலுஞ்சிறிதுணர்வினோடுயிர்ப்பனாகிக்
கண்விழித்தனன்றம்பியைத்தெரிவுறக்கண்டான்
விண்ணையுற்றனன்மீள்கிலனென்றகம்வெதும்பப்
புண்ணினுற்றதோரெரியன்னதுயரினன்புலம்பும். (௨௦௧)

வேறு.

எந்தையிறந்தானியானுமிருந்தேனுலகெல்லாந்
தந்தனனென்னுங்கொள்கைதவிர்ந்தேன்றமியல்லே
னுய்ந்துமிருந்தாய்நீயெனநின்றேனானாகாளை
வந்தனையாவந்தனையாவினிவாழேன். (௨௦௨)

தாயோநீயேதந்தையுநீயேதவநீயே
சேயோநீயேதம்பியுநீயேதிருநீயே
போயோநின்றாயென்னையிகந்தாய்புகழ்பாராய்
நீயோயானோநின்னினுநெஞ்சம்வலியேனோ. (௨௦௩)

ஊறுநின்றபுண்ணுடையாய்பாலுயிர்காணா
னாறுநின்றேனாவிசுமந்தேயழுகின்றே
னேறேயின்னுமுய்யினுமுய்வேனிருகூறாய்க்
கீறுநெஞ்சம்பெற்றனனன்றோகெடுவேனே. (௨௦௪)

பயிலுங்காலம்பத்தொடுநாலும்படர்கானத்
தயில்கின்றேனுக்காவனநல்கியயிலாதாய்
வெயிலென்றுன்னாய்நின்றுதளர்ந்தேமெலிவெய்தித்
துயில்கின்றாயோவின்றிவ்வுறக்கந்துறவாயோ. (௨௦௫)

அயிராநெஞ்சாவியுமொன்றெயெனுமச்சொற்
பயிராவெல்லைபாதகனேற்கும்பரிவுண்டோ
செயிரோவில்லாவுன்னையிழந்துந்திரிகின்றே
னுயிரோநானோவாரினியுன்னோடுறவையா. (௨௦௬)

வேழ்விக்கேகிவில்லுமிறுத்தோர்விடமம்மா
வாழ்விக்கும்மென்றெண்ணினன்முன்னேவருவித்தேன்
சூழ்வித்தென்னைச்சுற்றினரோடுஞ்சுடுவித்தேன்
முழ்வித்தேனோவித்தனைகேடுந்தருவித்தேன். (௨௦௭)

மண்மேல்வைத்தகாதலின்மாதாமுதலோர்க்குப்
புண்மேல்வைத்ததீயிகர்துன்பம்புகுவித்தேன்
பெண்மேல்வைத்தகாதலினிப்பேறுகள்பெற்றே
னென்மேல்வைத்தேனென்புகழியானானெளியேனே. (௨௦௮)

மாண்டாய்நீயோயானொருபோதுமுயிர்வாழே
னாண்டானல்லனாவிலமர்தோயபரதன்றான்
பூண்டாரெல்லாம்பொன்றுவர்துன்பம்பொறையாற்றார்
வேண்டாவோநானல்லறமஞ்சிமெலிவுற்றால். (௨௦௯)

அறந்தாய்தந்தைசுற்றமுமற்றும்மெனையல்லால்
மறந்தாயொன்றுமெய்மறவாதாயுடன்வந்து
பிறந்தாயென்னைப்பின்புதொடர்ந்தாய்பிரிவுற்று
யிறந்தாயுன்னைக்கண்டுமிருந்தேனெளியேனே. (௨௧௦)

சான்றோர்மாதைத்தக்கவரக்கன்சிறைதட்ட
வான்றோர்சொல்லுநல்லறமன்றன்வசமானால்
மூன்றாய்நின்றபேருலகொன்றாய்முடியாவேற்
றோன்றுவோவென்வல்வில்லின்வீரத்தொழிலம்மா. (௨௧௧)

வேலைப்பள்ளக்குண்டகழிக்கும்விரதற்குங்
காலிற்செல்லுங்காகமணிக்குங்காருக்கு
மூலப்பொத்தற்செத்தமரத்தேழ்முதலுக்கும்
வாலிக்குமேயாயினவொருவென்வலியம்மா. (௨௧௨)

இருந்தேனானாலிந்திரசித்தேமுதலாய
பெருந்தேராரைக்கொன்றுபிழைக்கப்பெறுவேனோ
வருந்தேனீயேவெல்லுதியென்னும்வலிகொண்டேன்
பொருந்தேனினிப்பொய்ப்பிறவிக்கும்பொறையல்லேன். (௨௧௩)

மாதாவுநஞ்சுற்றமுநாடுமறையோரு
மேதானாரோவென்றுதளர்ந்தேயிறுவாரைத்
தாதாய்காணச்சாலநினைந்தேன்றனையாள்வெம்
போதாயையாபொன்முடியென்னைப்புனைவிக்க. (௨௧௪)

கொடுத்தேனன்றேவீடணனுக்குக்குலமாள
முடித்தோர்செல்வமியான்முடியாதேமுடிகின்றேன்
படித்தானென்றேபொய்மைகுடிக்குப்பழிபெற்றே
யொடித்தேனன்றேயென்புகழ்நானேயுணர்வற்றேன். (௨௧௫)

என்றென்றேங்காவிம்முமுயிர்க்குமிடையின்கட்
சென்றொன்றொன்றேவிந்தியவெல்லாஞ்சிறையெய்தப்
பொன்றும்மென்னுந்தம்பியையார்வத்தொடுபுல்லி
யொன்றுந்தேறான்றன்னைமறந்தான்றுயில்வுற்றான். (௨௧௬)

கண்டார்விண்ணோர்கண்கள்புடைத்தார்கலுழ்கின்றார்
கொண்டார்துன்பமென்முடிவென்றார்குலைகின்றா
ரண்டாவையாவெவர்கள்பொருட்டாலயர்கின்றா
யுண்டோவுன்பாற்றுன்பெனவன்போடினாசெய்தார். (உகஎ)

வேறு.

உன்னையுள்ளபடியறியோமுலகையுள்ளதிறனறியோம்
பின்னையறியோமுன்னறியோமிடையுமறியோம்பிறவாமல்
நின்னைவணங்கிநீவகுத்தநெறியினிற்குமதுவல்லா
லென்னையடியேஞ்செயற்பாலவின்பதுன்பமில்லோனே. (உகஅ)

அரக்கர்குலத்தைநவேரறுத்தெம்மல்லனீக்கியருளாயென்
றிரக்கவெம்மேற்கருணையினாலிசையாவுருவமிவையெய்திப்
புரக்குமன்னர்குடிப்பிறந்துபோந்தாயறத்தைப்பொறைதீர்ப்பான்
கரக்கநினதேநெடுமாயமெமக்குங்காட்டக்கடவாயோ. (உககூ)

ஈன்றெம்மிடுக்கண்டுடைத்தளிப்பானிரங்கியரசரிற்பிறந்தாய்
மூன்றுமுலகந்துயர்தீர்த்தியென்னுமாசைமுயல்கின்றோ
மென்றுமறந்தோமவனல்லன்மனிதனென்றேயிதுமாயம்
போன்றதில்லையாளுடையாய்பொய்யும்புகலப்புக்காயோ. (உஉ0)

அண்டம்பலவுமனைத்துயிருமகத்தும்புறத்துமுளவாக்கி
உண்டுமுமிழ்ந்துமளந்திடந்துமுள்ளும்புறத்துமுளையாகக்
கொண்டுசிலம்பிதன்வாயிற்கூர்நூலியையக்கூடியற்றிப்
பண்டுமின்றுமமைக்கின்றபடியையொருவாய்பரமேட்டி. (உஉக)

துன்பவிளையாட்டிதுவேயுமுன்னைத்துன்பர்*துடர்வின்மை
யின்பவிளையாட்டாமெனினுமறியாதோமுக்கிடருற்றா
லன்புவிளையுமருள்விளையுமறிவுவிளையுமிதுவெல்லா
முன்புபின்புநடுவில்லாய்முடித்தாலன்றிமுடியாதே. (உஉஉ)

வருவாய்போலவாராதாய்வந்தாயென்றுமனங்களிப்ப
வெருவாதிருந்தோநீயிடையேதுன்பம்விளைக்கமெலிகின்றோங்
கருவாயளிக்குங்களைகண்ணேநீயேயிதனைக்களையாயேற்
றிருவாழ்மார்பநின்மாயையெம்மாற்றீர்க்கத்தீருமோ. (உஉங)

அம்பரீடற்கருளியதுமயனார்மகனுக்களித்ததுவு
மெம்பிரானேயெமக்கின்றுபயந்தாயென்றேயேமுறுவோம்
வெம்புதுயரநீயுழக்கவெளிகாணாதுமெலிகின்றோந்
தம்பிதுணைவாநீயிதனைத்தவிர்த்தெம்முணர்வைத்தாராயோ. (உஉச)

என்பபலவுமெடுத்தியம்பியிமையாதோருமிடருழந்தா
ரன்புமிகுதியாலையனறிவுமுள்ளேயடங்கினான்
றுன்பமனிதர்கருமமேபுரியமுன்புணர்ந்தமையாற்
புன்கணிருதர்பெருந்தூதர்போனாரரக்கனிடம்புக்கார். (உஉரு)

---

* தொடர்வு-ஒப்புமை.

என்வந்தனரென்றரக்கர்க்கிறைவலியம்பவெதிர்செருவி
லின்மைந்தன்றன்னெடுஞ்சாத்திற்றுலைவனெல்லாமிலஞ்சேரப்
பின்வந்தவனுமுயிரிழந்தபிழையைநோக்கிப்பெருந்துயரால்
முன்வந்தவனுமுடிந்தானுன்பகைபோய்முடிந்ததெனமொழிந்தார். (உஉகூ)

பிரமாஸ்திரப்படலம்-முற்றிற்று.

ஆ-திருவிருத்தம்-உகூ௦ரு.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

உஉ - வது—சீதைகளங்காண்படலம்.

பொய்யார்தூதனொன்பதனாற்பொங்கியெழுந்தவுவகையனாய்
மெய்யார்விதியின்பெருவெறுக்கைவெறுக்கவீசிவிளைந்தபடி
கையார்வரைமேன்முரசேற்றிச்சாற்றிநகரங்களிசிறப்ப
செய்யாரடலாகென்றுமிகழ்த்தானென்றுநெறியில்லான். (க)

அந்தநெறியையவர்செய்யவரக்கன்மருத்தன்றனைக்கூவி
முந்தநீபோயரக்கருடன்முழுதுங்கடலின்முடுக்கிடுநின்
சிந்தையொழியப்பிறரறியிற்சிரமும்வாளுஞ்சிந்துவனென்
றுந்தவவன்போயரக்கருடன்முழுதுங்கடலினுள்ளிட்டான். (உ)

தெய்வவிமானத்திடையேற்றிமனிதர்க்குற்றசெயலெல்லாந்
தையல்காணக்காட்டுமின்கள்கண்டாலன்றித்தன்னுள்ளத்
தையநீங்காளென்றுரைக்கவரக்கர்மகளிரிரைத்தார்த்தே
யுய்யுமுணர்வுநீத்தானைநெடும்போர்க்களத்தினிடையுய்த்தார். (௩)

கண்டாள்கண்ணாற்கணவனுருவன்றியொன்றுங்காணாதா
ளுண்டாள்விடத்தையெனவுடலுமுணர்வுமுயிர்ப்புமுடனோய்ந்தா
டண்டாமரைப்பூநெருப்புற்றதன்மையுற்றாடரியாதாள்
பெண்டானுற்றபெரும்பீழையுலகுக்கெல்லாம்பெரிதன்றோ. (ச)

மங்கையழலும்வானாட்டுமயில்களழுதார்மழவிடையோன்
பங்கினுறையுங்குயிலழுதாள்பதுமத்திருந்தமாதழுதாள்
கங்கையழுதாணாமடந்தையழுதாள்கமலத்தடங்கண்ணன்
றங்கையழுதாளிரங்காதவரக்கிமாருந்தாமழுதார். (ரு)

பொன்றாழ்குழையாடனையீன்றபூமாமடந்தைபுரிந்தழுதாள்
குன்றுமறையுந்தருமமுமெய்குலைந்துகுலைந்துவிழுந்தழுத
பின்றுதடற்றும்பெரும்பாவமழுதபின்னென்பிறர்செய்கை
நின்றார்நின்றபடியழுதார்நினைப்புமுயிர்ப்புநீக்கினார். (௬)

நினைப்புமுயிர்ப்புநீத்தாளைநீராற்றெளித்துநெடும்பொழுதி
னினைத்தினரக்கர்மடவார்களெடுத்தாருயிர்வந்தேங்கினாள்
கனத்திலிறத்தான்றனைப்பெயர்த்துங்கண்டாள்கயலைக்கமலத்தாற்
சினத்திலலைப்பாளெனக்கண்ணைச்சிதைலையான்மோதினாள். (எ)

அடித்தாண்முலைமேல்வயிறலைத்தாளழுதாடொழுதாளனல்வீழ்ந்த
கொடித்தானென்னமெய்சுருண்டாள்கொதித்தாள்பதைத்தாள்குலைவுற்று
டிடித்தாண்மின்போலுயிர்கரப்பச்சோர்ந்தாள்சுழன்றுடேள்ளினள்
குடித்தாயெனாயுயிரோடுங்குழைத்தாளுழைத்தாள்குயிலன்னாள். (அ)

விழுந்தாள்புரண்டாளுடன்முழுதும்வியர்த்தாளுயிர்த்தாள்வெதும்பினா
ளெழுந்தாளிருந்தாண்மலர்க்கரத்தைநெரித்தாள்சிரித்தாளேங்கினாள்
கொழுந்தாவென்றாளயோத்தியர்தங்கோவேயென்றாளெவ்வுலகுந்
தொழுந்தாளரசேயோவென்றாள்சோர்ந்தாளரற்றத்துடங்கினாள். (௯)

வேறு.

உறமேவியகாதலுனக்குடையார்
புறமேதுமிலாரொடுபூண்முலையாள்
மறமேபுரிவார்வசமாயினையோ
வறமேகொடியாயிதுவோவருடான். (௧0)

முதியாருணர்வேதமொழிந்தவலாற்
கதியேதுமிலார்துயர்காணுதியோ
மதியேன்மதியேனுனைவாய்மையினால்
விதியேகொடியாய்விளையாடுதியோ. (௧௧)

கொடியேனிவைகாண்கிலனென்னுயிர்கோண்
முடியாதமனேமுறையோமுறையோ
விடியாவிருள்வாயெனைவீசினையோ
வடியேனுயிரோயருணாயகனே. (௧௨)

எண்ணாமயலோடுமிருந்தநுவின்
புண்ணாகியமேனிபொருந்திடவோ
மண்ணோருயிரோயிமையோர்வலியே
கண்ணேகருணாகரனேயமிர்தே. (௧௩)

வேள்விக்கனன்முன்மிதிலைத்தலையென்
பாவிக்கைபிடித்ததுபண்ணவநின்
றாவிக்கொருகோள்வரவோவலர்வாழ்
தேவிக்கமிர்தேமறையின்றெளிவே. (௧௪)

உய்யாளுயர்கோசலைதன்னுயிரோ
வையாவினையோனுயிர்வாழ்கிலனால்
மெய்யாவினையெண்ணிவிடுத்தகொடுங்
கைகேசிகருத்திதுவோகளிறே. (௧௫)

தகைவாணகர்நீதவிர்வாயெனவும்
வகையாதுதொடர்ந்தொருமான்முதலாம்
புகையாடியகாடுபுகுந்துடனே
பகையாடியவாபரிவேதுமிலேன். (௧௬)

இன்றிகலையேவிறலிவ்விடைமா
ளன்றியெனவும்பரிவோடடியே
வின்றிவணின்னைநெடுஞ்செருவிற்
கொன்றிவணிமைகுறித்தலினே. (௧௭)

மேநாவினையோய்விதியார்வினைவாற்
போதாநெறியெம்மொடுபோதுறுநாள்
மூதானவன்முன்னர்முடிந்திடனும்
மாதாவுனையின்வழிநின்றனையோ. (௧௮)

பூவுந்தளிருந்தொகுபொங்கணைமேற்
கோவுந்துயிலத்தருவாய்கொடியா
னோவின்றலைவர்தவிருங்கணையின்
மேவுங்குளிர்மெல்லணைமேவினையோ. (௧௯)

நெய்யார்பெருவேள்விநிரப்பிநெடுஞ்
செய்யார்புனலூடிருந்துதியால்
மெய்யாகியவாசகமும்விதியும்
பொய்யானவென்மேனிபொருந்துதலால். (௨௦)

மழுவாள்வரினும்பிளவாமனனே
டெழுவேனினியென்விடாதிடநான்
விழுவேனவன்மேனியின்மீதிலெனு
வெழுவாளைவிலக்கியம்பினளால். (௨௧)

வேறு.

மாடுறவினைந்துநின்றவலையெயிற்றரக்கிமாவைப்
பாடுறவற்றநோக்கிப்பாவையைத்தழுவிப்பற்றிக்
கூடினளென்னநின்றுசெவியிடைக்குறுகிச்சொன்னா
டேடியதவமேயென்னத்திரிசடைமறுக்கந்தீர்ப்பாள். (௨௨)

மாயமான்விடுத்தவாறுஞ்சனகனைவருத்தவாறும்
போயமாநாகபாசம்பிணித்ததுபோனவாறும்
நீயமாநினைவாய்மாளநினைதியோநெறியிலாரா
லாயமாமாயமொன்றுமறிந்திலையன்னமன்னாய். (௨௩)

கண்டனைகனவும்பெற்றநிமித்தமுநினைதசற்புந்
தண்டவாளரக்கர்பாவச்செய்கையுந்தருமந்தாங்கு
மண்டர்நாயகன்றன்வீரத்தன்மையுமயர்க்கலாமோ
புண்டரீகற்குமுண்டோவிறுதியிப்புலையர்க்கல்லால். (௨௪)

ஆழியானுக்கைதன்னினம்பொன்றுமறுத்திலாமை
யேழைநீகாண்டியன்றேயிலையவன்வதனமின்று
மூழிநாளிரவியென்னவொளிர்கின்றவுயிருக்கின்னல்
வாழியாற்கில்லைவாளாமயங்கலைவேள்விவந்தாய். (௨௫)

வியர்த்துளனிராமனென்னிலுலகமோரேழுமேழுந்
தீய்ந்துறுமிரவியின்றுந்திரியுமேதெய்வமென்னும்
ஈய்ந்துளவிரிஞ்சன்முன்னாவுயிரெலாம்வெருவுமன்னை
யாய்ந்தவையுள்ளபோதேயவருளாறமுமுண்டால். (௨௬)

மாருதிக்கில்லையன்றேமங்கைநின்வரத்தினாலே
யாருயிர்நீங்கலாறுற்கற்புக்குமழிவுமுண்டோ
சீரியான்றிதோன்றுந்திசைமுகன்படையிற்செய்கை
பேருமிப்பொழுதேதேவரெண்ணமும்பிழைப்பதுண்டோ. (௨௭)

தேவனைக்கண்டேன்பைம்பொற்செங்காஞ்சிரத்திற்சேர்த்தி
மூவரைக்கண்டாரன்னவிருவரைமுறையினோக்கி
யாவலிப்பெய்துகின்றாராயர்த்திலரஞ்சலன்னை
கூவலிற்புக்குவேலைகோட்படுமென்றுகொள்ளேல். (௨௮)

மங்கலநீங்கினாளையாருயிர்வாங்கினாளை
நங்கையிக்கடவுண்மானந்தாங்குறுநவையிற்றன்று
விங்கிவையளவையாகவிடர்க்கடல்கடத்தியென்றாள்
செங்கையளாயதையல்சிறிதுயிர்தரிப்பதானாள். (௨௯)

அன்னைநீயுரைத்ததொன்றுமழிந்திலவாதலாலே
புன்னையேதெய்வமாகவித்தனைகாலமுய்ந்தே
னின்னமிவ்விரவுமுற்றுமிருக்கின்றேனிறத்தலென்பால்
முன்னமேமுடிந்ததன்றேயென்றனண்முளரிநீத்தாள். (௩௦)

நாணெலாந்துறந்தேனில்லினன்மையினல்லார்க்கேய்ந்த
பூணெலாந்துறந்தேனென்றன்பொருசிலைமேகந்தன்னைக்
காணலாமென்னுமாசைகடுக்கவென்னாவிகாத்தே
னேனிலாவுடலினீங்கவெளிதெனக்கெனவுஞ்சொன்னாள். (௩௧)

தையலையிராமன்மேனிதைத்தவாட்டடங்கணாளைக்
கைகளிற்பற்றிக்கொண்டார்விமானத்தைக்கடவுகின்றார்
மெய்யுயிருலகத்தாகவிதியையும்வலித்துவிண்மேல்
பொய்யுடல்கொண்டுசெல்லுநமனுடைத்தூதர்போன்றார். (௩௨)

சீதைகளங்காண்படலம்- முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௨௬௩௭.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௨௩-வது—மருந்துப்படலம்.

போயினனடையலிப்பாற்புரிகெனப்புலவர்கோமா
னேயினகருமநோக்கியெய்தியவிலங்கைவேந்தன்
மேயினவுணவுகொண்டுமீண்டவையுறையுளீவிட்ட
வாயினவாக்கித்தான்வந்தமர்ப்பெருங்களத்தனானான். (௧)

நோக்கினான்கண்டான்பண்டிவ்வுலகங்கள்படைக்கநோற்றான்
வாக்கினான்மாண்டாரென்னவானரவீரர்முற்றும்
தாக்கினாரெல்லாம்பட்டதன்மையைவிடத்தைத்தானே
தேக்கினனென்னநின்றுதியங்கினனுணர்வுதீர்ந்தான். (௨)

விளைந்தவாறுணர்ந்திலாதான்வீங்கினான்வெதும்பினான்மெய்
யுளைந்துளைந்துயிர்த்தானூழியுண்டிலையென்னவோய்ந்தான்
வளைந்தபேய்க்கணமுநாயுநரிகளுமிரியவந்தா
விளங்கிளையோடுஞ்சாய்ந்தவிராமனையிடையிற்கண்டான். (௩)

என்பென்பதியாக்கையென்பதுயிரொன்பதிவைகளெல்லாம்
பின்பென்பவல்லவேனுந்தம்முடைநிலையிற்பேரா
முன்பென்பவுளதென்றுமுழுவதுந்தெரிந்தவாற்று
லன்பென்பதொன்றின்றன்மையமரருமறிந்ததன்றால். (௪)

ஆவியுமிவருக்கில்லையறிவெனுமதனாலாவி
போயினதில்லைவாயாற்புலம்பலன்பொருமிப்பொங்கித்
தீயினுமெரியுநெஞ்சின்வெருவலாற்றெரியநோக்கி
நாயகன்மேனிக்கில்லைவடுவெனநடுக்கந்தீர்ந்தான். (௫)

அந்தணன்படையால்வந்ததென்பதுமாற்றலான்ற
இந்திரசித்தேயெய்தானென்பதுமிளவற்காக
நொந்தனனிராமனென்றுநுண்மையுநொய்துநோக்கிச்
சிந்தையினெண்ணியெண்ணித்தீர்வதோருபாயந்தேர்வான். (௬)

உள்ளுறுதுன்பமுன்றவுற்றனவுறக்கமன்றே
தெள்ளிதினுணர்ந்தபின்னைச்சிந்தனைதெரிவதன்றே
வள்ளலோதம்பிமாயவாழ்கிலன்மாய*வாட்கைக்
கள்ளனோவென்றானென்னுமழையெனக்கலுழுங்கண்ணான். (௭)

பாசம்போயிற்றாற்போலப்பதுமத்தோன்படையுமின்றே
நாசம்போயெய்துநம்பிதம்பிக்குநடுக்கமில்லை
வீசம்போர்க்களத்துவீழ்ந்தசேனையுமீளும்வெய்ய
நீசன்போர்வெல்வதுண்டோவென்றுளநிலையினின்றான். (௮)

உணர்வதன்முன்னமின்னேயுற்றுழியுதவற்கொத்த
துணைவர்கடுஞ்சலில்லாருளரொளிற்றுருவித்தோன்றிக்
கொணர்குவன்விரைவினென்னாக்கொள்ளியொன்றங்கைகொண்டான்
புனரியினுதிரவெள்ளக்கொள்ளத்துவிரைவிற்போனான். (௯)

வாய்மடித்திரண்டுகையுமுறுக்கித்தன்வயிரச்செங்கண்
டீயுகக்கனகக்குன்றிற்றிரண்டதோண்மழையைத்தீண்ட
வாயிரகோடியானைப்பெரும்பிணத்தமளிமேலான்
காய்சினத்தனுமனென்னுங்கடல்கடந்தானைக்கண்டான். (௧௦)

* வாழ்க்கை-திரிவு.

கண்டுதன்கண்களூடுமழையெனக்கலுழிசோர
உண்டுயிரொன்பதுன்னியுடற்கணையொன்றொன்றாக
விண்டுதிர்புண்ணினின்றுமெல்லெனவிரைவின்வாங்கிக்
கொண்டனீர்கொணர்ந்துகோலமுகத்தினைக்குளிரச்செய்தான். (௧௧)

உயிர்ப்புமுன்னுதித்தபின்னருரோமங்கள்சிலிர்ப்பவூழி
வியர்ப்புளதாகக்கண்கள்விழித்தனமேனிமெள்ளப்
பெயர்த்துவாய்புனல்வந்தூறவிக்கலும்பிறந்தவாக
வயர்த்திலனிராமனாமம்வாழ்த்தினனமரரார்த்தார். (௧௨)

அழுகையோடுவகையுற்றவீடணனார்வங்கூரத்
தழுவினனவனைத்தானுமன்பொடுதழுவித்தக்கோய்
வழுவிலனன்றேவள்ளலென்றனன்வலியனென்றான்
றொழுதனனுலகமூன்றுந்தலையின்மேற்கொள்ளுந்தோளான். (௧௩)

அன்புதன்றம்பிமேலேயதிவினைமயக்கவையன்
றான்பொடுந்துயிலனானுணர்வினித்துடர்ந்தபின்னே
என்புருந்தெய்துமென்பதறிகிலமென்றலோடுந்
தன்பெருந்தன்மைக்கொத்தசாம்பனைத்தலையனென்றான். (௧௪)

அறிந்திலனவனையாண்டுங்கண்டிலனாவியாக்கை
பிறிந்திலனுளனென்றொன்றுந்தெரிந்திலன்பெயர்ந்தேனென்று
செறிந்ததார்நிருதர்வேந்தனுரைசெயக்காலின்செம்ம
லிறுந்திறமவனுக்கில்லைநாடுதமேகியென்றான். (௧௫)

அன்னவன்றன்னைக்கண்டாலானையவ்வரக்கர்க்கெல்லா
மன்னவநம்மைமீட்டுவாழ்விக்குமுறுதிவல்ல
னென்னலுமுயர்ந்தோமையவேகுதும்விரைவினென்றாச்
சின்னெறியிருளிற்சென்றார்சாம்பனைவிதியிற்சேர்ந்தார். (௧௬)

எரிகின்றமூப்பினாலுமேவுண்டநோவினாலு
மரிகின்றதுன்பத்தாலுமாருயிர்ப்படங்கியொன்றுந்
தெரிகின்றதில்லாமற்றச்சிந்தையனெனினுஞ்செல்வர்
வருகின்றசுவட்டையோர்ந்தான்செவிகளால்வயிரத்தோளான். (௧௭)

அரக்கனோவென்னையாளுமண்ணலோவனுமன்றானோ
விரக்கமுற்றருளவந்ததேவரோமுனிவரோயோ
வரக்கடவார்களல்லர்மாற்றலர்மலைந்துபோனார்
புரக்கவுள்ளாரோவென்னக்கருதினன்பொருமதிர்ந்தான். (௧௮)

வந்தயனின்றகுன்றின்வார்ந்துவிழருவிமானச்
சிந்தியகண்ணினீரரேங்குவார்தம்மைத்தேற்றி
யந்தமில்குணத்தரியாவரனுகிளியொன்கின்றானை
யுய்ந்தனமுய்ந்தோமென்றவீடணனுரையைக்கேட்டான். (௧௯)

மற்றவனின்றுரியாவரென்னமாருதியும்வாழிக்
கொற்றவவநுமனின்றேன்றொழுதனனென்றுகூற
விற்றிலமையவெல்லோமெழுந்தனமெழுந்தோமென்று
வுற்றபெருவகையாலேயோங்கினூற்றமுற்றான். (உ0)

விரிஞ்சன்வெம்படையென்றலும்வேதத்தின்வேதமன்ன
வரித்தமன்றன்னையொன்றுமாற்றலதென்றுமாற்ற
றெரிந்தனன்முன்னேயன்றான்செய்ததென்றெரித்தியென்றான்
பெருந்தகைதன்பவெள்ளத்துயிலுளாய்பெருமவென்றான். (உக)

அன்னவன்றன்மைகண்டாலாற்றுமோவாக்கைவேறே
யின்றுயிரொன்றேமூலத்திருவருமொருவரோயா
லிங்கிலைகிடப்பத்தாமாவிங்கினியிமைப்பின்முன்னம்
பொன்னியல்வயிரத்தோளாய்மருந்துபோய்க்கொணர்தியென்றான். (உஉ)

எழுபதுவெள்ளத்தோருமிராமனுமிளையகோவு
முழுவதிவ்வுலகமூன்றுநல்லறமூர்த்திதானும்
வழுவலின்மறையுமுன்னால்வாழ்ந்தனவாகுமைந்த
பொழுதிறைதாழாதென்சொன்னெறிதாக்கடிதுபோதி. (உ௩)

வேறு.

பின்புளிக்கடலென்னப்பெயர்ந்ததற்பினியோசனைகள்பேசநின்ற
வொன்பதினாயிரக்கடந்தாலிமையமெனுங்குலவரையையுறுதியுற்றாற்
றன்பெருமையோரிரண்டாயிரமுளதியோசனையின்றவிரப்போனால்
முன்புளயோசனையெல்லாமுற்றினைபொற்கூடஞ்சென்றுறுதிமொய்ம்ப.

அம்மலைக்குமொன்பதினாயிரமுளதாலியோசனையினிடதமென்னுஞ்
செம்மலைக்குமுளவாயவத்தனையோசனைகடந்தாற்சென்றுகாண்டி
யெம்மலைக்கும்பெரிதாகியவடமலையம்மலையினகலமென்னின்
மொய்ம்மலைத்ததிரடோளாய்முப்பத்திராயிரமியோசனையின்முற்றும். (உ௫)

மேருவினைக்கடந்தப்பாலொன்பதினாயிரமுளவோசனையைவிட்டா
னேரனுநீலகிரிதாவிரண்டாயிரமுளயோசனையினிற்கும்
மாருதிமற்றதற்கப்பாலியோசனைநாலாயிரத்துமருந்துவைகுங்
கார்வரையைக்காணுதிமற்றதுகாணவித்துயர்க்குக்கரையுங்காண்டி. (உ௬)

மாண்டாரையுய்விக்குமருந்தொன்றுமெய்வேறுவகிர்களாகக்
கீண்டாலும்பொருந்துவிப்பதொருமருந்துபடைக்கலங்கள்கிளர்ப்பதொன்று
மீண்டேயுந்தம்முருவேயருளுவதோர்மெய்மருந்துமுளநீவிர
வாண்டேகிக்கொணர்தியெனவடையாளத்தொடுமுரைத்தானறிவின்மிக்கான்

இம்மருந்துகாத்துறைவதெண்ணிலவாற்றெய்வங்களிரங்காதியார்க்கும்
செய்மருங்குபடர்கில்லாநெடுநேமிப்படையுமவற்றுடனேநிற்கும்
பொய்மருங்கினில்லாதாய்புரிகின்றகாரியத்தின்பொதுமைநோக்கிக்
கைமருங்குதடர்ந்தன்னைக்காவாயென்றப்புறம்போய்க்காக்குமென்றான்.

ஈங்கிருவேபனியாகினிறந்தாரும்பிறந்தாரோவெங்கோற்கியாதுந்
தீங்கிடையூறெய்தாமற்றெருட்டுதிர்போயெனச்சொல்லியவரைத்தீர்ந்தா
ரோங்கினன்வானெடுமுகட்டையுற்றனபொற்றோளிரண்டுந்திசையோடொக்க
வீங்கினவாகாசத்தைவிழுங்கினனேயெனவளர்ந்தான்வேதம்போல்வான்.

கோளோடுதாரகைகள்கோத்தமைத்தமணியாரக்கோவைபோன்ற
தோளோடுதோளகலமாயிரமியோசனையளவுசொல்லொண்ணுத்
தாளோடுதாள்பெயர்க்கவிடமிலதாயினவிலங்கைநடக்கைவீச
நீளோடுதிசைபோதாவிசைத்தெழுவானுருவத்தினிலையிதம்மா. (௩௦)

வால்விசைத்துக்கைநிமிர்த்துவாயினையுஞ்சிறிதகலம்வகுத்துமானக்
காலிலத்தினிடையூன்றியுரம்விரித்துக்கழுத்தினையுஞ்சுருக்கிக்காட்டித் [ழ்ந்த
தோன்மயிர்கொந்தளஞ்சிலிர்ப்பவிசைத்தெழுவானவ்விலங்கைதானஞ்செ
வேலையிற்புக்கழுந்தியதோர்மரக்கலம்போற்சுரித்துலையவிசையத்தோளான்

இழிந்தனமாமலைக்குலங்கணீண்டதுநீண்டகல்வேலைகிழக்குமேற்கும்
பொழிந்தனமீன்றுடர்ந்தெழுந்த பொருப்பினமுந்தருக்குலமும்பிறவும்போ
யழிந்தனவானவர்மானமாகாயத்திடையினிற்போயசனியென்ன [ங்கெ
விழுந்தனநீர்க்கடலழுந்தவேறினமேற்கிறினபோய்த்திசைகளெல்லாம்.

பாய்ந்தனனங்கப்பொழுதேபருவரைகளனைப்பலவும்வடபாகத்துச்
சாய்ந்தனபேருடற்பிறந்தசண்டமாருதம்வீசத்தாதைசால
வோய்ந்தனனென்றுரைசெய்யவிசும்பூடுபடர்கின்றுருவேகத்தாற்
காய்ந்தனவேலைகண்மேகங்கரிந்தனவெந்தெரிந்தபெருங்கானமெல்லாம்.

கடல்பின்னேநிமிர்ந்தோடக்கான்முன்னேகடிதோடக்காலிற்செல்வான்.
உடல்பின்னேசெலவுள்ளங்கடைக்குழைவால்செலச்செலவாருருவைநோக்கி
யடன்முன்னேதடங்கியநாளாழ்கடல்சூழிலங்கையெனுமரக்கர்வைகுந்
திடர்முந்நீர்க்கிடையறிந்தான்முரிந்ததுநந்துயரென்றார்தேவரெல்லாம்.

மேகத்தின்பதங்கடந்துவெங்கதிருந்தண்கதிரும்விரைவிற்செல்லு
மாகத்தினெறிக்கப்பால்வானமீன்குலம்வழங்கும்வரையைவிட்டுப்
போகத்தின்குறிதொடர்ந்தார்புகலிடங்கள்பிற்படப்போய்ப்பூவின்வந்த
வேகத்தந்தனைவிருக்கையினிச்சேய்த்தன்றுமென்னவெழுந்துசென்றான்.

வானநாட்டுறைகின்றார்வயக்கலுழன்வல்விசையான்மாயன்வைகுந்
தானநாட்டுறுகின்றானென்றுரைத்தார்சிலர்சிலர்கள்விரிஞ்சன்றன்ற
னேனைநாட்டெழுகின்றானென்றுரைத்தார்சிலர்சிலர்களீசனல்லாற்
போனநாட்டிடைபோகவல்லரோவிவன்முக்கட்புனிதனென்றார். (௩௬)

வேண்டுருவங்கொண்டெழுந்துவிளையாடுகின்றான்மெய்வேதநான்குந்
தீண்டுருவனல்லாததிருமாலேயிவனென்றார்தெரியநோக்கிக்
காண்டுமெனவிமைப்பதன்முன்கட்புலத்தைக்கடந்தாலுமின்றுங்காண்மின்
மீண்டுவருந்தாமல்லன்வீட்டுலகம்புகுமென்றார்மென்மேலுள்ளார். (௩௭)

உருவென்றார்சிலர்சிலர்களொளியென்றார்சிலர்சிலர்களொளிருமேனி
யருவென்றார்சிலர்சிலர்களண்டத்துக்கப்புறநின்றுலகமாக்கும்
கருவென்றார்சிலர்சிலர்கள்காற்றென்றார்சிலர்சிலர்கள்கடலைத்தாவிச்
செருவென்றானிலையொன்றுந்தெரியகிலாருலகனைத்துந்தெரியுஞ்செல்வர்.

வாசநாண்மலரோன்றனுலகளவுமிரிந்தனமேல்வானமான
காசமாயினவெல்லாங்கரந்தனதருவிடையேகனகத்தோள்கள்
வீசவான்முகடுரிஞ்சவிசைத்தெழுவானுடற்பிறர்சமுழக்கம்விம்ம
வாசைகாவலர்தலைகள்பொதிரெறிந்தார்விதிரெறிந்ததண்டகோளம். (௩௯)

வேறு.

தொடுத்தநாண்மாலைவானோர்முனிவரோமுதலாந்தொல்லோ
ரடுத்தநாண்மறைகளோதியாய்ந்தநாளவுணர்வேந்தன்
கொடுத்தநாளளந்துகொண்டகுறளனார்குறியபாத
மெடுத்தநாளொத்ததன்னலெழுந்தானுலகுக்கெல்லாம். (௪௦)

தேவருமுனிவர்தாமுஞ்சித்தருந்தெரிவைமாரு
மூவகையுலகினுள்ளாருவகையாற்றொடர்ந்துமொய்த்தார்
தூவினமணியுஞ்சாந்துஞ்சுண்ணமுமலருந்தோற்றப்
பூவுடையமார்தெய்வத்தருவெனவிசும்பிற்போனான். (௪௧)

இமையமால்வரையையுற்றானங்குளவிமைப்பிலோருங்
கமைவுடைமுனிவர்மற்றுமறனெறிகலந்தோரெல்லா
மமைகவின்கருமமென்றுவாழ்த்தினரதனுக்கப்பா
லுமையொருபாகன்வைகுங்கயிலைகண்டுவகையுற்றான். (௪௨)

வடகுணதிசையிற்சென்றுமழுவலாளியாண்டும்வைகுந்
தடவரையதனைநோக்கித்தாமரைச்செங்கைகூப்பிப்
படர்குவான்றன்னையன்னபரமனும்பரிவிற்பார்த்துத்
தடமுலையுமைக்குக்காட்டிவாயுவின்றனையனென்றான். (௪௩)

என்னவனெழுந்ததன்மையென்றுலகீன்றாள்கேட்ப
வன்னவனிராமன்றூதன்மருந்தின்மேல்வந்தான்வஞ்சர்
தென்னகரிலங்கைத்தீமைதீர்ப்பதுதிண்ணஞ்சேர்ந்து
நன்றுதனுமும்வெம்போர்காணாதுநாளையென்றான். (௪௪)

நாமயோசனைகள்கொண்டதாயிரநடுவுநீங்கி
யேமகூடத்திலும்பரெய்தினின்றிறுதியில்லாக்
காமமேதுகருஞ்செல்வக்கடவுளரீட்டங்கண்டா
னேமியின்விசையிற்செல்வானிடத்தினெற்றியுற்றான். (௪௫)

எண்ணுக்குமளவிலாதவதிவினோரிருந்துநோக்குங்
கண்ணுக்குங்கருணைத்தெய்வமனத்திற்குங்கடியனானான்
மண்ணுக்குந்திசைகள்வைத்தவரம்பிற்குமலரோன்வைகும்
விண்ணுக்குமளவையாயமேருவின்மீதுசென்றான். (௪௬)

யாவருமிலைமைத்தன்மையின்னதென்றிமையாநாட்டத்
தேவருந்தெரிக்கிலாதவடமலைக்கும்பர்சென்றா
னாவலம்பெருந்தீவன்னளிர்கடல்வளாகவைப்பிற்
காவன்மூன்றுலகமோதுங்கடவுண்மாமரத்தைக்கண்டான். (௪௭)

அன்னமாமலையினும்பருலகெலாமமைத்தவண்ண
னன்னகரதனைநோக்கியதனடுநாப்பணுமப்
பொன்மலர்ப்பீடந்தன்மேனான்முகன்பொலியத்தோன்றுந்
தன்மையுங்கண்டுகையால்வணங்கினான்றருமம்போல்வான். (௪௮)

ஆயதன்வடகீழ்ப்பாகத்தாயிரமருக்கர்கற்றை
காய்கதிர்பரப்பியஞ்சுகதிரமுகக்கமலங்காட்டித்
தூயபேருலகமூன்றுந்தூவியமலரிற்சூழ்ந்த
சேயிழைபாகத்தெண்டோளொருவனைவணக்கஞ்செய்தான். (௪௯)

தருவனமொன்றுவானோர்தலைத்தலைமயங்கித்தாழாப்
பொருவருமுனிவர்வேதம்புகழ்ந்துரையோதைபொங்க
மருவிரிதுளபமௌலிமானிலக்கிழத்தியோடுந்
திருவொடுமிருந்தமூலத்தேவையும்வணக்கஞ்செய்தான். (௫௰)

சந்திரனனையகொற்றத்தனிக்குடைதலையிற்றாகச்
சுந்தரமகளிரங்கைச்சாமரைதென்றறூவ
வந்தரவானநாடரடிதொழமுரசமார்ப்ப
விந்திரனிருந்ததன்மைகண்டுவந்திறைஞ்சிப்போனான். (௫௧)

பூவலர்மரத்தைப்போர்ப்பப்பொற்பகம்விரிந்துபொங்கித்
தேவர்தமிருக்கையானமேருவின்சிகரச்சேர்ப்பின்
மூவகையுலகுஞ்சூழ்ந்தமுரட்டிசைமுறையிற்றாங்குக்
காவலொண்மர்நின்றதன்மையுந்தெரியக்கண்டான். (௫௨)

அத்தடங்கிரியைநீங்கியத்தலையடைந்தவள்ள
லுத்தரகுருவையுற்றானொளியவன்கதிர்களுன்றிச்
செற்றியவிருளின்றாக்கிவிளங்கியசெயலைநோக்கி
வித்தகன்விடிந்ததென்னாமுடிந்ததென்வேகமென்றான். (௫௩)

ஆதியானுணராமுன்னமருமருந்துதவியல்லிற்
பாதியாலனையதுன்பமகற்றுவான்பாவித்தேற்குச்
சோதியானுதயஞ்செய்தானுற்றதோர்துணிதலாற்றே
னேதியான்செய்வதென்னாவிடருற்றானிணையிலாதான். (௫௪)

காற்றிசைசுருங்கச்செல்லுங்கடுமையான்கதிரின்செல்வன்
மேற்றிசையெழுவானல்லன்விடிந்ததுமன்றுமேரு
மாற்றினான்வடபாற்றோன்றுமென்றதுமறைகள்வல்லோர்
சாற்றினாரென்னத்துன்பந்தணிந்தனன்றவத்தமிக்கான். (௫௫)

இருவரோதோன்றியென்றமிலாவாயுனெய்தி
யொருவரோடொருவருள்ளமுயிரொடுமொன்றேயாகிப்
பொருவருமின்பந்துய்த்துப்புண்ணியம்புரிந்தோர்வைகுந்
திருவுறைகமலமன்னநாட்டையுந்தெரியக்கண்டான். (௫௬)

வன்னிநாட்டியபொன்மௌலிவானவன்மலரின்மேலான்
கன்னிநாட்டிருவைச்சேர்ந்தகண்ணனுமாளுங்காணிச்
சென்னிநாட்டெரியல்வீரன்றியாகவினோதன்றெய்வப்
பொன்னிநாட்டுவமைவைப்பைப்புலன்கொளநோக்கிப்போனான். (௫௭)

விரியவன்மேருவென்னும்வெற்பினின்மீதுசெல்லும்
பெரியவனயனூர்செல்வம்பெற்றவன்பிறப்பிற்போந்தா
னரியவனுலகமெல்லாமளந்தாள்வளர்ந்துதோன்றுங்
கரியவனென்னநின்றநீலமால்வரையைக்கண்டான். (௫௮)

அற்குன்றவிளங்குசோதியம்மலையகலப்போனான்
பொற்குன்றமனையதோளானோக்கினான்புலவன்சொன்ன
நற்குன்றமதனைக்கண்டானுணர்ந்தனனுகமுற்ற
வெற்குன்றவெதியுந்தெய்வமருந்தடையாளமென்ன. (௫௯)

பாய்ந்தனன்பாய்தலோடுமம்மலைபாதலத்துட்
சாய்ந்ததுகாக்குந்தெய்வஞ்சலித்தனகடுத்துவந்து
காய்ந்தனநீதானியாவன்கருத்தென்கொல்கழறுகென்ன
வாய்ந்தவனுற்றதன்மையவற்றினுக்கறியச்சொன்னான். (௬௦)

கேட்டனவுய்ய*வேண்டிற்றியற்றிப்பின்கெடாமலெம்பாற்
காட்டெனவுணர்த்திவாழ்த்திக்கரந்தனகமலக்கண்ணன்
வாட்டலைநேமிதோன்றிமறைந்ததுமண்ணினின்றுந்
தோட்டனனுமன்மற்றைக்குன்றினைவயிரத்தோளால். (௬௧)

வேறு.

இங்குநின்றின்னனமருந்தென்றெண்ணினூற்
சிங்குமாற்காலமென்றுணர்ந்தசிந்தையா
னங்கதுவேரொடுமங்கைதாங்கினான்
பொங்கியவிசும்பிடைக்கடிதுபோகுவான். (௬௨)

ஆயிரமியோசனையகலமீதுயர்ந்
தாயிரமியோசனையாழ்ந்ததம்மலை
யேயெனுமாத்திரத்தொருகையேந்தினான்
றுயிருமுலகெலாந்தவழ்ந்தசீர்த்தியான். (௬௩)

அத்தலையன்னவனனையவாந்துணை
யித்தலையிருவரும்விரைவினெய்தினார்
கைத்தலத்தாலடிவருடுங்காலையி
னுத்தமற்குற்றதைபுணர்ந்தவாமரோ. (௬௪)

---

* வேண்டித்து-ஒப்புமை.

வண்டனமடந்தையர்மனத்தைவேரொடுங்
கண்டனகொளவருங்கருணைத்தாமெனக்
கொண்டனகொடுப்பனவரங்கள்கோளிலாப்
புண்டரீகத்துணைதருமம்பூத்தன. (௬௫)

நோக்கினன்கரடிகட்கரசுநோன்புக
ழாக்கியவிருதனுமழுதகண்ணினூர்
தூக்கியதலையினர்தொழுதகையின
ரோக்கமுற்றருகிருந்தேங்குவார்களை. (௬௬)

ஏவியகாரியமியற்றியெய்தினை
நோவிலைவீடணவென்றுநோக்கிப்பின்
றூவரும்பெரும்புகட்சாம்பன்றன்னையு
மாவிவந்தனைகொலென்றருளினனரோ. (௬௭)

ஐயன்மீர்நமக்குற்றவழிவிதாதலின்
செய்வகைபிறிதிலையுயிரிற்றீர்ந்தவ
ருய்கிலரினிச்செயற்குரியதுண்டெனிற்
பொய்யிலிர்புகலுதிர்புலமையுள்ளத்திர். (௬௮)

சீதையென்றொருத்தியாலுள்ளந்தேம்பிய
பேதையென்சிறுமையாலுற்றபெற்றியை
யாதெனவுணர்த்துகேனுலகொடீர்வுருக்
காதைவன்பழியொடுந்திருத்திக்காட்டினேன். (௬௯)

மாயையின்மானெனவெம்பிவாய்மையாற்
றூயனவுறுதிகள்சொன்னசொற்கொளேன்
போயினன்பெண்ணுரைமருதபோதலா
லாயதிப்பழியுடையானியன்பினிர். (௭௦)

கண்டனனிராவணன்றன்னைக்கண்களால்
மண்டமர்புரிந்தனன்வலியினாலுயிர்
கொண்டிலனுயிரொலாங்கொடுத்துமாளநான்
பண்டுடைத்தீவினைபயந்தபண்பினால். (௭௧)

தேவர்தம்படைக்கலந்தொடுத்துத்தீயவன்
சாவதுகாண்டியென்றிளவல்சாற்றவு
மாவகையிசைந்திலனழிவதென்வயின்
மேவுதலுறுவதோர்விதியின்வெம்மையால். (௭௨)

நின்றிலனுடனெறிபடைக்குரீதியா
லொன்றியபூசனையமைக்கவுன்னினேன்
பொன்றினர்தமரொலாமிளவல்போயினன்
வென்றிலனரக்கனாவினையின்மேன்மையால். (௭௩)

ஈண்டிவணிருந்திவையியம்புமேனழைமை
வேண்டுவதன்றினியமரின்விடிய
வாண்டகையன்பனாயமார்காட்டிடைக்
காண்டலேநலம்பிறகண்டதில்லையால். (எச)

எம்பியைத்துணைவனாயிழந்தப்பாலினி
வெம்புபோராக்கனாமுருக்கிவேரறுத்
தம்பினிராவணன்றுவிபாழ்படுத்
தும்பருக்குதவிமேலுறுவதென்னரோ. (எரு)

இளையவனிறந்தபின்னெவருமென்னெனக்
களவறுசீர்த்தியென்னாசென்றாண்மையென்
விளையுறுசுற்றமென்னறமென்கேள்வியென்
விளைவுதானென்மறைவிதியென்மேன்மையென். (எசு)

இரக்கமும்பாழ்படவெம்பியீறுகண்
டரக்கனைவென்றுமின்றுண்மையாள்வனேல்
மரக்கண்வன்கள்வனென்வஞ்சனேனினிக்
கரக்குமதல்லதோர்கடனுண்டாகுமோ. (எஎ)

தாதையையிழந்தபின்சடாயுவிற்றபின்
காதலின்றுணைவருமுடியக்காத்துழல்
கோதறுதம்பியும்பிரியுங்கோளினன்
சீதையையுகந்துளோனென்பர்சீரியோர். (எஅ)

வென்றனனரக்கனைவேரும்வீய்ந்தறக்
கொன்றனனயோத்தியைக்குறுகினேன்குணத்
தின்றுணைத்தம்பியையின்றியானுளே
னன்றரசாளுமாசாலநன்றரோ. (எகூ)

படியினதாதலினியாதும்பார்க்கிலன்
முடிகுவனியானெனமுடுகிக்கூறலு
மடியிணைவணங்கியசாம்பனூழியாய்
நொடிகுவதுளதெனநுவல்வதாயினன். (அ0)

உன்னைநீயுணர்கிலையடியனேனுனை
முன்னமேயுணர்குவன்மொழிதறீதிது
வென்னெனிலிமையவரொண்ணக்கினமாம்
பின்னரோதெரிகுதிதெரிவில்பெற்றியாய். (அக)

அம்புயத்தவன்படையாதரேதின
னும்பியையுலப்பருமுருவையூன்றிட
வெம்புவெங்களத்திடைவிழுத்தவென்றியா
னெம்பெருந்தலைவிதெண்ணமுண்மையால். (அஉ)

அன்னவன்படைக்கலமமரர்தானவர்
தன்னையும்விடினுயிர்குடிக்குஞ்சார்தலா
லன்னையொன்றிழைத்திலதொளிந்துநீங்கிய
தின்னமுமுவமையொன்றெண்ணவேண்டுமோ. (௮௩)

பெருந்திறலனுமனின்றுணர்வுபெற்றுளா
னருந்துயர்முடிக்குறுமளவிலாற்றலான்
மருந்திறைப்பொழுதினிற்கொணரும்வாய்மொழி
பொருந்தினன்வடதிசைக்கடிதுபோயினன். (௮௪)

பனிவரைகடந்தனன்பருப்பதங்களின்
றனியரசின்புறந்தவிர்ந்துசார்ந்துள
னினியொருகணத்தின்வந்தெய்துமீண்டுறு
துனிவருதுன்பநீதுடைத்திதொல்லையோய். (௮௫)

யானலாலெந்தையாயுலகையீன்றுளான்
றானலாற்சிவனலானேமிதாங்கிய
கோனலாலியாவருமுணருங்கோளிலா
வேனிலான்மேனியான்மருந்தைமெய்யுற. (௮௬)

ஆர்கலிகடைந்தநாளமிர்தின்வந்தன
கார்நிறத்தண்ணறனேமிகாப்பன
மேருவினுத்தரகுருவின்மேலுள
தியாருமுற்றுணர்கிலர்வானமெய்தினர். (௮௭)

தோன்றியநான்முதலியாருந்தொட்டில
வான்றபேரண்ணலேயதனிற்றல்கேண்
மூன்றெனவொன்றியவுலகமுன்னைநா
ளீன்றவனிறப்பினுமாவியீயுமால். (௮௮)

சல்லியமகற்றுவதொன்றுசந்துகள்
புல்லுறப்பொருத்துவதொன்றுபோயின
நல்லுயிர்நல்குவதொன்றுநன்னிறந்
தொல்லையதாகவேதோன்றுந்தொல்லையோய். (௮௯)

வருமதுதிண்ணநீவருந்தன்மாருதி
தருநெறிதருமமேகாட்டத்தாட்கில
னருமையதன்றெனவடிவணங்கினா
னிருமையுந்துடைப்பவனேம்பலெய்தினன். (௯௦)

பொன்மலைமீதுபோய்ப்போகபூமியி
னன்மருந்துதவுமென்றுரைத்தநல்லுரைக்
கன்மயமில்லையென்றயிர்ப்புநீக்கினே
னென்னலும்வடதிசையெழுந்ததங்கொலி. (௯௧)

கடல்கிளர்ந்தெழுந்துமேற்படரக்கார்வரை
யிடையிடைபறிந்துவின்னேறவீற்றிடை
தடையிலதடற்றுறுசண்டமாருதம்
வடதிசைதோன்றியமயக்கம்வந்ததால். (௯௨)

மீன்குலங்குலைந்துகவெயிலின்மண்டிலந்
தான்குலைந்துயர்மழைதழுவித்தன்னமை
வான்குலம்வெருக்கொளமயங்கிமண்டிவான்
றேன்குலங்கலங்கியநறவிற்சென்றதால். (௯௩)

வேர்த்தனர்தூரொடுவிசும்பைமீச்செலப்
போர்த்தனமலையொடுமாறுமுன்புபோற்
றீர்த்தனவேலையைக்காலின்றோன்றலு
மார்த்தனனனையவார்த்தையாற்றுவான். (௯௪)

மழைகளுங்கடல்களுமற்றுமுற்றுமண்
ணுழையவும்விசும்பவுமொலித்தற்கொத்தன
குழைஇயினகுமுறினகொள்கைகொண்டதா
லுழைவயின்சினத்தவனார்த்தவோசையே. (௯௫)

எரிசுடர்ப்பெருங்கடல்கடையவேற்றநாள்
செறிசுடர்மந்தரந்தருகிசென்றென
வெறிதலனெனக்கொடுவிசும்பின்மீச்செலு
முறுவலிக்கலுழனையொத்துத்தோன்றினான். (௯௬)

பூதலத்தரவொடுமலைந்துபோனநா
ளோதியவென்றியனூற்றமுற்றத
னேதமிலிலங்கையங்கிரிகொடெய்திய
தாதையுமொத்தனனுவமைதாட்கிலான். (௯௭)

தோன்றினனென்னுமச்சொல்லின்முன்னம்வந்
தூன்றினனிலத்தடிகடவுளோங்கலுன்
வான்றனினின்றநுவஞ்சநேர்வா
வேன்றலதாதலினுமனெய்தினான். (௯௮)

காற்றுவந்தசைத்தலுங்கடவுளுட்டவர்
போற்றினர்விருந்தவர்இருந்தபுண்ணிய
ரேற்றமும்பெருவலியழகொடெய்தினார்
கூற்றினைவென்றதமுருவங்கூடினார். (௯௯)

அரக்கர்தமாக்கைகளரக்காழியிற்
கரக்கமற்றெழுந்தனவொழியக்கண்டன
மரக்கலமுதலவுமுய்ந்துவாழ்ந்தன
குரக்கினமுற்றதுகூறவேண்டுமோ. (௨௦௦)

கழன்றனநெடுங்கணைகழன்றபுண்கடுத்
தழன்றனகுளிர்ந்தனவங்கஞ்செங்கண்கள்
சுழன்றனவுலகெலாந்தொழுவதொங்கலின்
குழன்றெழுங்குஞ்சியானுணர்வுகூடினான். (௧௦௧)

யாவருமெழுந்தனரார்த்தவேழ்கடற்
றுவரும்பேரொலிசெவியிற்சார்தலுஞ்
தேவர்கள்வாழ்த்தொலிகேட்டசெங்கணு
னேவநீங்கினனெனவிளவலோங்கினான். (௧௦௨)

ஓங்கியதம்பியையுயிர்வந்துள்ளுற
வீங்கியதோள்களாற்றழுவிவெந்துயர்
நீங்கினனிராமனுமுலகினின்றில
தீங்குளதேவருமறுக்கஞ்சிந்தினார். (௧௦௩)

அரம்பையராடினரமிர்தவேழிசை
நரம்பியல்கின்னரமுதலநன்மையே
நிரம்பினவுலகெலாமுவகைநெய்விழாப்
பரம்பினமுனிவரர்வேதம்பாடினார். (௧௦௪)

வேதநின்றார்த்தனவேதவேதியர்
போதநின்றார்த்தனதருமம்பூத்தன
வோதநின்றார்த்தனவோதமுள்ளுறச்
சீதநின்றார்த்தனதேவர்சிந்தனை. (௧௦௫)

உய்ந்தனனினிக்கொலையொழிவதுண்மையுந்
தந்தனனினையதுநிளக்குச்சான்றெனாச்
சுந்தரவில்லியைத்தொழுதுசூழவந்
தந்தணன்படையுநின்றகன்றுபோனதால். (௧௦௬)

வேறு.

ஆயகாலையினமரரார்த்தெழத்
தாயினன்பனைத்தழுவினான்றனி
நாயகன்பெருந்துயரநாமறத்
தூயகாதனீர்துளங்குகண்ணினான். (௧௦௭)

எழுதருங்குமத்திருவினேந்துகோ
டுழுதமார்பினானுருகியுள்ளுறத்
தழுவிநிற்றலுந்தாழ்ந்துதாளுறத்
தொழுதமாருதிக்கினையசொல்லுவான். (௧௦௮)

முன்னிற்றோன்றினோர்முறையினீங்கலா
னென்னிற்றோன்றியதுயரினீறுசேர்
மன்னிற்றோன்றினேன்முன்னமாண்டுளோம்
நின்னிற்றோன்றினேனெறியிற்றோன்றினாய். (௧௦௯)

அழியுங்காற்றருமுதவியையனே
மொழியுங்காற்றருமுயிரின்முற்றமே
பழியுங்காத்தரும்பகையுங்காத்தெமை
வழியுங்காத்தனைமறையுங்காத்தனை. (௧௧0)

தாழ்வில்விற்றிறைப்பொழுதுதக்கதே
வாழியெம்பிமேலன்புமாட்டலா
லேழும்வியுமென்பகர்வதெல்லையி
னாழிகாணுநீயுதவினையரோ. (௧௧௧)

இன்றவீகலாதெவருமெம்முட
னின்றவாழுமாநெடிதுநல்கினை
யொன்றுமின்னதேயுறகிலாதுநீ
யென்றும்வாழ்தியாலினிதெனேவலால். (௧௧௨)

மற்றையோர்களுமனுமன்வன்மையாற்
பெற்றவாயுளார்பிறந்தகாதலார்
சுற்றுமேயினார்தொழுதுவாழ்த்தினா
ருற்றவாறெலாமுணரக்கூறினான். (௧௧௩)

உய்த்தமாமருந்துதவவொன்னலார்
பொய்த்தசிந்தையாரிறுதல்பொய்க்குமால்
மொய்த்தகுன்றையம்மூலவூழின்வாய்
வைத்துமீள்தியால்வரம்பிலாற்றலாய். (௧௧௪)

என்றுசாம்பவனியம்பவீதரோ
நன்றுசாலவென்றொன்றுநாழிகைச்
சென்றுமீள்வனென்றுணர்ந்துதெய்வமாக்
குன்றுதாங்கியக்குரிசில்போயினான். (௧௧௫)

மருந்துப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௨௭௫.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

---

௨௪ - வது—களியாட்டுப்படலம்.

இன்னதித்தலையதாகவிராவணனெழுந்துபொங்கித்
தன்னையுங்கடந்துநீண்டவுவகையன்சமைத்தகேதங்
கின்னார்முதல்வர்பாடமுகத்திடைக்கிடந்தகெண்டைக்
கன்னிநன்மயிலனாைநெடுங்களியாட்டங்கண்டான் (௧)

அரம்பையர்விஞ்சைமாதரரக்கியரவுணமாசர்
குரும்பையங்கொங்கைநாகர்கோதையரியக்கர்கோதில்
கரும்பினுமினியசொல்லார்சித்தர்தங்கன்னிமார்கள்
வரம்பறுசும்மையோர்கண்மயிற்குலமருளவந்தார். (௨)

மேனகைவிசையவாட்கட்டிலோத்தமையரம்பைமெல்லென்
றேனகுழலையின்சொலுருப்பசிமுதலதெய்வ
வானகமகளிர்வந்தார்சில்லரிமழலைப்பாட
லானகமுரசஞ்சங்கமுருட்டொடுமிரட்டவாடி. (௩)

தோடுண்டசுருளூர்ந்துங்குழைகளுஞ்சுருளிற்றேன்று
மேடுண்டபசும்பொற்பூவுந்திலதமுமிலங்கச்செவ்வாய்
மூடுண்டமுறுவன்முத்துமுள்ளுண்டமுளரிச்செங்கட்
காடுண்டுபுகுந்ததென்னமுனிந்ததுகறைவெண்டிங்கள். (௪)

முளைக்கொழுங்கதிரின்கற்றைமுறுவல்வெண்ணிலவுமூரி
பொலிப்பிழம்பெழூகும்பூணினுமிழிளவெயிலுமொண்பொன்
விளக்கையும்விளக்குமேனிமிளிர்கதிர்ப்பரப்பும்வீசி
வளைந்தபேரிருளுங்கண்டோரறிவெனமருளுமாதோ. (௫)

நற்பெருங்கல்விச்செல்வநவையறுநெறியைநண்ணி
முற்பயனுணர்ந்ததூயோர்மொழியொடும்பழகிமுற்றிப்
பிற்பயனுணர்தறேற்றுப்பேதைபோல்வஞ்சன்செய்த
கற்பனையென்னவோடிக்கலந்ததுகள்ளின்வேகம். (௬)

பலபடமுறுவல்வந்துபயந்தனபனித்தமெய்வே
ரிலவிதழ்துடித்தமுல்லையெயிறுவெண்ணிலவையீன்ற
கொலைபயினயனவேலின்கொழுங்கடைசிவந்தகொற்றச்
சிலைநிகர்புருவந்தெற்றிக்குனித்தனவெளுத்தசெவ்வாய். (௭)

கூந்தலம்பாரக்கற்றைக்கொந்தளக்கோலக்கொண்ட
லேந்தகலல்குற்றேரையிகந்துபோயிறங்கயாணர்ப்
பூந்துகிலோடும்பூசன்மேகலைசிலம்புபூண்ட
மாந்தளிரொய்தநொய்தின்மயங்கினர்மழலைச்சொல்லார். (௮)

கோத்தமேகலையிரேடுடுந்துகின்மணிக்குறங்கைக்கூடக்
காத்தனகூந்தற்கற்றையுற்றவத்தன்மைகண்டு
வேத்தவைகிழுளோருங்கீழ்மையேவிளைத்தார்மேலோர்
சேர்த்தவர்செய்யத்தக்ககருமமேசெய்தாரொன்ன. (௯)

பாணியிற்றள்ளிக்காலமாத்திரைபடாதுபட்ட
நாணினமுறையிற்செல்லாதொருவழிநடையிற்செல்லு
மாணியினழிந்தபாடனறவெனவனங்கவேடன்
றூணியினடைத்தவம்பிற்கொடுந்தொழிறுறந்தகண்ணார். (௧௦)

வங்கியம்வருத்தகானமாறுகோண்மழலைமாறுச்
சங்கையில்பெரும்பாணுற்றநிறத்துறைநிரம்பித்தள்ளச்
சிங்கலினமிர்தினேடுமளியளிதேறலென்ன
வெங்குரலெடுத்தபாடல்விளிந்தனர்மயக்கம்வீங்க. (௧௧)

ஏனையபிறவுங்கண்டார்க்கிந்திரசாலமென்னத்
தானவையுருவிற்றோன்றும்பாவனைத்தகைமைசான்றோர்
மானமர்நோக்கினாரைமைந்தரைக்காட்டிவாயா
லானையைவிளம்பித்தேனாயபிரயத்தியற்றியுற்றார். (௧௨)

அழுகுவார்நகுவார்பாடியாடுவாராயினாரைத்
தொழுகுவார்துயில்வார்தள்ளித்தூங்குவார்துவர்வாயிற்றே
னுழுகுவாரொல்கியொல்கியொருவர்மேலொருவர்புக்கு
முழுகுவார்முரிவாட்கண்முகிழ்த்திடமூரிபோவார். (௧௩)

உயிர்ப்புறத்தற்றதன்மையுணர்த்தினருள்ளத்துள்ள
தயிர்ப்பினிலற்றதன்றேயதுகளியாட்டமாகச்
செயிர்ப்பறுசிந்தைத்தெய்வத்திருமறைமுனிவர்க்கேயு
மயிர்ப்புறந்தோறும்வந்துபொடித்ததுகாமவாரி. (௧௪)

மாப்பிற*னோக்கினார்தம்மணிநெடுங்குவளைவாட்கண்
சேப்புறவாத்தச்செவ்வாய்ச்செங்கிடைவெண்மைசேரக்
காப்புறுபடைக்கைக்கள்வர்நிருதர்க்கோரிறுதிகாட்டிப்
பூப்பிறழ்ந்துருவம்வேறுய்ப்பொலிந்ததோர்தன்மைபோன்ற. (௧௫)

கயல்வருகாலன்னவேல்காமவேள்கணையென்றுலு
மியல்வருகிற்கிலாதநெடுங்கணாரிணைமென்கொங்கைத்
துயல்வருகனகநாணுங்காஞ்சியுந்துகிலும்வாங்கிப்
புயல்வருகூந்தற்பாரக்கற்றையிற்புனையலுற்றார். (௧௬)

முத்தன்மைமொழியலாகாமுகிழிளமுறுவனல்லா
ரித்தன்மையெய்தநோக்கியாசுவீற்றிருந்தவெல்லை
யத்தன்மையரியின்சேனையார்கலியார்த்தவோசை
மத்தன்மெய்மயங்கவந்துசெவிதொறுமடுத்தமாதோ. (௧௭)

ஆடலுங்களியின்வந்தவமலையுமமுதிலான்ற
பாடலுமுழவின்றெய்வப்பாணியும்பவளவாயா
ரூடலுங்கடைக்கண்ணோக்குமழலைவெவ்வுரையுமெல்லாம்
வாடன்மென்மலரேயொத்தவார்ப்பொலிவருதலோடும். (௧௮)

தறிபொருகளிநல்யானைசேவகந்தள்ளியோங்கத்
துறுசுவற்புரவிதுங்கத்துணுக்குறவரக்கருட்கச்
செறிகழலிருவர்தெய்வச்சிலையொலிபிறந்ததன்றே
யெறிகடல்கடைந்தமேனாளெழுந்தபேரோசையென்ன. (௧௯)

முத்தம்வாணகைக்குத்தோற்குமுகத்தியர்முழுக்கண்வேலாற்
குத்துவார்கூட்டமெல்லாம்வானரக்குழுவிற்றோன்ற
மத்துவாழ்கடலினுள்ளமறுகுறவதனமென்னும்
பத்துவாழ்மதிக்குமந்நாட்பகலொத்ததிரவுபண்பால். (௨௦)

* ழகரம்-திரிவு

ஈதிடையாகவந்தாரலங்கன்மீதேறினார்போ
னாதினார்வேய்கள்வண்டினருவினாருற்றதெல்லாந்
தீதிலர்பகைஞரொன்னாத்திக்கென்றமனத்தன்றெய்வப்
போதருபந்தர்நின்றுமந்திரத்திருக்கைபுக்கான். (௨௧)

களியாட்டுப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௨௭௭௯.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௨௫ - வது—மாயாசீதைப்படலம்.

மைந்தனுமற்றுளோருமகோதரன்முதல்வராய
தந்திரத்தலைமையோருமுதியருந்தழுவத்தக்க
பந்தியரெவரும்வந்துமருங்குறப்படர்ந்தார்பட்ட
வந்தரமுழுதுந்தானேயனையவர்க்கறியச்சொன்னான். (௧)

நங்கிளையுலர்ந்ததெல்லாமுய்ந்திடானொருமன்றே
வெங்கொடுந்தீமைதன்னால்வேலையினிட்டிலோமே
லிங்குளதெல்லாமாள்சற்கினிவருமிடையூறில்லை
பங்கயத்தண்ணன்மீளாப்படைபழுதுற்றபண்பால். (௨)

இலங்கையினின்றுமேருபிற்படவிமைப்பிற்பாய்ந்து
வலங்கிளர்மருந்துநின்றமலையொடுங்கொணரவல்லா
னலங்கலந்தடத்தோளண்ணலனுமனேயாகவேண்டுங்
கலங்கலினுலகுக்கெல்லாங்காரணங்கண்டவாற்றால். (௩)

நீரினைக்கடக்கவாங்கியிலங்கையாய்நின்றகுன்றைப்
பாரினிற்கிழியவீசினாருளர்பிழைக்கற்பாலார்
போரினிற்பொருவதெங்கேபோயினவனுமன்பொன்மா
மேருவைக்கொணர்ந்திவ்வூர்மேலிடுமெனின்விலக்கலாமோ. (௪)

முறைகெடவேண்டின்முன்புநினைந்ததேமுடிப்பர்முன்பின்
குறைவிலாக்குணங்கட்காங்கோர்கோதிலர்வேதங்கூறு
மிறைவர்கண்மூவரொன்பதெண்ணிலாவெண்ணமேதா
னறைகழலனுமனோடுநால்வரோமுதல்வரம்மா. (௫)

இறந்தவரிறந்துதீரவினியொருபிறவிவந்து
பிறந்தனமாகினுள்ளோமுய்ந்தனம்பிழைக்கும்பெற்றி
மறந்தனமெனினுமின்னஞ்சனகியைமரபினீய்ந்த
வறந்தருசிந்தையோனையடைக்கலம்புகுதுமையா. (௬)

மறிகடல்குடித்துவானைமண்ணொடுமறைக்கவல்ல
வெறிபடையரக்கரெல்லாமிறந்தனரிலங்கையூருஞ்
சிறுவனுநீயுமல்லாலாருளரொருவர்தீர்ந்தார்
வெறிதுநம்வென்றியென்றான்மாலிமேல்விளைவதோர்வான். (௭)

கட்டுரையதனைக்கேளாக்கண்ணெரிகதுவநோக்கிப்
பட்டனரக்கரென்னிற்படைக்கலம்படைத்ததெல்லாங்
கெட்டனவெனினும்வாட்கைகெடாதாற்கிளியதனை
வீட்டிடவெண்ணியோநான்பிடித்ததுவேட்கைகலிய. (அ)

வாலியைவாளியொன்றால்வானிடைவைத்தவாரி
வேலையைவென்றகும்பகருணனைவீட்டினானை
யாலியின்மொக்குளன்னவரக்கரோவமரின்வெல்வார்
சூலியைப்பொருப்பினோடுந்தூக்கியவிசயத்தோளென். (௯)

மைந்தனென்மற்றையோனஞ்சினீர்வாட்கைவேட்டு
ருய்ந்துநீர்போவீர்நாளையூழிவெந்தீயினோங்கிச்
சிந்தினன்மனிதரோடுகுரங்கினைத்தீர்ப்பனென்றான்
வெந்திறலரக்கர்வேந்தன்மகனிவைவிளம்பலுற்றான். (௧௦)

உளதுதானுணர்த்தற்பாலதுணர்ந்தனைகோடலுண்டேற்
றளமலர்க்கிழவன்றந்தபடைக்கலந்தழலிற்சாற்றி
யளவிலதமையவிட்டதிராமனையடையாவென்று
விளவலதனையமேனித்தீண்டின்றியிழந்ததம்மா. (௧௧)

மானிடனல்லன்றொல்லைவானவனல்லன்மற்று
மேனிவர்முனிவனல்லன்வீடணன்மெய்யிற்சொன்ன
வேனவனெண்ணிற்றீர்ந்தானொன்றுறுமொருவனென்றே
தேனகுதெரியன்மன்றுசேகறத்தெரிந்ததன்றே. (௧௨)

அனையதுபிறவுமிற்கவன்னதுபகர்தலாண்மை
வினையெனினன்றுநின்றுவீழ்ந்ததுவீழ்கவிர
வினையதுமுண்டோன்போய்நிரும்பலைவிரைவினெய்தித்
துனியறுவேழ்விவல்லைதுடங்கினால்முடியுந்துன்பம். (௧௩)

அன்னதுநல்லதேயாலமைதியென்றரக்கன்சொன்னா
னன்மகனும்பிகூறநண்ணுவார்கண்டுநண்ணி
முன்னியவேள்விமுற்றாவகைசெருமுயல்வவொன்னா
வென்னவொய்தாவண்ணமியற்றலாமுறுதியென்றான். (௧௪)

சானகியுருவமாகச்சமைத்தவடன்மைகண்ட
வாறுயானுமன்முன்னேவாளியிற்கொன்றுமாற்றி
யானெடுஞ்சேனையோடுமயோத்திமேலெழுந்தேனென்னப்
போனபின்புரிவதொன்றுமிலாதவர்துயரம்பூண்பார். (௧௫)

இத்தலைசீதைமாண்டாள்பயனிவணில்லையென்பா
ரத்தலைத்தம்பிமாருந்தாயருமடுத்துளோரு
முத்தமநகருமாளுமென்பதோர்வருத்தமூன்றப்
பொத்தியதுன்பமுளச்சேனையுந்தாமும்போவார். (௧௬)

போகலொன்றபோதுமனுமனையாண்டுப்போக்கி
யாகியதறிந்தாலன்றியருந்துயராற்றலாற்று
றோங்கியகரும்முற்றியானவன்விரைவினெய்தி
வேகவெம்படையிற்கொன்றுதருகுவன்வென்றியென்றான். (௧௭)

அன்னதுபுரிதனன்றென்றரக்கனுமமையவஞ்சொற்
பொன்னுருக்குவமைமாயமியற்றுவானமைந்தபோது
னின்னதித்தலையதாகவிராமனுக்கிராவிசெம்மல்
தொன்னகாதனைவல்லைகடிகெடச்சுடுதுமென்றான். (௧௮)

அத்தொழில்புரிதனன்றென்றண்ணலுமமையவெண்ணித்
தத்தினனிலங்கைமூதூர்க்கோபுரத்தும்பர்சார்ந்தான்
பத்துடையேழுசான்றவானரப்பரவைபற்றிக்
கைத்தலத்தோரோர்கொள்ளியெடுத்ததெவ்வுலகுங்காண. (௧௯)

வேறு.

எண்ணினகோடிப்பல்படையாவும்
மண்ணுறுகாவற்றிண்மதில்வாயில்
வெண்ணிறமேகமின்னினைவீசி
நண்ணினபோல்வதொன்னகர்நாண. (௨௦)

ஆசைகடோறுமள்ளினகொள்ளி
மாசறுதானைமற்கடவெள்ளம்
நாசமிவ்வூருக்குண்டெனநள்ளின்
வீசினவானின்மீன்விழுமென்ன. (௨௧)

வஞ்சனைமன்னன்வாழுமிலங்கைக்
குஞ்சரமன்னார்வீசியகொள்ளி
யஞ்சனவண்ணனாழியிலேவுஞ்
செஞ்சரமென்னச்சென்றதுமென்மேல். (௨௨)

கையகலிஞ்சிக்காவலிலங்கைச்
செய்யகொளுந்திச்சென்றுநெருங்க
வையநெடுங்காராழியையம்மா
வெய்யவெரிந்தாலொத்ததிலங்கை. (௨௩)

பாற்றுறுபல்பழுவத்தெரிபற்ற
நிரற்றுறுபல்பறவைக்குலநீள
முரற்றினவிண்ணினொலித்தெழுவண்ணா
மரற்றியெழுந்ததடங்கவிலங்கை. (௨௪)

மூவுலகத்தேவரும்முதலோரு
மேவினவிற்றொழில்வீரனிராமன்
றீவமெனச்சிலைவாளிசெலுத்தக்
கோபுரமுற்றும்விழுந்ததுகுன்றின். (௨௫)

இந்தலையின்னனிகழ்ந்திடுமெல்லைக்
கைந்தலையிற்கொடுகாலினெழுந்தா
னுய்த்தபெருங்கிரிமேருவினுப்பால்
வைத்தநெடுந்தகைமாருதிவந்தான். (௨௬)

அறையரவக்கழன்மாருதியார்த்தா
னுறையரவஞ்செறிவித்தனசவ்வூர்
சிறையரவக்கலுழன்கொடுசீறு
பிறையரவக்குலமொத்ததிலங்கை. (௨௭)

மேற்றிசைவாயிலைமேவினவெங்கட்
காற்றின்மகன்றனைவந்துகலந்தான்
மாற்றலின்மாயைவகுக்கும்வலத்தான்
கூற்றையும்வென்றுயர்வட்டணைகொண்டான். (௨௮)

சானகியாம்வகைகொண்டுசமைத்தோர்
மானனையாளைவடிக்குழல்பற்றா
ஊனகுவாளொருகைக்கொடுருத்தா
னானவனின்னனசொற்களறைந்தான். (௨௯)

வந்திவள்காரணமாகமலைந்தீ
ரெந்தையிகழ்ந்தனவியாவிவளாவி
சிந்துவனென்றுசெறுத்தனைசெய்தா
னந்தமின்மாருதியஞ்சியயர்ந்தான். (௩0)

கண்டவளேயிவளென்பதுகண்டான்
விண்டதுபோலுநம்வாழ்வெனவேர்த்தான்
கொண்டிடைதீர்வதோர்கோளறிகில்லா
னுண்டுயிரோவெனவாயுமுலர்ந்தான். (௩௧)

யாதுமினிச்செயல்வேறிலையென்னா
நீதியுணாப்பதுநீயெனவோராக்
கோதில்குலத்தொருநீகுணமிக்காய்
மாதையொறுத்தல்வசைத்திறமென்றான். (௩௨)

நான்முகனுக்கொருநால்வரின்வந்தாய்
நான்முகமுற்றுநுணங்கவுணர்ந்தாய்
பான்முகமுற்றபெரும்பழியன்றோ
மான்முகமுற்றொருமாதைவதைத்தால். (௩௩)

மண்குலைகின்றதுவானநடுங்கிக்
கண்குலைகின்றதுகாணுதிகண்ணா
லெண்குலைகின்றதிரங்கறுறந்தாய்
பெண்குலைசெய்தல்பெரும்பழியன்றோ. (௩௪)

என்வயினல்கினையேறுதியென்று
னின்வயமாமுலகியாவையுநீநின்
னன்வயமேதுமறிந்திலையையா
புன்மைதுடங்கல்புகட்கழிவென்றான். (௩௫)

எந்தையிகழ்ந்தவிலங்கிழைதன்னைத்
தந்தனனென்றுதரும்புகழுண்டோ
சிந்தவன்வாளினிலென்றுசெறுத்தா
னிந்திரசித்தவனின்னனசொன்னான். (௩௬)

போமினடாவிவள்போயினள்போலா
மாமெனிலின்னுமயோத்தியையண்மிக்
காமினதின்றுகனற்கரியாக
வேமதுசெய்தினிமீள்குவெனென்றான். (௩௭)

தம்பியர்தம்மொடுதாயருமாயோ
ரும்பர்விலக்கிடினும்மினியுய்யார்
வெம்புகடுங்கனல்வீசிடுமென்னை
யம்புகளோடுமவிந்தனரம்மா. (௩௮)

இப்பொழுதேகடிதேகுவனியானிப்
புட்பகமானமதிற்புகநின்றேன்
றப்புவரோயவர்சங்கையிலாவென்
வெப்புறுவாளிகளின்றுவிளைந்தால். (௩௯)

ஆளுடையாயருளாயருளாயென்
றேழைவழங்குறுசொல்லினிரங்கான்
வாளினெறிந்தனன்மாகடல்போலு
நீளுறுசேனையினோடுநிமிர்ந்தான். (௪0)

தென்றிசைநின்றுவடாதுதிசைக்கட்
பொன்றிணிபுட்பகமேல்கொடுபோனா
னென்றுமுணர்ந்திலன்மாருதியுக்கான்
வென்றிநெடுங்கிரிபோலவிழுந்தான். (௪௧)

போயவன்மாநிகும்பலைபுக்கான்
றாயவனாவிதொலைந்துசுருண்டா
னோய்வொடுநெஞ்சமொடுங்கவுலர்ந்தா
னேயனபன்னினனின்னனசொன்னான். (௪௨)

வேறு.

அன்னமேயென்னும்பெண்ணினருங்குலக்கலமேயென்னு
மென்னமேயென்னுந்தெய்வமில்லையோயாதுமென்னுஞ்
சின்னமேசெய்யக்கண்டுந்தீவினைநெஞ்சமாவி
பின்னமேயானதில்லையென்றும்போராற்றல்போந்தான். (௪௩)

எழுந்தவன்மேலேபாயவென்றும்பெரிடலாத்தள்ளி
விழுந்தவென்றுயிர்த்துவிம்மிவீங்கும்போய்மெலியும்வெந்தீக்
கொழுந்தகளுயிர்க்குமியாக்கைகுலைவுறுந்தலைமேற்கொண்டுற்
றழுந்தனாதன்னைப்பின்னையினையனவுரைப்பதானான். (௪௪)

முடிந்ததுநாந்தமென்றுமூவுலகிற்குங்கங்குல்
விடிந்ததென்றிருந்தேன்மீளவெந்துயரிருளின்வெள்ளம்
படிந்ததுவினையின்செய்கைபரந்ததுபாவிவாளாற்
றடிந்தனன்றிருவையென்றேதவிர்ந்ததுதருமமம்மா. (௪௫)

பெருஞ்சிறைக்கற்பினாளைப்பெண்ணினைக்கண்ணிற்கொல்ல
வருஞ்சிறகற்றபுட்போலியாதுமொன்றியற்றலாற்றே
னிருஞ்சிறையழுந்துகின்றேனெம்பிரான்றேவிபட்ட
வருஞ்சிறைமீட்டவண்ணமழகிதுபெரிதுமம்மா. (௪௬)

பாதகவரக்கன்றெய்வப்பத்தினித்தவத்துளாளைப்
பேதையைக்குலத்தின்வந்தபிழைப்பிலாதாளைப்பெண்ணைச்
சீதையைத்திருவைத்தீண்டிச்சிறைவைத்தவரக்கன்றானே
காதவுங்கண்டுநின்றகருமமேகருணைத்தம்மா. (௪௭)

கல்விக்குமிமிர்ந்தகீர்த்திக்காகுத்தன்றூதனாகிச்
சொல்விக்கவந்துபோனேனேய்வுறுதுயர்செய்தானை
வெல்விக்கவந்தேனுன்னைமீட்பிக்கவன்றுவெய்திற்
கொல்விக்கவந்தேனென்றேகொடும்பழிகூட்டிக்கொண்டேன். (௪௮)

வஞ்சியையெங்குங்காணாத்துயரிடைமறந்தானென்னச்
செஞ்சிலையுரவோன்றேடித்திரிகின்றானுள்ளந்தேற
வஞ்சொலாளிருந்தாள்கண்டேனென்றயானரக்கன்கொல்லத்
அஞ்சினாளென்றுசொல்லத்தோன்றினேன்றோற்றமீதால். (௪௯)

அருங்கடல்கடந்திவ்வூரையள்ளெரிமடுத்துவெள்ளக்
கருங்கடல்கட்டிமேருக்கடந்தொருமருந்துகாட்டிக்
குரங்கினியுன்னோடொப்பாரில்லெனக்களிப்புக்கொண்டேன்
பெருங்கடற்கோட்டந்தேய்த்ததொத்ததென்னடிமைப்பெற்றி. (௫௦)

விண்டுநின்றாக்கைசிந்தப்புல்லுயிர்விட்டிலாதேன்
கொண்டுநின்றானைக்கொல்லக்கூசினேனெதிரேகொல்லக்
கண்டுநின்றேனேயென்பெண்மைகளாற்கலத்தின்வெண்சோ
றுண்டுநின்றுய்யவல்லேனெளியனோவொருவனுள்ளேன். (௫௧)

என்னநின்றிரங்கிக்கள்வனயோத்திமேலெழுவனென்று
சொன்னதுமுண்டுபோனசுவடுண்டுதொடர்ந்துசெல்லின்
மன்னவிங்குற்றதன்மையுணர்கிலன்வருவதோரான்
பின்னினிமுடிப்பதியாதென்றிரங்கினனுணர்வுபெற்றான். (௫௨)

உற்றதையுணர்த்திப்பின்னையுலகுடையொருவனோடு
மிற்றுதிலிற்றுமாள்வனன்றெனினென்னமென்னிச்
சொற்றதுசெய்வன்வேறோர்பிறிதிலைதுணிவதென்றாப்
பொற்றடந்தோளான்வீரன்பொன்னடிமருங்கிற்போனான். (௫௩)

சிங்கவேறனையவீரன்செறிகழற்பாதஞ்சேர்ந்தா
னங்கமுமனமுங்கண்ணுமாவியுமலக்கணுற்றான்
பொங்கியபொருமல்வீங்கியுயிர்ப்பொடுபுரத்தைப்போர்ப்ப
வெங்கணீரருவிசோரமால்வரையென்னவீழ்ந்தான். (௫௪)

வீழ்ந்தவன்றன்னைவீரன்விளைந்ததுவிளம்புகென்றுத்
தாழ்ந்திருதடக்கைபற்றியெடுக்கவுந்தரிக்கிலாதா
னாழ்ந்தழிதுன்பத்தானையரக்கனின்றயில்கொள்வாளாற்
போழ்ந்தனனென்னக்கூறிப்புரண்டனன்பொருமுகின்றான். (௫௫)

துடித்திலனுயிர்ப்புமில்லையிமைக்கிலன்றுள்ளிக்கண்ணீர்
பொடித்திலனியாதுமொன்றும்புகன்றிலன்பொருமியுள்ளம்
வெடித்திலன்விம்மிப்பாரின்வீழ்ந்திலன்வியர்த்தானல்ல
னடுத்துளதுன்பமியாவுமறிந்திலரமரரோயும். (௫௬)

சொற்பதங்கேட்டலோடுந்துணுக்குறவுணர்வுசோர
நற்பெருவாடையுற்றமரங்களினடுக்கமெய்சாக்
கற்பகமனையவள்ளல்கருங்கழற்கமலக்கான்மேல்
வெற்பினமென்னவீழ்ந்தார்வானரவீரரெல்லாம். (௫௭)

சித்திரத்தன்மையுற்றசேவகனுணர்வுதீர்ந்தான்
மித்திரர்வதனநோக்கானிளையவன்வினவப்பேசான்
பித்தருமிறைபொறாதபேரபிமானமென்னுஞ்
சத்திரமார்பிற்றைக்கவுயிரிலனென்னச்சாய்ந்தான். (௫௮)

நாயகன்றன்மைகண்டுந்தமக்குற்றநாணம்பார்த்து
மாயினதருமமீளவழிவுற்றவதனைப்பார்த்தும்
வாயொடுமனமுங்கண்ணுமியாக்கையுமயர்ந்துசாம்பித்
தாயினையிழந்தகன்றிற்றம்பியுந்தலத்தனானன். (௫௯)

தொல்லையதுணரத்தக்கவீடணன்றுளக்கமுற்றா
னெல்லையிறுன்பமுற்றவிடையொன்றுந்தெரிக்கிலாதான்
வெல்லவுமரிதுநாசமிவடனால்விளைந்ததென்னாக்
கொல்வதுமடுக்குமென்றுமனத்திலோரையங்கொண்டான். (௬௦)

சீதநீர்முகத்தினப்பிச்சேவகன்மேனிதீண்டிப்
போதம்வந்தெய்தற்பாலயாவையும்புரிந்துபொன்போற்
பாதமுங்கையுமெய்யும்பற்றினன்வருடலோடும்
வேதமுங்காணாவள்ளல்விழித்தனன்கண்ணைமெல்ல. (௬௧)

ஊற்றுவார்கண்ணீரோடுமுள்ளழிந்துற்றதென்னி
ஆற்றுவானல்லனாகியயர்கின்றானைவீறுமையன்
மாற்றுவானல்லன்மானமுயிருகவருந்துமென்றுத்
தேற்றுவானினைந்துதம்பியிவையிவைசெப்பலுற்றான். (சுஉ)

முடியுநாட்டானேவந்துமுற்றினுற்றுன்பமுன்னிப்
படியுமாஞ்சிறியோர்தன்மையினக்கிடுபழியிற்றாமால்
குடியுமாசுண்டதென்னினறந்தொடுமுலகைக்கொண்டு
கடியுமாறன்றிச்சோர்ந்துகழியுமோகருத்திலார்போல். (சுஙா)

நையலைத்துணையிலாளைத்தவத்தியைத்தருமக்கற்பிற்
றெய்வதந்தன்னைமற்றுனதேவியைத்திருவைத்தீண்டி
வெய்யவன்கொன்றானென்றால்வேதனையுழப்பதின்ன
முய்யவோகருணையாலோதருமத்தோடுறவுமுண்டோ. (சுச)

ஆக்கமொன்னமரர்தானெனந்தணர்தானெனந்தங்
குருக்களென்முனிவர்தானென்வேதத்தின்கொள்கைதானென்
செருக்கினர்வலியராகிநெறிநின்றார்சிதைவராகி
னிருக்குமிதென்றுமிம்மூன்றுலகையுமெரிமடாதே. (சுரு)

முழுவதேமுலகமின்னமுறைமுறைசெய்கைமேன்மூண்
டெழுவதேயமரரின்னமிருப்பதேயறமுண்டென்று
தொழுவதேமேகமாரிசொரிவதேசோர்ந்துநாம்வீழ்ந்
தழுவதேநன்றுநந்தம்விற்றொழிலாற்றலம்மா. (சுசா)

புக்கிவ்வூரிமைப்பின்முன்னம்பொடிபடுத்தரக்கன்போன
திக்கெலாஞ்சுட்டுவானேருலகெலாந்தீய்த்துத்தீர்க்கத்
தக்கனாங்கைகளுற்றித்தலைசுமந்திருந்துதாழ்விற்
றுக்கமேயுழைப்பதென்றாற்சிறுமையாய்த்தோன்றுமன்றே. (சுஎ)

அங்குமிவ்வறமேநோக்கியரசிழந்தடவியெய்தி
மங்கையைவஞ்சன்பற்றவரம்பழியாதுவாழ்ந்தே
மிங்குமித்துன்பமெய்தியிருத்துமேலெளிமைநோக்கிப்
பொங்குவான்றனையிற்பூட்டியாட்செயப்புகல்வரன்றே. (சுஅ)

மன்றலங்கோதையாளைத்தம்மெதிர்கொணர்ந்துவாளிற்
கொன்றவர்தம்மைக்கொல்லுங்கோளிலாநாணங்கூரப்
பொன்றினனொன்பாவிபோக்கினாற்பொதுமைபார்க்கி
னன்றிதுகருமமென்னியயர்கின்றதறிவிலார்போல். (சுகூ)

அனையனவிளவல்கூறவருக்கன்சேயாகிநின்றான்
கனவுகண்டனனேயென்னக்கதுமெனவெழுந்துகாணும்
வினையினியுண்டேவல்லைவிளக்கின்வீழ்விட்டிலன்ன
மனையிடையரக்கன்மார்பிற்குத்தித்துகாம்வம்பினென்றான். (எ0)

இலங்கையையிடந்துவெங்கணிராக்கதரொன்றின்றனைப்
பொலங்குழைமகளிரோடும்பாலுகர்புதல்வரோடுங்
குலங்களோடடங்கக்கொன்றுகொடுந்தொழில்குறித்தநம்மேல்
விலங்குவாரொள்ளிற்றேவர்விண்ணையுநிலத்துவீழ்த்தும். (௭௧)

அறங்கெடச்செய்துமென்பதமைந்தனமாகினைய
புறங்கிடந்துழைப்பதென்னேபொருந்தலிப்புவனமூன்றுங்
கறங்கெனத்திரிந்துதேவர்குலங்களைக்கட்டுமென்று
மறங்கிளர்வயிரத்தோளானிலங்கைமேல்வாவலுற்றான். (௭௨)

மற்றையவீரரெல்லாமன்னனின்முன்னம்வாவி
எற்றுதுமரக்கர்தம்மையில்லொடுமெடுத்தின்றேக
வுற்றனருறுதலோடுமுணர்த்துவதுளஃதென்றுன்றுச்
சொற்றனனனுமன்வஞ்சனயோத்திமேற்போனசூட்சி. (௭௩)

தாயருந்தம்பிமாருந்தவம்புரிநகரஞ்சேரப்
போயினனென்றமாற்றஞ்செவித்துளைபுகுதலோடு
மேயினவடியினின்றவேதனைக்களையவெந்த
தீயிடைத்தணிந்ததென்னச்சீதைபாற்றுன்பந்தீர்ந்தான். (௭௪)

அழுந்தியபாலின்வெள்ளத்தாழ்கின்றனந்தனீங்கி
யெழுந்தனனென்னத்தன்பக்கடலினின்றேறியாருங்
கொழுந்துறுகோபத்தீயினடுக்கமுமனத்தைக்கூட
வழுந்துருள்பொழுதுந்தாழாவினையினான்மறுக்கமுற்றான். (௭௫)

திருமிச்சீதையோடுமென்கிலதன்றென்றீமை
வேரொடுமுடிப்பதாகவிளைந்ததுவேறுமென்று
வாரொடுந்துடருமென்பதறிகிலேனிதனையைய
பேரிடவதியுண்டோவெம்பியர்பிழைக்கின்றாரோ. (௭௬)

நினைவதன்முன்புசெல்லுமானத்தினெடிதுநின்றான்
வினையொருகணத்தின்முற்றிமீள்கின்றான்வினையேன்வந்த
மனைபொடிபட்டதங்குமாண்டதுதாரமீண்டு
மெனையனதுடருகின்றதுணர்கிலேனிறப்புங்காணேன். (௭௭)

தாதைக்குஞ்சடாயுவானதந்தைக்குந்தமியளாய
சீதைக்குங்கூற்றங்காட்டித்தவிர்ந்திலதொருவன்றீமை
பேதைப்பெண்பிறந்துபெற்றதாயர்க்கும்பிழைப்பில்லாத
காதற்றம்பியர்க்குமூர்க்குநாட்டிற்குங்காட்டித்தன்றே. (௭௮)

உற்றதொன்றுணரகில்லாருணர்ந்துவந்துருத்தாரேனும்
வெற்றிவெம்பாசம்வீசிவிசித்தவன்கொன்றுவீழ்த்தால்
மற்றையபுள்ளின்வேந்தன்வருகிலன்மருந்துநல்கக்
கொற்றமாருதியாங்கில்லையாருயிர்கொடுக்கற்பாலார். (௭௯)

மாகவாகாயஞ்செல்லவல்லையின்வயிரத்தோளா
யேகுவாயுபாயமுண்டேயியம்புதிநின்றவெல்லாஞ்
சாகமற்றிலங்கைப்போருந்தவிர்கவச்சமுக்கண்கள்
காகமுண்டதற்பின்மீண்டுமுடிப்பனென்கருத்தையென்றான். (௮0)

அவ்விடத்திளவலையபரதனையமரினூர்க்க
வெவ்விடற்குரியான்போனவிந்திரசித்தேயென்னுந்
தெவ்விடத்தமைபின்மும்மையுலகமுந்தீர்ந்தருவே
வெவ்விடர்க்கடலின்வைகல்கேளெனவிளம்பலுற்றான். (௮௧)

தீக்கொண்டவஞ்சன்வீசத்திசைமுகன்பாசந்தீண்டி
வீக்கொண்டுவீழ்கயானேபரதனும்வெய்யகூற்றைக்
கூய்க்கொண்டுருத்தாண்டன்றன்குலத்தொடுநிலத்தனாதல்
போய்க்கண்டுகோடியன்றேயென்றனன்புழுங்குகின்றான். (௮௨)

அக்கணத்தநுமனின்றோனையவென்றோளிறுகக்
கைத்துணைத்தழுவிநேருமேறுயிர்காற்றுந்தாழ
விக்கணத்தயோத்திமூதூரெய்தவனிடமுண்டென்னிற்
றிக்கணத்தினிலுஞ்செல்வனியானேபோய்ப்பகையுந்தீர்வன். (௮௩)

கொல்லவந்தானைநீதிகூறினன்விலக்கிக்கொள்வான்
சொல்லலுஞ்சொல்லிநின்றேன்கொன்றபின்றுன்பமென்னை
வெல்லவெந்தறையின்வீழ்வுற்றுணர்ந்திலன்விரைந்துபோன
வில்லையென்றுளதேற்றியோன்பிழைக்குமோவிழுக்கமுற்றேன். (௮௪)

மனத்தின்முன்செல்லுமானம்போனதுவழியதாக
நினைப்பின்முனயோத்தியெய்திவருநெறிபார்த்துநிற்ப
வினிச்சிலதாட்பதென்னேயேறுதிரண்டுதோளும்
புனத்துழாய்மாலைமார்பீர்புட்பகம்போதன்முன்னம். (௮௫)

ஏறுதுமென்னுவீரரொமுதலுமிறைஞ்சியீண்டு
கூறுவதுளதுதன்பங்கோளுறக்குலுங்கியுள்ளந்
தேறுவதருமைசெய்கைமயங்கினன்றிகைத்துநின்றே
னுயினனதனைவையமாயமென்றயிர்க்கின்றேனால். (௮௬)

பத்தினிதன்னைத்தீண்டிப்பாதகன்படுத்தபோது
முத்திறத்துலகும்வெந்துசாம்பராய்முடியுமன்றே
யத்திறமானதேனுமயோத்திமேற்போனதன்மை
சித்திரமிதனையெல்லார்தெரியலாஞ்சிறிதுபோதின். (௮௭)

இமைமிடையாகயான்போயேந்திழையிருக்கையெய்தி
யமைவுறநோக்கியுற்றதறிந்துவந்துரைத்தபின்னர்ச்
சமைவதுசெய்வதென்றுவிடனன்விளம்பத்தக்க
தமைவதென்றிராமன்சொன்னானந்தரத்தவனுஞ்சென்றான். (௮௮)

வண்டினதுருவங்கொண்டான்மானவன்மனத்திற்போனான்
றண்டலையிருக்கைதன்னைப்பொருக்கெனச்சார்ந்துதானே
கண்டனனென்பமன்னோகண்களாற்கருத்திலாவி
யுண்டிலையென்னச்செய்தவோவியமொக்கின்றாளை. (௮௯)

தீர்ப்பதுதுன்பமியானென்னுயிரொடென்றுணர்ந்துசிந்தை
பேர்ப்பதுமின்சொலன்னைதிரிசடைபேசப்போந்தாள்
கார்ப்பெருமேகம்வந்துகடையுகங்கலந்தவன்ன
வார்ப்பொலியமிர்தமாகவாருயிராற்றினாளை. (௯0)

வஞ்சனையென்பதுன்னிவாலுயருவகைவைகு
நெஞ்சினனாகியுள்ளந்தள்ளுறலொழிந்துநின்றான்
வெஞ்சிலைமைந்தன்போனானிகும்பலைவேள்வியானென்
றெஞ்சலிலரக்கன்சேனையெழுந்தெழுந்தேகக்கண்டான். (௯௧)

வேள்விக்குவேண்டற்பாலகலப்பையும்விறகுநெய்யு
மாள்விக்குந்தாழ்விலென்னும்வானவர்மறுக்கங்கண்டான்
சூழ்வித்தவண்ணமீதோநன்றெனத்துணிவுகொண்டான்
றாழ்விக்குமுடியன்வீரன்றாமரைச்சரணந்தாழ்ந்தான். (௯௨)

இருந்தனடேவியானேயெதிர்ந்தனனென்கனார
வருந்ததிக்கற்பினாளுக்கழிவுண்டோவரக்கனம்மை
வருந்திடமாயஞ்செய்துநிகும்பலைமருங்குபுக்கான்
முருங்கழல்வேள்விமுற்றிமுதலறமுடிக்கமூண்டான். (௯௩)

என்றலுமுலகமேழுமெத்தினவெல்லையாக
வென்றியகடல்களேழுமொருங்கெழுந்தார்க்குமோதை
யன்றெனவாகுமென்னவமரருமயிர்க்கவார்த்துக்
குன்றினமிடியத்துள்ளியாடினகுரங்கின்கூட்டம். (௯௪)

வீரனுமையந்தீர்ந்தான்வீடணன்றன்னைமெய்யோ
டார்வமுமுயிருமொன்றவழுந்துறத்தழுவியைய
தீர்வதுபொருளோதுன்பநீயுளைதெய்வமுண்டு
மாருதியுளனுஞ்செய்ததவமுண்டுவலியுமுண்டால். (௯௫)

என்றலுமிறைஞ்சியாகமுற்றுமேவியாரும்வெல்லார்
வென்றியுமரக்கர்மாடேவிடையருளிளவலோடுஞ்
சென்றவனவியுண்டுவேள்வியுஞ்சிதைக்கவென்று
னன்றதுபுரிதியென்னாநாயகனுவல்வதானான். (௯௬)

மாயாசீதைப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௨௮0.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

நம்பியைத்தழுவியையன்றுமறைத்தவிசின்மேலான்
வெம்படைதொடுக்குமாகின்விலக்குவான்பொருட்டாலந்த
வம்புரிதரப்பாயல்லையனையநாடர்ந்தகாலை
யும்பருமுலகுமெல்லாம்விளியுமஃதொழிதியென்றான். (௧)

முக்கணான்படையுமாழிமுதலவன்படையுமுன்வின்
றொக்கவேவிடுமேவிட்டாலவற்றையும்வற்றினையத்
தக்கவாறியற்றிமற்றுன்சிலைவலித்தருக்கினாலே
புக்கவனாவிகொண்டுபோதிபுகழின்மிக்கோய். (௨)

வல்லனமாயவிஞ்சைவருத்தனவறிந்துமாளக்
கல்லுதிதருமமென்னுங்கண்ணகன்கருத்தைக்கண்டு
பல்பெரும்போருஞ்செய்தவருந்தலையற்றம்பார்த்துக்
கொல்லுதியமரர்தங்கள்கூற்றினைக்கூற்றமொப்பாய். (௩)

பதைத்தவன்வெம்மையாடிப்பல்பெரும்பகழிமாரி
விதைத்தவன்விதையாநின்றுவிலக்கிறுமெலிவுமிக்கா
னுதைத்தவன்சிலையின்வாளிமருமத்தைக்கருதியோடி
வதைத்தொழில்புரிதிசாபநூலெனுமறப்பிலாதாய். (௪)

தொடுப்பதன்முன்னம்வாளிதொடுத்தவைதுறைகடோறும்
தடுப்பனதடுத்தியெண்ணிக்குறிப்பினாலுணரத்தக்க
கடுப்பினும்விளம்புமாறக்கதியினுங்கணைகள்காற்றின்
விடுப்பனவவற்றைநோக்கிவிடுதியால்வினைவிலாதாய். (௫)

என்பனமுதலயாவுமியாவையுமியம்பியேற்ற
முன்பனைநோக்கியையமூவகையுலகுந்தானாய்த்
தன்பெருந்தன்மைதானுமறிகிலாவொருவன்றாங்கும்
வன்பெருஞ்சிலையிதாகும்வாங்குதிவலமுங்கொண்டே. (௬)

இச்சிலையியற்கைமேனாட்டமிழ்முனியியம்பிற்றெல்லா
மச்செனக்கேட்டாயன்றேயாயிரமௌலியண்ணல்
மெய்ச்சிலைவிரிஞ்சன்மூட்டும்வேள்வியின்வேட்டுப்பெற்ற
கைச்சிலையென்றுதானேகொடுத்தனன்கவசத்தோடும். (௭)

ஆணியிவ்வுலகுக்கானவாழியான்புறத்தினார்க்குந்
தூணியுங்கொடுத்துமற்றுமுறுதிகள்பலவுஞ்சொல்லித்
நாணுவின்றேற்றத்தானைத்தழுவினன்றழுவலோடுஞ்
சேணுயர்விசும்பிற்றேவர்தீர்ந்ததெஞ்சிறுமையென்றார். (௮)

மங்கலந்தேவர்கூறவானவர்மகளிர்வாழ்த்தப்
பங்கமிலாசிகூறப்பலாண்டிசைப்பரவப்பாகத்
திங்களின்மௌலியண்ணறிரிபுரந்தீய்க்கச்சீறிப்
பொங்கினனென்னத்தோன்றிப்பொலிந்தனன்பகைமேற்போவான். (௯)

மாருதிமுதல்வாயவானரத்தலைவரோடும்
வீரசேதியென்றுவிடைகொடுத்தருளும்வேலை
யாரியன்கமலப்பாதமகத்தினும்புறத்துமாகச்
சீரியசென்னிசேர்த்துச்சென்றனன்றருமச்செல்வன். (௧௦)

பொலங்கொண்டலனையமேனிப்புரவலன்பொருமிக்கண்ணீர்
நிலங்கொண்டுபடரநின்றுநெஞ்சழிவானைத்தம்பி
வலங்கொண்டுவயிரவல்விலிடங்கொண்டுவஞ்சன்மேலே
சலங்கொண்டுகடிதுசென்றான்றலைகொண்டுவருவனென்றே. (௧௧)

தான்பிரிகின்றிலாததம்பிவெங்கடுப்பிற்செல்ல
வூன்பிரிகின்றிலாதவுயிரொனமறைதலோடும்
வான்பெருவேள்விக்காகவளர்கின்றபருவநாளிற்
றான்பிரிந்தேகக்கண்டதயரதன்றன்னையொத்தான். (௧௨)

வேறு.

சேனாபதியேமுதல்சேவகர்தா
மானார்திமிர்கொள்ளியினங்கையினார்
கானார்நெறியும்மலையுங்கழியப்
போனார்நிகும்பலைபுக்கனரால். (௧௩)

உண்டாயதோராவிடையுள்ளொருவன்
கொண்டானுறைகின்றதுபோற்குலவி
விண்டானும்விழுங்கவிரிந்ததனைக்
கண்டாரவரக்கர்கருங்கடலே. (௧௪)

நேமிப்பெயர்யூகநிறைத்துநெடுஞ்
சேமத்தருநின்றதுதீவினையோ
னோமத்தனல்வெவ்வடவைக்குடனே
பாமக்கடனின்றதோர்பான்மையதே. (௧௫)

காராயினகாய்கரிதேர்கலிமாத்
தாராயிரகோடிதழீஇயதுதா
னீராழியொடாழிதிரீஇயதுபோ
லோராயிரமியோசனையுள்ளதனை. (௧௬)

பொற்றேர்பரிமாகரிமாபொருதா
ரெற்றேபடைவீரரையெண்ணிலமா
லுற்றேவியயூகமுலோகமுடைச்
சுற்றுயிராமுடிசுலாயதனை. (௧௭)

வண்ணக்கருமேனியின்மேன்மழைவாழ்
விண்ணைத்தொடுசெம்மயிர்வீசதலா
லண்ணற்கரியானனலம்படைவெம்
பண்ணைக்கடல்போல்வதோர்பான்மையதே. (௧௮)

வழங்காலிலொளிவானின்வரும்
பழங்கார்முகமொத்த*பணிக்குலமுந்
தழங்காகடல்வாழ்வனபோற்றகைசால்
முழங்காமுகிலொத்தனமாமுரசே. (௧௯)

வலியானவிராகவன்வாய்மொழியாற்
சலியாதநெடுங்கடலென்னலா
யொலியாதுறுசேனையையுற்றொருநாள்
மெலியாதவரார்த்தனர்விண்கிழிய. (௨௦)

ஆர்த்தாரொதிரார்த்தவரக்கர்குலம்
போர்த்தார்முரசங்கள்புடைத்தபுகத்
தார்த்தாரிவர்கற்படைகுன்முகிலி
னீர்த்தாரையினம்பவர்நீட்டினரால். (௨௧)

மின்னும்படைவீசலின்வெம்பகைமேற்
பன்னுங்கவிமீதுபடிந்துளதாற்
றுன்னுந்துறைநீர்நிறைவாவிதொடர்ந்
தன்னங்கள்படிந்தனவாமெனலாய். (௨௨)

வில்லும்மழுவும்மெழுவும்மிடலோர்
பல்லுந்தலையும்முடலும்படியிற்
செல்லும்படிசிந்தினசென்றனவாற்
கல்லும்மரமுங்காமுங்கரவ. (௨௩)

வாலுந்தலையும்முடலும்வயிறுங்
காலுங்கரமுந்தறைகண்டனவாற்
கோலும்மழுவும்மெழுவுங்கொழுவும்
வேலுங்கணையும்வளையும்விசிற. (௨௪)

வென்றிப்படைவீரனைவீடணனீ
யின்றிக்கடைதாழுதனீதியதோ
சென்றிக்கடிவேள்விசிதைத்திலையே
லின்றிக்கடல்வெல்கிலமியாமெனலும். (௨௫)

தேவாசுரருந்திசைநான்முகனும்
மூவாமுதலீசனுமூவுலகின்
கோவாகியகொற்றவனும்முதலோர்
மேவாதவரில்லைவிசும்புறைவோர். (௨௬)

பல்லார்படைநின்றதுபல்லணியாற்
பல்லார்படைநின்றதுபல்பிறைவெண்
பல்லார்படைநின்றதுபல்விடமும்
பல்லார்படைநின்றதுபல்படையே. (௨௭)

---

* பணிலம் - கடைக்குறை.

அக்காலையிலக்குவனப்படையுட்
புக்கானயிலம்புபொழிந்தனனா
லுக்கார்களரக்கருமொழியப்
புக்கார்நமனூருறைதென்புலமே. (௨௮)

தேருமதமாகரிதேர்பரிமா
னூருயிரகோடியினூழில்படச்
சேறூர்குருதிக்கடலிற்றிடரிற்
கூறுயுகவாவிகுறைத்தனனால். (௨௯)

வாமக்கரிதாளழிவார்குழிவன்
றீமொய்த்தவரக்கர்கள்செம்மயிரின்
றூமத்தலைபுக்கதழங்கெரியி
னேமத்தைநிகர்த்தவுலப்பிலவால். (௩0)

சிலையின்கணைபூழிதிறந்தனதிண்
கொலைவெங்களிமால்கரிசெம்புனல்கொண்
டுலைவின்றுகிடந்தனவொத்துளவால்
மலையுஞ்சுனையும்வயிறும்முடலும். (௩௧)

விற்றொத்தியவெங்கணையெங்கின்வியன்
பற்றொத்தியபோற்படியப்பலவு
முற்றச்சுடர்மின்மினிமொய்த்துளவன்
புற்றொத்தமுடித்தலைபூழியன. (௩௨)

படுமாரிநெடுங்கணைபாய்தலினால்
விடுமாறுதிரப்புனல்வீழ்வனவாற்
றடுமாறுநெடுங்கொடிதாழ்கடல்வாய்
நெடுமாமுகில்வீழ்வநிகர்த்தனவால். (௩௩)

மின்னார்கணைதாளறவீசவிழுந்
தன்னாருதிரத்துளமூழ்குவதா
லொன்னார்முழுவெண்குடையொத்தனவாற்
செந்நாகம்விழுங்கியதிங்களினே. (௩௪)

கொடுநீள்கரிகையொடுதாள்குறையப்
படுநீள்குருதிப்படர்கின்றனவா
லடுநீளுயிரின்மையினாழ்கிலவா
னெடுநீரினிடங்கர்நிகர்த்தனவால். (௩௫)

கரியுண்டகளத்திடையுற்றனகார்
நரியுண்டியுகப்பனநட்டனவா
விரியுண்டவரின்னியம்விட்டிலதால்
வரியுண்டவுடற்பொறைமானினவால். (௩௬)

வாயிற்கனல்வெங்கடுவாளியினம்
பாயப்பருமக்குலம்வேவனவால்
வேயுற்றநெடுங்கிரிமீவெயிலாந்
தீயுற்றனபோன்றினக்கரியே. (௩௭)

அலைவேலையாக்கரையென்கிறுகிர்த்
தலைமேன்முடியைத்தலாதள்ளுதலான்
மலைமேலுயர்புற்றினைவள்ளுகிரா
னிலைபோமதிப்பகிர்த்தனவால். (௩௮)

மாவாளிகண்மாமழைபோல்வரலால்
மாவாளிகள்போர்தெருமாமறையோர்
மாவாளிகள்வன்றலையின்றலைவாழ்
மாவாளிகளோடுமெறிந்தனரால். (௩௯)

அங்கங்கமிகத்துணிபட்டதறு
லங்கங்குமிருத்தவமர்த்துறைவா
யங்கங்கழிசெம்புனல்பம்பலமைத்
தங்கங்கணிரம்பியலம்பியதால். (௪0)

வன்றுணையைவார்கணைமாரியினால்
முன்றுதையொர்தேர்கொடுமொய்பலதேர்
பின்றுவெதிர்தானவர்பேரணியைக்
கொன்றுனனவெய்துகுறைத்தனனால். (௪௧)

வேறு.

மலைகளுமழைகளும்வானமீன்களு
மலையவெங்கால்பொரவழிந்தவாமென
வுலைகொள்வெங்கனல்பொதியோமமுற்றவாற்
றலைகளுமுடல்களுஞ்சரமூர்தாவுவ. (௪௨)

வாரணமனையவன்றுணிப்பவான்படர்
தாரணிமுடிப்பெருந்தலைகடாக்கலா
லாரணமந்திரமமையவோதிய
பூரணமணிக்குடமுடைந்துபோயதால். (௪௩)

தாறுகொண்மதகரிசுமந்துதாமரை
நீறியநெடுந்தலையுருட்டிச்செங்கிறந்
தூறுகள்செறிந்தபெருதிரத்தோங்கலை
யாறுகளொழுங்கனலவியச்சென்றதே. (௪௪)

தெரிகணைவிசும்பிடைதுணித்துச்செம்மயிர்
வரிகழலரக்கர்தந்தடக்கைவாளொடு
முருமெனவிழ்தலுமனலுக்கோக்கிய
வெருமைகண்மறிந்தனகுதியுமிர்தவால். (௪௫)

அங்கடங்கழிந்தபேருவிக்குன்றினின்
றங்கடங்கழிந்தவாளிழந்தவாடவ
ரங்கடங்கலும்படர்குருதியாழியி
னங்கடங்கினர்தடர்பகழியஞ்சினார். (சசு)

காறலத்தொடு துணிந்தழியக்காய்கதிர்க்
கோறலைத்தலையுறமறுக்கங்கூடினார்
வேறலைத்தூன்றினார்துளங்குமெய்யினார்
நாறலைக்குடலினர்பலருநண்ணினார். (சஎ)

பொங்குடற்றுணிந்ததம்புதல்வர்ப்போக்கிலார்
தொங்குடற்றேண்மிசையிருந்துசோர்வுற
வங்குடற்றம்பியைத்தழுவியண்மினார்
தங்குடர்முதுகிடைச்சொரியத்தள்ளுவார். (சஅ)

மூடியநெய்யொடுநறவுமுற்றிய
சாடிகள்பொரியொடுதகர்ந்துதள்ளுறக்
கோடிகள்பலபலகுழாங்குழாங்களா
யாடினவறுகுறைமறுகுமாக்கையே. (சகூ)

காலெனக்கடுவெனக்கலிங்கக்கம்பியர்
நூலெனவுடற்பொறைதடர்ந்தநோயெனப்
பாலுறுபிணியெனக்கலந்துபன்முறை
மேலுறுசேனையைத்துணித்துவீழ்த்தினான். (ருo)

கண்டனன்றிசைதொறுநோக்கிக்கண்ணகன்
மண்டலமறிகடலன்னமாப்படை
விண்டெறிகால்பொரமறிந்துவீற்றுறுந்
தண்டலையாமெனக்கிடந்ததன்மையே. (ருக)

மிடலின்வெங்கடகரிப்பிணத்தின்விண்டொடுந்
திடலும்வெம்புரவியுந்தேருஞ்சிந்திய
வுடலும்வன்றலைகளுமுதிரத்தோங்கலைக்
கடலுமல்லாதிடையொன்றுங்கண்டிலன். (ருஉ)

நூறுநூறுயிரக்கோடிநோன்கழன்
மாறுபோரரக்கரையொருவன்வாட்கணை
கூறுகூறாக்கியகுவையுஞ்சோரியி
னாறுமேயன்றியோராக்கைகண்டிலன். (ருங)

நஞ்சினும்வெய்யவர்நடுங்கிநாவுலர்ந்
தஞ்சினர்சிலர்சிலரடைகின்றார்சிலர்
வெஞ்சினவீரர்கண்மீண்டிலாதவர்
துஞ்சினர்துணையிலரொனத்துடங்கினார். (ருச)

ஓமவெங்கனலவிந்துழைக்கலப்பையுங்
காமர்வண்டருப்பையும்பிறவுங்கட்டற
நாமமந்திரத்தொழின்மறந்துநான்றுறு
ஆமவெங்களனெனப்பொலிந்துதோன்றினான். (௫௫)

அக்கணத்தடுகளத்தப்புமாரியா
லக்கவரொழிதாவுயிருளோரொலாந்
தொக்கனாரக்கனைச்சூழ்ந்துசுற்றுறப்
புக்கதுகவிப்பெருஞ்சேனைப்போர்க்கடல். (௫௬)

ஆயிரகோடியினளவுருப்படை
யேயெனுமளவினிழிந்தவென்பதுந்
தூயவன்சிலைவலித்தொழிலுந்துன்பமு
மேயினவெருளியுங்கிளரவெம்பினான். (௫௭)

மெய்குலைந்திருநிலமடந்தைவிம்முறச்
செய்கொலைத்தொழிலையுஞ்சென்றதியவர்
மொய்குலத்திறுதியுமுனிவர்கண்டனர்
கைகுலைக்கின்றதுங்கண்ணினோக்கினான். (௫௮)

மானமும்பாழ்படவகுத்தவேள்வியின்
மோனமும்பாழ்படமுடிவிலாமுரட்
சேனையும்பாழ்படச்சிறந்தமந்திரத்
தேனையும்பாழ்படவினையசெப்பினான். (௫௯)

வெள்ளமைமையர்துடன்விரிந்தசேனையி
னுள்ளதக்குரோணியீரைந்தொடோயுமா
லெள்ளருவேள்வியின்றிறிதியற்றுதல்
பிள்ளைமையனையதுசிதைந்துபோந்ததால். (௬0)

துடங்கியவேள்வியின்றுபவெங்கன
லடங்கியதவிந்துளதலையுமாமன்றே
விடங்கொடுவெஞ்செருவென்றியின்றெனக்
கடங்கியதென்பதற்கேதுவானதால். (௬௧)

ஆங்கதுகிடக்கான்மனிதர்க்காற்றல
விங்கினனென்பதோரிழிவுநேருற
வீங்குமின்றியாவருமியம்பவென்குலத்
தோங்குபேராற்றலுமொளியுமொல்குமால். (௬௨)

மந்திரவேள்விபோய்மடிந்ததாமெனச்
சிந்தையினினைந்துநொந்திருந்துதேய்வுற
லந்தரத்தமரர்தாமனிதர்க்காற்றல
விந்திரற்கேயிவன்வலியென்றேசவோ. (௬௩)

என்றவன்பகர்கின்றவெல்லையின்னிருங்
குன்றொடுமரங்களும்பிணத்தின்கூட்டமும்
பொன்றினகரிகளுங்கவிகள்போக்கின
சென்றனபெரும்படையிரிந்துசிந்தின. (௬௪)

ஒதுங்கினரொருவர்மேலொருவர்புக்குறப்
பதுங்கினர்நடுங்கினர்பகழிபாய்தலிற்
பிதுங்கினர்குடருடல்பிளவுபட்டனர்
மதம்புலர்களிறெனச்சீற்றமாற்றினார். (௬௫)

வீரன்வெங்கணையொடுங்கவிகள்வீசிய
கார்வரையரக்கர்தங்கடலின்வீழ்ந்தன
போர்நெடுங்கால்பொரப்பொழியுமாமழைத்
தாரையுமேகமும்படிந்ததன்மைய. (௬௬)

திரைக்கடற்பெரும்படையிரிந்துசிந்திட
மரத்தினிற்புடைத்தனைத்துதிர்த்தமாருதி
அரக்கனுக்கணித்தெனவணுகியன்னவ
னுரைக்கதமுறுவதோர்மாற்றமோதினான். (௬௭)

வேறு.

நானுனையிரந்துகூறுநயமொழியொன்றுங்கேளாய்
சானகிதன்னைவாளாற்றடிந்ததோதனதன்றந்த
மானமேற்சேனையோடும்வடதிசைநோக்கிமீது
போனதோகோடிகோடிவஞ்சமும்பொய்யும்வல்லாய். (௬௮)

தடந்திரைப்பரவையன்னசக்கரயூகம்புக்குக்
கிடந்ததுகண்டதுண்டோநாணொலிகேட்டிலாயோ
துடர்ந்துபோயயோத்திதன்னைக்கிளையொடுந்துணியநூறி
நடந்ததெப்பொழுதுவேள்விமுடிந்ததேகருமமன்றே. (௬௯)

ஏந்தகன்ஞாலமெல்லாமினிதுறைந்தியற்கைதாங்கும்
பாந்தளிற்பெரியதிண்டோட்பரதனைப்பழியிற்றீர்ந்த
வேந்தனைக்கண்டுநீநின்வில்வலங்காட்டிமீண்டு
போந்ததோவுயிருங்கொண்டேயாயினும்புதுமையன்றே. (௭0)

அம்பரத்தமைந்தவல்விற்சம்பரனுவிவாங்கி
யும்பருக்குதவிசெய்தவொருவனுக்குதயஞ்செய்த
நம்பியைமுதல்வரானமூவர்க்குநால்வரான
தம்பியைக்கண்டுநின்றன்றனுவலங்காட்டித்துண்டோ. (௭௧)

தீயொத்தவயிரவாளியுடலுறச்சிவந்தசோரி
காயத்தின்செவியினூடும்வாயினுங்கண்களூடும்
பாயப்போயிலங்கைபுக்குவஞ்சனைபரப்பச்செய்யு
மாயப்போராற்றலெல்லாமின்றொடுமாளுமன்றே. (௭௨)

பாசமோமலரின்மேலான்பெரும்படைக்கலமோபண்டை
யீசனார்படையோமாயோனேமியோயாதோவின்னம்
வீசிநீர்விரும்புகின்றிரதற்குநாம்வெருவிச்சாலக்
கூசினேம்போதுநும்மைக்கூற்றினார்குழுகவந்தார். (௭௩)

வார்கழிருடையவாறுமாயங்கள்வல்லவாறும்
பார்கொள்வான்வரிவிற்றெய்வப்படைக்கலம்படைத்தவாறு
மூர்களுநின்றதன்றேயும்மைமாமுயிரினோடுஞ்
சிரங்களைத்துணித்துமென்னக்கண்டதுதிறம்பினேமோ. (௭௪)

விடந்துடிக்கின்றகண்டத்தண்ணலும்விரிஞ்சன்றானும்
படந்துடிக்கின்றநாகப்பாற்கடற்பள்ளியானுஞ்
சடந்துடிக்கிலராய்வந்துதாங்கிலுஞ்சாததிண்ண
மிடர்துடிக்கின்றதுண்டேயிருத்திரோவியம்புவீரே. (௭௫)

கொல்வனென்றுன்னைத்தானேயென்றொருசபதங்கொண்ட
வில்லிவர்தருகுசார்ந்தன்சேனையைமுழுதும்விட்டி
வல்லநீபொருவாயென்றுவிளிக்கின்றான்வரிவிலாளி
சொல்லொலியையசெய்யுமோமத்துக்குறுப்பொன்றுமோ. (௭௬)

மூவகையுலகுங்காக்குமுதல்வன்றம்பிபூச
றேவர்கண்முனிவர்மற்றுந்திறத்திறத்துலகஞ்சேர்ந்தார்
யாவருங்காணநின்றானினியிறைதாட்பதென்னே
சாவதுசாதமன்றேவென்றவன்றருமங்காப்பான். (௭௭)

அன்னவாசகங்கள்கேளாவனலுயிர்த்தலங்கற்பொற்றோண்
மின்னருபகுவாயூடுவெயிலுகநகைபோய்விங்க
முன்னரேவந்திம்மாற்றமாற்றலான்மொழிந்தவாற
தென்னதோவென்னைநீங்களிகழ்ந்ததென்றினையசொன்னான். (௭௮)

மூண்டபோர்தோறும்பட்டுமுடிந்தநீர்முறையிற்றீர்ந்து
மீண்டபோததனையெல்லாமறத்திரோவிளிதல்வேண்டி
யீண்டவாவென்றுநின்றீரித்தனைபேரும்பட்டு
மாண்டபோதுயிர்தந்தியமருந்துவைத்தனிரோமான. (௭௯)

இலக்குவனுகமற்றையிராமனேயாகவீண்டு
விலக்குவரெல்லாம்வந்துவிலக்கிலுங்குரங்குவெள்ளங்
குலக்குலமாகமாளுங்கொற்றமுமனிதர்கொள்ளு
மலக்கணுமுனிவர்தாமுமமரருங்காண்பரன்றே. (௮௰)

யானுடைவில்லுமென்பொற்றோள்களுமிருக்கவின்ன
மூனுடையுயிர்களியாவுமுய்யுமோவொளிப்பிலாமற்
கூனுடைக்குரக்கினோடுமனிதரைக்கொன்றுநின்ற
வானினுந்தொடர்ந்துகொல்வன்மருந்தினுமுய்யமாட்டீர். (௮௧)

வேட்கின்றவேள்வியின்றுபிழைத்ததுவென்றேமென்று
கேட்கின்றவீரமெல்லாங்கிளத்துவீர்கிளத்தல்வேண்டா
நாட்கின்றதில்லையும்மைத்தனித்தனிதலைகள்பாறச்
சூட்கின்றவீரமென்கைச்சரங்களாய்த்தோன்றுமன்றே. (௮௨)

மற்றெலாநும்மைப்போலவாயினாற்சொல்லமாட்டேன்
வெற்றிநான்முன்றுதந்தீர்வினாவதுவெல்லற்கொல்லா
முற்றுநாளுருத்தகாலத்தொருமுறையெதிரோவிற்கக்
சத்திரோவின்னமாண்டுகிடத்திரோகடத்திரோதான். (௮௩)

நின்மின்கணின்மினென்றுநெருப்பெழவிழித்துநீண்ட
மின்மின்கொள்கவசமிட்டான்வீக்கினான்றுணிவீரப்
பொன்மின்கொள்கோதைகையிற்பூட்டினான்பொருத்தான்போர்வி
லென்மின்கொள்வயிரத்திண்டேரேறினானெதிர்ந்தானணி. (௮௪)

ஊதினான்சங்கம்வானத்தொண்டொடிமகளிரொண்கண்
மோதினார்கணத்தின்முன்னேமுழுவதுமொருங்குமுற்றக்
காதினானென்னவானோர்கலங்கினார்கயிலையானும்
போதினான்றானுமின்றுபுகுந்ததுபெரும்போரென்றார். (௮௫)

இழைத்தபேரியாகந்தானேயாஞ்செய்ததவத்தினாலே
பிழைத்ததுபிழைத்தலாலேயிவனினிப்பிழைக்கலாற்றா
னழைத்ததுவிதியேயாகுமிலக்குவனம்பினாலே
யுழைப்பதுகாண்கின்றேமென்றேங்கினாரும்பரெல்லாம். (௮௬)

நாண்டொழிலோசைவீசிச்செவிதொறுநடத்தலோடு
மாண்டொழிலுடனேகையினடுக்கியமரனுங்கல்லு
மீண்டனமதிர்ந்துசோரவிழுந்தனவிழுந்தமெய்யே
மாண்டனமென்றேயுன்னியிரிந்ததுகுரங்கின்மாலை. (௮௭)

படைப்பெருந்தலைவர்நின்றாரல்லவரிறுதிபற்று
மடைப்பருங்காலக்காற்றாலாற்றலதாகிக்கீறிப்
புடைத்திரிந்தோடும்வேலைப்புனலெனவிரியலுற்றார்
கிடைத்தபோனுமனுண்டோர்நெடுங்கிரிகிழித்துக்கொண்டான். (௮௮)

நில்லடாநில்லுநில்லுநீயடாவாசிபேசிக்
கல்லெடாநின்றதென்னைப்போர்க்களத்தமரர்காணக்
கொல்லலாமென்றேநன்றுகுரங்கென்றற்கூடுமன்றே
நல்லைபோர்வாவாவென்றானனுமனுக்குநமனாய்நின்றான். (௮௯)

வில்லெடுத்துருத்துநின்றவீரருள்வீரனேயோ
கல்லெடுத்தெறியவந்தவனுமனைக்கண்ணினோக்கி
மல்லெடுத்துயர்ந்ததோளார்க்கென்கொலோவலியதென்றுச்
சொல்லெடுத்தமரர்சொன்னார்தாதையுந்துணுக்கமுற்றான். (௯௦)

வீசினன்வயிரக்குன்றம்வெம்பொறிக்குலங்கள்விண்ணி
ருசையினிமிர்ந்துசெல்லவாயிரமுருவொன்றாகப்
பூசினைபினைப்பிறைதன்றலைமகன்புரிவைநோக்கிக்
கூசினவுலகமெல்லாங்குலைந்தனவரக்கர்கூட்டம். (௧௧)

குண்டலநெடுவில்வீசமேருவிற்குவிந்ததோளா
வண்டமுன்குலங்கவார்த்தமாருதியசனியஞ்ச
விண்டலத்தெறிந்தகுன்றம்வெறுந்துகளாக்கிவீழக்
கண்டனரெய்ததன்மைகண்டிலரிமைப்பில்கண்ணார். (௧௨)

மாறொருகுன்றம்வாங்கிமறுகுவான்வயிரமார்பிற்
காறுறுகாலிற்கையிற்கழுத்தினிறுதலிற்கண்ணி
னேறினவென்பமன்றோவெரிமுகக்கடவுள்வெம்மை
மேறியபகழிமாரிதிக்கடுவிடத்திற்றோய்ந்த. (௧௩)

வெறியொத்தகிரக்குன்றின்மருங்குறவிளங்கலாலு
மெறிரொத்தவிருளைச்சீறியெழுகின்றவியற்கையாலும்
கதிரொத்தபகழிக்கற்றைகதிரொளிகாட்டலாலு
முதிரத்தின்செம்மையாலுமுதிக்கின்றகதிரோனொத்தான். (௧௪)

ஆயவனயர்தலோடுமங்கதன்முதல்வரானோர்
காய்சினந்திருவெந்துகலந்தனர்கதிரோன்பெற்ற
ஆயசுக்கிரீவன்வந்துதோன்றினன்றோன்றக்கண்டு
தீயவனவனைநோக்கிக்கனலெனச்சினத்துச்சொன்னான். (௧௫)

வெம்பினசெருவின்வந்தமேவினும்வெருண்டுபெயர்
தம்பியைத்தொடர்வதல்லாற்குரங்கினைத்தொடர்வதுண்டோ
வம்பினைமாட்டியென்னேசிறிதுபோராற்றவல்லான்
நம்பியைக்காட்டித்தாரீர்சாதிரோசலத்தினென்றான். (௧௬)

அனுமனைக்கண்டிலீரோவவனிலும்வலியரோவென்
றனுவுளதன்றோதோளினவ்வலிதவிர்ந்ததுண்டோ
விறுமினீரலீரோவெவ்வலியீட்டிவந்தீர்
மனிதனைக்காட்டிநுந்தமல்லதொறும்வழிக்கொளீரோ. (௧௭)

என்றுரைத்திளவறன்மேலெழுகின்றவியற்கைநோக்கிக்
குன்றமுமாமும்வீசிக்குறுகினார்குழாங்கடோறுஞ்
சென்றனபகழிமாரிமேருவையுருவித்தீர்வ
வொன்றலகோடிகோடியுலைந்தனவலியுமோய்ந்த. (௧௮)

படுகின்றதன்றுவன்றன்பெரும்படைபகழிமாரி
விடுகின்றதன்றேவென்றியரக்கனுங்காளமேக
மிடிகின்றவேள்விமாண்டகினியவன்பிழைப்புறுமே
முடுகென்றனரக்கன்றம்பிரம்பியுஞ்சென்றுமூண்டான். (௧௯)

வேறு. வந்தானெடுந்தகைமாருதிமயங்காமுகமலர்ந்தா
னெந்தாய்கடிதேறுயெனதிருதோள்மிசையென்று
னர்தாகவென்றுவந்தையனுமமைவாயிலனிமையோர்
சிந்தாகுலங்களைந்தானெனநெடுஞ்சாரிகைதிரிந்தான். (௧௦௦)

காராயிரமுடனுகிபதெனலாகியகரியோ
னோராயிரம்பரிபூண்டதொருயர்தேர்மிசையுயர்ந்தா
னேராயினரிருவோர்களுநெடுமாருதிமிரும்
பேராயிரமுடையானெனத்திசையெங்கணும்பெயர்ந்தான். (௧௦௧)

தீயொப்பனவுருமொப்பனவுயிர்வேட்டனதிரியும்
பேயொப்பனபசியொப்பனபிணியொப்பனபிழையா
மாயக்கொடுவினையொப்பனமழுவொப்பனகழுகின்
றுயொப்பனசிலவாளிகடுரந்தான்றுயிறுரந்தான். (௧௦௨)

அவ்வம்பினையவ்வம்பினினறுத்தானிகலரக்க
னெவ்வம்பினியுலகத்துளதென்னும்படியெய்தா
னெவ்வம்பரமெவ்வெண்டிசையெவ்வேலைகள்பிறவும்
வவ்வுங்கடையுகமாமழைபொழிகின்றதுமான. (௧௦௩)

ஆயோனெடுங்குருவிக்குலமென்னுஞ்சிலவம்பாற்
போயோடிடத்துரந்தானவைபொறியோவெனமறியத்
தூயோனுமத்துணைவாளிகள்தொடுத்தானவைதடுத்தான்
தீயோனுமக்கணத்தாயிரநெடுஞ்சாரிகைதிரிந்தான். (௧௦௪)

கல்லும்நெடுமலையும்பலமரமும்மிடைகாணும்
புல்லுஞ்சிறுபொடியும்மிடைதெரியாவகைபுரியச்
செல்லும்நெறிதொறுஞ்சென்றனதேருங்கால்புனைமறவோன்
சில்லின்முதிர்தேருஞ்சினவய்மாருதிதாளும். (௧௦௫)

இருவீருமிவனின்னவனிவனின்னவனென்னச்
செருவீருமறியாவகைதிரிந்தார்கணைசொரிந்தா
ரொருவீருமிவரொக்கிலரெனவானவருவந்தார்
பொருவினையும்பொருவினையும்பொருதாலெனப்பொருதார். (௧௦௬)

விண்செல்கிலசெல்கின்றனவிசிகம்மெனவிமையோர்
கண்செல்கிலமனஞ்செல்கிலகணிதம்மறுமெனிறோ
ரெண்செல்கிலநெடுங்காலவனிடைசெல்கிலனுடன்மேற்
புண்செய்வனவல்லாரொருபொருள்செய்வனதெரியா. (௧௦௭)

எரிந்தேறினதிசையாவையுமிடியாமெனப்பொடியாய்
நெரிந்தேறினநெடுநாணொலிபடர்வானிறையுருமிற்
சொரிந்தேறினசுடுவெங்கணைதொடுந்தாரகைமுழுதுங்
கரிந்தேறினவுலகியாவையுங்கனல்வெம்புகைகதுவ. (௧௦௮)

வெடிக்கின்றனதிசையானையுமழிகின்றனவிழுவர்
நிடிக்கின்றனநிருதாரொலியிருவாய்களுமெதிரக்
கடிக்கின்றனகனல்வெங்கணைகலிவாருறவிசைமேற்
பொடிக்கின்றனபொறிவெங்கனலிவைகண்டனர்புலவோர். (௯0௧)

கடல்வற்றினமலையுக்கனபருதிக்கனல்கதுவுற்
றுடல்பற்றினமாமுற்றனகனல்பட்டனவுதிரக்
கடுவற்றினவெரியுக்கனணிபட்டுயர்கணையின்
நீர்பட்டதுபாரவைப்புவிதிரியுற்றதுபுவனம். (௧௧0)

எரிகின்றனவயில்வெங்கணையிருசேனையுமிரியத்
திரிகின்றனபுடைநின்றிலதிசைசென்றனசிதறிக்
கரிபொன்றினபரிமங்கினகவிசிந்தினகடல்போற்
சொரிகின்றனபொருசெம்புனலுருலைகின்றனர்கொலையால். (௧௧௧)

புரிந்தோடினபுகைந்தோடினபொறிந்தோடினபுகைபோ
யெரிந்தோடினவிரிந்தோடினவிடமோடினவலமே
திரிந்தோடினசெறிந்தோடினவிரிந்தோடினதிசைமேற்
சரிந்தோடினகருங்கோளரிக்கிளையான்விடுசரமே. (௧௧௨)

நீரொத்தனநெருப்பொத்தனபொருப்பொத்தனகருங்
காரொத்தனவுருமொத்தனகடலொத்தனகதிரோன்
றேரொத்தனவிடைமேலவன்சிரிப்பொத்தனவுலகின்
வேரொத்தனவாயொத்தனவிருதன்விடுசரமே. (௧௧௩)

ஏமத்தடுகவசத்தனவொருவோரெனவிருவோர்
வாமப்பெருந்தோண்மேலனவதனத்தனவுயிர்த்த
தாமத்தனமார்பத்தனசாணத்தனதங்காக்
காமக்குலமடமங்கையர்கடைக்கண்ணெனக்கணைகள். (௧௧௪)

எந்நாளிலினைத்தேவர்களொத்தானவரொவரோ
யன்னார்செருவொத்தாரெனவிமையோரெடுத்தார்த்தார்
பொன்னார்சிலையிருகால்களுமொருகால்பொறையுயிரா
முன்னாளினிலிரண்டம்பிறைமுளைத்தாலெனவளைத்தார். (௧௧௫)

வேகின்றனவுலகங்கிளர்விடுகின்றனவிசிகம்
போகின்றனகடல்வெந்தனவிமையோர்களும்புலர்ந்தா
ராகின்றதொராழிகாலமிதாமன்றெனவயிர்த்தார்
சோகின்றனதிசையானைகள்செவிநாணொலிநுழைய. (௧௧௬)

மிறுக்கதுநெடுவானகம்வெயிலுக்கதுசுடரு
மாறுக்கதுமுழுவெண்மதிமழையுக்கதுவானந்
தாழுக்கதுகுலமால்வரைதலையுக்கதுசகைசா
லூறுக்கதுமுயிரோடுடனுலகத்தினிவையும். (௧௧௭)

அக்காலையினயில்வெங்கணையையைந்துபுக்கழுந்தத்
திக்காசறவென்றான்மகனிளங்கோவுடற்செறிந்தான்
கைக்கார்முகம்வளையச்சிலகனல்வெங்கணைகவசம்
புக்காகமுங்கழன்றோடிடவிளங்கோளரிபொழிந்தான். (௧௧௮)

தெரிந்தான்சிலசுடர்வெங்கணைதேர்பூண்டனசினமா
விரிந்தோடிடத்தூங்தோடினவிமையோரையுமன்று
ளரிந்தோடினவெரிந்தோடினவவைகோத்தடலரக்கன்
சொரிந்தானுயர்நெடுமாருதிதோண்மேலினிற்றோன்ற. (௧௧௯)

குருதிப்புனல்சொரியும்முயர்குன்றென்றுமவனுமன்
பருதித்திருநிறமொத்தவையிளங்கோளரிபார்த்தா
னொருதிக்கிறுமுயராவகையவன்றேரிணையுதிர்த்தான்
பொருதிக்கணம்வென்றானெனச்சரமாரிகள்பொழிந்தான். (௧௨௦)

அத்தேரழிந்ததுநோக்கியவிமையோரொடுத்தார்த்தார்
முத்தேவருமுவந்தாரவனுருமேறெனமுனிந்தான்
றத்தாவொருதடந்தேரினைத்தொடர்ந்தான்சரந்தலைமேற்
பத்தேவினனவைபாய்தலினிளங்கோளரிபதைத்தான். (௧௨௧)

பதைத்தானுடனிலைத்தான்சிலபருவாயயிற்பகழி
விதைத்தானவன்விலக்காதமுன்விடைமேல்வருவிமலன்
மதத்தாலெதிர்வருகாலனையொருகாலுறமருமத்
துதைத்தாலெனத்தனித்தோர்கணையவன்மார்பினிலுதைத்தான். (௧௨௨)

கவசத்தையுநெடுமார்பையுங்கழன்றக்கணைகழிய
வவசத்தொழிலடைந்தானதற்கிமையோரொடுத்தார்த்தார்
திவசத்தெழுகதிரோனெனத்திரிகின்றதொர்கணையாற்
றுவசத்தையுந்துணித்தேயவன்மணித்தோளையுந்துளைத்தான். (௧௨௩)

உள்ளாடியவுதிரப்புனல்கொழுந்தீயெனவொழுகத்
தள்ளாடியவடமேருவிற்சலித்தானுடறரித்தான்
புள்ளாடியகடும்போர்க்கணைதுறந்தானவைதுறைபோய்
விள்ளாநெடுங்கவசத்திடைநுழையாதுகவெகுண்டான். (௧௨௪)

மறித்தாயிரம்வடிவெங்கணைமருமத்திணைமதியாக்
குறித்தாயிரம்பரித்தேரவன்விடுத்தானவைகுறிபார்த்
திறுத்தானெடுஞ்சரத்தாலொருதனிநாயகற்கிளையோன்
செறித்தானுடல்சிலபொற்கணைசிலைநாணறத்தெரித்தான். (௧௨௫)

வில்லிங்கிதுநெடுமால்சிவனயன்மேலவர்தனுவே
கொல்லென்றுகொண்டயிர்த்தானெடுங்கவசத்தையுங்குலையாச்
செல்லுங்கொடுங்கணையாவையுந்திசையாவையுந்தெரிந்தான்
வெல்லுந்தரமில்லாமையுமறிந்தானறமெலிந்தான். (௧௨௬)

அத்தன்மையையறிந்தானவன்சிறுதாதையுமனுசா
முத்தன்முகநோக்காவொருமொழிகேளெனமொழிவா
னெத்தன்மையுமிமையோர்களைவென்றானிகல்கண்டாற்
பித்தன்மனந்தளர்ந்தானினிப்பிழையானெனப்பகர்ந்தான். (௧௨௭)

கூற்றின்படிகொடுத்தானறக்கொலைவாளெயிற்றரக்க
னேற்றஞ்சிலைநெடுநாணொலியுலகேழினுமெய்தச்
சீற்றத்தலைத்தலைசென்றுறவிதறிவொனத்தெரியாக்
காற்றின்படைதொடுத்தானவனதுவேகொடுகாத்தான். (௧௨௮)

அனலின்படைதொடுத்தானவனதுவேகொடுகாத்தான்
புனலின்படைதொடுத்தானவனதுவேகொடுபொறுத்தான்
கனவெங்கதிரவன்வெம்படைதுரந்தான்மனங்களியான்
சினவெந்திறலிளங்கோளரியதுவேகொடுதீர்த்தான். (௧௨௯)

இறுகாத்திகொலென்றுவெடுத்திசைப்படையெய்தா
னறுகாப்பதற்கதுவேயுளதென்றுதொடுத்தமைத்தான்
செறுகாப்படைதொடுப்பேனெனநினைந்தான்றிசைமுகத்தான்
முறுமாப்படைதுரந்தாலினிமுடிந்தாயெனமொழிந்தான். (௧௩௦)

வானின்றலைநிலைநின்றவர்மழுவாளியுமலரோன்
றானும்முனிவரும்பிறதவத்தோர்களுமறத்தோர்
கோனும்பிறபிறதேவர்கள்குழுவும்மனங்குலைந்தா
ரூனமினியிலதாகுகவிளங்கோக்கெனவுரைத்தார். (௧௩௧)

ஊழிக்கடையிறுமத்தலையுலகியாவையுமுண்ணு
மாழிப்பெருங்கனறன்னொடுசுடரொன்னவுமாகப்
பாழிச்சிலைகவிரியத்தனிபடர்கின்றதுபார்த்தா
னாழித்தனிமுதனாயகற்கிளையானதுமதித்தான். (௧௩௨)

மாட்டானினிமலரோன்படைமுதற்போதுதன்வலத்தால்
மீட்டானலன்றடுத்தானலன்முடிந்தானெனவிட்டான்
காட்டாதினிக்கரந்தாலதுகருமம்மலவென்றுத்
தாட்டாமரைமலரோன்படைதொடுப்பேனெனச்சமைந்தான். (௧௩௩)

நன்றாகுகவுலகுக்கெனமுதலோன்மொழிநவின்றான்;
பின்றாதவனுயிர்மேற்செலவொழிகென்பதுபிடித்தா
னொன்றாகவிம்முதலோன்படைதனைமாய்க்கவென்றுரைத்தா
னின்றானதுதுரந்தானிவன்றனிவானவர்நினைந்தார். (௧௩௪)

தான்விட்டனமலரோன்படையெனின்மற்றிடைதருமே
வான்விட்டதுமண்விட்டதுமறவோனுடலறுமே
தேன்விட்டுகுமலரோன்படைதீர்ப்பாயெனத்தெரிந்தா
னான்விட்டவன்மறம்விட்டிலனெனவானவருவந்தார். (௧௩௫)

உருமேருவங்கெதிர்த்தாலதனெதிரோரொருப்புய்த்தால்
வருமாங்கதுதவிர்ந்தாலெனமலரோன்படைமாயத்
திருமாறனைக்கிளியான்படையுலகேழையுந்தீய்க்கு
மருமாகனலெனநின்றதுவிசும்பெங்கனுமாகி. (கஙசு)

படையங்கதுபடராவகைபகலோன்குலமருமா
னிடையொன்றதுதடுக்கும்படிசெந்தீயுகவெய்தான்
றொடையொன்றினைக்கணைமீமிசைத்தொடுவாயினியென்றுன்
விடையொன்றொருவிடமுற்றெனவிடுவித்ததுவேகம். (கஙஎ)

வின்றாதுகண்டார்வயவீரர்க்கினிமேன்மே
லொன்றாதனவுளவோவெனமனந்தேறினருவந்தார்
கண்ணார்நுதற்பெருமானவர்க்கிதோவெனக்கடைபார்த்
தெண்ணாதிவைபகர்ந்தீர்பொருள்கேணீரெனவிசைத்தான். (கஙஅ)

நாராயணனாரொன்றிவருளராய்நமர்க்கெல்லாம்
வேராய்முழுமுதற்காரணப்பொருளாய்வினைகடந்தோ
ராராயினுந்தெரியாததொர்நெடுமாயையினகத்தார்
பாராயணமறைநான்கையுங்கடந்தார்சிலபழையோர். (கஙகூ)

அறத்தாறழிவுளதாமெனவறிவுந்துடர்ந்தணுகப்
புறத்தார்புகுந்தகத்தாரெனப்புகுந்தன்னதுபுரப்பார்
மறத்தார்முதற்குலம்வேரறமாய்ப்பானிவண்வந்தார்
திறத்தாலதுதெரிந்தியாவருந்தெரியாவகைதிரிவார். (கச0)

உயிர்தோறுமுற்றுளன்க்ஷேத்திரத்தொருவன்னெனவுரைக்கு
மயிராகிலையுடையானிவனவனிவ்வுலகனைத்துந்
தயிர்தோய்பிரையெனலாம்வகைகலந்தேறியதலைவன்
பயிராததொர்பொருளின்னதென்றுணரீரிதுபரமால். (கசக)

நெடும்பாற்கடற்கிடந்தானும்பண்டிவர்நாங்குறைநேர
விடும்பாக்கியமுடையார்களைக்குலத்தோடறவீட்டி
யிடும்பாக்கியத்தறங்காப்பதற்கிசைந்தாரெனவிதெலா
மடும்பாக்கியத்துடைச்செஞ்சடைமுதலோன்பணித்தமைந்தான். (கசஉ)

அறிந்தேயிருந்தறியேமவனெடுமாயையினயிர்ப்போம்
பிறிந்தோமினிமுழுதையமும்பெருமானுரைபிடித்தோ
மெறிந்தோம்பகைமுழுதும்மினித்தீர்ந்தோமிடர்கடந்தோம்
செறிந்தோர்வினைப்பகைவாவெனத்தொழுதார்நெடுந்தேவர். (கசங)

மாயோனெடும்படைவாங்கியவளைவாளெயிற்றரக்க
னீயேயிதுதடுப்பாயெனினினக்காரெதிர்நிற்பார்
போயேவிசும்படைவாயிதுபிழையாதெனப்புகலா
ஆயோன்மிசையுலகியாவையுந்தடுமாறிடத்துரந்தான். (கசச)

சேயித்தனரிமையோர்தமைச்சிரத்தேற்றியகரத்தா
ராயித்தொழில்பிறரியாவருமடைந்தார்பழுதடையாக்
காயிப்பதுமுடிவிப்பதுபடிகின்றதுகண்டா
னேயித்தனியரிதானெனவினைந்தானெதிர்நடந்தான். (௧௪௫)

நிக்கின்றதிவ்வுலகேழையுமெனச்செல்வனுந்தெரிந்தா
விக்குற்றமல்லாமுழுமுதலோனெனநினைந்தான்
விக்கின்றிலதயல்சென்றதவிலங்காவலங்கொடுமேற்
போய்த்தங்கதுகனன்மாண்டதுபுகைவீய்ந்ததுபொருவே. (௧௪௬)

கூத்தாடினரிமையோர்களுங்கவியின்றலைமெல்லாய்
கூத்தாடினரமங்கையர்குனித்தாடினர்தவத்தோர்
காத்தாயுலகனைத்துமெனக்களித்தாடினர்கமலம்
பூத்தானுமம்மழுவாளியுமுழுவாய்கொடுபுகழ்ந்தார். (௧௪௭)

அவனன்னதுகண்டானிவனுரோவெனவயிர்த்தா
னிவனன்னமுதலேயுடையிறையோனெனவென்றே
வெவனென்னினுநன்றுருகவிலியென்னலனென்றுச்
சிவனின்படைதொடுத்தாருயிர்முடிப்பேனெனத்தெரிந்தான். (௧௪௮)

பார்ப்பான்றருமுலகியாவையுமொருநாளொருபகலே
தீர்ப்பான்படைதொடுப்பேனெனத்தெரிந்தானதுதெரியா
மீப்பாலியவிமையோர்குலம்வெருவுற்றதிப்பொழுதே
மாய்ப்பானெனவுலகியாவையுமறுகுற்றனமயங்கா. (௧௪௯)

நானேசிவன்றரப்பெற்றதுதவநாள்பலவுழந்தே
தானேபிறரறியாததுதந்தேனெனச்சமைந்தா
னூறலிவனுயிர்கோடலுக்கையம்மிலையென்று
மேறுமிதனையேவிடினெதிர்நிற்பவரில்லை. (௧௫௦)

மனத்தான்மலர்புனல்சாந்தமொடவிதூபமும்வகுத்தா
னினைத்தானிவனுயிர்கொண்டிவணிமிர்வாயெனநிமிர்த்தான்
சினத்தானெடுஞ்சிலைநாண்டடந்தோள்மேலுறச்செலுத்தா
வினைத்தாயதொர்பொருளாலிடைதடையில்லதைவிட்டான். (௧௫௧)

சூலங்களுமழுவுஞ்சுடுகணையுங்கறைசுடரு
மாலங்களுமரவங்களுமசனிக்குலமெவையுங்
காலன்றனதுருவங்களுங்கரும்பூதமும்பெரும்பேய்ச்
சாலங்களுமிமிர்கின்றனவுலகெங்களுந்தாறும். (௧௫௨)

ஊழிக்கனலொருபாலதனுடனேதொடர்ந்தொடற்றுஞ்
சூழிக்கொடுங்கடுங்காற்றதனுடனேவரத்தூர்க்கு
மேழிற்றுமப்புறத்தாயுளபெரும்போர்க்கடலிழிர்தாங்
காழித்தலைகிடந்தாலெனநெடுந்தூங்கிருளடைய. (௧௫௩)

இரிந்தார்குலநெடுந்தேவர்களிருடிக்குலத்தெவரும்
பரிந்தாரிருபழுதாகிலதிருவானெனும்பயத்தால்
நெரிந்தாங்கழிகுரக்குற்றதுபகருந்துணைநெடிதே
திரிந்தாரிருசுடரோடுலகொருமூன்றுடன்றிரிய. (௧௫௪)

பார்த்தானெடுந்தகைவீடணனுயிர்காலுறப்பயத்தால்
வேர்த்தானிதுவிலக்குந்துணையுளதோமுதல்வீர்
ஓர்த்தாவெனவழைத்தானதற்கிளங்கோளரிசிரித்தான்
போர்த்தாரடர்கவிவீரருமவன்றுணிழல்புகுந்தார். (௧௫௫)

அவையம்முனக்கவையம்மெனுமனையோரையுமஞ்சே
லவையம்முமக்களித்தோமெனத்தன்கைத்தலத்தமைத்தா
னுவையம்முறுமுலகின்பயமுணர்ந்தேனினியொழியேன்
சிவையன்மனமுடையான்படைதொடுப்பேனெனத்தெளிந்தான். (௧௫௬)

அப்பொற்படைமனத்தானினைந்தர்ச்சித்ததையழிப்பா
யிப்பொற்படைதனைமற்றொருதொழில்செய்கிலையென்றுத்
றுப்பொப்பதோர்கணைகூட்டினன்றுறந்தாளவைதடரா
வெப்பொற்படையெவையும்புகவிழுங்குற்றதொரிமைப்பின். (௧௫௭)

விண்ணார்த்ததுமண்ணார்த்ததுமேலோர்மணிமுரசின்
கண்ணார்த்ததுகடலார்த்ததுமழையார்த்ததுகலையோ
டெண்ணார்த்ததுகவியார்த்தனவிசையம்மெனவியம்பும்
பெண்ணார்த்தனளறமார்த்ததுபுறமார்த்ததுபெரிதால். (௧௫௮)

இறுகாலையினுலகியாவையுமவிப்பாணிகற்படையை
மறுகாவகைவலித்தானதுவாங்கும்படிவல்லான்
றெறுகாலனிற்கொடியோனுமற்றதுகண்டகந்திகைத்தான்
அறுகால்வயக்கவிவீரருமரியென்பதையறிந்தார். (௧௫௯)

தெய்வப்படைபழுதுற்றதுவெனக்கூசுதல்சிதையா
வெய்வித்தகமுறாதென்னிதுபிழையாதெனவிசையாக்
கைவித்தகமதனுற்சிலகணைவித்தினனவையு
மொய்வித்தகன்றடந்தோளினுநுதற்குட்டினுமூழ்க. (௧௬௦)

வெய்யோன்மகன்முதலாகியவிறலோர்மிகுதிறலோர்
கையோய்விலர்மலைமாரியினிருதக்கடல்கடப்பா
ருய்யாரெனவடிவாளிகள்சதகோடிகளுய்த்தான்
வெய்யோனயறவிகின்றதன்சிறுதாதையைவெறுத்தான். (௧௬௧)

வேறு.

முரட்டடந்தனுமேந்திமனிதரைமுனைநூறயக்குன்றிப்
பிரட்டரிற்புகழ்ந்துபேதையடியரிற்றொழுதுபின்சென்
றிரட்டுறுமுரசமென்னவிசைத்ததேயிசைக்கின்றனையப்
புரட்டிவன்றலையையின்றுபழியெனவொழிவன்போலாம். (௧௬௨)

விழிபடமுதல்வரெல்லாம்வெதும்பினரொதுங்கவிழ்ந்து
வழிபடவுலகமூன்றுமடிபடவந்ததேனு
மழிபடைதாங்கலாற்றுமாடவரியாண்டும்வெஃகாப்
பழிபடவந்தவாழ்வையாவரேபகரற்பாலார். (௧௬௩)

நீருளதனையுமுள்ளமீனெனநிருதரெல்லாம்
வேருளதளையும்வீவாரிராவணனோடுமீளா
ருருளதொருவனின்றாய்நீயுனையுறையமின்றே
டாருளாரக்கர்க்கிற்பாராசுவீற்றிருக்கவையா. (௧௬௪)

முந்தைநாளுலகந்தந்தமுந்தவானோர்கட்கெல்லாந்
தந்தையார்தந்தையாரைச்செருவிடைச்சாயத்தள்ளிக்
கந்தனார்தந்தையாரைக்கயிலையோடொருகைக்கொண்ட
வெந்தையாரரசுசெய்வதிப்பெரும்பலங்கொண்டேயோ. (௧௬௫)

பனிமலர்த்தவிசின்மேலோன்பார்ப்பனகுலத்துக்கெல்லாந்
தனிமுதற்றலைவனானவுன்னைவந்தமரர்தாழ்வார்
மனிதருக்கடிமையாய்நீயிராவணன்செல்வமாள்வா
யினியுனக்கென்னோமானமெய்களோடடங்கிற்றன்றே. (௧௬௬)

சொல்வித்தும்பழித்துறுங்கைமுக்கினைத்துணிவித்தோரா
லெல்வித்தும்படைக்கையுங்கடமையனையெங்களோடுங்
கொல்வித்துந்தோற்றுநின்றகூற்றினார்குலத்தையெல்லாம்
வெல்வித்தும்வாழும்வாழ்வின்பெருமையேவிழுமிதன்றே. (௧௬௭)

எழுதியேரணிந்தவிஞ்சோளிராவணனிராமனம்பாற்
புழுதியேபாயலாகப்புரண்டநாள்புரண்டுமேல்வீழ்ந்
தழுதியோநீயுங்கூடவார்த்தியோவிவனைவாழ்த்தித்
தொழுதியோயாதோசெய்யத்துணிந்தனைவிசயத்தோளாய். (௧௬௮)

ஊனுடையுடம்பினீங்கிமருந்தினாலுயிர்வந்தெய்து
மானிடரிலங்கைவேந்தைக்கொல்வரோநீயுமன்னான்
றானுடைச்செல்வந்துய்க்கத்தருதியேசாத்தினோடும்
வானிடைப்புகுதியன்றேயான்பழிமறுக்கிலென்றான். (௧௬௯)

அவ்வுரையமையக்கேட்டவீடணனலங்கன்மௌலி
செவ்விதிற்றுளக்கித்தன்பான்முறுவலுந்தெரிவதாக்கி
வெவ்விதுபாவஞ்சாலத்தருமமேவிழுமிதைய
வீவ்வுரைகேட்டியென்றுவினையனவிளம்பலுற்றான். (௧௭௦)

அறந்துணையாவதல்லாலருநரகமையநல்கு
மறந்துணையாகமாயாப்பழியொடும்வாழமாட்டேன்
துறந்திலேன்மெய்ம்மையெய்தும்பொய்ம்மையேதுறப்பதல்லாற்
பிறந்திலேனிலங்கைவேந்தன்பின்னவன்பிழைத்தபோதே. (௧௭௧)

உண்டிலனறவம்பொய்ம்மையுரைத்திலன்வலியாலொன்றுங்
கொண்டிலன்மாயவஞ்சங்குறித்திலனியாருங்குற்றங்
கண்டிலரென்பாலுண்டேனீயிருங்காண்டிரன்றே
பெண்டிரிற்றிறம்பினாரைத்துறந்தறுபிழையிற்றுமே. (௧௭௨)

மூவகையுலகமேத்துமுதலவனெவர்க்குமூத்த
தேவர்தந்தேவன்றேவிகற்பினிற்சிறந்துளாளை
நோவனசெய்தறிதென்றுரைப்பதுந்தாரைநீதிப்
போவெனவுரைக்கப்போந்தேனரகிற்பொருந்துவேனே. (௧௭௩)

வெம்மையிற்றருமநோக்காவேட்டதேவேட்டுவீயு
மும்மையேபுகழும்பூணத்துறக்கமுமுமக்கேயாக
செம்மையிற்பொருந்திமேலோரொழுக்கினோடுறத்தைத்தேறு
மெம்மையேபழியும்பூணநரகமுமெமக்கேயாக. (௧௭௪)

அறத்தினைப்பாவம்வெல்லாதென்றுமதறிந்துஞானத்
திறத்தினதுறமென்றெண்ணித்தேவர்க்குந்தேவைச்சேர்ந்தேன்
புறத்தினிற்புகழேயாகபழியொடும்புணர்கபோதச்
சிறப்பினிப்பெறுகதீர்கவென்றனன்சீற்றமில்லான். (௧௭௫)

பெருஞ்சிறப்பெல்லாமென்கைப்பிறைமுகப்பகழிபெற்று
லிருஞ்சிறப்பில்லையவெங்கினிப்போவையென்னாத்
தெருஞ்சிறைக்கலுழனன்னவொருகணைதொடுத்துச்செம்பொன்
உருஞ்சுடர்க்கழுத்தைநோக்கிநூக்கினானுருமின்வெய்யோன். (௧௭௬)

அக்கணையசனியென்னவன்றெனவாலமுண்ட
முக்கணான்சூலமென்னமுடுகியமுடிவைநோக்கி
யிக்கணத்திற்றுவிற்றுனென்கின்றவிமையோர்காணக்
கைக்கணையொன்றால்வள்ளலக்கணைகண்டங்கண்டான். (௧௭௭)

கோலொன்றுதுணிதலோடுங்கூற்றுக்குங்கூற்றமன்னான்
வேலொன்றுவாங்கிவிட்டான்வெயிலொன்றுவிழுவதென்ன
நாலொன்றுமூன்றுமானபுவனங்கணடுங்கலோடும்
நூலொன்றுவரிவிலானுமதனையுநுறுக்கிவீழ்த்தான். (௧௭௮)

வேல்கொடுநம்மேலெய்தானென்றொருவெகுளிபொங்கக்
கால்கொடுகாலிற்கூடிக்கைதொடர்கனகத்தண்டாற்
கோல்கொளுமொருவனோடுங்கொடித்தடந்தேரிற்பூண்ட
பால்கொளும்புரவியெல்லாம்படுத்தினான்றுடிப்புமாற. (௧௭௯)

அழிந்ததேர்மீதுநின்றானாயிரகோடியம்பாற்
பொழிந்தவன்றோளின்மேலுமிலக்குவன்புயத்தின்மேலு
மொழிந்தபேருரத்தின்மேலுமுதிரநீர்வாரியாக
வழிந்திழிந்தோடநோக்கியண்டமுமிரியவார்த்தான். (௧௮௰)

ஆர்த்தவனனையபோதினழிவிலாத்தேர்கொண்டன்றிப்
போர்த்தொழில்புரியலாகாதென்பதோர்பொருளையுன்னிக்
காத்தவரிமையாமுன்னம்விசும்பிடைக்கரந்தானென்னும்
வார்த்தையையிருந்திப்போனவிராவணன்மருங்குசென்றான். (௧௮௧)

நிகும்பலைப்படலம் - முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௦௯௧.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

---

௨௭ - வது — இந்திரசித்துவதைப்படலம்.

விண்ணிடைக்கரந்தானென்பார்வஞ்சனைவினைக்குமென்பார்
கண்ணிடைக்கலக்கநோக்கியையுறவுழக்குங்காலை
புண்ணிடையாக்கைச்செந்நீர்பிழிதரப்புக்குநின்ற
வெண்ணுடைமகனைநோக்கியிராவணனினையசொன்னான். (௧)

முடங்கியவேள்விமுற்றும்பெற்றிலாத்தொழிலின்றன்மை
லடங்கியவம்பேயென்னையறிவித்ததழிவிலியாக்கை
நடுங்கினைபோலச்சாலத்தளர்ந்தனைகலுழனண்ணப்
படங்குறையரவமொத்தாயுற்றதுபகர்தியென்றான். (௨)

சூழ்வினைமாயையெல்லாமும்பியேதுடைக்கச்சுற்றி
வேழ்வியைச்சிதையநூறிவெகுளியாலெழுந்துவீங்கி
யாழ்வினையாற்றலாற்றானமர்த்தொழிற்புக்குநின்றான்
றாழ்விலாப்படைகண்மூன்றுந்தொடுத்தனன்றடுத்துவிட்டான். (௩)

நிலஞ்செய்துவிசும்புஞ்செய்துநெடியவன்படைநின்றானை
வலஞ்செய்துபோவதானான்மற்றினிவலியதுண்டே
குலஞ்செய்தபாவத்தாலேகொடும்பழிதேடிக்கொண்டேஞ்
சலஞ்செயினுலகமூன்றுமிலக்குவன்முடிப்பன்றானே. (௪)

முட்டியசெருவின்முன்னமுதலவன்படையையென்மேல்
விட்டிலனுலகையஞ்சியாதலால்வென்றுமீண்டேன்
கிட்டியபோதுங்காத்தாரின்னமுங்கிளரவல்லார்ச்
சுட்டியவலியினாலேகோறலைத்துணிந்துநின்றார். (௫)

ஆதலாலஞ்சினேனென்றருளலையாசைதானச்
சீதைபால்விடுதியாயினனையவர்சீற்றந்தீர்ந்து
போதலும்புரிவார்செய்ததீமையும்பொறுப்பருன்மேற்
காதலாலுரைத்தேனென்றானுலகெலாங்கலக்கிவென்றான். (௬)

இயம்பலுமிலங்கைவேந்தனெயிற்றிளநிலவுதோன்றப்
புயங்களுங்குலுங்கநக்குப்போக்கினியொழிதல்போலா
மயங்கினைமனிதன்றன்னையஞ்சலைவருந்தலைய
சயங்கொடுதருவனின்றேமனிதனைத்தனுவொன்றாலே. (௭)

முன்னையோரிறந்தாரெல்லாமிப்பகைமுடிப்பரென்றும்
பின்னையோர்நின்றாரெல்லாம்வென்றவர்ப்பெயர்வரென்று
மின்னநீயவரைவென்றுதருதியென்றுணர்ந்துமின்று
லென்னையேநோக்கியானிற்கெடும்பகைதேடிக்கொண்டேன். (௮)

பேதைமையுரைத்தாய்மைந்தவுலகெலாம்பெயரப்போக்
காதையென்புகழினோடுநிலைபெறவமரர்காண
மீதெழுமொக்குளன்னயாக்கையைவிடுவதல்லாற்
சீதையைவிடுவதுண்டோவிருபதுதிண்டோளுண்டாய். (௯)

வென்றிலனென்றபோதும்வேதமுள்ளளவுமியானும்
நின்றுளனன்றேமற்றவிராமன்பேர்நிற்குமாகிற்
பொன்றுதலொருகாலத்துந்தவிருமோபொதுமைத்தன்றே
வின்றுளார்நாளைமாள்வர்புகழுக்குமிறுதியுண்டோ. (௧௦)

விட்டனன்சீதைதன்னையென்றலும்விண்ணோர்நண்ணிக்
கட்டுவதல்லாற்பின்னையானெனக்கருதுவாரோ
பட்டனனென்றபோதுமெளிமையிற்படுகிலேனா
னெட்டினோடிரண்டுமானதிசைகளையெறிந்துவென்றேன். (௧௧)

சொல்லியென்பலவுநீநின்னிருக்கையைத்தொடர்ந்துதோளிற்
புல்லியபகழிவாங்கிப்போர்த்தொழிற்சிரமம்போக்கி
யெல்லியுங்கழித்தியென்னாவெழுந்தனனெழுந்துபேழ்வாய்
வல்லியமுனிந்தாலன்னான்வருகதேர்வருகவென்றான். (௧௨)

எழுந்தவன்றன்னைநோக்கியிணையடியிறைஞ்சியெந்தா
யொழிந்தருள்சிற்றஞ்சொன்னவுறுதியைப்பொறுத்தியானே
கழிந்தனனென்றபின்னர்நல்லவாகாண்டியென்னா
மொழிந்தனன்றெய்வத்தேர்மேலேறினான்முடியலுற்றான். (௧௩)

படைக்கலவிஞ்சைமற்றும்படைத்தனபலவுந்தன்பா
லடைக்கலமாகத்தேவரளித்தனவெல்லாம்வாங்கிக் [னைக்
கொடைத்தொழில்வேட்டோர்க்கெல்லாங்கொடுத்தனன்கொடியோன்றன்
கடைக்கணானோக்கிநோக்கியிருகணீர்கலுழப்போனான். (௧௪)

இலங்கையினிருதரெல்லாமழிந்தனர்விளைவினெய்தி
விலங்கலந்தோளநின்னைப்பிரிகலம்விளிதுமென்ன
வலங்கொடுதொடர்ந்தார்தம்மைமன்னனைக்காமின்யாதுங்
கலங்கலீரினிமேற்சென்றுமனிதரைக்கடப்பேனென்றான். (௧௫)

வணங்குவார்வாழ்த்துவார்தன்வடிவினைநோக்கித்தம்வா
யுணங்குவாருயிர்ப்பாருள்ளமுருகுவார்வெருவலுற்ற
கணங்குழைமகளிரீண்டியிரைத்தவர்கடைக்கணென்று
மணங்குலடநெடுவேல்பாயுமமர்க்கடந்தரிதிற்போனான். (௧௬)

யினவின்றுறுகவிலக்குவனெடுத்தவில்லான்
சேயிருவிசும்பைநோக்கிவீடணநீயோனப்பாற்
போயினனுதல்வேண்டும்புரிந்திலனென்றுமென்பா
ஆயிரம்புரவிபூண்டதேரின்பேரரவங்கேட்டான். (௧௭)

வேறு.

குன்றிடைநெரிதரவடவரையின்குவடுருள்குவதெனமுடுகுதொறும்
பொன்றிணிகொடியனதிடியுருமினதிர்குரன்முரல்வதுபுனைமணியின்
மின்றிரள்சுடராகடல்பருகும்வடவனல்வெளியுறவருவதெனச்
சென்றதுதிசைதிசையுலகிரியத்திரிபுவனமுழுதுதனியிரதம். (௧௮)

கடன்மறுகிடவுலகிடையநெடுங்கதிரிரிதரவெதிர்கவிகுலமுங்
குடர்மறுகிடவுலகுலையநெடுங்குழியொடுகிழிபடவழிபடரும்
இடமறுகியபடிமுடுகிடலும்மிருளுளதெனவெழுமிகலாவின்
படமறுகிடவெதிர்பரவியவண்பகலிருள்வருவனபகையிரதம். (௧௯)

ஆர்த்தனநிருதர்தமனிகமுடனமாரும்வெருவினர்கவிகுலமும்
வேர்த்தனவெருவலொடலம்வரலால்விடுகணைசிதறினனடுதொழிலோன்
தீர்த்தனுமவனெதிர்முடுகிநெடுந்திசைசெவிடெறிதரவிசைகெழுதிண்
போர்த்தொழில்புரிதலுமுலகநெடும்புகையொடுசிகையனல்பொதுளியதால்

வீடணனமலனைவிறல்கெழுபோர்விடலையையினியிடைவிடலுளதேற்
கூடலையுறுமலர்வாகையெனத்தொழுதனனவளவிலமுகனுமக்
கோடணைவரிசிலையுலகுலையக்குலவரைபிதிர்படநிலவரையிற்
சேடனும்வெருவுறவுருமுறழ்திண்டெறுகணைமுறைமுறைசிதறினனால். (௨௧)

ஆயினவளவையினன்முகவாயடுகணையவன்விடவிவன்விடலுந்
தீயுறுமெரிவனவுயிர்பருகச்சிதறினகவிகளோடினர்நிருதர்
போயினதிசைதிசையனவிறையப்புரள்பவர்முடிவிலர்பொருதிறலோ
ரேயினவொருவனையொருவர்குறித்தெரிகணையிருமழைபொழிவனபோல்.

அற்றனவனல்விழிநிருதன்வழங்கடுகணையிடையிடையடலரியின்
கொற்றவன்விடுகணைமுடுகியவனுடல்பொதிகுருதிகள்பருகினகொண்
டுற்றனவொளிகிளர்கவசநுழைந்தறுகிலதெறுகிலவனுமனுடற்
புற்றிடையரவெனநுழையநெடும்பொருசரமவனவையுணர்கிலனால். (௨௩)

ஆயிடையிளையவன்விடுகணைவானவனிடுகவசமுமழிவுபடத்
தூயினனயின்முகவிசிகநெடுந்துகள்படவிழிகனல்சொரியமுனிந்
தேயினனிருதனதெரிகணைதானிடனிலபடுவனவிடையிடைவந்
தோய்வுறுவனவதுதெரிவுறலாவுரதினரிமையவருவகையினால். (௨௪)

வில்லினின்வலிதாவரிதெனலால்வெயிலினுமனலுமிழயில்விளைவிற்
செல்லெனமிடல்கொடுகடவினன்மற்றதுதிசைமுகன்மகனுதவியதா
லெல்லினும்வெளிபடவெதிர்வதுகண்டிளையவனெழுவகைமுனிவர்கடஞ்
சொல்லினும்வலியதொர்சுடுகணையானடுவிருதுணிபடவுரதினனால். (௨௫)

ஆணியினிலையெனவிசிகநுழைந்தாயிரமுடல்புகவழிபடுசெஞ்
சோணிதநிலமுறவுலறிடவுந்தொடுகணைவிடுவனமிடல்கெழுதிண்
பாணிகள்கடுகினமுடுகிடலும்பகலவன்மருமகனடுகணையிற்
றூணியையுருமுறழ்பகழிகளாற்றுணிபடமுறைமுறைசிதறினனால். (௨௬)

தேருளதெனினிவன்வலிதலையானெனுமதுதெரிவுறவுணருறுவான்
போருறுபுரவிகள்படுகிலவாற்புனைபிணிதுணிகிலபொருகணையாற்
சீரிதுபெரிதிதனிலைமையெனத்தெரிபவனொருசுடுதெறுகணையாற்
சாரதிமலைபுரைதலையைநெடுந்தரையிடையிடுதலுநிலைதிரிய. (௨௭)

வேறு.

உய்வினையொருவன்றூண்டாலுலத்தலிற்றவத்தைநண்ணி
மையவினைநலியநைவானறிவிற்குமுவமையாகி
மெய்வினையமைந்தகாமம்விற்கின்றவிரகிற்றேலாப்
பொய்வினைமகளிர்கற்பேபோன்றதப்பொலம்பொற்றிண்டேர். (௨௮)

துள்ளுபாய்புரவித்தேருமுறைமுறைதானேதூண்டி
யள்ளினன்பறிக்குந்தன்பேராகமேயாவமாக
வள்ளன்மேலனுமன்றன்மேன்மற்றையோர்மற்றிண்டோண்மே
லுள்ளுறப்பகழிதூவியார்த்தனனெவருமுட்க. (௨௯)

வீரரொன்பார்கட்கெல்லாமுன்னிற்கும்வீரர்வீரன்
பேரரொன்பார்களாகும்பெற்றியிற்பெற்றிற்றாமே
சூரரொன்றுரைக்கற்பாலார்துஞ்சும்போதுணர்விற்சோரார்
தீரரொன்றமரர்பேசிச்சிந்தினர்தெய்வப்பொற்பூ. (௩௦)

எய்தவன்பகழியெல்லாம்பறித்தவனென்மேலெய்யுங்
கைதடுமாறுதுள்ளமுயிரினங்கலங்காயாக்கை
மொய்கணைகோடிகோடிமொய்க்கவுமிளைப்பொன்றில்லா
ஐயனுமிவனோடெஞ்சுமாண்டொழிலாற்றலென்றான். (௩௧)

தேரினைக்கடாவிவானிற்செல்லினுஞ்செல்லுஞ்செய்யும்
போரினைக்கடந்துமாயம்புணர்க்கினும்புணர்க்கும்போயக்
காரினைக்கடந்துவஞ்சங்கருதினுங்கருதுங்காண்டி
வீரமெய்ப்பகலினல்லால்விளிகிலனிருளின்வெய்யோன். (௩௨)

என்றெடுத்திலங்கைவேந்தற்கிளையவனியம்பவன்னோ
பொன்றுவதல்லாலப்பாலினியொருபோக்குமுண்டோ
சென்றுழிச்செல்லுமன்றேதெறுகணைவலியிற்றீர்ந்தால்
வென்றியிப்போதேகோடுங்காணெனவிளம்புமெல்லை. (௩௩)

செம்புனற்சோரிச்செக்கர்திசையுறச்செறிகையாலு
மம்பெனவுற்றகொற்றத்தாயிரங்கதிர்களாலும்
வெம்புபொற்றேரிற்றோன்றுஞ்சிறப்பொடுமரக்கன்வெய்யோ
னும்பரிற்சென்றோனொடொத்துதித்தனனருக்கனப்பால். (௩௪)

வெடிந்ததுபொழுதும்வெய்யோன்விளங்கினனுலகமீதா
விடுஞ்சுடர்விளக்கமென்னவாக்கராயிருளும்வீயக்
கொடுஞ்சினமாயச்செய்கைவலியொடுங்குறைந்துகுன்ற
முடிந்தனனரக்கனென்றுமுழங்கினருமபர்முற்றும். (௩௫)

ஆழியாதகுலத்தர்தனையருளினீந்த
தேரழியாதபோதுஞ்சிலைகரத்திருந்தபோதும்
போரழியானிவ்வெய்யோன்புகழழியாதபொற்றோள்
வீரவிதானையென்றான்வீடணன்விளைவதோர்வான். (௩௬)

பச்சைவெம்புரவிவீயாப்பல்லியற்சில்லிபாரி
னிச்சயமற்றவீங்காவென்பதைநினைந்துவில்லின்
விச்சையின்கணவனானான்வன்மையால்வயிரமிட்ட
வச்சிரேடாழிவெவ்வேறாக்கினானிநீக்கி. (௩௭)

மணிநெடுந்தேரின்றட்டுவிட்டதுமறிதலோடு
மணிநெடும்புரவியெல்லாமாற்றலவாயவன்றே
திணிநெடுமரமொன்றாழிவான்மழுத்தாக்கச்சிந்திப்
பணைநெடுமுதலுநீங்கிப்பாங்குறுபறவைபோல. (௩௮)

அழிந்ததேர்த்தட்டினின்றுமங்குள்ளபடையையள்ளிப்
பொழிந்தனனினையவள்ளல்கணைகளாற்றுணித்துப்போக்க
மொழிந்திருவகையில்விண்ணைமுட்டினனுலகமூன்றுங்
கிழிந்தனவென்னவார்த்தான்கண்டிலரோசைகேட்டார். (௩௯)

மல்லின்மாமாரியன்னதோளினன்மழையின்வாய்ந்த
கல்லின்மாமாரிபெற்றவரத்தினற்சொரியுங்காலைச்
செல்லுவான்றிசைகளோராச்சிரத்தினேடுடல்கள்சிந்திப்
புல்லினர்நிலத்தைநின்றுவானரவீரர்போகார். (௪0)

காண்கிலகல்லின்மாரியல்லதுகாலைவீரன்
சேண்கலந்தொளித்துநின்றசெய்கையாற்றிசைகளெங்கு
மாண்கலந்தளந்தமாயன்வடிவெனமுழுதும்வவ்வி
யேண்கலந்தமைந்தவாளியேவினனிடைவிடாமல். (௪௧)

மறைந்தனதிசைகளெங்குமாறுபோய்மலையுமாற்றல்
குறைந்தனவிருண்டமேகக்குழாத்திடைக்குருதிக்கொண்மூ
வுறைந்துளதென்னநின்றானுருவினையுலகமெல்லாம்
நிறைந்தமன்கண்டான்காணுவினையதோர்நினைவதானான். (௪௨)

சிலையறுதெனினுமற்றத்திண்ணியோன்றிரண்டதோளா
மலையறுதொழியாதென்றுவரிசிலையொன்றுவாங்கிக்
கலையறுத்திங்களன்னவாளியாற்கையைக்கொய்தான்
விலையறுமணிப்பூணேடும்வில்லொடுநிலத்துவீழ. (௪௩)

பாகவான்பிறைபோல்வெவ்வாய்ச்சுடுகணைபடுதலோடும்
வேகவான்கடுங்காலெற்றமுற்றும்போய்விளிந்தநாளின்
மாகவான்றடக்கைமண்மேல்விழுந்ததுமணிப்பூண்மின்ன
மேகமாகாயத்திட்டவில்லொடும்வீழ்ந்ததென்ன. (சச)

படித்தலஞ்சுமந்தநாகம்பாகவான்பிறையைப்பற்றிக்
கடித்ததுபோலக்கோலவிரல்களாலிறுகக்கட்டிப்
பிடித்தவெஞ்சிலையினோடும்பேரெழில்வீரன்பொற்றோ
டுடித்ததுமரமுங்கல்லுந்துகள்படக்குராங்குஞ்ச. (சரு)

அந்தரமருவினின்றவானவரருக்கன்வீழாச்
சந்திரன்வீழாமேருமால்வரைதகர்ந்துவீழா
விந்திரசித்தின்பொற்றோளிற்றிடைவிழுந்ததென்று
லெந்திரமனையவாட்கையினிச்சிலருவந்ததென்றார். (சசா)

மொய்யறமூர்த்தியன்னமொய்ம்பினனம்பினாலப்
பொய்யறச்சிறிதென்றெண்ணும்பெருமையான்புதல்வன்பூத்த
மையறக்கரிதென்றெண்ணுமிறத்தினன்வயிரமன்ன
கையறத்தலையற்றார்போற்கலங்கினார்நிருதர்கண்டார். (சஎ)

அன்னதுநிகழும்வேலையார்த்தெழுந்தரியின்வெள்ள
மின்னெயிற்றரக்கர்சேனையாவருமீளாவண்ணங்
கொன்னகக்கரத்தாற்பல்லான்மரங்களான்மானக்குன்றாற்
பொன்னெடுநாட்டையெல்லாம்புதுக்குடியேற்றிற்றன்றே. (சஅ)

காலங்கொண்டெழுந்தமேகக்கருமையான்செம்மைகாட்டு
மாலங்கொண்டிருண்டகண்டத்தமரர்கோனருளிற்பெற்ற
சூலங்கொண்டெறிவனென்றுதோன்றினன்பகையின்றேற்ற
மூலங்கொண்டுணராவின்னைமுடித்தன்றிமுடியேனென்றான். (சக)

காற்றெனவுருமேறென்னக்கனலெனக்கடாநாளுற்ற
கூற்றெனவுருவுகொண்டுகுறுகியதென்னக்கொல்வான்
றோற்றினனதனைக்காணுவிளித்தலைதணிக்குங்கால
மேற்றதென்றயோத்திவேந்தற்கிளையவனிதனைச்செய்தான். (ரு0)

மறைகளேதேறத்தக்கவேதியர்வணங்கற்பால
விறையவனிராமனென்னுநல்லறமூர்த்தியென்னிற்
பிறையெயிற்றிவனைக்கோறியென்றொருபிறைவாய்வாளி
நிறையுறவாங்கிவிட்டானுலகெலாநிறுத்தநின்றான். (ருக)

நேமியுங்குலிசவேலும்வாயுவுநெருப்புக்கண்ணா
னுமவேலுமற்றைநான்முகன்படையுநாணத்
தீமுகங்கதுவவோடிச்சென்றவன்சிரத்தைத்தள்ளிப்
பூமழைமாரிசிந்தப்பொலிந்ததப்பகழிப்புத்தேள். (ருஉ)

அற்றவன்றலைநீடோங்கியண்டமுற்றணுகாமுன்னம்
பற்றியகுலத்தோடுமுடனிறைபகழியோடு
மெற்றியகாலக்காற்றுன்மின்னொடுமிடியினோடுஞ்
சுற்றியபுயல்வீழ்ந்தென்னவிழ்ந்ததுசோர்வியாக்கை. (ருங)

விண்டலத்திலங்குதிங்களிரண்டொடுமின்னுவீசுங்
குண்டலத்துணைகளோடுங்கொந்தளக்குஞ்சிச்செய்கட்
சண்டவெங்கதிரோன்செக்கர்த்தழலொடுமருவித்தாம
மண்டலம்விழுந்ததென்னவிழுந்ததுதலையுமண்மேல். (ருச)

உயிரிறப்புக்ககாலையுண்ணின்றவுணர்வினோடுஞ்
செயிரறுபொதியுமந்தக்கரணமுஞ்சிந்துமாபோ
லயிலெயிற்றரக்கருள்ளாராற்றலராகியான்ற
வெயிலுடையிலங்கைநோக்கியிரிந்தனர்படையும்விட்டார். (ருரு)

வில்லாளராணர்க்கெல்லாமேலவன்விளிதலோடுஞ்
செல்லாதவ்விலங்கைவேந்தற்கரசெனக்களித்ததேவ
ரொல்லாருந்துசுநீக்கியேறிடவார்த்தபோது
கொல்லாதவிரதத்தார்தங்கடவுளர்கூட்டமொத்தார். (ருசு)

வரந்தருமுதல்வன்மற்றைமான்மதிக்கரத்துவள்ளல்
புரந்தரன்முதல்வராயவான்மறைப்புலவர்பாரி
னிரந்தரந்தோன்றிநின்றாரருளினுனிறைந்தநெஞ்சர்
கரந்திலரவனையாக்கைகண்டனருராங்குங்கண்ணால். (ருஎ)

அறந்தலைநின்றார்க்கில்லையழிவெனுமறிஞர்வார்த்தை
சிறந்ததுசரங்கள்பாயச்சிந்தியசிரத்தராகிப்
பறந்தலையதனின்மற்றப்பாதகவரக்கன்கொல்ல
விறந்தனகவிகளெல்லாமெழுந்தனவிமையோரோத்த. (ருஅ)

ஆக்கையினின்றுவீழ்ந்தவரக்கன்றன்றலையையங்கை
தூக்கினனுள்ளங்கூர்ந்தவாலிசேய்துசுசெல்ல
மேக்குயர்ந்தமரர்வெள்ளமள்ளியேதுடர்ந்துவீசும்
பூக்கிளர்பந்தர்நீழலனுமன்மேலிளவல்போனான். (ருகூ)

வீங்கியதோளன்றேய்ந்துமெலிகின்றபழியன்மேன்மே
லோங்கியவுவகையூதுமுள்ளத்தனும்பர்க்காகத்
தேங்கியகடலைமுன்னாட்டிரித்தவன்சேய்செங்கையாற்
றூங்கியகுருசில்பற்றிக்கொணர்ந்திடுந்தலையைக்கண்டான். (சுO)

எல்லிவான்மதியினுற்றகறையெனவென்மேல்வந்து
புல்லியவடுவும்போகாதென்றகம்புலம்புகின்றேன்
சொல்லியதருமனல்கத்துவக்கற்றுத்துயரந்தீர்ந்தேன்
செல்வமும்பெறுதற்குண்டோகுறையினிச்சிறுமையாதோ. (சுக)

தென்றலையாழிசூழ்ந்ததிண்மதிலிலங்கைகாக்கும்
புன்றலைக்கள்வன்பெற்றபுதல்வனையிளவல்வீழ்த்த
வின்றலையெடுத்துநீமுன்வருதலால்வானரேச
வென்றலையெடுக்கலானேனினிக்குடையெடுப்பனென்றான். (௯௨)

வான்றலையெடுக்கவேலைமண்டலையெடுக்கவானோர்
கோன்றலையெடுக்கவேதக்குலத்தலையெடுக்கக்குன்றாத்
தேன்றலையெடுக்குந்தாராய்தேவரைவென்றான்றீய
னூன்றலையெடுத்தாய்நீயென்றுரைத்தனருவகைமிக்கார். (௯௩)

வரதன்போய்மருகாநின்றமனத்தினன்மாயத்தோனைச்
சாதம்போர்வென்றுமீளுந்தருமமேதாங்கவென்பான்
விரதம்பூண்டுயிரினோடுந்தன்னுடைமீட்சிநோக்கும்
பரதன்போன்றிருந்தான்றம்பிவருகின்றபரிசைப்பார்த்தான். (௯௪)

வன்புலங்கடந்துமீளுந்தம்பிமேல்வைத்தமாலைத்
தன்புலநயனமென்னுந்தாமரைசொரியுந்தாரை
யன்புகொலமுகணீர்கொலானந்தவாரியேகொ
லென்புகளுருகிச்சோருங்கருணைகொலியாரதோர்வார். (௯௫)

விழுந்திழிகண்ணினீருமுவகையுங்களிப்பும்விங்க
வெழுந்தெதிர்வந்தவீரனிணையடிமுன்னரிட்டான்
கொழுந்தெழுஞ்செக்கர்க்கற்றைவெயில்விடவெயிற்றின்கூட்ட
மழுந்துறமடித்தபேழ்வாய்த்தலையடியிறையொன்றாக. (௯௬)

தலையினைநோக்குந்தம்பிகொற்றவைதழீஇயபொற்றோண்
மலையினைநோக்குநின்றமாருதிவலியைநோக்குஞ்
சிலையினைநோக்குந்தேவர்செய்கையைநோக்குஞ்செய்த
கொலையினைநோக்குமொன்றுமுரைத்திலன்களிப்புக்கொண்டான். (௯௭)

காளமேகத்தைச்செக்கர்கலந்தெனக்கரியகுன்ற
நாள்வெயிற்பரந்ததென்னநம்பிதன்றம்பிமார்பிற்
றோளின்மேலுதிரச்செங்கேழ்ச்சுவடுதன்னுருவிற்றோன்றத்
தாளின்மேல்வணங்கினானைத்தழுவினன்றனித்தொன்றில்லான். (௯௮)

வேறு.

கம்பமதத்துக்களியானைக்காவற்சனகன்பெற்றெடுத்த
கொம்புமென்பாலினிவந்துகுறுகினாளென்றெனக்குளிர்ந்தேன்
வம்புசெறிந்தமலர்க்கோயின்மறையோன்படைத்தமாநிலத்திற்
றம்பியுடையான்பகையஞ்சானென்னுமாற்றந்தந்தனையால். (௯௯)

வேறு.

தூக்கியதூணிவாங்கித்தோளொடுமார்பைச்சுற்றி
வீக்கியகவசபாசமொழித்ததுவிரைவினீக்கித்
தாக்கியபகழிக்கூர்வாய்தடிந்தபுண்டழும்புமின்றிப்
போக்கினன்றழுவிப்பல்காற்பொற்றடந்தோளினொற்றி. (௱)

ஆடவர்திலகநின்னாலன்றிகலனுமனென்றாய்
சேடனாலன்றுவேறோர்தெய்வத்தின்சிறப்புமன்று
வீடணன்றந்தவெற்றியீதெனவிளம்பிமெய்ம்மை
யேடவிழலங்கன்மார்பனிருந்தனனினிதினிப்பால். (௭௧)

இந்திரசித்துவதைப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௯௨.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

---

௨௮ - வது — இராவணன்சோகப்படலம்.

ஓதரோதமர்வேலைகடந்தராய்ப்
பூதரோதரம்புக்கெனப்போர்த்திழி
சீதரோதக்குருதித்திரையொரீஇத்
தூதரோடினர்தாதையிற்சொல்லுவார். (௧)

அன்றிலங்கரும்பேடைகளாமென
முன்றிலெங்குமரக்கர்மொய்த்தெழ
வின்றிலங்கையழிந்ததென்றேங்குவார்
சென்றிலங்கையிற்றுறையிற்சேர்ந்துளார். (௨)

பல்லும்வாயுமனமுந்தன்பாதமு
நல்லுயிர்ப்பொறையோடுநடுங்குவா
ரில்லையாயினனுன்மகனின்றெனச்
சொல்லினார்பயஞ்சுற்றத்துளங்குவார். (௩)

மாடிருந்தவர்வானவர்மாதவ
ராடனுண்ணிடையார்மற்றுமியாவரும்
வீடுமின்றிவ்வுலகெனவிம்முவா
ரோடியெங்கணுஞ்சிந்தியொளித்தனர். (௪)

அடர்க்கொழும்புகைதீவிழிதூண்டிடத்
தடக்கைவாளுருவித்தருந்தூதரை
மிடற்றுவிசையுருவிழுந்தாரரோ
கடற்பெருந்திரைபோற்காஞ்சோரவே. (௫)

வாய்ப்பிறந்தழுமுயிர்ப்புவளர்ந்தவன்
காய்ப்புலத்தொழுங்கண்ணிடைக்காந்தியும்
போய்ப்பிறந்திவ்வுலகைப்பொதியும்வெந்
தீய்ப்பிறந்துளதின்றெனச்செய்ததால். (௬)

படம்பிறங்கியபாந்தளும்பாரும்போ
னிடம்பிறங்கிவலம்பெயர்ந்திடுற
வுடம்பிறங்கிக்கிடந்தழைத்தோக்குதி
மிடம்பிறந்தகடலெனவெம்பினன். (௭)

திருகுவெஞ்சினத்திகல்சீற்றமும்
பெருகுகாதலுமன்பும்பிறங்கிட
விருபதென்னுமெரிபுரைகண்களு
முருகுசெம்பெனவோடியவூற்றுநீர். (அ)

கடித்தபற்குலங்கற்குலங்கண்ணுற
விடித்தகாலத்துருமெனவெங்கனல்
மடித்தகைத்தலமம்மலையாழிநீர்
பொடிந்தவாய்தொறும்பொங்கினமீச்செல. (௯)

மைந்தவோவெனுமாமகனேயெனு
மெந்தையோவெனுமென்னுயிரோவெனு
முந்தினேனுனைநானுளனோவெனும்
வெந்தபுண்ணிடைவேல்பட்டவெம்மையான். (௧௦)

புரந்தரன்பகைபோயிற்றன்றோவெனு
மரந்தைவானவரார்த்தனரோவெனுங்
கரந்தைசூடியும்பாற்கடற்கள்வனு
நிரந்தரம்பகைநீங்கினரோவெனும். (௧௧)

நீறுபூசியுநேமியுநீங்கினார்
மாறுகுன்றொடுவேலைமறந்துளா
ருறுநீங்கினராயுவணத்தினோ
டேறுமேறியுலாவுவவென்னுமால். (௧௨)

வானமானமும்வானவரீட்டமும்
போனபோனதிசையிடம்புக்கனர்
தானமானவைசார்கிலர்சார்குவ
ரூனமானிடர்வென்றிகொண்டோவெனும். (௧௩)

கெட்டதூதர்கிளர்த்தினவாறொரு
கட்டமானிடன்கொல்லவென்காதலன்
பட்டொழிந்தனனேயெனும்பன்முறை
விட்டழைக்குமுழைக்கும்வெதும்புமால். (௧௪)

எழுமிருக்குமிளைக்குமிரக்குமுற்
றழுமரற்றுமயர்க்கும்வியர்க்கும்போய்
விழும்விழிக்குமுகிட்குந்தன்மேனியை
யுழுநிலத்தையுருளும்புரளுமால். (௧௫)

ஐயனேயெனுமோர்தலையானினஞ்
செய்வனேயரசென்னுமங்கோர்சிரங்
கையனேயுனைக்காட்டிக்கொடுத்தநா
னுய்வனேயென்றுரைக்குமங்கோர்சிரம். (௧௬)

எழுவிற்கோலமொழுகியலைகளாற்
றழுவிக்கொள்கலையென்றுமங்கோர்தலை
யுழுவைப்போத்தையுழையுயிருண்பதே
செழுவிற்சேவகனேயெனுமோர்சிரம். (கஎ)

நிலங்காட்டியகண்டனுநேமியு
மேலுங்காட்டினெதிர்ந்தபடையெலாந்
தோலுங்காட்டித்துரந்தனைமீண்டினின்
றோலங்காட்டிலையோவெனுமோர்சிரம். (கஅ)

காகமாடுகளத்திடைக்காண்பனோ
பாதசாதன்மௌலியொடும்பரித்
தோகைமாதவருச்சியின்வைத்தநின்
வாலைகாண்மலொன்றுமற்றோர்தலை. (கக)

சேலையற்கணியக்கர்தந்தேவிமார்
மேலினிந்தவிர்கிற்பர்கொல்வீரநின்
கோலவிற்குரல்கேட்டுக்குலுங்கித்தந்
தாலியைத்தொடலென்றுமற்றோர்தலை. (உ௦)

கூற்றமுன்னெதிர்வந்துயிர்கொள்வதோ
ருற்றந்தானுடைத்தன்றெனையும்மொழித்
தேற்றவெவ்வுலகுற்றனையெல்லையி
லாற்றலாயென்றழைக்குமங்கோர்தலை. (உக)

இன்னவாறழைத்தேங்குகின்றனெழுந்
துன்னுமாத்திரத்தோடினனூழிநாட்
பொன்வின்வானன்னபோர்க்களம்புக்கன
னன்மகன்றனதாக்கையைநாடுவான். (உஉ)

தேவரோமுதலாகியசேவகர்
யாவரும்முடனேதுடர்ந்தேகினர்
மூவகைப்பேருலகும்முறைமையும்
ஏவதாகுமென்றெண்ணியிரங்குவார். (உ௩)

அழுதவாற்சிலவன்பினர்போன்றடி
தொழுதவாற்சிலதுங்கினவாற்சில
வழுதவானைப்பிணம்புக்கொளித்தவாற்
கழுதும்புள்ளுமரக்கலைக்காண்டலும். (உ௪)

கோடிகோடிகுதிரையின்கூட்டமு
மாடல்வென்றியரக்கர்தமாக்கையு
மோடையானையுந்தேருமுருட்டியோ
டினான்றன்மகனுடனுளெலாம். (உ௫)

மெய்கிடந்தவிழிவழிநீருக
நெய்கிடந்தகனல்புரைநெஞ்சினன்
மொய்கிடந்தசிலையொடுமூரிமாக்
கைகிடந்ததுகண்டனன்கண்களால். (உசு)

பொங்குதோள்வளையும்பொழிபுட்டிலோ
டங்கதங்களுமம்புமிலங்கிட
வெங்கணகமெனப்பொலிமெய்யதைச்
செங்கையாலெடுத்தான்சிரஞ்சேர்த்தினன். (உஎ)

கற்றின்மார்பிற்றழுவுங்கழுத்தினிற்
சுற்றுஞ்சென்னியிற்சூட்டுஞ்சுழல்கணே
டொற்றுமோர்ந்திட்டுருகுமுளைக்குமால்
முற்றநாளின்விடுநெடுமூச்சினன். (உஅ)

கைகண்டான்பின்கருங்கடல்கண்டன
மெய்கண்டானதன்மேல்விழுந்தானரோ
பெய்கண்டாரையருவிப்பெருந்திரை
மொய்கண்டார்திரைவேலையைமூடவே. (உகூ)

அப்புமாரியழுத்திமமார்பைத்த
னப்புமாரியழுத்தியவாக்கையி
னப்புமாரினணைக்குமரற்றுமா
லப்புமானுற்றதியாவருற்றாரரோ. (ஙo)

பறிக்குமார்பிற்பகழியைப்பன்முறை
முறிக்குமூர்ச்சிக்குமோக்குமுயங்குமா
லெறிக்கும்வெங்கதிரோடுலகேழையுங்
கறிக்கும்வாயிலிட்டின்றெனக்காந்துவான். (ஙக)

தேவரோடுமுனிவருஞ்சீரியோ
ரேவரோடுமிடமின்றிநின்றவன்
மூவரோடுமுலகொருமூன்றுடன்
போவதேகொன்முனிவெனும்பொம்மலான். (ஙஉ)

கண்டிலன்றலைகாந்தியமானிடர்
கொண்டிறந்தனரொன்பதுகொண்டவன்
புண்டிறந்தனநெஞ்சன்பொருமலன்
விண்டிறந்திடவிம்மியரற்றினன். (ஙங)

வேறு.

நிலையுமாதிரத்துநின்றயானையுநெற்றிக்கண்ணன்
மலையுமேயெளியவென்னுன்மனிதர்க்குமெலிந்தமைந்தன்
றலையுமோருயிருங்கொண்டாரொனவுடலோடுந்தாங்கிப்
புலையனேனின்னுமாவிசுமக்கின்றேன்போலும்போலும். (ஙச)

எரியுணவளகைமுன்னாளிந்திரனிருக்கையெல்லாம்
பொரியுணவுலகமூன்றும்பொதுவறப்புரந்தேன்போலா
மரியுறுமலங்கன்மௌலியிழந்தவென்மதலையாக்கை
நரியுணக்கண்டேனானினுயிருமுணர்வுமுன்றால். (௩௫)

பூண்டொருபகைமேற்புக்கென்புத்திரரோடும்போனார்
மீண்டிலர்விளிந்துவிழ்ந்தார்விரதியரிருவரோடு
மாண்டனகுரங்குமொன்றுமமர்க்களத்தாருமின்ன
மாண்டிலரினிமற்றுண்டோவிராவணன்வீரவாட்கை. (௩௬)

கந்தர்ப்பரியக்கர்சித்தரரக்கர்தங்கன்னிமார்கள்
சிந்தொக்குஞ்சொல்லினாருன்றேவியர்திருவினல்லார்
வந்துற்றெங்கணவன்றன்னைக்காட்டென்றுமருங்குவீழ்ந்தா
லந்தொக்கவாற்றவோநான்கூற்றையுமாடல்கொண்டேன். (௩௭)

னைத்தொடுங்கொற்றமுற்றவிந்திரன்செல்வமேவ
நினைத்ததுமுடித்தின்றேனேரிழையொருத்திநீரா
லெனக்குநீசெய்யத்தக்கடனெலாமேங்கியேங்கி
யுனக்குநான்செய்வதானேனென்னின்யாருலகத்துள்ளார். (௩௮)

என்பனபலவும்பன்னியெடுத்தழைத்திரங்கியேங்கி
யன்பினன்மகனைத்தாங்கியரக்கியராற்றிவீழப்
பொன்புனைநகரம்புக்கான்கண்டவர்புலம்பும்பூச
லொன்பதுதிக்குமற்றையொருதிக்குமுற்றதன்றே. (௩௯)

கண்களைச்சூர்கின்றாருங்கழுத்தினைத்தடிகின்றாரும்
புண்கொளத்திறந்துமார்பினீரலைப்போக்குவாரும்
பெண்கள்புக்கலம்புகாவையுயிரொடுபிடுங்குவாரு
மெண்களிற்பெரியவாற்றாரிருந்துயர்பொறுக்கலாற்றார். (௪௦)

மாதிரங்கடந்ததிண்டோண்மைந்தன்றன்மகுடச்சென்னி
போதலைப்புரிந்தயாக்கைபொறுத்தனன்புகுதக்கண்டா
ரோதநீர்வேலையன்னகண்களாலுகுத்தவெள்ளக்
காதனீரோடியாடற்கருங்கடன்மடுத்ததன்றே. (௪௧)

ஆவியாளினியகாதலரக்கியர்முதல்வராய
தேவியர்குழாங்கள்சுற்றிச்சிரத்தின்மேற்றளிர்க்கைசேர்த்தி
யோவியம்வீழ்ந்துவிழ்ந்துபுரள்வனவொப்பவொல்லைக்
கோவியல்கோயிற்புக்கான்குருதிநீர்க்குமிழிக்கண்ணான். (௪௨)

கருங்குழற்கற்றைப்பாரங்காலுடக்கமலப்பூவாற்
குரும்பையைப்புடைக்கின்றுள்பொற்கைகளான்முலைமேற்கொட்டி
யருங்கலச்சும்மைதாங்கவகலல்குலன்றிச்சற்றே
மருங்குலுமுண்டோவென்னமயன்மகண்மறுகிவந்தாள். (௪௩)

தலையின்மேற்சுமந்தகையடழலின்மேன்மிதிக்கின்றாள்போ
னிலையின்மேன்மிதிக்குந்தாளணேசத்தானிலைறந்தநெஞ்சள்
கொலையின்மேற்குறித்தவேடன்கூர்ங்கணையுயிரைக்கொள்ள
மலையின்மேன்மயில்வீழ்ந்தென்னமைந்தன்மேன்மறுகிவீழ்ந்தாள். (௪௪)

உயிர்த்திலளுணர்வுமில்லையுயிரிலள்கொல்லோவென்னப்
பெயர்த்திலளியாக்கையொன்றும்பேசலள்விம்மியாளும்
வியர்த்திலணெடிதுபோதுவிம்மலன்மெல்லமெல்ல
வயர்த்திலளரிதிற்றேறிவாய்திறந்தாற்றலுற்றாள். (௪௫)

கலையினாற்றிங்கள்போலவளர்கின்றகாலத்தேயுன்
சிலையினாலரியைவெல்லக்காண்பதோர்தவமுஞ்செய்தேன்
றலையிலாவாக்கைகாணவெத்தவஞ்செய்தேனந்தோ
நிலையில்லாவாழ்வையின்னெநினைவனோநினைவிலாதேன். (௪௬)

ஐயனேயழகனேயென்னரும்பெறலமிர்தேயாழிக்
கையனேமழுவனேயென்றலர்வலிகடந்தகால
மொய்யனேமுளரியன்னநின்முகங்கண்டிலாதே
னுய்வனோவுலகமூன்றுக்கொருவனேசெருவலோனே. (௪௭)

தாளரிச்சதங்கையார்ப்பத்தவழ்கின்றபருவந்தன்னிற்
கோளரியிரண்டுபற்றிக்கொணர்ந்தனைகொணர்ந்துகோப
மூளுறப்பொருத்திமாடமுன்றிலின்முறையினோடு
மீளரும்வினையாட்டின்னங்காண்பனோவிதியிலாதேன். (௪௮)

அம்புலியம்மவாவென்றழைத்தலுமவிர்வெண்டிங்க
ளிம்பர்வந்தானையஞ்சலெனவிருகரத்தினேந்தி
வம்புறுமறுவைப்பற்றிமுயலெனவாங்கும்வண்ண
மெம்பெருங்களிறேகாணவேசற்றேனெழுந்திராயோ. (௪௯)

இயக்கியாரக்கிமார்கள்விஞ்சையரோமைமாதர்
முயற்கறைபயிலாத்திங்கண்முகத்தியர்முருகின்னை
மயக்கியமுயக்கந்தன்னான்மலரணையமளிமீதே
யயர்த்தனையுறங்குவாயோவமர்பொருதலசினோயோ. (௫௦)

முக்கணான்முதலினோராயுலகொருமூன்றினோடும்
புக்கபோரெல்லாம்வென்றுநின்றவென்புதல்வன்போலா
மக்களிலொருவன்கொல்லமாள்பவன்வானமேரு
வுக்கிடவணுவொன்றோடியுதைத்ததுபோலுமம்மா. (௫௧)

பஞ்செரியுற்றதென்னவரக்கர்தம்பரவையெல்லாம்
வெஞ்சினமனிதன்கொல்லவிளிந்ததேமீண்டதில்லை
யஞ்சினேனஞ்சினேனிச்சீதையென்றமிர்தாற்செய்த
நஞ்சினாலிலங்கைவேந்தனாளையித்தகையனன்றோ. (௫௨)

என்றழைத்திரங்கியேங்கவித்துயர்கமர்கட்கெல்லாம்
பொன்றழைத்தனையவல்குற்சீதையாற்புகுந்ததென்ன
வன்றமைகல்லினெஞ்சின்வஞ்சகத்தானிவாளாற்
கொன்றிழைத்திடுவனென்றுவோடினனரக்கர்கோமான். (௫௩)

ஓடினின்றனைநோக்கியுயர்பெரும்பழியிழுச்சி
சூடினின்றனென்றஞ்சிமசோதரன்றுணிந்தநெஞ்சன்
மாடுசென்றடியின்வீழ்ந்துவணங்கியுன்புகட்குமன்று
கேடுவந்தடுத்ததென்றுவினையனகிளத்தலுற்றான். (௫௪)

நீருளதனையுஞ்சூழ்ந்தநெருப்புளதனையுநீண்ட
பாருளதனையும்வானப்பரப்புளதனையுங்காலின்
பேருளதனையுமாயாப்பெரும்பழிபிடித்திபோலாம்
போருளதனையும்வென்றுபுகழுளதனையுமுள்ளாய். (௫௫)

தெள்ளருங்காலகேயர்சிரத்தொடுந்திசைக்கண்யானை
வெள்ளியமருப்புச்சிந்தவிசியவிசையத்தோள்வாள்
வள்ளியமருங்குற்செவ்வாய்மாதர்மேல்வைத்தபோது
கொள்ளுமேயாவிதானேநாணத்தாற்குறைவதல்லால். (௫௬)

மங்கையர்குலத்துளாளைத்தவத்தியைமுனிந்துவாளாற்
சங்கையொன்றின்றிக்கொன்றான்குலத்துக்கோர்தக்கானென்று
கங்கையஞ்சென்னியானுங்கண்ணனுங்கமலத்தோனுஞ்
செங்கையுங்கொட்டியுன்னைச்சிரிப்பார்சிறியனென்று. (௫௭)

இலத்தியல்பன்றுவாளினெறியன்றுநீதியன்று
குலத்தியல்பன்றுமேலோர்தருமமேலதுவுமன்று
புலத்தியன்மரபின்வந்தபுண்ணியமரபுபூண்டாய்
பலத்தியல்பன்றுமாயாப்பழிகொளமறுகுவாயோ. (௫௮)

இன்றுநீயிவளைவாளாலெறிந்தபோயிராமன்றன்னை
வென்றுமீண்டிலங்கைமூதூரெய்திநீவெதும்புவாயோ
பொன்றினள்சீதையென்றேபோவர்களவர்தாமல்லால்
வென்றிடமுடியாதென்றும்வீரமோவிளம்பவென்றான். (௫௯)

என்னலுமெடுத்தகூர்வாளிருநிலத்திட்டுமீண்டு
மன்னவன்மைந்தன்றன்னைமாற்றலார்வலிதிற்கொண்ட
சின்னமுமவர்கடங்கள்சிரமுங்கொண்டன்றிமீளேன்
றன்னருந்தயிலத்தோணிவளர்த்துமினென்னச்சொன்னான். (௬௦)

அத்தொழிலவருஞ்செய்தாராயிடையனைத்துத்திக்கும்
பொத்தியவிருதர்தானைகொணரியபோனதூத
ரொத்தனரணுகவந்துவணங்கினரிலங்கையுள்ளூர்ப்
பத்தியினமைந்ததானைக்கிடமிலைபணியிதென்றார். (௬௧)

இராவணன்சோகப்படலம்-முற்றிற்று. ஆ திருவிருத்தம்-௩௧௮௩.
கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

௨௬ - வது—படைக்காட்சிப்படலம்.

ஏம்பலுற்றெழுந்தமன்னனெவ்வழியெய்திற்றென்றான்
கூம்பலுற்றுயர்ந்தகையரொருவழிகூறலாமோ
வாம்புனற்பரவையேழுமிறுதியின்வளர்ந்ததென்னத்
தாம்பொடித்தெழுந்ததானைக்குலகிடமில்லையென்றார். (௧)

மண்ணுறநடந்ததானைவளர்ந்தமாத்துளிமண்ட
விண்ணுறநடக்கின்றாருமிதித்தனரேகமென்மேற்
கண்ணுறவருமைகாணுக்கற்பத்தின்முடிவிற்கார்போ
லெண்ணுறவரியசேனையெய்தியதிலங்கைநோக்கி. (௨)

வாட்டனைவயக்கமின்னுமழையதினிருளமாட்டா
விட்டியமுரசினார்ப்பையிடிப்பொடுமுழக்கமாட்டா
மீட்டினியுவமையில்லைவேலைமீச்சென்றதென்னிற்
றீட்டியபடையுமாவுமியானையுந்தேருஞ்செல்ல. (௩)

உலகினுக்குலகுபோய்ப்போயொன்றினொன்றொதுங்கலுற்ற
துலைவருந்தானைமேன்மேலெழுந்ததடர்ந்துசுற்ற
நிலவினுக்கிறையுமீனுநீங்கினநிமிர்ந்துநின்றா
ரலரியுமூர்ந்துசெல்லுமாறுநீத்தஞ்சியப்பால். (௪)

மேற்படவிசும்பைமுட்டிமேருவின்விளங்கிவிண்ட
நாற்பெருவாயிலூடுமிலங்கையூர்நடக்குந்தானை
கார்க்கருங்கடலைமற்றோரிடத்திடைக்காலன்றானே
சேர்ப்பதுபோன்றதியாண்டுஞ்சுமைபொறாதுலகமென்ன. (௫)

நெருக்குடைவாயிலூடுபுகுமெனினெடிதுகால
மிருக்குமித்தன்மையென்னுமதிலினுக்கும்பரெய்தி
யரக்கனதிலங்கையுற்றவண்டங்களனைத்தினுள்ள
கருக்குலமேகமெல்லாமொருங்குடன்கலந்ததென்ன. (௬)

அதுபொழுதரக்கர்கோனுமணிகொள்கோபுரத்தினெய்திப்
பொதுவுறநோக்கலுற்றானொருநெறிபோகப்போக
விதிமுறைகாண்பனென்னும்வேட்கையான்வேலையேழுங்
கதுமெனவொருங்குநோக்கும்பேதையிற்காதல்கொண்டான். (௭)

மாதிரமொன்றினின்றுமாறொருதிசைமேன்மண்டி
யோதநீர்செல்வதன்னதானையையொருங்குகூடி
வேதவேதாந்தங்கூறும்பொருளினைவிரிக்கின்றார்போற்
றூதுவரணிகடோறும்வரன்முறைகாட்டிச்சொன்னார். (௮)

வேறு.

சாகத்தீவினிலுறைபவர்தானவர்சமைத்த
யாகத்திற்பிறந்தியைந்தவர்தேவரையெல்லா
மோகத்திற்படமுடித்தவர்மாயையின்முதல்வர்
மேகத்தைத்தொடுமெய்யினரிவரெனவிரித்தார். (௯)

குசையின்றீவினிலுறைபவர்கூற்றுக்கும்விதிக்கும்
வசையும்வன்மையும்வளர்த்தவர்வானநாட்டுறைவா
ரிசையுஞ்செல்வமுமிருக்கையுமிழந்ததிங்கிவரால்
விசையராமெனவிற்பவரிவர்கெடுவிறலோய். (க0)

இலவத்தீவினிலுறைபவரிவர்கள்பண்டிமையாப்
புலவர்க்கிந்திரன்பொன்னகரழிதரப்பொருதா
நிலவைச்செஞ்சடைவைத்தவன்வரந்தரநிமிர்ந்தா
குலவைக்காடுறுதீயெனவெகுளிபெற்றுடையார். (கக)

அன்றிற்றீவினிலுறைபவரிவர்பண்டையமரர்க்
கென்றைக்கும்மிருந்துறைவிடமென்றிடமேருக்
குன்றைக்கொண்டுபோய்க்குரைகடலிடையறக்குலைந்தோர்
சென்றித்தன்மையைத்தவிருமென்றிரந்திடத்தீர்ந்தோர். (க௨)

பவளத்தீவினிலுறைபவர்வெள்ளிபண்பழிந்தோர்
குவளைக்கண்ணியங்கிராக்கதக்கன்னியைக்கூட
வவளிற்றோன்றினராயிருகோடியர்நொய்திற்
றிவளப்பாற்கடல்வறள்படத்தேக்கினர்சிலநாள். (க௩)

கந்தமாதனமென்பதிக்கருங்கடற்கப்பான்
மந்தமாருதமூர்வதோர்கிரியதில்வாழ்வா
ரந்தகாலத்தவ்வாலகாலத்துடன்பிறந்தோ
ரிந்தவாளெயிற்றரக்கரொன்னாரிந்நிலமிறைவ. (க௪)

மலையமென்பதுபொதியமாமலையதின்மறவோர்
நிலையமன்னதுசாகரத்திடைநிற்குங்
குலையுமிவ்வுலகெனக்கொண்டுநான்முகன்கூறி
யுலைவிலீரிதிலுறையுமென்றிரந்திடவுறைந்தார். (க௫)

முற்கரக்கையர்மூவிலைவெலினர்முசண்டி
சக்கரத்தினர்சாபத்தரிந்திரன்றலைவர்
நக்கரக்கடலுளொருமூன்றுக்குநாதர்
புக்கரப்பெருந்தீவிடையுறைபவர்புகழோய். (க௬)

மறலியைப்பண்டுதம்பெருந்தாய்சொலவலியாற்
புறநிலைப்பெருஞ்சக்கரமால்வரைப்பொருப்பின்
விறல்கெடச்சிறையிட்டயனிரந்திடவிட்டோ
ரிறலியப்பெருந்தீவிடையுறைபவரிவர்கள். (க௭)

வேதாளக்கரத்திவர்பண்டுபுவியிடம்விரிவு
போதாதுந்தமக்கெழுவகையாய்நின்றபுவன
பாதாளத்துறைவிரெனநான்முகன்பணிப்ப
வாதாயுக்கிருந்தனக்கன்பினுவிவணடைந்தார். (க௮)

நிருதிதன்குலப்புதல்வர்நின்றுலத்துக்குநேரோ
பருதிதேவர்களெனத்தக்கபண்பினர்பானக்
குருதிபெற்றிலரோற்கடலேழையுக்குடிப்பா
ரிருணிறத்தவரொருத்தரோர்மலையையுமெடுப்பார். (௧௯)

பாரினைத்தவெம்பன்றியையன்பினுற்பார்த்த
காரணத்தினனுதியிற்பயந்தபைங்கழலோர்
பூரணத்தடந்திசைதொறுமிந்திரன்புலரா
வாரணத்தினைசிறுத்தியேசூடினர்வாகை. (௨௦)

மறக்கண்வெஞ்சினமலையெனவிங்கின்றவைய
ரிறக்கங்கிழிலாப்பாதலத்துறைகின்றவிகலோ
ரறக்கண்டுஞ்சிலனுயிரம்பணந்தலையனந்த
னுறக்கந்தீர்ந்தனனுறைகின்றதிவர்சுடர்ந்தொழுக்க. (௨௧)

காளிமைப்பண்டுகண்ணுதல்காட்டியகாலை
மூளமுற்றியசினக்கொடுந்தீயிடைமுளைத்தோர்
கூளிகட்குநல்லுடன்பிறந்தார்பெருங்குழுவாய்
வாளிமைக்கவும்வாளெயிறிமைக்கவும்வருவார். (௨௨)

பாவந்தோன்றியகாலமேதோன்றியபழையோர்
தீவந்தோன்றியமுறைநமையாமெனத்தெறுகண்ணர்
கோவந்தோன்றிடிற்றுணையுமுயிருணுங்கொடியோர்
சாவந்தோன்றிடவடதிசைமேல்வந்துசார்வார். (௨௩)

சீற்றமாகியவைமுகனுலகெலாந்தீய்ப்பா
னேற்றமாநுதல்விழியிடைத்தோன்றினரிவராற்
கூற்றமாகியகொம்பினம்பாலுடைக்கொடுமை
யூற்றமாகப்பண்டுதித்தனவென்பவருவரால். (௨௪)

காலன்மார்பினிற்சிவன்கழல்படவன்றுகான்ற
வேலையேழன்னகுருதியிற்றோன்றியவீரர்
சூலமேந்திமுன்னின்றவரிங்கின்றதொகையோ
ராலகாலமுமமிர்தமும்பிறந்தபோலரக்கர். (௨௫)

வடவைத்தீயினைவாசுகிகான்றமாக்கடுவை
யிடவத்தீயிடையெழுந்தவரிவர்கணமழையைத்
தடவத்தீயெனவிமிர்ந்தகுஞ்சியருவர்தனித்தேர்
கடவத்தீய்ந்தவெம்புரத்திடைத்தோன்றியகழலோர். (௨௬)

எனையரின்னவரொன்பதோரளவிலரைய
நினையவுங்குறித்துரைக்கவுமரிதிவர்நினைந்த
வினையமும்பெருவரங்களுந்தவங்களும்விளம்பி
னனையபேருகமாயிரத்தளவினுமடங்கா. (௨௭)

ஒருவரேசென்றிவ்வுறுதிறற்குரங்கையுமுரவோ
ரிருவரொன்றவர்தம்மையுமொருகைகொண்டெற்றி
வருவர்மாறினிப்பகர்வதென்வானவர்க்கரிய
இருவரென்றனர்தூதுவரிராவணன்செப்பும். (உஅ)

எத்திறத்திதற்கென்னைத்தொகைவகுத்தியன்ற
வத்திறத்தினையறைதியொன்றுரைசெயவவர்க
ளொத்தவெள்ளமோராயிரமுளதெனவுரைத்தார்
பித்தரிப்படைக்கெஞ்சிறிதென்றனர்பெயர்ந்தார். (உகூ)

படைப்பெருங்குலத்தலைவரைக்கொணருதியொன்பாற்
றொடைத்தூசானவர்க்குற்றுளபொருளெலாங்கிளத்தி
யடைத்தநல்லுலாவிளம்பினனவ்வளவமையுற்
றுடைத்தபூசனைவரன்முறையியற்றவென்றுரைத்தான். (ங0)

தூதர்கூறிடத்திசைதொறுந்திசைதொறுந்தொடர்ந்த
வோதவேலையினாயகரெவரும்வந்துற்றார்
போதுதூவினர்வணங்கினரிராவணன்பொலன்றூண்
மோதுமோலியின்பேரொலிவானினைமுட்ட. (ஙக)

அனையரியாவருமருகுசென்றடிமுறைவணங்கி
வினையமேவினரினிதினங்கிருந்ததோர்வேலை
நினையுநல்வரவாகநும்வரவெனவிரம்பி
மனையுமக்களும்வலியரோவென்றனன்மறவோன். (ஙஉ)

பெரியதிண்புயனியுனைதவவரம்பெரிதா
வரியவேண்டியபொருளெலாமுடிப்பதற்கொன்றோ
விரியதேவலாக்கண்டனம்பகைபிறிதில்லை
யரியதென்னெமக்கென்றனரவன்கருத்தறிவார். (ஙங)

மாதரார்களுமைந்தருமின்மருங்கிருந்தார்
பேதுறுதவரில்லைநீவருந்தினைபெரிது
யாதுகாரணமருளெனவனையவரிசைத்தார்
சீதைகாதலிற்பிறந்துளபரிசெலாந்தெரித்தான். (ஙச)

கும்பகன்னனொடிந்திரசித்தையுங்குலத்தின்
வெம்புவெஞ்சினத்தரக்கர்தங்குழுவையும்வென்று
ரம்பிநூற்றிருமனிதரோகன்றுநம்மாற்ற
லம்பசேனையும்வானரமேயெனநக்கார். (ஙரு)

உலகைச்சேடன்றனுச்சியினெடுக்கவன்றேரோழ்
மலையைவேரொடும்வாங்கவன்றங்கையால்வாங்கி
யலைகொள்வேலையைக்குடிக்கவன்றவழுத்தமலரோ
டிலைகள்கோதுமக்குரங்கின்மேலெவக்கொலெம்மை. (ஙசா)

என்னக்கையெதிர்திடியுருமேறெனக்க
மின்னும்வெள்ளெயிற்றரக்கராயங்கையால்விலக்கி
வன்னியென்பவன்புட்கரத்தீவுக்குமன்ன
னன்னமானிடர்தம்வலியாதெனவறைந்தான். (ந௭)

மற்றவாசகங்கேட்டலுமாலியவான்வந்
துற்றதன்மையுமனிதாதாற்றமுமுடனுங்
கொற்றவானரத்தலைவர்தந்தகைமையுங்கூறிக்
கிற்றுங்கேட்டிராலென்றவன்கிளத்துவான்கிளர்ந்தான். (ந௮)

ஆழியன்னநீரதிரன்றேகடலனைத்து
மூழிக்காலெனக்கடப்பவன்வாலியென்போனை
யெழுகுன்றமுமெடுக்குறுமிடுக்கனையிந்நாள்
பாழிமார்பகம்பிளந்துயிர்குடித்ததோர்பகழி. (ந௯)

பரியதோளுடைவிராதன்மாரீசனும்பட்டார்
கரியமால்வரைநிகர்கரதூடணர்கதிர்வேற்
றிரிசிராவவர்திரைக்கடலனபெருஞ்சேனை
யொருவிலாலொருநாழிகைப்பொழுதினிலுலந்தார். (௪0)

இங்குவந்துநீர்வினயதென்னெறிதிரைப்பரவை
யங்குவெந்திலதோசிறிதறிந்ததுமிலிரோ
கங்கைசூடிதன்கடுஞ்சிலையொடித்தவக்கால
முங்கள்வான்செவிபுகுந்திலதோமுழங்கோதை. (௪க)

ஆயிரம்பெருவெள்ளமுண்டிலங்கையினளவிற்
றீயின்வெய்யபோரரக்கர்தஞ்சேனையச்சேனை
போயதந்தகன்புரம்புகநிறைந்ததுபோலா
மேயுமும்மைநூன்மார்பினொய்தவில்விரண்டால். (௪௨)

கொற்றவெஞ்சிலைக்கும்பகன்னனுங்கள்கோமான்
பெற்றமக்களும்பிரகத்தன்முதலியபிறரு
மற்றைவீரருமிந்திரசித்தொடுமடிந்தா
ரிற்றைநாள்வரையானுமற்றிவருமேயிருந்தோம். (௪௩)

மூலத்தானையென்றுண்டதுமும்மைநூறமைந்த
கூலச்சேனையிவ்வெள்ளமற்றதற்கின்றுகுறித்த
காலச்செய்கையானீர்வந்திராயினக்கழலோர்
சீலச்செய்கையுங்கவிப்பெருசேனையுந்தெரிக்கில். (௪௪)

ஒருகுரங்குவந்திலங்கையமலங்கெரியூட்டித்
திருகுவெஞ்சினத்தக்கனைநிலத்தொடுந்தேய்த்துப்
பொருதுநூதுரைத்தேகியதரக்கியர்புலம்பக்
கருதுசேனையாங்கடலையுங்கடலையுங்கடந்து. (௪௫)

கண்டிலீர்கொலாங் கடலினை மலைகொண்டு கட்டி
மண்டு போர்செய் வானரரியற்றிய மார்க்க
முண்டு வெள்ளமோ வொழுபது மருங்கொரு கோடியிற்
கொண்டுவந்தது மேருவிற் கப்புறங் குதித்தே. (௬௬)

இதுவியற்கையோர் சீதையென் றிருந்தவத் திவையந்தான்
பொதுவியற்கை தீர்கற்புடைப் பத்தினி பொருட்டால்
விதிவிளைத்தவா வில்லியர் வெல்க நீர் வெல்க
முதுமொழிப்பதஞ் சொல்லினனென வுரை முடித்தான். (௬௭)

வன்னிமன்னனை நோக்கி நீயிவணொல்லை மடிய
வென்ன காரணமில்லை செயாதிருந்த தென்றிசைத்தான்
புன்மை நோக்கி நுண்ணிணுற் பொருந்திலே னென்று
அன்னதே வினியமையுமெய்க் கடனஃதென்றான். (௬௮)

மூதுணர்ந்தவிம் முதுமகன் கூறிய முயற்சி
சீதையென் படையினை விட்டம்மனிதரைத் திருத்த
லாதியின் றலைசெயத்தக்கதினிச் செயலழிவாற்
காதலிற் பிரசித்தையாமியாண்டினிக் காண்டும். (௬௯)

விட்டமாயிரமா நினை வெஞ்சமம் விரும்பிப்
பட்டவீரரைப் பெறுகிலம் பெறுவது பழிப்பான்
முட்டி மற்றவர் குலத்தொடு முடிக்குவதல்லாற்
கட்டமற்றொழிற் செருத்தொழிலினிச் செயுங்கடமை. (௭௦)

என்றெழுந்தனனிராக்கதிருக்கநீயாமே
சென்றமற்றவர் சில்லடற் குருதிநீர்தேக்கி
வென்றுமீளுதும் வெஃகுவதென்பிடவில்லாப்
புன்றொழிற் குலமொன்றவே யென்றனர் புகன்றார். (௭௧)

படைக்காட்சிப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௨௩௯.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

---

௩௦ - வது — மூலபெலவதைப்படலம்.

வானரப்பெருஞ் சேனையை பாறொருவழி சென்
றானறக் குறைத்துயிருண் பனியிற் போயொருங்கே
யானமற்றவிருவரைக் கோறியென்றமைந்தான்
றானைவப் பெருங்கிரிகளை வாட்கொண்டு தடிந்தான். (௧)

என்னுமாந்த றூழெழுந்தம் மூர்த்திமேலெதிக்
களைகடற் பெருஞ்சேனையைக் கலந்ததுகாறு
வினையமற்றிலை மூலமாத்தானையை விரவோ
டினையமுற் செலவிடுகென் றிராவணனிசைத்தான். (௨)

ஏவியப்பெருந்தானையைத்தானும்விட்டெழுந்தான்
றேவர்மெய்ப்புகழுய்த்தவன்சில்லியந்தேர்மேற்
காவன்மூவகையுலகமுமுனிவருங்கலங்கப்
பூவைவண்ணத்தன்சேனைமேலொருபுறம்போனான். (௩)

எழுகசேனையென்றியானைமேன்மணிமுரசெற்றி
வழுவில்வள்ளுவர்துறைதொறும்விளித்தலும்வல்லைக்
குழுவியீண்டியதென்பாற்குவலயமுழுதுந்
தழுவிவிண்ணையுந்திசையையுந்தடவுமாத்தானை. (௪)

அடங்குவேலைகளண்டத்தினகத்தினமலையு
மடங்குமன்னுயிரனைத்துமவ்வரைப்பிடையவைபோ
லடங்குமேமற்றப்பெரும்படையிரும்படையாக்கை
யடங்குமாயவன்குறளுருத்தன்மையினவரால், (௫)

அறத்தைத்தின்றருங்கருணையைப்பருகிவேறமைந்த
மறத்தைப்பூண்டுவெம்பாவத்தைமணம்புணர்மனத்தார்
ரிறத்திற்காலொன்றநெஞ்சினர்நெருப்புக்குநெருப்பாய்ப்
புறத்துப்பொங்கியபங்கியர்காலனும்புகழ்வார். (௬)

நீண்டதோள்களால்வேலையைப்புறஞ்செலநீக்கி
வேண்டுமீனொடுமகரங்கள்வாயிட்டுவிழுங்கித்
தூண்டுவானுருமேற்றினைச்செவிதொறுந்தூக்கி
மூண்டமாமழையுரிந்துடுத்துலாவருமூர்க்கர். (௭)

மால்வரைக்குலம்பரலெனமழைக்குலஞ்சிலம்பக்
கால்வரைக்குலஞ்சிலம்புகொண்டசைத்தபைங்கழலார்
மேல்வரைப்படர்கலுழன்வன்காற்றெனும்விசையோர்
நால்வரைக்கொணர்ந்துடன்பிணித்தாலன்னநடையார். (௮)

உண்ணுந்தன்மையினூன்முறைதப்பிடினுடனே
பண்ணினின்றமாவியானையைவாயிடும்பசியார்
தண்ணினீர்முறைதப்பிடிற்றடக்கையாற்றடவி
விண்ணின்மேகத்தைவாரிவாய்ப்பிழிந்திடும்விடாயர். (௯)

உறைந்தமந்தரமுதலியகிரிகளையுருவ
வெறிந்துவேணிலைகாண்பவரிந்துவாலியாக்கை
சொறிந்துதீர்வுறுதினவினர்மலைகளைச்சுற்றி
யறைந்துகற்றமாத்தண்டினாசனியினார்ப்பார். (௧0)

சூலம்வாங்கிடிற்சுடர்மழுவெறிந்திடிற்சுடர்வாள்
கோலவெஞ்சிலைபிடித்தலிற்கொற்றவேல்கொள்ளிற்
சாலவன்றண்டுதரித்திடிற்சக்கரந்தாங்கிற்
காலன்மால்சிவன்குமரனென்றிவரையுங்கடப்பார். (௧௧)

ஒருவரோவல்லரோருலகத்தினைவெல்ல
விருவர்வேண்டுவரோமுலகத்தையுமிழுக்கத்
திரிவரோவுடதிரிதருநெடுநிலஞ்செவ்வே
வருவரோவுடன்கடல்களுந்தொடர்ந்துபின்வருமால். (கஉ)

மேகமத்தனைவிரிந்தன்றனண்டத்துவிரிந்த
நாகமத்தனைகளிர்மணித்தேர்களுநாளு
போகமுற்றினவெத்தனையத்தனைபுரவி
யாகமெத்தனையத்தனை*யானையினவதி. (கங)

இன்னதன்மையயானைதேரிவுளியென்றிவற்றின்
பன்னுபல்லணமருமமற்றுமப்பொருபலவும்
பொன்னுநன்னெடுமணியுங்கொண்டல்லதுபுனைந்த
பின்னமுள்ளனவில்லனமெய்முற்றுந்தெரிந்தால். (கச)

இப்பெரும்படையெழுந்திரைத்தேகமேலெழுந்த
அப்புதிர்ந்தனதுளியின்படலமீத்தார்ப்பத்
தப்பில்கார்நிறந்தவிர்ந்ததுகரிமதந்தழுவ
வுப்புநீங்கியதோய்குநீர்வீங்கலையுவரி. (கரு)

மலையும்வேலையுமற்றுளபொருள்களும்வானோர்
நிலையுமப்புறத்துலகங்கள்யாவையுநிரம்ப
வுலைவுறுவகையுண்டுபண்டுமிழ்ந்தபேரொருமைத்
தலைவன்வாயொத்ததிலங்கையின்வாயில்கடருவ. (கசு)

கடம்பொருமதக்களிறுதேர்பரியிடைகடல்கள்
படம்பொருமையினனந்தலையனந்தனும்பதைத்தான்
விடம்பொருதிரியமரர்போற்குரங்கினமிதிக்கு
மிடம்பொருமையுற்றிரிந்துபோய்வடதிசையிறுத்த. (கஎ)

ஆழிமால்வரைவேலிசுற்றிடைவருத்தனைமந்த
வேழுவேலையுமிடுவேலையரக்கரோயினமா
வாழிகாலனும்விதியும்வெவ்வினையுமேமள்ளர்
தோழமாமதிலிலங்கைமாதொடர்ந்திடவந்தார். (கஅ)

ஆர்த்தவோசையோவலங்குதேராழியினதிர்ப்போ
கார்த்திண்மால்கரிமுழக்கமோவாசியின்கலிப்போ
போர்த்தபல்லியத்தரவமோநெருக்கினுற்புழுங்கி
வேர்த்தவண்டத்தைவெடித்திடப்பொடித்ததுமென்மேல். (கக)

வழங்குபல்படையினதுமதகரிமகர
முழங்குகின்றதுமுரிதிரைப்பரியதுமுரசந்
தழங்குபேரொலிகளிப்புறுந்தறுகண்மாநிருதர்
புழுங்குவெஞ்சினச்சுறவதுநிறைபடப்புணரி. (உ௦)

* காலான்.

தசும்பிற்பொங்கியதிரள்புயத்தரக்கர்தந்தாளைப்
பசும்பொற்றிண்கழன்மிசைத்தலிற்கரிபமெத்தநி
னசும்பிற்சேறுபட்டளறுபட்டமிழுமாலடங்க
விசும்பிற்சேறலிற்கிடந்ததவ்விலங்கன்மேலிலங்கை. (உக)

படியைப்பார்த்தனர்பரவையைப்பார்த்தனர்படர்வான்
முடியைப்பார்த்தனர்பார்த்தனர்நெடுந்திசைமுழுதும்
விடியப்பார்ப்பதோர்வெள்ளிடைகண்டிலர்மிடைந்த
கொடியைப்பார்த்தனர்வேர்த்தனர்வானவர்குலைந்தார். (உஉ)

உலகிறுமலாவுருவெலாமிராக்கதவுருவா
யலகில்பல்படைபிடித்தமர்க்கெழுந்ததோவன்றேல்
விலகினீர்த்திரைவேலையோரேழும்போய்விதியாற்
புலைகள்வல்லுருப்பொடித்தனவோவென்றுபுகன்றார். (உ௩)

நடுங்கிநஞ்சடைகண்டனைவானவர்நம்ப
வொடுங்கியாங்கரந்துறைவிடமிகிலமுயிரைப்
பிடுங்கியுண்குவரியாரிவர்பெருமைபண்டமிவார்
முடிந்ததெம்வலியென்றவரோடுவான்முயன்றார். (உ௪)

ஒருவரைக்கொல்லவாயிரமிராமர்வந்தொருங்கே
யிருபதிற்றிரண்டாண்டுநின்றமர்செய்தாலென்னும்
நிருதரைக்கொல்வதிடம்பெறுவிடையினின்றன்றே
பொருவதிப்படைகண்டுதன்னுயிர்பொறுத்தன்றே. (உ௫)

என்றிறைஞ்சலுமணிமிடற்றிறைவனுமினிநீ
ரொன்றுமஞ்சலிர்வஞ்சனையரக்கரையொருங்கே
கொன்றுநீக்குமக்கொற்றவனிக்குலமெல்லாம்
பொன்றுவிப்பதோர்விதிதரத்தாமெனப்புகன்றான். (உ௬)

புற்றினின்றுவல்லரவினம்புறப்படப்பொருமி
யிற்றதெம்வலியெனவிரைந்திரிதருமெலிபோன்
மற்றைவானரப்பெருங்கடல்பயங்கொண்டுமறுகிக்
கொற்றவீரரைப்பார்த்திலாதிரிந்ததுகுலைவால். (உ௭)

அணையின்மேற்சிலசென்றனவாழியைநீந்திப்
புணைகடேடினசிலசிலநீந்தினபோன
துணைகளோடும்புக்கழுந்தினசிலசிலதோன்றாப்
பணைகளேறினமலைமுழைபுக்கவும்பலவால். (உ௮)

அடைத்தபேரணையளித்ததுநமக்குயிரிடைய
வுடைத்துப்போதுமாலவர்தொடராமலென்றுணர்த்த
புடைத்துச்செல்குவர்விசும்பினுமென்றனர்போதோன்
படைத்ததிக்கெலாம்பாய்ந்தனரொன்றனர்பயத்தால். (உ௯)

அரியின்வேந்தனுமனுமனுமங்கதனவனும்
பிரியகிற்றிலரிறைவனைநின்றனர்பிரிந்தா
ரிரியலுற்றனர்மற்றையோரியாவருமெரிநீர்
விரியும்வேலையைக்கடந்தனர்நோக்கினன்வீரன். (௫0)

இக்கொடும்படையெங்குளதியம்புதியென்றான்
மெய்க்கொடுந்திறல்விடணன்விளம்புவான்வீர
திக்கனைத்தினுமேழுமாத்தீவினுந்தீயோர்
புக்கமைந்ததுபுகுந்ததம்பிராக்கதப்புணரி. (௫௧)

ஏழெனப்படுங்கிளைநலத்தினின்றேறி
யூழிமுற்றியகடலெனப்புகுந்ததுமுளவால்
வாழிமற்றிவண்மூலமாத்தானைமுன்வருவ
வாழிவேலினியப்புறத்தில்லவாளரக்கர். (௫௨)

ஈண்டிவ்வண்டத்துளிராக்கதரொரும்பெயரொல்லா
மூண்டுவந்ததுநீவினைபின்னின்றமுடிக்க
மாண்டுவீழுமென்கின்றதம்மதிவலியாற்
றாண்டுகின்றனரென்றடிதொழுதவன்சொன்னான். (௫௩)

கேட்டவண்ணலுமுறுவலுந்தோற்றமுங்கிளரக்
காட்டுகின்றனன்காணுதியொருகணத்தென்று
வோட்டின்மேற்கொண்டதானையைப்பயந்துடைத்துரவோய்
மீட்டுக்கொள்கெனவங்கதனோடினன்விரைந்து. (௫௪)

சென்றுதானையையுற்றனன்சிறிதிறைகெடுவீர்
நின்றுகேட்டபினீக்குமினெனச்சொல்லிநேர்வா
னொன்றுங்கேட்கிலமென்றனர்குரக்கினமுரையால்
வென்றிவெந்திறற்படைப்பெருந்தலைவர்கண்மீண்டார். (௫௫)

மீண்டுவேலையின்வடகரையாண்டொருவெற்பி
னீண்டினார்களையென்குறித்திரிவுற்றதென்று
னுண்டநாயககண்டிலைபோலுநீயவனை
மாண்டுசெய்வதெனென்றுரைகூறினர்மறுப்பார். (௫௬)

ஒருவனிந்திரசித்தெனவுள்ளவனுளனாள்
செருவினுற்றவைகொற்றவமறத்தியோதெரியிற்
பொருவின்மற்றவரிற்றிலரியாரொடும்பொருவா
ரிருவர்விற்பிடித்தியாவரைத்தடுத்துமின்றெய்வார். (௫௭)

புரங்கடந்தவப்புனிதனேமுதலியபுலவோர்
வரங்கடந்துலகளிப்பவரியாவருமாட்டார்
கரந்தடங்கினரினிமற்றவ்வரக்கனைக்கடப்பார்
குரங்குகொண்டுவெந்தமர்செயுமானிடர்கொல்லாம். (௫௮)

ஊழியாயிரகோடியின் றுருத்திரரோடு
மாழியானுமற்றயனொடுபுரந்தரனவனுஞ்
சூழவோடினரொருவனைக்கொன்றுதந்தோளால்
வீழுமாசெய்யவல்லரோல்வென்றிவினன்றே. (௩௯)

என்னப்பாமற்றிவ்வெழுபதுவெள்ளமுமொருவன்
தின்னப்போதுமோதேவரில்வலியரோசிறியோ
முன்னப்பாரெலாம்படைத்தவனுளெலாமுறையின்
றுன்னிப்பார்த்துநின்றுறையிடக்குறையுமோவூகம். (௪௦)

நாயகன்றலைபத்துளகையுநாலைந்தென்
றேயுமுள்ளதேயொருவன்மற்றவன்வந்திங்குற்று
ராயிரந்தலையதற்கிரட்டிக்கையனாயா
பாயும்வேலையிற்கூலத்துமணலினும்பலரால். (௪௧)

கும்பகன்னனென்றுளன்மற்றிங்கொருவன்கைக்கொண்ட
வம்புதாங்கவுமிடுக்கிலனவன்செய்ததறிதி
உம்பரன்றியேயுணர்வுடையார்பிறருளரோ
நம்பிநீயுமுன்றனிமையையறிந்திலைநடந்தாய். (௪௨)

அனுமனாற்றலுமரசனதாற்றலுமிருவர்
தனுவினாற்றலுந்தங்கடமுயிரினைத்தாங்கார்
கனியுங்காய்களுமுலவுளமுழையுளகாக்க
மனிதராளிலெனிராக்கதராளிலென்வையம். (௪௩)

நாமுனாரன்றேபுகழினைத்திருவொடுந்தரிப்பார்
யாமுளோமெனினெங்கிளையுள்ளதெம்பெரும
போமினீரொன்றுவிடைதரத்தக்கனைபுரம்போய்ச்
சாமினீரொன்றறருமமன்றென்றனர்தளர்ந்தார். (௪௪)

வேறு.

சாம்பனைவதனநோக்கிவாலிசேயறிவுசான்றோய்
பாம்பணையமலன்மற்றிவ்விராமனென்றெமக்குப்பண்டே
யேம்பல்வந்தெய்தச்சொல்லித்தேற்றினையல்லையோநீ
யாம்பலம்பகைஞன்றன்னோடியிந்திரமமைந்தோனன்றாய். (௪௫)

தேற்றுவார்த்தெரிந்தசொல்லாற்றெருட்டியத்தெளிவிலோனை
யாற்றுவாயல்லைநீயுமஞ்சினார்போலவாவி
போற்றினையென்றபோதுபுகழென்னும்புலமையென்னுங்
கூற்றின்வாயுற்றால்வீரங்குறைவதோயிறைமைகொண்டார். (௪௬)

தானவரோடுமற்றச்சக்கரத்தலைவரோடும்
வானவர்கடையமாட்டாமறிகடல்கடைந்தவாலி
யானவனம்பொன்றாலேயயர்ந்தமையயர்த்ததென்னீ
மீனலர்வேலைபட்டதுணர்ந்திலைபோலுமேலோய். (௪௭)

எத்தனையாக்கரோனுந்தருமமாண்டில்லையன்றே
யத்தனையறத்தைவெல்லும்பாவமென்றறிந்ததுண்டோ
பித்தரைப்போலநீயுமிவருடன்பெயர்ந்ததன்மை
யொத்திலதென்னச்சொன்னானவனிவையுரைப்பதானான். (௪௮)

நாணத்தாற்றிறம்போதாதலினிருந்துபின்னும்
துணைத்திரடோள்வீரதோன்றியவரக்கர்வீரங்
காணத்தானிற்கத்தானக்கறைமிடற்றவர்க்குமாமோ
கோணற்பூவுண்ணும்வாட்கைக்குரங்கின்மேற்குற்றமுண்டோ. (௪௯)

தேவருமவுணர்தாமுஞ்செருப்பண்டுசெய்தகால
மேவரோவென்றுக்காணப்பட்டிலரிருக்கையான்ற
மூவகையுலகினுள்ளாரவர்துணையாற்றன்முற்றும்
பாவகருளரோகூற்றுமிவருடன்பகைக்கவற்றோ. (௫௦)

மாலியைக்கண்டேன்மற்றமாலியவானைக்கண்டேன்
காலநேமியையுங்கண்டேனிரணியன்றனையுங்கண்டே
னாலமாவிடமுங்கண்டேன்மதுவினையனுசனோடும்
வேலையைக்கலக்கக்கண்டேனிவர்க்குளமிடுக்குமுண்டோ. (௫௧)

வலியிதன்மேலேபெற்றவரத்தினர்மாயம்வல்லோ
ரொலிகடன்மணலின்மிக்ககணக்கினருள்ளநோக்கிற்
கலியினுங்கொடியர்கற்றபடைக்கலக்கரத்தரொன்றான்
மெலிகுவதன்றியுண்டோவின்னுறவெருவல்கண்டால். (௫௨)

ஆகினுமையவுண்டாலார்க்கெனுமமரினஞ்சிச்
சாகினும்பெயர்ந்ததன்மைபழிதருநரகிற்றள்ளு
மேகுதிமீளவின்னுமியம்புவதுளதாலெய்தி
மேகமேயனையான்கண்ணினெய்யனம்விழித்துநிற்றும். (௫௩)

எடுத்தலுஞ்சாய்த்தலுமெதிர்த்தலுமெதிர்ந்தோர்தம்மைப்
படுத்தலும்வீரவாட்கைபற்றினர்க்குற்றமேனு
மடுத்ததேயஃதுநிற்பவன்றியுமொன்றுகூறக்
கடுத்ததுகேட்டீர்நீருங்கருத்துளீர்கருதிநோக்கில். (௫௪)

ஒன்றுநீரஞ்சலையாமெலாமொருங்கேயென்று
நின்றுமொன்றியற்றலாற்றாநேமியான்றனேநேர்ந்து
கொன்றுபோர்கடக்குமாயிற்கொள்ளுதும்வென்றியன்றேற்
பொன்றுதுமவரோடென்றான்போதலோபுகழன்றென்றான். (௫௫)

ஈண்டியதானைநீங்கநிற்பதென்யாமேசென்று
பூண்டவெம்பழியினோடும்போந்தநாம்போவதென்னு
மீண்டனர்தலைவரெல்லாமங்கதனோடும்வீரன்
மூண்டெழுவெம்படையைநோக்கித்தம்பிக்குமொழிவதானான். (௫௬)

அத்தமீயுணர்தியன்றேயரக்கர்தானவுணரோதா
னெத்தனையுளரொன்றாலுமியான்சிலையெடுத்தபோது
தொத்துறுகனலின்வீழ்ந்தபஞ்செனத்தொலையுந்தன்மை
யொத்ததோரிடையூறுண்டென்றுணர்விடையுதிப்பதன்றால். (௫௭)

காக்குநரின்மைகண்டகலக்கத்தார்கவியின்சேனை
போக்கறப்போகித்தத்தமுறைவிடம்புகுந்ததுண்டேற்
றுக்கியபடையைமுற்றுந்தலைதுமிப்பளவுந்தாங்கி
நீக்குதிநிருதராங்குநெருக்குவார்நெருக்காவண்ணம். (௫௮)

இப்புறத்தினையசேனையேவியாண்டிருந்திநீயோ
னப்புறத்தமைந்தசூட்சியறிந்தவனயலேவந்தாற்
றப்பறக்கொன்றுநீக்குமவனையார்தடுக்கவல்லார்
வெப்புறுகின்றதுள்ளம்வீரநீயலதுவில்லோர். (௫௯)

மாருதியோடுநீயிவ்வானரக்கோனும்வல்லே
பேருதிர்சேனைகாக்கவென்றுடைத்தனிமையேனிச்
சோருதிரொன்னின்வெம்போர்தோற்றுநாமென்னச்சொன்னான்
வீரன்மற்றதனைக்கேட்டவிளையவன்விளம்பலுற்றான். (௬௦)

அன்னதேகருமமையவன்றியுமனைவோங்கின்று
லென்னுனக்குதவிசெய்துமிதுபடையென்றபோது
சென்னியிற்சுமந்தகையர்தேவரோபோலயாமும்
பொன்னுடைவரிவிலாற்றல்புறனின்றுகாண்டுமென்றான். (௬௧)

என்றவனேகலுற்றகாலையினனுமனெந்தாய்
புன்றொழிற்குரங்கெனுதென்றோளின்மேலேறிப்புக்கா
னன்றெனக்கருதுகின்றேனல்லதுநாயினேனுன்
பின்றனிநிற்றுமாயினடிமையிற்பிழைப்பிலென்றான். (௬௨)

ஐயநிற்கியலாதுண்டோவிராவணனயலேவந்தா
லெய்யும்விற்கரத்துவீரனிலக்குவன்றன்னோடேற்றால்
மொய்யமர்க்களத்தினுன்னைத்துணைபெருதொழியின்முன்பு
செய்யுமாவெற்றியுண்டோசேனையுஞ்சிதையுமன்றே. (௬௩)

ஏணைக்கொண்டமைந்தகுஞ்சியிந்திரசித்தென்பான்றன்
போணைக்கொண்டிருந்துமேனாளிளையவன்றன்னைப்போக்கி
னாணைக்கொண்டுன்னாலன்றேவென்றதங்கவலையின்னம்
வீரர்க்குவீரநின்னைப்பிரிகலன்வெல்லுமென்பேன். (௬௪)

சேனையைக்காத்தென்பின்னேதிருநகர்தீர்ந்தபோர்த
யானையைக்காத்துமற்றையிறைவனைக்காத்தெண்டீர்ந்த
வானையித்தலத்தினோடுமறையொடும்வளர்த்தியென்றா
னேனைமற்றுணாக்கிலாதானிளவல்பின்னெழுந்துசென்றான். (௬௫)

வீடணனுமற்றன்றம்பியோடேகிவெம்மை
கூடினர்செய்யுமாயந்தெரிந்தனைகுறிக்கொண்டேகி
நீடுறதானைதன்னைத்தாங்கிநீகில்லாயென்னிற்
கேடுறதாகுமென்றனனவனதுகேட்பதானான். (௬௬)

சூரியன்சேயுஞ்செல்வன்சொற்றதேயென்றுஞ்சொல்ல
ஆரியன்பின்புபோனவனைவருமதுவேநல்ல
காரியமென்னக்கொண்டார்கடற்படைகாத்துநின்றார்
வீரியன்பின்னர்செய்தசெயலெலாம்விளம்பலுற்றாம். (௬௭)

வில்லினைத்தொழுதுவாங்கியேற்றினன்மெய்க்கண்மேருக்
கல்லெனச்சிறந்ததேனுங்கருணையங்கடலேயன்ன
வெல்லொளிமார்பிற்றிராக்கவசமிட்டிடையாவேதச்
சொல்லெனத்துலைவிலாததூணியும்புறத்துத்தூக்கி. (௬௮)

யோசனைநூற்றின்வட்டமிடைவிடாதுறைந்தசேனைத்
தாசிலந்தன்னைறன்னைப்போக்கறவிலாங்குசுற்றி
வீசினபடையுமம்புமிடைதலின்விண்ணோர்க்கை
கூசினபொடியாலெங்குங்குமிழ்த்தனவியோமகூடம். (௬௯)

கண்ணனேயெளியேயிட்டகவசமேகடலேயன்ன
வண்ணனேயறத்தின்வாழ்வேமறையவர்வலியேமாறு
தொண்டுமேயிலாதோரொருவர்க்கிப்படைமேலூன்ற
வெண்ணமேமுடித்தியென்றுவேத்தினரிமையோரெல்லாம். (௭0)

முனிவரேமுதல்வராயவறத்துறைமுற்றினோர்க
டனிமையுமரக்கர்தானைப்பெருமையுந்தரிக்கலாதார்
பனிவருகண்ணர்விம்மிப்பதைக்கின்றநெஞ்சர்பாவத்
தனிவருந்தோற்கவண்ணல்வெல்கவென்றாசிசொன்னார். (௭௧)

வேறு.

இரிந்தசேனைசிந்தியாருமின்றியேயுநின்றநம்
விரிந்தசேனைகண்டியாதுமஞ்சலின்றிவெஞ்சரந்
தெரிந்தசேவகந்திறம்பலின்றிபெய்துசெய்கையான்
புரிந்தநன்மைவென்றிமேலுமன்றுமாலிபொய்க்குமோ. (௭௨)

புரங்களெய்தபுங்கவற்குமுன்புதேர்பொருந்தினார்
பார்த்தேவர்மாயநம்மைவேறுத்தபண்டைநாள்
விரைந்துபுள்ளின்மீதுவின்றுளோர்களோடுமேவினான்
கரந்திலன்றனித்தொருத்தனேரும்வந்துகாலினான். (௭௩)

தேருமாவுமியானையோடுபேயுமியாளியாதியாய்
மேருமாறுமெய்யர்நின்றவேலையேழின்மேலலால்
வாருமாருமென்றழைக்குமாவிடத்திம்மண்ணிடைப்
பேருமாறிம்மிடைப்பிழைக்குமாறுமெங்ஙனே. (௭௪)

தேருமாவும்யானையோடுசியம்யாளியாதியாய்
மேருமானுமெய்யர்நின்றவேலையேழின்மேலலால்
வாரும்வாருமென்றழைக்குமாவிடற்கிம்மண்ணிடைப்
பேருமாறுகாயிடைப்பிழைக்குமாறுமெங்ஙனே. (எரு)

என்றுசென்றடர்த்திலாத்தொர்சியவேறடர்த்ததைக்
குன்றுசூழ்வளைந்தபோற்றொடர்ந்தசேனைகூடலும்
ஙன்றிதென்றுஞாலமேழுநாகமேழுமாறுதன்
வென்றிவில்லைவேதநாதனாணெறிந்தவேலைவாய். (எசு)

கதம்புலர்ந்தசிந்தைவந்தகாவல்யானைமாவொடும்
மதம்புலர்ந்துநின்றவீரர்வாய்புலர்ந்துமாவெலாம்
பதம்புலர்ந்துவேகமோயவாளரக்கர்பண்புசால்
விதம்புலர்ந்ததென்னின்வென்றவென்றிசொல்லவேணுமோ. (எஎ)

வெறித்திரிந்துவாசியோடுசியமாவுமீளியுந்
செறித்தமைந்தமுந்துசில்லிபுல்லுமாழிகூடுதேர்
முறித்தெழுந்தமுற்கையானைவீசுமூசுபாகனைப்
பிறித்திரிந்துசிந்தவந்தொராகுலம்பிறந்ததால். (எஅ)

இங்கிமித்தமிப்படைக்கிடைந்துவந்தடுத்ததோர்
துங்கிமித்தமென்றுகொண்டுவானுளோர்கடுள்ளிரு
ரங்கிமித்தமுற்றபோதரக்கர்கண்ணரங்கமேல்
மின்னிமிர்த்ததன்னவாளிவேதநாதன்வீசினான். (எகூ)

யாளிமேலுமாளிமேலுமானைமேலுமாடன்மா
மீளிமேலும்வீரர்மேலும்வீரர்தேரின்மீதினும்
வாளின்மேலும்வில்லின்மேலுமண்ணின்மேல்வளர்ந்தமாத்
தாளின்மேலுமேறவேறவீரன்வாளிதூவினான். (அ0)

மலைவிழுந்தவாவிழுந்தமானயானைமன்னர்செந்
தலைவிழுந்தவாவிழுந்ததாயவாசிதாளிறுந்
சிலைவிழுந்தவாவிழுந்ததிண்பதாகைதிங்களின்
கலைவிழுந்தவாவிழுந்தவெள்ளெயிற்றசாடெலாம். (அக)

வாடைநாலுபாலும்வீசமாகமேகமாலைவெங்
கோடைமாரிபோல்லவாளிகூடவோடையானையு
மாடன்மாவும்வீரர்தேருமாளுமாள்வதானவாற்
பாடுபேருமாறுகண்டுபோர்செய்பண்புமில்லையால். (அஉ)

விழித்தகண்கள்கைகள்விற்கள்வேல்கள்வாள்கள்விண்ணிறுட்
டெழித்தவாய்கள்செல்லலுற்றதாள்கடோள்கள்செல்லினைப்
பழித்தவாளிசிந்தவின்றுபட்டதன்றிவிட்டகோல்
கழித்தவாயுதங்களொன்றுசெய்ததில்லைகண்டதே. (அந)

தொடுத்தவாளியோடுவிற்றுணிந்துவீழமுன்றுணிந்
தெடுத்தவாள்களோடுதோள்களிற்றுவீழமற்றது
கடுத்ததாள்கள்கண்டமாகுமெல்லனேகலந்துநேர்
தடுத்தவீரர்தாமுமொன்றுசெய்யுமாசலத்தினால். (௮௪)

குரந்துணிந்துகண்சிதைந்துபல்லணைக்குலைந்துபே
ருரந்துணிந்துவீழ்வதன்றியாவியோடவொன்றுமோ
சரந்துணிந்தவொன்றைநூறுசென்றுசென்றுதள்ளலால்
வரந்துணிந்தவீரர்போரின்முந்தவுந்துவாசியே. (௮௫)

ஊரவுன்னின்முன்புபட்டுயர்ந்தவெம்பிணங்களாற்
போரவண்மைதன்றுபேரிருவிரம்பெருஞ்சாந்
தாரவொன்றுநூறுகூறுபட்டுகுந்துயக்கலாற்
றேர்களொன்றுவந்தபாவியென்னசெய்கைசெய்யுமே. (௮௬)

எட்டுவென்றிசைக்கணின்றயாவும்வல்லையாவருந்
திட்டிலுய்ந்துபோமிலார்களென்னநின்றகேள்வியால்
முட்டும்வெங்கண்மாலியானையம்புராயமுன்னமே
பட்டுவந்தபோல்விழுந்ததென்னதன்மைபண்ணுமே. (௮௭)

வாலிகொண்டபுண்டரீகமன்னகண்ணவாளியொன்
றேவிலுண்டைநூறுகோடிகொல்லுமென்னவெண்ணுவான்
பூவினண்டர்கோனுமெண்மயங்குமன்னபோரின்வந்
தாவிகொண்டகாலனூர்கடுப்புமன்னதாகுமே. (௮௮)

கொடிக்குலங்கடேரின்மேலயானைமேலகோடைநா
ளிடிக்குலங்கள்வீழவெந்தகாடுபோலெரிந்ததால்
முடிக்குலங்கள்கோடிகோடிசிந்தவேகமுற்றுரு
வடிக்குலங்கள்வாளியோடவாயினூடுதீயினால். (௮௯)

அற்றவேலும்வாளுமாகியாயுதங்கண்மீதெழுந்
தற்றவேகமுந்தவோடியோதவேலைபூடுறத்
தற்றவெம்மைமைகமிகச்சுறுக்கொளச்சுவைத்ததால்
வற்றிநீர்வறந்துமின்மறிந்துமண்செறிந்தவால். (௯௦)

போரரிந்தமன்னரந்தபுங்கவாளிபொங்கிரு
ருரிந்தகாடெரிந்ததென்னமின்னியோடலா
னீரிந்தவண்ணமேநெருப்பெரிந்தநீணெடுந்
தேரெரிந்தவீரர்தஞ்சிரம்பொடிந்துசிந்துமே. (௯௧)

பிடித்தவாள்கள்வேல்களோடுதோள்கள்பேராவெனத்
தடித்தயானைமீதிருந்துபோர்துடங்குசூரர்தம்
மடித்தவாய்கள்செந்தலைக்குலம்புரண்டவானின்மின்
விடித்தவாயினிற்றமாமலைக்குலங்களென்னவே. (௯௨)

கோரவாளிசியமீளிகூளியோடுஞாளியும்
போரவாளியேறுதேர்கணூறுகோடிபொன்றுமா
னூரவாளிஞாலவாளிஞானவாளிசாந்தகப்
பாரவாளிவீரவாளிவேகவாளிபாயவே. (௯௩)

ஆழிபெற்றதோழுந்துமாளமூழ்ந்துமாளொடச்
சூழிபெற்றமாவழுந்தும்வாசியுஞ்சரிக்குமால்
பூழிபெற்றவெங்களங்குளம்படப்பொழிந்தபே
ரூழிபெற்றவாழியன்னசோரிநீரிலுள்ளரோ. (௯௪)

அற்றுமேலெழுந்தவன்சிரங்கடம்மையண்மிமே
லொற்றுமென்னவங்குமிங்கும்விண்ணுளோரொடுங்குவார்
சுற்றும்வீழ்தலைக்குலங்கள்சொல்லுகல்லின்மாரிபோ
லெற்றுமென்றுபாரினெங்கும்வாழுவாரிரங்குவார். (௯௫)

மழைத்தமேகம்வாழ்கவென்னவானமானவாடையிற்
சுழித்துவந்துவீழ்வவென்னமண்ணின்மீதுதுன்னுமா
லழித்தொடுங்குகாலமாரியன்னமன்னன்வாளியால்
விழித்தெழுந்துவானினூடுமொய்யபொய்யர்மெய்யெலாம். (௯௬)

வேறு.

தெய்வநெடும்படைக்கலங்கள்விடுவர்சிலர்சுடுகணைகள்சிலையிற்கோலி
யெய்வர்சிலரெறிவர்சிலரெற்றுவர்சுற்றுவர்மலைகள்பலவுமேந்திப்
பெய்வர்சிலர்பிடித்துமெனக்கடுத்துறுவர்படைக்கலங்கள்பெருதுவாயால்
வைவர்சிலர்தெழிப்பர்சிலர்வருவர்சிலர்திரிவர்சிலர்வயவர்மன்னோ. (௯௭)

ஆர்ப்பர்பலரடர்ப்பர்பலரடுத்தடுத்தேபடைக்கலங்களள்ளியள்ளித்
தூர்ப்பர்சிலர்மூவிலைவேறுரப்பர்சிலர்கரப்பர்சிலர்சுடுதீத்தோன்றப்
பார்ப்பர்பலர்நெடுவரையைப்பறிப்பர்பலர்பகலோனைப்பற்றிச்சுற்றுங்
கார்ப்பருவமேகமெனவேகநெடும்படையரக்கர்கணிப்பிலாதார். (௯௮)

எறிந்தனவுமெய்தனவுமெடுத்தனவும்பிடித்தனவும்படைகளெல்லா
முறிந்தனவெங்கணைகள்படமுற்றினசுற்றினதேருமரிமாவும்
நெறிந்தனகுஞ்சிகளோடுநெடுந்தலைகளுருண்டனபேரிருளைநீங்கிப்
பிறிந்தனவெய்யவனென்னப்பெயர்ந்தனன்மீதுயர்ந்ததடம்பெரியதோளான்

சொல்லறுக்கும்வலியரக்கர்தொடுகவசந்துகள்படுக்குந்துணிக்குமாக்கை
வில்லறுக்குந்தலையறுக்குமிடலறுக்குமடலறுக்குமேன்மேல்வீசுங்
கல்லறுக்குமரமறுக்குங்கையறுக்குஞ்செய்யமள்ளர்கமலத்தோடு
நெல்லறுக்குந்திருநாடனெடுஞ்சரமென்றாலெவர்க்குநிற்கலாமோ. (௧௦௦)

காலிழந்தும்வாலிழந்துங்கையிழந்துங்கழுத்திழந்தும்பருமக்கட்டின்
மேலிழந்துமருப்பிழந்தும்விழுந்தனவென்குநரல்லால்வேலையென்ன
மாலிழந்துமையனையமதமிழந்தும்வலியிழந்துமலைபோல்வந்த
தோலிழந்ததொழிலொன்றுஞ்சொன்னார்களில்லைநெடுஞ்சுரர்க்கெல்லாம்.

வேறு. வெல்செல்வனசதகோடிகள்விண்மேனிமிர்விசிகங்
கோல்செல்வனசதகோடிகள்கொலைசெய்வனமலையத்
தோல்செல்வனசதகோடிகடுரகந்தடரிரதக்
கால்செல்வனசதகோடிகளொருவன்னவைகடிவான். (௧௦௨)

ஒருவில்லியையொருகாலையினுலகேழையுமுடற்றும்
பெருவில்லிகண்முடிவில்லவர்சரமாமழைபெய்வார்
பொருவில்லவர்கணைமாரிகள்பொடியாவனபோழ்தத்
திருவில்லிகடலைபோய்நெடுமலைபோலுயிர்சிதைவார். (௧௦௩)

நூறாயிரமதயானையின்வலியோனெனநவல்வோர்
மாறாயினரொருகோல்படமலைபோலுடன்மறிவா
ராறாயிரமுளதாகுதலழிசெம்புனலவையுங்
சேறுதெறிகடல்பாய்வனசினமாகரியினமால். (௧௦௪)

மழுவற்றுகுமலையற்றுகும்வளையற்றுகும்வயிரத்
தெழுவற்றுகுமிலையற்றுகுமெயிறற்றுகுமெழுவேற்
பழுவற்றுகுமதவெங்கரிபரியற்றுகுமிரதக்
குழுவற்றுகுமொருவெங்கணைதொடைபெற்றதொர்குறியால். (௧௦௫)

ஒருகாலையினுலகத்துறுமுயிர்யாவையுமுன்னும்
வருகாலனுமவன்றூதருமன்றுமவ்வளாப்பி
னிருகாலுடையவரியாவருமிரிந்தாரிளைத்திருந்தா
ரருகாயிரமுயிர்கொண்டுதமாறேகலரயர்த்தார். (௧௦௬)

அடுக்குற்றனமதயானையுமழிதேர்களும்பரியுந்
தொடுக்குற்றனவிசும்பூடுறச்சமர்தோங்கினவெனினு
மிடுக்குற்றனகவந்தக்குலமெழுந்தாடலினெல்லாம்
நடுக்குற்றனபிணக்குன்றுகளுயிர்நண்ணினவென்ன. (௧௦௭)

பட்டாருடல்படுசெம்புனறிருமேனியிற்படலாற்
கட்டார்சிலைக்கருஞாயிறுபுரைவான்கடையுகநாட்
சுட்டாசறுத்தலகுன்றுமச்சுடரோனெனப்பொலிந்தா
னெட்டாருடற்குருதிக்குளித்தெழுந்தானையுமொத்தான். (௧௦௮)

தீயொத்தனவுருமொத்தனசரஞ்சிந்திடச்சிரம்போய்
மாயத்தவர்படுகின்றனரெனவும்மறங்குறையார்
காயத்திடையுயிருண்டிடவுடன்மொய்த்தனகளியா
லீயொத்தனவிருநக்குலநறவொத்தனனிறைவன். (௧௦௯)

மொய்த்தாரையொரிமைப்பின்றலைமுடிகத்தொடுசிலையாற்
றைத்தானவர்கழற்றின்பசுங்காயொத்தனர்சரத்தாற்
கைத்தானெடுந்தேருங்கடுங்களியுங்களத்தழுந்தக்
குத்தானழிகுழம்பாம்வகைவழுவாசரக்குழுவால். (௧௧௦)

பரிந்தார்பலரிரிந்தார்பலர்பிலமுழந்தார்பலருழைந்தார்
புரிந்தார்பலர்நெரிந்தார்பலர்புரண்டார்பலருருண்டா
ரெரிந்தார்பலர்கரிந்தார்பலரொழுந்தார்பலர்விழுந்தார்
சொரிந்தார்குடருமிந்தார்தலைதொலைந்தாரெதிர்அடர்ந்தார். (கக௧)

மணிகுண்டலம்வலயங்குழைமகாஞ்சுடர்மகுடம்
அணிகண்டிகைகவசங்கழல்திலகம்முதலகலந்
துணிவுண்டவருடல்சிந்தின அடர்கின்றனசுடருந்
திணிகொண்டலினிடைமின்குலமிளிர்கின்றனசிவண. (கக௨)

முன்னேயுளன்பின்னேயுளன்முகத்தேயுளனகத்தின்
றன்னேயுளன்மருங்கேயுளன்றலைமேலுளன்றலைமேற்
கொன்னேயுளனிலத்தேயுளன்விசும்பேயுளன்கொடியோ
னென்னேயொருகடுப்பென்றிடவிருஞ்சாரிகைதிரிந்தான். (கக௩)

என்னேரினனென்னேரினனென்றியாவருமெண்ணப்
பொன்னேர்வருவரிவிற்கரத்தொருகோளரிபோவா
னுன்னார்பெரும்படைப்போர்க்கடலுறையன்றளவறுதெனிறு
மன்னேரவருடனேதிரிகிழலேயெனலானான். (கக௪)

பள்ளம்படுகடலேழினும்படியேழினும்பகையின்
வெள்ளம்பலவுளவென்னினும்வினையம்பலதெரியாக்
கள்ளம்படர்பெருமாயையிற்கரந்தாருருப்பிறந்தா
ருள்ளன்றியும்புறத்தேயுமுற்றுளனுமெனவுற்றான். (கக௫)

நானாவிதம்பெருஞ்சாரிகைதிரிகின்றதுநவிலார்
போனானிடைபுகுந்தானெனப்புலன்கொள்கிலர்மறந்தார்
தானாவதுமுணர்ந்தானுணர்ந்தலகெங்கணுந்தானே
யானான்வினைதுறந்தானெனவிமையோர்களுமயிர்த்தார். (கக௬)

சண்டக்கடுநெடுங்காற்றிடைதுணிந்தெற்றிடத்தலைமேற்
கண்டப்படுமலைபோனெடுமரம்போற்கடுந்தொழிலோர்
துண்டப்படுகடுஞ்சாரிகைதிரிந்தான்சரஞ்சொரிந்தா
னண்டத்தினையளந்தானெனக்கிளர்ந்தானிமிர்ந்தகன்றான். (கக௭)

களியானையுநெடுந்தேர்களுங்கடும்பாய்பரிக்கணனுந்
தெளியாளியுமுரட்சீயமுஞ்சினவீரர்தந்திறமும்
வெளிவானகமிலதாம்வகைவிமுந்தோங்கியபிழம்பா
னளிமாமலைமலைதாவினனடந்தான்கடல்கிடந்தான். (கக௮)

வேறு.

அம்பரங்கடொடுங்கொடியாடையு
மம்பரங்களொடுங்களியானைக
ளம்பரங்கவழுந்தினசோரியி
னம்பரங்கமருங்கலமாழ்ந்தென. (கக௯)

தம்மனத்திற்சலந்தர்மலைத்தலை
வெம்மையுற்றெழுந்தேறுவமீள்வன
தெம்முனைச்செருமக்கைதன்செங்கையா
லம்மனைக்குலமாடலைபோன்றவே. (௧௨௦)

கேடகங்கணைவங்கையொடுங்கின
கேடகங்கடுணிந்துகிடந்தன
கேடகங்கிளர்கின்றகளத்தெனக்
கேடகங்கண்மறிந்துகிடந்தன. (௧௨௧)

அங்கவெங்களத்தற்றழிதேரொடு
மங்கவெங்களத்தற்றவியுற்றவாற்
புங்கவன்கணைப்புட்டில்பொருந்திய
புங்கவன்கணைப்புற்றரவம்பொர. (௧௨௨)

கயிறுசேர்கழற்கார்நிறக்கண்டக
ரெயிறுவாளிபடத்துணிந்தியானையின்
வயிறுதோறுமறைவனவாளிடைப்
புயெயிறும்புகுவெண்பிறைபோன்றவே. (௧௨௩)

வென்றிவீரரெயிறும்விடாமதக்
குன்றின்வெள்ளிமருப்புங்குவிந்தன
வென்றுமென்றுமனமந்தவிளம்பிறை
யொன்றிமானிலத்துக்கவுமொத்ததால். (௧௨௪)

ஓவிலாருடலுந்துதிரப்புனல்
பாவிவேலையுலகுபரத்தலாற்
றீவுதோறுமினிதுறைசெய்கைய
ரீவிலாதநெடுமலையேறினர். (௧௨௫)

விண்ணிறைந்தனமெய்யுயிர்வேலையும்
புண்ணிறைந்தபுனலினிறைந்தன
மண்ணிறைந்தனபேருடல்வானவர்
கண்ணிறைந்தனவிற்றொழிற்கல்வியே. (௧௨௬)

செறுத்தவீரர்பெரும்படைசிந்தினர்
பொறுத்தசோரிபுகக்கடல்புக்கன
விறுத்துநீரிற்செறிந்தனவெங்கணு
மறுத்துமீன்முதனந்தவனந்தமே. (௧௨௭)

ஆயிரம்பெருவெள்ளமடிபடத்
தேயவிற்பதுபின்னினியென்செயப்
பாயுமுற்றுடனேயெனப்பன்னிரு
ருபகற்கொருதவினையநல்குவான். (௧௨௮)

கோல்விழுந்தழுந்தாதமுன்கூடியா
மேல்விழுந்திடினும்மவன்வீயுமால்
கால்விழுந்தமழையன்னகாக்ஷியர்
மால்விழுந்துளர்போலமயங்கினர். (கஉகூ)

ஒல்வதேயிவ்வொருவனிவ்வூகத்தைக்
கொல்வதேநின்றுகுன்றெனயாமெலாம்
வெல்வதேதுமிலாமையின்வெண்பலை
மெல்வதேயெனவன்னிவிளம்பினான். (கங0)

உற்றுருத்தெழுவெள்ளமுடன்றெழாச்
சுற்றுமுற்றும்வளைந்தவர்தூவினா
ரொற்றைமால்வரைமேலுயர்தாரைகள்
பற்றிமேகம்பொழிந்தனபல்படை. (கஙக)

குறித்தெறிந்தனவெய்தனகூற்றுறத்
தறித்ததேருங்களிறுந்தறைபட
மறித்தவாசிதுணித்தவர்மாப்படை
தெறித்துச்சிந்தச்சரமழைசிந்தினான். (கஙஉ)

வாய்விரித்தெழுபொன்றலைவாளியிற்
போய்விளித்தகுருதிகள்பொங்குவ
பேய்விளிப்பநடப்பனபெட்புறு
தீவிளித்தனதீபகிர்த்தவால். (கஙங)

நெய்கொள்சோரிநிறைந்தபெருங்கட
லையவாடையளன்னசெந்தாளினள்
வையமங்கைபொலிந்தனண்மங்கலச்
செய்யகோலம்புனைந்தன்னசெய்கையாள். (கஙச)

உப்புத்தேன்மதுவொண்டயிர்பால்கரும்
பப்புத்தானென்றுரைத்தனவாழிக
டுப்புப்போற்குருதிப்புனல்சுற்றலொற்
றப்பிற்றவ்வுரையின்றேர்தனுவினால். (கஙரு)

ஒன்றுமேதொடைகோலொருகோடிகள்
சென்றுபாய்வனதிங்களிளம்பிறை
யன்றுபோல்வளைவாகியவச்சிலை
யென்றுமாள்வவெதிர்த்தவிராக்கதர். (கஙகூ)

வேறு.

எடுத்தவரிரைத்தவரெரிந்தவரெதிர்ந்தவர்மறங்கொடெதிரோ
டுடுத்தவர்சலித்தவர்சரிந்தவரிருந்தவர்தனிக்களிறுபோற்
கடுத்தவர்கலித்தவர்கறுத்தவர்செறுத்தவர்கவர்ந்துசரமேற்
றொடுத்தவர்துணித்தவர்தடர்ந்தனர்கிடந்தனர்துரந்தகணையால், (கஙஎ)

தொடுப்பதாயடர்ப்பகழியாயிரங்கோத்தலைதுறந்தறைபோய்ப்
படுப்பதுவயப்பகழியாயிரமாயன்றுபதிலுயிரவனைக்
கடுப்பதுகருத்துமதனாகட்புலன்மனங்கருதல்கையினயில்லே
லெடுப்பதுபடப்பொருவதன்றியவர்செய்வதொருநன்றியுளதோ. (௧௩௮)

அரியொடுநெற்றியிருகையினொடுபேரணிகடைக்குழைதொகுத்
தரிதுழையாவகைசரத்தணிவகுக்குமவையுண்ணுமுயிரா
பாசைகளையுற்றுருவுமப்புறமுமோடுமெதனிப்புறமுளா
ரீசனெதிருற்றுருகுவதல்லதிகன்முற்றுவதொர்கொற்றமெவனோ. (௧௩௯)

ஊனகுவடிக்கணைகளூழியனலொத்தனவலர்த்தவலவைக்
கானகமிகர்த்தனரரக்கர்மலையொத்தனகளித்தமதமா
மானவன்வயப்பகழிவீசுவலையொத்தனவளைப்புனலுள்வாழ்
மீனகுலமொத்தனர்கடற்படையினைத்தொடுவிளிர்ந்துறுதலால். (௧௪௦)

ஊழியிறுதிக்கடுகுமாருதமுமொத்தனனிராமனுடனே
பூழியெனவக்குகுருமால்வரைகளொத்தனராக்கர்பொருவா
ரேழுலகுமுற்றுயிர்கள்யாவையுமுருக்கியிறுதிக்கணின்வரு
மாழியையுமொத்தனனம்மன்னுயிருமொத்தனரலக்குநிருதர். (௧௪௧)

மூலமுதலாயிடையுமாயிறுதியாயெவையுமுற்றுமுயலுங்
காலமெனவாயினனிராமனவரக்கர்கடைநாளில்விளியுங்
கூலமில்சராசரமனைத்தினையுமொத்தனர்குரைக்கடலெழு
மாலமெனவாயினனிராமனவர்மீனமெனவாயினர்களால். (௧௪௨)

வஞ்சவினைசெய்துநெடுமன்னனில்வளமுண்டுகரிபொய்க்குமறமார்
நெஞ்சமுடையோர்கள்குலமொத்தனரரக்கரறமொக்குநெடியோ
னஞ்சவெடுநீதியையுமொத்தனனடுத்ததனைநக்கினையும்
பஞ்சமுறுநாளில்வறியோர்களையுமொத்தனரரக்கர்படுவார். (௧௪௩)

வெள்ளமொருநூறுபடும்வேலையினவ்வேலையுமிலங்கைவெளியும்
பள்ளமொடுமேடுதெரியாதவகைசோர்குருதிபம்பியெழலா
முன்னுமதிலும்புறமுமொன்றுமறியாதலறியோடினர்களாற்
கள்ளநெடுமான்விழியரக்கியர்கலக்கமொடுகால்கள்குலைவார். (௧௪௪)

நீங்கினர்நெருங்கினர்முருங்கினருலைந்துலகினீளுமலைபோல்
வீங்கினர்பெரும்பிணம்விசும்புறவசும்புபடுசோரியருவித்
தோங்கினநெடும்பரவையொத்தயாவெத்திசையுமுற்றெதிருறத்
தாங்கினபடைத்தலைவர்நூறுசதகோடியர்தடுத்தலரிபார். (௧௪௫)

தேருமதமாவும்வரையாளியொடுவாசிமிருசியமுதலா
யூருமவையாவையுநடாவினர்கடாவினர்களுந்தினர்களாற்
காருமுருமேறுமெரியேறுமிகர்வெம்படையொடம்புகடிதிற்
றூரும்வகைசிந்தினர்துரந்தனர்களெய்தனர்தொடர்ந்தனர்களால். (௧௪௬)

வம்மினடவம்மினெதிர்வந்தநமதாருயிர்வாங்கள்பிறவுந்
தம்மினெனவின்னமொழிதந்தெதிர்பொழிந்தனர்தடிப்பரியராய்
வெம்மினெனவெம்பகழிவேலையில்கள்வேலையெனவெய்யவினையோர்
தம்மினமனைத்தையுமுனைந்தெதிர்*தடுத்தனன்றவித்தனியரோ. (௧௪௭)

அக்கணையைக்கணமறுத்தனர்செறுத்திகலாக்கரடராப்
புக்கணையனுற்றனர்மறுத்தனர்மறைத்தனர்புயற்சதிசம்வாளிபொழிவார்
திக்கணைவகுத்தனவெனச்செலநெருக்கினர்செருக்கின்மிகையால்
முக்கணனையுற்றடிவணங்கியிமையோரிவைமொழிந்தனர்களால். (௧௪௮)

படைத்தலைவருற்றொருவர்மும்மடியிராவணனெனும்படிமையோர்
கிடைத்தனரவர்க்கொருகணக்கிலைவளைத்தனர்கிளர்ந்துலகெலா
மடைத்தனர்தெழித்தனரடர்த்தனர்தனித்துளனிராமனவரோ
துடைத்தனமொம்வெற்றியெனவுற்றனரினிச்செயல்பணித்திசுடரோய்.

எய்தகணையெய்துவதன்முன்பிடையறுத்திவர்களேழுலகமும்
பெய்தகணைமாமுகிலெனப்புடைவளைத்தனர்பிடித்தனர்கள்போல்
வைதகலினல்லதுமறப்படைகொடிப்படைகடக்கும்வலிதான்
செய்ததிருமாலுடனுனக்குமரிதென்றனர்திகைத்தவிழுவார். (௧௫௦)

அஞ்சலினியாங்கவர்களைத்தனையராயிடினுமத்தனைவரும்
பஞ்சியெரியுற்றதெனவெந்தழிவரிந்தவுரைபண்டுமுளதா
னஞ்சமமிர்த்தத்தைநனிவென்றிடினுநல்லறநடக்குமதனை
வஞ்சவினைபொய்க்கருமம்வெல்லினுமிராமனையம்மாயர்கடவார். (௧௫௧)

அரக்கருளரார்சிலரவிடணனலாதுலகினுவியுடையா
ரிரக்கமுளதாகினதுநல்லறமெழுந்துவளர்கின்றதினிநீர்
கரக்கமுறைதேடியுழல்கின்றிலிர்களின்றொருகடும்பகலிலே
குரக்கின்முதலுயகனையாளுடையகோளுழுவைகொல்லுமிவனை. (௧௫௨)

என்றுபரமன்பகரநான்முகனுமன்னபொருளேயிசைத்தலும்
நின்றுநிலையாதினர்கள்வானவருமானவனுநேமியெனலாத்
துன்றுநெடுவாளிமழைமாரியினுமேலனதுரந்துவிசைவிற்
குன்றுகுலமால்வரைகண்மானுதலைமாமலைகுவித்தனனரோ. (௧௫௩)

வேறு.

மகரமறிகடலில்வளையும்வயவிருதர்
சிகரமனையவுடல்சிதறியுருளவுயிர்
பகரவரியபதம்விரவவமரர்பழ
நகரமிடமருகநவையர்நலிவுபட. (௧௫௪)

உகளுமிவுளிதலைதுமியவுறுகழல்க
டகளியுறவலியதலைகளறுதலைவர்
துகளினுடல்கள்விழவுயிர்கள்சுரருலகின்
மகளிர்வனமுலைகடழுவியசமகிழ. (௧௫௫)

---

* தடுத்தனவெனவும்பாடம்.

மலையுமரிகடலும்வனமுமருகிலமு
முலைவிலைமரருறையுலகுமுயிர்களொடு
தலையுமுடலுமிடைதழுவுதவழ்குருதி
யலையுமரியதொருநிலைசயுமிலதருகு. (கருசு)

இலையசெருநிகழுமளவினெதிர்பொருத
விலையமுடைமுதல்வரெவருமுடன்விளிய
வலையபடைதெளியவமரர்சொரிமலர்க
ளலையவிசையினெமுறுவலைமழைநலிய. (கருஎ)

இரியலுறுபடையையிருதரிடைவிலகி
யெரிகள்சொரியுநெடுவிழியரிமுகதயர்க
டிரிகதிரிகவெனவுரறுதெழிகுரலர்
கரிகளரிகள்பரிகடிநினெதிர்கடவ. (கருஅ)

உலகுசெவிடுபடமழைகளுதிரவுய
ரலகினிலைகுலையவமரர்தலையதிர
விலகுதொடுபடைகளிடியொடுருமனைய
விலகியநுதியிலம்விலையும்வகைவிலைய. (கருகூ)

அழிதழிதெனவழகனுவகையொடு
பழகுமகிதியவரையெதிர்கொள்பரிசுபட
விழைவியெதிரெதிர்களெரிகள்விரிபகழி
மழைகண்முறைசொரியவமரர்மலர்சொரிய. (கசுo)

தினகரனையனையகொடிகடிசைகளொடு
மனகசனியிலகுவயிரயிலதனுக
வனகநெடுமமரின்முடுகியெதிரவெழு
கனகவரைபொருவுகடியபரியிரதம். (கசுக)

பாறுபடுசிறகுகழுகுபகழிபட
நீறுபடுபிரதநிரையிறுடறவிர
வேறுபடர்படரவிரவிசுடர்வலைய
மாறுபடவுலகின்மலைகளறுபட. (கசுஉ)

அருகுகடறிரியவலகின்மலைதிரிய
வருகுசுடர்களிடைதிரியவுரனுடைய
விருளையொருகளிறுதிரியவிடுகுயவர்
திரிகையெனவுலகுமுழுதுமுறைதிரிய. (கசுங)

சிவனுமயனுமெழுதிகிரியமரர்பதி
யவனுமமரர்குலமெவருமுனிவரொடு
கவனமுறுகரணமிடுவகழுகினமும்
நமனும்வரிசிலையுமறனுநடனவில. (கசுச)

தேவர்திரிபுவனதலையர்செருவிறலை
யேவரிவருவரிவதிமுதலறிவின்
மூவர்தலைகள்பொதிரொறிவாறமுதல்வ
நூலைவிறவவெனவேதமுறைபுகழ. (கசுரு)

எய்யுமொருபகழியேழுகடலுமிடு
வெய்யகளிறுபரியாளொடிரதம்விழ
வொய்யவொருகதியினோடவுணரமரர்
தைகளெனவவுணர்கால்கள்கதிலைவ. (கசுசு)

அண்ணல்விடுபகழியானையிரதமயல்
பண்ணுபுரவிபடைவீரர்தொகுபகுதி
புண்ணினிடுகுறிகள்புள்ளியெனவிளாவி
னெண்ணுவனவனையவெல்லையினினுழைவ. (கசுஎ)

வேறு.

சுருக்கமுற்றதுபடைசுருக்கத்தாலினிக்
காக்கமுற்றொருபுறத்தென்னுங்கண்ணிறு
லரக்கருக்கன்றுசெல்வரியவாம்வகை
சரக்கொடுநெடுமதில்சமைத்திட்டானரோ. (கசுஅ)

மாலியைமாலியவானைமால்வரை
போலுயர்கயிடனைமதுவைப்போன்றுளார்
சாலிகையாக்கையர்தணிப்பில்வெஞ்சர
வேலியைக்கடந்திலருலகைவென்றுளார். (கசுகூ)

மாண்டனர்மாண்டனர்மற்றுளோரெலா
மீண்டனரொருதிசையேழுவேலையு
மூண்டறமுருங்கியவூழிக்காலத்திற்
றாண்டுறுசுடர்சுடச்சுருங்கித்தொக்கபோல். (கஎ0)

புரஞ்சுடுகடவுளும்புள்ளின்பாகனு
மாஞ்சுடுகுலிசவேலமரர்வேந்தனு
முரஞ்சுடுகிற்கிலரொருவனுமுடை
வரஞ்சுடும்வலிசுடும்வாழுநாள்சுடும். (கஎக)

ஆயிரம்வெள்ளமுண்டொருவராழிசூழ்
மாயிருஞாலத்தைமறிக்கும்வன்மையோர்
மேயினபெரும்படையதனையோர்விலா
லேயெனுமாத்திரத்தெய்துகொன்றனன். (கஎஉ)

இடைபடும்படாதனவிமைப்பிலோர்படை
புடைபடுவலங்கொடுவிலங்கிப்போகுமாற்
படைபடுங்கோடியோர்சாத்திறற்பழிக்
கடைபடுமரக்கர்தம்பிறவிக்கட்டமால். (கஎங)

பண்டலைருய்த்தவனேரும்பண்ணமை
ருண்டையின்பாகனும்பிறருங்கூடினு
ரண்டர்கள்விசும்பினின்றார்க்கின்றருமைமுத்
கண்டிலையிவனெனுமாயக்கள்வனால். (௧௭௪)

கொன்றனனினியொருகோடிகோடிமற்
றன்றெனிற்பதுமமன்றுகில்வெள்ளமாம்
நின்றதின்றினிவிலைவதென்பிற
வென்றனனுணர்கெனவன்னியோதினான். (௧௭௫)

விழித்துமோவிராவணன்முகத்துமீண்டியாம்
பழித்துமோநம்மைநாம்படுத்தலஞ்சினா
மழித்துமோர்பிறப்புறுநெறிசென்றண்மையாங்
கழித்துமிவ்வாக்கையைப்புகழைக்கண்ணுறு. (௧௭௬)

இடுக்கினிப்பெயர்த்துணையெண்ணுவோமெனி
னடுத்தகூர்வாளியினாணைநீங்கலா
மெடுத்தொருமுகத்தினாலெய்தியாமினிக்
கொடுத்துநம்முயிரெனவொருமைகூறினார். (௧௭௭)

இளக்கருநெடுவரையீர்க்குமாறன
வளக்கரிற்பாய்ந்தெனப்பதங்கமாரழல்
விளக்கினில்வீழ்ந்தெனவிதிகொண்டுந்தலால்
வளைத்தினாத்தடர்த்தனர்மலையின்மேனியார். (௧௭௮)

மழுவெழுத்தண்டுகோல்வலையநாஞ்சில்வா
ளெழுவயிற்குலிசவேலீட்டிதோமரங்
கழுமுதற்கற்பணமுதலகைப்படை
தொழுவிடைப்புலியனானுடலிற்றூவினார். (௧௭௯)

காந்தருப்பம்மெனுங்கடவுண்மாப்படை
வேந்தருக்கரசனும்வில்லினாக்கினான்
பாந்தளுக்கரசெனப்பறவைக்கேறெனப்
போக்குருத்தனநெருப்பனையபொற்கணை. (௧௮0)

மூன்றுகண்ணமைந்தனவைமுகத்தன
வான்றருநெய்கனல்புனலுமாடின
வான்றொடர்மிர்வனவாளிமாமழை
தோன்றியபுரஞ்சுடுமொருவன்றோற்றத்த. (௧௮௧)

ஐயிருகோடியராக்கர்வேந்தர்கள்
மெய்வலிவீரர்களொழியமுற்றுற
வெய்யெனுமாத்திரத்தவிந்ததென்பராற்
செய்தவத்திராவணன்மூலச்சேனையே. (௧௮௨)

மாப்பெருந்தீவுகளேழுமாத்திரப்
பாப்பரும்பாதலத்துள்ளும்பல்வகைக்
காப்பருமலைகளும்பிறவுங்காப்பவ
ராப்புறுகாதலரிராவணற்கவர். (௧௱௩)

மாத்தடமேருவைவளைந்தவான்சுடர்
கோத்தகன்மார்பிடையணியுங்கொள்கையார்
பூத்தவிசுகந்தவன்புகன்றுபொய்யறு
நாத்தழும்பேறியவரத்தைநண்ணினார். (௧௱௪)

நம்மினின்றொருவனைவெல்லுநன்றெனில்
வெம்முனையிராவணன்றனையும்வெல்லுமா
லிம்மெனவுடனெடுத்தெழுந்துசேறுமோ
செம்மையிற்றனித்தனிச்செய்துமோசெரு. (௧௱௫)

வேறு.

எல்லோமெல்லோமின்றுவளைத்திந்நெடியோனை
வல்லோம்வல்லபோர்வளமுற்றிமலையோமேல்
வெல்லோம்வெல்லோமென்றனன்வன்னிமிடலோருந்
தொல்லோய்சொல்லேநன்றெனவஃதேதுணிவுற்றார். (௧௱௬)

அன்னார்தாமுமார்கலியேழுமெனவார்த்தார்
மின்னார்வானமிற்றுறுமென்றேவிளிசங்கங்
கொன்னேயூதித்தோள்புடைகொட்டிக்கொடுசேர்ந்தா
லென்னும்வையமென்படும்வானந்திசையெல்லாம். (௧௱௭)

ஆர்த்தாரன்னாரன்னகணத்தேயவராற்ற
றீர்த்தானுந்தன்வெஞ்சிலைநாணைத்தெறிவுற்றான்
பேர்த்தான்பேர்த்தான்முற்றுமளந்தான்பிறழ்சங்க
மார்த்தாலொத்ததவ்வொலியெல்லாவுலகுக்கும். (௧௱௮)

வேறு.

பல்லாயிரகோடியர்பல்கலைநூல்
வல்லாரவர்மெய்ம்மைவழங்கவலா
ரொல்லாவுலகங்களுமேறியபோர்
வில்லாளரரக்கரின்மேதகையார். (௧௱௯)

வென்றாருலகங்களைவிண்ணவரோ
டொன்றாவுயர்தானவர்யூகமெலாங்
கொன்றார்நிமிர்கூற்றெனவெவ்வுயிருந்
தின்றாரெதிர்சென்றுசெறிந்தனரால். (௧௧௦)

வளைத்தார்மதயானையைவன்றொழிலிற்
றளைத்தாரெனவந்துதவித்தனியே
யுளைத்தாருருமேறெனவொன்னலர்போர்
விளைத்தாரிமையோர்கள்வெதும்பினரால். (௧௧௧)

திட்டையழங்கியவெம்படையிற்
கட்டையயிர்ந்தனடர்ச்சுடருங்
கட்டையுமொருங்குகலந்தெழலா
லட்டையுறவெந்தனவேழளரும். (௧௯௨)

தோரர்ப்பொலிவீரர்தெழிப்பொலியுந்
தாரரர்ப்பொலியுங்கழருக்கொலியும்
போரார்ச்சிலைநாணிபுடைப்பொலியுங்
காரார்ப்பொலியுங்களிறார்ப்பொலியும். (௧௯௩)

எல்லாருமிராவணனேயனையார்
வெல்லாவுலகில்லவர்மெய்வலியோர்
தொல்லார்படைவந்துடர்ந்ததெரு
கல்லாறுமுருத்தெதிர்கண்ணினரால். (௧௯௪)

ஊழிக்கனல்போலவருந்தினபோ
ராழிப்படையம்பொடுமற்றகலப்
பாழிக்கடனான்விடுபண்மழைபோல்
வாழிச்சுடர்வாளிவழங்கினரால். (௧௯௫)

ருரோடுருடர்ந்தசுடர்க்கணைதான்
ருரோடகலங்கடிந்திடலுங்
தேரோடுமடிந்தனர்செங்கதிரோ
னாரோடுமடிந்தனவொத்தாவோர். (௧௯௬)

கொல்லோடுசுடர்க்கணைகூற்றினைப்
பல்லோடுருடர்ந்தனபாய்தலினாற்
செல்லோடெழுமாமுகில்சிந்தினபோல்
வில்லோடும்விழுந்தயிடற்கரமே. (௧௯௭)

செம்போடுதிரத்திரையாழியின்வாய்
வெம்போடரவக்குலமேனியிருங்
கொம்போடும்விழுந்தனவொத்தகுறைத்
தம்போடுவிழுந்தவடற்கரமே. (௧௯௮)

முன்றேடுதிரப்புனன்மூவுலகைப்
பின்றேடிவளர்ந்தபெருங்கடல்வாய்
மின்றேடும்விழுந்தனமேகமெனப்
பொன்றோடைநெடுங்கிரிபுக்கனவால். (௧௯௯)

மறவெற்றியரக்கர்வலக்கையொடும்
நறவக்குருதிக்கடல்வீழ்நகைவாள்
சுறவொத்தனமீதாடித்தெழலா
லிறவொத்தனவாவுமினப்பரியே. (௨௦௦)

தாமச்சுடர்வாளிதடிந்தகலப்
பாமக்குருதிப்படியின்றபடைச்
சேமப்பிடிகேடகமால்கடல்சே
ராமைக்குலமொத்தனவத்தனையால். (௨௦௧)

காம்போடுபதாகைகள்காருதிரப்
பாம்போடுகெடப்படிவுற்றனவால்
வாம்போர்நெடுவாடைமலைத்தகலக்
கூம்போடுயர்பாய்கள்குறைந்தனபோல். (௨௦௨)

மண்டப்படுசோரியின்வாரியின்வீழ்
கண்டத்தொகைகவ்வியகாலொடுதோள்
முண்டத்திரிதண்டின்முரட்டொருவன்
றுண்டச்சுறவொத்ததுடித்தனவால். (௨௦௩)

தெளிவுற்றபளிங்குறுசில்லிகொடேர்
விளிவுற்றாகவேறுறவீழ்வனதா
மளிபெற்றாகுசோரியவாழியிலா
மொளிமுற்றியதிங்களையொத்துளவால். (௨௦௪)

நிலைகோடலில்வென்றியரக்கரானேர்
கொலைகோடலின்மன்குதிகோளுறுமேற்
சிலைகோடியதோறுசினத்தினவன்
மலைகோடியின்மேலுமதிந்திடுமால். (௨௦௫)

திண்மார்பின்மிசைச்செறிசாலிகையிற்
கண்வாளிகடைச்செறிகானாறுமைழந்
தெண்வாயுறமொய்த்தனவின்னறைபுற்
றுண்வாய்வரிவண்டினமொத்தனவால். (௨௦௬)

பாறுடுகளத்தொருவன்பகலிற்
கூறாகியநாலிலொர்கூறிடையே
நூறாயினயோசனைநாழிகள
மாறாதழல்சாரிகைவந்தனனால். (௨௦௭)

நின்றாருடனின்றுநிமிர்ந்தபலே
சென்றாரெதிர்சென்றுசிதைத்திடலாற்
றன்றாதையையோர்வுறுதன்மகனே
கொன்றானிவனென்பதெனென்றுகொள்வார். (௨௦௮)

இங்கேயுளனிங்குளனிங்குளனென்
றங்கேயுணர்கின்றவலந்தலைவாய்
வெங்கோபநெடும்படைவெஞ்சரம்விட்
டெங்கேனும்வழங்குவரோருவரால். (௨௦௯)

ஒருவனெனவுன்றுமுணர்ச்சியிலா
திரவன்றிஅவோர்பகலென்பர்களாற்
கரவன்றியிராமர்கணக்கிலவாம்
பரவைமணலிற்பலரென்பர்களால். (௨௧௦)

ஒருவனொருவன்மலைபோலுயர்வோ
னொருவன்படைவெள்ளமொராயிரமே
வொருவனொருவனுயிருண்டதலா
லொருவனுயிருண்பதுமுள்ளதுவோ. (௨௧௧)

தேர்மேலுளர்மாவொடுசேர்ந்துகட்
கார்மேலுளர்மாகடன்மேலுளரிப்
பார்மேலுளரும்பர்பரந்துளராற்
போர்மேலவிராமர்புகுந்தவோர். (௨௧௨)

என்னும்படியெங்கணுமெங்கணுமாய்த்
துன்றுஞ்சுழலுந்திரியுஞ்சுடரும்
பின்னும்மருளும்முடலும்பிரியான்
மன்னன்மகன்வீரர்மயங்கினரால். (௨௧௩)

வேறு.

படுமதகரிபரிசிந்தினபணிவளையிரதமவிந்தன
விடுதிசைசெவிடுபிளந்தனவிரிகடலளறதெழுந்தன
விடுபுலியவுணர்தமங்கையரலர்விழியருவிகள்சிந்தின
கடுமணிநெடியவெனுஞ்சிலைகணைகணைகணையெனுந்தொறும். (௨௧௪)

வேறு.

ஊனேறுபடைக்கைவீரரொதிரொதிருருவந்தோறுங்
கூனேறுசிலையுந்தானுங்குதிக்கின்றகடுப்பின்கொட்பால்
வானேறினார்கட்கேருமலைகின்றவயவர்தேருந்
தானேறிவந்ததேரேயாக்கினான்றனியேதன்றன். (௨௧௫)

காயிருஞ்சிலையொன்றேனுங்கணைப்புட்டில்காண்டுமேலுந்
தூவெழுபகழிமாரிமழைத்துவித்தொகையின்மேல
வாயிரங்கைகள்செய்தசெய்தனவமலன்செங்கை
யாயிரங்கையுங்கூடியிரண்டுகையானதன்றே. (௨௧௬)

பொய்யொருமுகத்தனுமெனிதராம்புணர்ப்பிதன்றால்
மெய்யுறவுணர்ந்தோம்வெள்ளமாயிரமிடைந்தசேனை
செய்யுறுவிசயமெல்லாமொருமுகந்தெரிவதன்றே
யையிருநூறுமல்லவனந்தமாமுகங்களம்மா. (௨௧௭)

கன்றுதற்பரமன்றானுநான்முகக்கடவுடானும்
என்றுந்துடரவெய்தகோலெனவென்னலுற்றார்
பன்னியல்வருக்கமாட்டார்தவித்தவிபார்க்கலுற்று
றொன்றுமோகணிக்கவென்பாருவகையினுயர்ந்ததோளார். (௨௧௮)

வெள்ளமீரொந்நூறேவிடுகணையவற்றின்மெய்யே
யுள்ளவாறுளவாமென்றேருணோக்கணக்குணர்துமேனுங்
கொள்ளையோருருவைநூறுகொண்டனபலவாற்கொற்ற
வள்ளலேவழங்கினானேயென்றனர்மற்றைவானோர். (உகக)

குடைக்கெலாங்கொடிகட்கெல்லாங்கொண்டனகுவிந்தகொற்றப்
படைக்கெலாம்பகழிக்கெல்லாம்யானைதேர்பரிமாவாதிக்
கடைக்கெலாந்தூரந்தவாளிக்கணித்தநிற்களவைகாட்டி
யடைக்கெலாமறிஞர்யாரோயென்றனர்முனிவரப்பால். (உஉ0)

கண்டத்துங்கழுத்துமீதாய்க்கபாலத்துங்கடக்கலுற்ற
சண்டப்போரரக்கர்தம்மைத்தொடர்ந்துகோல்புணருந்தன்மை
பிண்டத்திற்கருவார்தன்பேருருக்களைப்பிரமன்றந்த
வண்டத்தைநிறையப்பெய்துகுலுக்கியதனையதான. (உஉக)

கோடியையிரண்டுதொக்கபடைக்கலமள்ளர்கூடி
யோடியோர்பக்கமாகவுயிரிழந்துலர்தலோடும்
வீடின்றழிவதென்னேவிண்ணவர்படைகள்வீசி
மூடுதுமிவனையென்றியாவருமூண்டுமொய்த்தார். (உஉஉ)

விண்டுவின்படையேயாதிமேவயன்படையீறாகக்
கொண்டொருங்குடனேவிட்டார்குலுங்கியதமரர்கூட்ட
மண்டமுங்கீழமேலாவாகியததனையண்ணல்
கண்டொருமுறுவல்காட்டியவற்றினையவற்றாற்காத்தான். (உஉங)

தானவைதொடுத்தபோதுதடுப்பரிதலகந்தானே
பூநிவடவைத்தீயிற்புக்கெனப்பொரிந்துபோமென்
றுன்றுமறந்தவள்ளலளப்பருங்கோடியம்பா
லேனையர்தலைகளெல்லாமிடியுண்டமலையினிட்டான். (உஉச)

ஆயிரம்வெள்ளத்தோருமடுகளத்தவிந்துவீழ்ந்தார்
மாயிருஞாலத்தாடன்வன்பொறைப்பாரநீங்கி
மீயுயர்ந்தெழுந்ததன்றேவீங்கொலிவேலையின்றும்
போயொருகண்டத்தோடுங்கோடியோசனைகள்பொங்கி. (உஉரு)

வேறு.

ஆனையாயிரந்தேர்பதினாயிரமடர்பரியொருகோடி
சேனைகாவலராயிரம்பேர்படிற்செழுமணிக்கவந்தமொன்றுடுங்
கானமாயிரமாயிரகோடிக்குக்கவின்மணிகணிலென்னும்
ஏனவம்மணியேழரைநாழிகையாடியதினிதன்றே. (உஉசு)

வேறு.

நினைந்தமுடித்தோமென்னவானவர்துயரநீத்தார்
புனைந்தனன்வாகையென்றுவிந்திரனுவகைபூத்தான்
வனைந்தனவல்லாவேதம்வரம்புபெற்றுயர்ந்தமாதோ
வனந்தனுந்தலைகளேந்தியயர்வுயிர்த்தவலந்தீர்ந்தான். (உஉஎ)

தாய்படைத்துடையசெல்வமீதெனத்தம்பிக்கீந்து
வேய்படைத்துடையகானம்பின்னவர்தவத்தின்மேவி
தோய்படைத்தொழிலோரியார்க்குந்துயர்துடைத்தானைநோக்கி
வாய்படைத்துடையாரெல்லாம்வாழ்த்தினர்வணக்கஞ்செய்தார். (உஉஅ)

தீமொய்த்தவனையசெங்கணரக்கரைமுழுதுஞ்சிந்திப்
பூமொய்த்தகரத்தாகிவிண்ணவர்போற்றநின்றான்
பேய்மொய்த்துநரிகளீண்டிப்பெரும்பிணம்பிறங்கித்தோன்று
மீமத்துட்டமியனின்றகறையிடற்றிறைவனொத்தான். (உஉகூ)

அண்டமர்க்களமும்வீய்ந்தவரக்கரொவ்வுயிருமாகக்
கொண்டதோருருவந்தன்னுவிறுதிநாள்வந்துகூட
மண்டுநாண்மதிக்குங்கோட்டமன்னுயிரனைத்தும்வாரி
யுண்டவன்றனேயானதன்னொருமூர்த்தியொத்தான். (உ௩௦)

ஆகுலந்துறந்ததேவரள்ளினர்சொரிந்தவெள்ளச்
சேகறுமலருஞ்சாந்துஞ்செருத்தொழில்வருத்தந்தீர்க்க
மாகொலைசெய்தவள்ளல்வாளமர்க்களத்தைக்கைவிட்
டேகினனிளவலோடுமிராவணனேற்றபோர்மேல். (உ௩க)

இவ்வழியியன்றதெல்லாமியம்பினுமிரிந்துபோன
தெவ்வழியாற்றல்வெற்றிச்சேனையுஞ்செலவுஞ்சென்ற
வெவ்வழியரக்கர்கோமான்செய்கையுமினையவீர
னெவ்வமிலாற்றற்போருமுற்றுநாமியம்பலுற்றாம். (உ௩உ)

பெரும்படைத்தலைவர்யாரும்பெயர்ந்திலர்பெயர்ந்துபோய்நாம்
விரும்பினம்வாட்கையென்றால்யாரிடைவிலக்கற்பாலார்
வரும்பழிதுடைத்தும்வானின்வைகுதும்யாமுமென்று
விருங்கடல்பெயர்ந்ததென்னத்தானையுமீண்டதிப்பால். (உ௩௩)

மூலபெலவதைப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௩௪௭.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௩க-வது—வேலேற்றபடலம்.

வில்லியாயிரஞ்சில்லுளைப்பரியொடுஞ்செறிந்த
வெல்லவாங்கதிர்மண்டிலமாறகொண்டிமைக்குஞ்
செல்லுந்தேர்மிசைச்சென்றனன்றேவரைத்துலைத்த
வில்லும்வெங்கணைப்புட்டிலுங்கொற்றமும்விளங்க. (க)

ஆறுகோடிதேர்நொதில்பரிநூற்றிருகோடி
யாறுபோன்மதமாகரியையிருகோடி
யேறுகோளுறுபதாதியுமிவற்றிவற்றிரட்டி
தேறுகோளரியேறனானுடனன்றுசென்ற. (உ)

றூன்றுலைவப்பிறுமப்புறத்துலகினுமுனையி
னேன்றுகோளுறும்வீரர்கள்வம்பினென்றிசைக்கு
மான்றபேரியுமதிர்குரற்சங்கமுமசனி
யீன்றகாளமுமேழொடேழுலகமுமிசைப்ப. (௩)

அனையவாயவரக்கர்க்குமரக்கனையவுணர்
வினையைவானவர்வெவ்வினைப்பயத்தினைவீரர்
நினையுநெஞ்சினைச்சுடுவதோர்நெருப்பினைநிமிர்ந்து
கனையுமெண்ணையுங்கடப்பதோர்கடலினைக்கண்டார். (௪)

கண்டுதைகளோடணிவகுத்துருமுறழ்கற்கள்
கொண்டுகூற்றமுமடுக்குறத்தோள்புடைகொட்டி
அண்டகோளங்களடுக்கழிந்துலைவுறவார்த்தார்
மண்டுபோரிடைமடிவதேநலமெனமதித்தார். (௫)

அரக்கன்சேனையுமாருயிர்வழங்குவானமைந்த
குரக்குவேலையுமொன்றொடொன்றெதிரெதிர்கோத்து
நெருக்கிநேர்ந்தனநெருப்பினைமைபொடித்தனநெருப்பி
னுருக்குசெம்பெனவம்பரத்தோடினகுதிரம். (௬)

அற்றவன்றலையறுகுறையெழுந்தெழுந்தண்டத்
தொற்றைவானகமுதையமண்டிலமெனவொளிரச்
சுற்றுமேகத்தைத்தோற்றியகுருதிநீர்துளிப்ப
முற்றும்வையகம்போர்க்களமாமெனமுயல. (௭)

தூவியம்படையரியினமரிதரச்சூழித்
தூவியம்படைசோர்ந்தெனச்சோரியுட்சுழிப்ப
மேவியம்படைபடப்படக்குருதியின்வீழ்ந்த
மேவியம்படைக்கடலிடைக்குடரொடுமிதந்த. (௮)

கண்டிறந்தனர்கணவர்தம்முகத்தவர்முறுவல்
கண்டிறந்தனர்மடந்தையருயிரொடுங்கலந்தார்
பண்டிறந்தனபழம்புணர்வகம்புகப்பன்னிப்
பண்டிறந்தனபுலம்பொலிசிலம்பொலிபணிப்ப. (௯)

ஏழுமேழுமென்றுரைக்கின்றவுலகங்கள்யாவு
மூழிபோவதேயொப்பதோருலைவுறவுடற்று
னூழில்வெஞ்சமநோக்கியவிராவணனுவன்றன்
ருழிலென்படைதருக்கறுமென்பதோர்தன்மை. (௰)

மரமுங்கல்லுமேவில்லொடுவாண்மழுச்சூல
மரமுங்கல்லும்வேன்முதலியவியற்படையடுக்கிச்
சிரமுங்கல்லெனச்சிந்தலிற்சிதைந்ததச்சேனை
யுரமுங்கல்வியுமுடையவன்செருவின்றதொருபால். (௧௧)

அழலுங்கட்களிறணியொடுதுணிபடுமாவி
கழலும்பல்பரித்தேரொடுபுரவியுஞ்சுற்றக்
கழலுஞ்சோரிநீரற்றெருடுன்கடலிடைக்கலக்குங்
குழலுமூலும்போலனுமறுந்தாறுமக்கும்ரன். (கஉ)

வில்லுங்கூற்றுவற்குண்டெனத்திரிகின்றவீரன்
கொல்லுங்கூற்றெனக்குறைக்குமிங்கிறைப்பெருங்குழுவை
யொல்லுங்கோளரியுருமன்னகுரக்கினதுகிரும்
பல்லுங்கூர்க்கின்றகூர்கிலாவரக்கர்தம்படைகள். (கங.)

கண்டுநின்றிறைப்பொழுதினிக்காலத்தைக்கழிப்பி
னுண்டுகைவிடுங்கூற்றுவனிருந்தபேருயிரா
மண்டுவெஞ்செருநாளொருகளத்திடைமடித்தே
கொண்டுமீள்துவன்கொற்றமென்றிராவணன்கொதித்தான். (கச)

ஊதைபோல்வனவுருமுளதிறலனவுருவிப்
பூதலங்களைப்பிளப்பனவண்டத்தைப்பொதுப்ப
மாதிரங்களையளப்பனமாற்றருகூற்றின்
றூதுபோல்வனகடுங்கணைமுறைமுறைதூர்ந்தான். (கரு)

ஆளிபோன்றுளனெதிர்ந்தபோதமர்க்களத்தடைந்தார்
நாளிபோன்றுளதென்பதெனள்ளிருளடைந்த
காளிபோன்றனனிராவணன்வெள்ளிடைக்கரந்த
பூளைபோன்றதப்பொருசினத்தரிகடம்புணரி. (கசு)

இரியல்போகின்றசேனையையிலக்குவன்விலக்கி
யரிகளஞ்சன்மினஞ்சன்மினென்றருள்வழங்கித்
திரியுமாருதிதோளெனுந்தேர்மிசைச்சென்று
னெரியும்வெஞ்சினத்திராவணனெதிர்புகுந்தேற்றான். (கஎ)

எற்றுக்கோடலுமிராவணனெரிமுகப்பகழி
நூற்றுக்கோடியின்மேற்செலச்சிலைகொடுதூக்கக்
காற்றுக்கோடியபஞ்செனத்திசைதொறுங்கரக்க
வேற்றுக்கோல்கொடுவிலக்கினனிலக்குவன்விசையால். (கஅ)

விலக்கினான்றடந்தோளினுமார்பினும்விசிக
முலக்கவுய்த்தனனிராவணனெந்தொடைதூருவக்
கலக்கமுற்றிலனிளவலுமுள்ளத்திற்கனன்று
னலக்கணெய்துவித்தானடலரக்கனையம்பால். (ககூ)

காக்கலாகலாக்கடுப்பினிற்றொடுப்பனகணைக
ளாக்கினான்கணைநூறுக்கினனாக்கனுநாழி
லாக்கும்வெஞ்சமத்தரிதிவன்றனைவெல்வதம்மா
நீக்கியென்னினிச்செய்வதென்றிராவணனினைந்தான். (உ0)

கடவுண்மாப்படைதொடுக்கின்மற்றவைமுற்றுங்கடக்க
விடவுமாற்றவும்வல்லனேல்யாரையும்வெல்லும்
திடவுமாற்றலைக்கூற்றையுந்தமையனைப்போலச்
சுடவுமாற்றுமெவ்வுலகையுமவனுக்குந்தோலான். (உக)

மோகமொன்றுண்டுமுதலவன்வகுத்ததுமுன்னா
ளாகமற்றதுகொற்றமுஞ்சிவன்றனையழிப்ப
தேகமுற்றியவிஞ்சையையிவன்வயினேவிக்
காகமுற்றுறழ்களத்தினிற்கிடப்பனகடிதின். (உஉ)

என்பதுன்னியவிஞ்சையைமனத்திடையெண்ணி
முன்பன்மேல்வரத்தூண்டினனதுகண்டுமுடுகி
யன்பின்வீடணனாழியான்படையினிலறுத்தி
யென்பதோதினனிலக்குவனதுதொடுத்தெய்தான். (உங)

வீடணன்சொலவிண்டுவின்படைக்கலம்விட்டான்
மூடுவெஞ்சினமோகத்தைநீக்கலுமுனிந்தான்
மாடுநின்றவனுபாயங்கண்மதித்திடவந்த
கேடுநந்தமக்கென்பதுமனங்கொண்டுகிளர்ந்தான். (உச)

மயன்கொடுத்ததுமகளொடுவயங்கனல்வேள்வி
யயன்படைத்துளதாழியுங்குலிசமுமனைய
துயர்ந்தகொற்றமுமூழியுங்கடந்துளதுருமிற்
சயந்தனைப்பொருந்தம்பியையுயிர்கொளச்சமைந்தான். (உரு)

விட்டபோதினிலொருவனைவீட்டியேமீளும்
பட்டபோதவனான்முகனாயினும்படுக்கும்
வட்டவேலதுவலங்கொடுவாங்கினன்வணங்கி
யெட்டநிற்கலாத்தம்பிமேல்வல்விசைத்தெறிந்தான். (உசா)

எறிந்தகாலையில்வீடணனதனையெல்லா
மறிந்தசிந்தையனயவிதென்னுயிரழிக்கும்
பிறிந்துசெய்யலாம்பொருளில்லையென்றலும்பெரியொ
னறிந்துபோக்குவனஞ்சனீயென்றிடையணைந்தான். (உஎ)

எய்தவாளியுமேவினபடைக்கலம்யாவுஞ்
செய்யமாதவத்தொருவனைச்சிறுதொழிற்றீயோன்
வைதவைவினிலொழிந்தனவீடணன்மாண்டா
னுய்தலில்லையென்றும்பரும்பெருமனமுலைந்தார். (உஅ)

தோற்பனென்னினும்புகழ்நிற்குந்தருமமுந்தொடரு
மார்ப்பர்நல்லவரடைக்கலம்புகுந்தவனழியப்
பார்ப்பதென்னெடும்பழிவந்துதொடர்வதன்முன்ன
மேற்பனென்றனிமார்பினென்றிலக்குவனெதிர்ந்தான். (உகூ)

இலக்குவற்குமுன்வீடணன்புகுமிருவரையும்
விலக்கியங்கதன்மேற்சேலுமவனையும்விலக்கிக்
கலக்குறும்வானரக்காவலனனுமன்முன்கடுக
வலக்கணன்னதையின்னதென்றுரைசெயலாமோ. (௩0)

முன்னின்றொலாம்பின்றுறக்காலினின்முடுகி
நின்பின்யாவிருமிலக்குவனென்றுரைநேரா
மின்றும்வேலினைவிண்ணவர்கண்புடைத்திரங்கப்
பொன்னின்மார்பிடையேற்றனன்முதுகிடைப்போன. (௩௧)

எங்குநீங்குதிநீயெனவீடணனெழுந்தான்
செங்கவேறன்னவீற்றத்தானிராவணன்றேரிற்
பொங்குபாய்பரிசாரதியொடும்படப்புடைத்தான்
சங்கவானவர்தலையெடுத்திடநெடுந்தண்டால். (௩௨)

சேய்விசும்பினினிமிர்க்குமின்றிராவணன்சீறிப்
பாய்கடுங்கணைபத்தவனுடல்புகப்பாய்ச்சி
யாயிரஞ்சரமநுமன்றனுடலினினழுத்திப்
போயினன்செருமுடிந்ததென்றிலங்கையூர்புகுவான். (௩௩)

தேடிச்சேர்ந்தவென்பொருட்டினுலகுடைச்செல்வன்
வாடிப்போயினனியினிவஞ்சனைமதியா
லோடிப்போகுவதெங்கடாவுன்னொடுமுடனே
வீடிப்போவனென்றரக்கன்மேல்வீடணன்வெகுண்டான். (௩௪)

வென்றியென்வயமானதுவீடணப்பகைவைக்
கொன்றிவிப்பயமில்லையென்றிராவணன்கொண்டா
லின்றிலதொன்றுமநோக்கிலன்முனிவெலாநீத்தான்
பொன்றிவிர்ந்தனமதிலுடையிலங்கையூர்புக்கான். (௩௫)

அரக்கனேகினன்வீடணன்வாய்திறந்தரற்றி
யிரக்கந்தானனலிலக்குவனிணையடித்தலத்திற்
கரக்கலாகலாக்காதலன்வீழ்ந்தனன்கலுழக்
குரக்குவெள்ளமுந்தலைவருந்துயரிடைக்குளித்தார். (௩௬)

பொன்னிரும்புறங்காளிமப்பொருப்பினுற்பொன்ற
வென்னிருந்துகாவிறப்பனிக்கணத்தெனையாளு
மன்னிருந்திவிவாழ்கிலனென்றனன்மறுக
நின்னிலென்றிறைசாம்பவனுரையொன்றுநிகழ்த்தும். (௩௭)

அநுமனிற்கோமாருயிர்க்கிரங்குவதறிவோ
யினையுமித்துணைமாத்திரத்துலகெலாமியிர்வான்
வினையினன்மருந்தளிக்கின்றன்வீரர்க்குவீர
விளையுமல்லலுற்றழுங்கன்மினென்றிடர்நீத்தான். (௩௮)

மருத்தின்காதலன்மார்பிடையம்பெலாம்வாங்கி
யிருத்தியோகடிதேகலையிளவலையின்னம்
வருத்தங்காணுமோமன்னவனென்னலுமன்னான்
கருத்தையுன்னியம்மாருதியுலகெலாங்கடந்தான். (ருகூ)

வேறு.

உய்த்தொருதிசைமேலோடியுலகெலாங்கடக்கப்பாய்ந்து
மெய்த்தருமருந்துதன்னைவெற்பொடுங்கொணர்ந்தவீரன்
பொய்த்தலில்குறிகடானேபொருவறநோக்கிப்பொன்போல்
வைத்ததுவாங்கிக்கொண்டுவருதலில்வருத்தமுண்டோ. (சா0)

தந்தனன்மருந்துதன்னைத்தாக்குதன்முன்னேயோகம்
வந்ததுமாண்டார்க்கெல்லாமுயிர்தரும்வலத்ததென்றால்
நொந்தவர்நொய்வுதீர்க்கச்சிறிதன்றோநொடிதன்முன்னே
யிந்திரனுலகமார்க்கவெழுந்தனனிளையவீரன். (சாக)

எழுந்துநின்றனுமன்றன்னையிருகையாற்றழுவியெந்தாய்
விழுந்திலனன்றோமற்றவ்வீடணனென்னவிம்மித்
தொழுந்துணையவனைநோக்கித்துணுக்கமுந்துயருநீங்கிக்
கொழுந்தியுமீண்டாள்பட்டானரக்கனென்றுவகைகொண்டான். (சாஉ)

தருமமென்றறிஞர்சொல்லுந்தனிப்பொருடன்னைப்பின்னே
கருமமென்றனுமனுக்கிக்காட்டியதன்மைகண்டா
லருமையென்னிராமற்கம்மாவறம்வெல்லும்பாவந்தோற்கு
மிருமையுநோக்கினென்னுவிராமன்பாலெழுந்துசென்றார். (சாங)

ஒன்றலபலவென்றோங்குமுயர்பிணத்தும்பரோடுங்
குன்றுகள்பலவுஞ்சோரிக்குரைகடலனைத்துந்தாவிச்
சென்றடைந்திராமன்றன்னைத்திருவடிவணக்கஞ்செய்தார்
வென்றியின்றலைவர்கண்டவிராமனென்விளைந்ததென்றான். (சாச)

உற்றதுமுழுதுநோக்கியொழிவறவுணர்வுளூறச்
சொற்றனன்சாம்பன்வீரனனுமனைத்தடரப்புல்லிப்
பெற்றனனுனையென்னைபெறுதனபெரியோயென்று
மற்றிடையீறுசெல்லாவாயுளையாகவென்றான். (சாரு)

புயல்பொழியருவிக்கண்ணன்பொருமலன்பொங்குகின்ற
னுயிர்புறத்தொழியநின்றவுடலன்னவுருவற்றம்பி
துயர்தமக்குதவிமீளத்துறக்கம்போய்வந்ததொல்லைத்
தயரதற்கண்டாலொத்தான்றம்முனைத்தொழுதுசார்வான். (சாசா)

இளவலைநோக்கியையவிராகவகுலத்துக்கேற்ற
வளவினமடைந்தோர்க்காகிமன்னுயிர்கொடுத்தவண்மைத்
துளவியநெருங்கலாய்நீயன்னதுதுணிந்தாயென்று
ளவியலன்றுசெய்தற்கடுப்பதேயாகுமென்றான். (சாஎ)

புறவொன்றின்பொருட்டாயாக்கைபுண்ணுறவரிந்தபுத்தே
ளறவனுமையினெதிர்க்கிலனப்பானின்ற
பிறவினையுனைப்பதென்னேபேருளாளனென்பார்
கறவையுங்கன்றுமொப்பார்தமக்கிடர்காண்கிலென்றான். (சஅ)

சாலிகைமுதலவானபோர்ப்பரந்தாங்கிற்றெல்லாம்
நீலிறநாயிறன்னநெடியவன்முறையினீக்கிக்
கோல்சொரிதனுவுங்கொற்றவனுமன்கைக்கொடுத்துக்கொண்டல்
மேலுறைகுன்றமொன்றின்மெய்ம்மெலிவாற்றலுற்றான். (சகூ)

வேலேற்றபடலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ஙருகஎ.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஙஉ - வது—களங்காண்படலம்.

ஆயபின்கவிதன்வேந்துமளப்பருந்தானையோடு
மேயினனிராமன்பாதம்விதிமுறைவணங்கிவீய்ந்த
தீயவர்பெருமைநோக்கிநடுக்கமுற்றிகைப்புமுற்றா
ரோய்வுறுமனத்தாரொன்றுமுணர்கிலர்நாணமுற்றார். (க)

மூண்டெழுசேனைவெள்ளமுலகொருமூன்றுமேலு
நீண்டளவதனையயவெவ்வளவிர்ந்ததென்னத்
தூண்டிரண்டனையதிண்டோட்சூரியன்புதல்வன்சொல்லக்
காண்டிநீயரக்கர்வேந்தன்றன்னெடுங்களத்தையென்றான். (உ)

தொழுதனர்தலைவரெல்லாந்தோன்றியகாதலுண்ட
வெழுகெனவிரைவிற்சென்றாரிராவணற்கிளலோடுங்
கழுகொடுபருந்தும்பாறும்பேய்களுங்கலங்கன்மற்றுங்
குழுவியகளத்தைக்கண்ணினோக்கினர்துணுக்கங்கொண்டார். (ங)

ஏங்கினார்நடுக்கமுற்றாரிளைத்திளைத்துள்ளமேற
வீங்கினார்வெருவலுற்றார்விம்மினாருள்ளம்வெம்ப
வோங்கினார்மெள்ளமெள்ளவுயிர்விலைத்துவகையூன்ற
வாங்கவருற்றதன்மையாரறிந்தறையகிற்பார். (ச)

ஆயிரம்பருவங்கண்டாற்காட்சிக்கோர்கரையிற்றன்றால்
மேயினவறைகடோறும்விம்மினார்நிற்பதல்லாற்
பாய்திரைவேலையேழுங்காண்குறுபதகமொன்ன
நீயிருந்துரைத்தியென்றார்வீடணனெறியிற்சொன்னான். (ரு)

வேறு.

காகப்பந்தற்செங்களமெங்குஞ்செறிகாலம்
மோகத்தம்பிற்பொன்றினவேனுமுடலொன்றி
மேகச்சங்கத்தொக்கனவேழம்வெளியின்மை
நாகக்குன்றந்நின்றனகாண்மினமரங்காள். (சா)

வென்றிச்செங்கண்வெம்மையரக்கர்விசையூர்வ
வொன்றிற்கொன்றுற்றம்புதலைப்பட்டுயிர்றுங்கப்
பொன்றிச்சிங்கம்ராகவடுக்கிற்பொலிகின்ற
குன்றிற்றுஞ்சுந்தன்மைமிகர்க்குங்குறிகாணீர். (௭)

அளியிற்பொங்குமங்கணனேவுமயில்வாளிக்
களியிற்பட்டார்வான்முகமின்றுங்கணையில்லாப்
புளினத்திட்டிற்கன்னகன்வாரிக்கடல்பூத்த
நளினக்காடேயொப்பனகாண்மினமரங்காள். (௮)

பூவாய்வாளிச்செல்லெறிகாலைப்பரிபொன்றக்
கோவாய்வன்பால்வெண்கொடிஇன்பாயொடுகூட
மாவாய்திண்டேர்மண்டுதலானீர்மறிவேலை
நாவாய்மானச்செல்வனகாண்மினமரங்காள். (௯)

ஒழுகிப்பாயுமும்மதவேழமுயிரோடு
மெழுகிற்கில்லாச்செம்புனல்வெள்ளத்திடையிற்ற
பழகிற்றல்லாப்பஃறிணைதாங்கும்படர்வேலை
முழுகித்தோன்றுமீனரசொக்குமுறைநோக்கீர். (௧௦)

கடக்காரொன்னப்பொங்குகவந்தத்தொடுகைக
டுடக்காகிற்கும்பேயிலயத்தின்றொழில்பூண்ட
மடக்கோவில்லாவார்படிமக்கூத்தமைவிப்பா
னடக்கால்சாட்டுங்கண்ணுளரொப்பாம்மரங்காள். (௧௧)

மழுவிற்கூர்வாய்வன்பலிடுக்கின்வயவீரர்
குழுவிற்கொண்டார்காடிதடக்கப்பொறிகூட்டத்
தழுவிக்கொள்ளக்கள்ளமனப்பேயவைதள்ளி
நழுவிச்செல்லாவியல்பினகாண்மினமரங்காள். (௧௨)

பொன்னின்றோடைமின்பிறழ்நெற்றிப்புகர்வேழம்
பின்னும்முன்னுமாறினவீழ்விற்பிணையுற்ற
தன்னின்னேராமெய்யிருபாலுந்தலைபெற்ற
தென்னுந்தன்மைக்கேய்வனபல்வேறிவைகாணீர். (௧௩)

நாமத்திண்போர்முற்றியகோபநகைசின்றம்
பாமத்தொன்னீரன்னநிறத்தோர்பகுவாய்க
டுமத்தோடும்வெங்கனலின்றுஞ்சுடர்கின்ற
வோமக்குண்டமொப்பனபல்வேறிவைகாணீர். (௧௪)

மின்னும்மோடையாடல்வயப்போர்மதவேழக்
கன்னம்மேலச்சற்றனவெண்சாமரைகாணீர்
மன்னும்மாநீர்த்தாமரைமானும்வதனத்த
வன்னம்மெல்லத்துஞ்சுவவொக்குமவைகாணீர். (௧௫)

ஞாளின்முற்றுனற்றுயர்வேழத்தொளிர்வெண்கோ
டாளின்முற்றுச்செம்புனல்வெள்ளத்தலைகாணீர்
கோளின்முற்றுச்செக்கருண்மேகக்குழுவின்க
ணாளின்முற்றுவெண்பிறைபோலுமமரின்கண். (கசு)

கொடியும்வில்லுங்கோலொடுவேலுங்குவிதேருங்
கடியின்பாதக்குன்றின்மிசைத்தோல்விசியின்கட்
டொடியும்வெய்யோர்கண்ணெரிசெல்லவுடன்வெந்த
தடியுண்டாடிக்கூளிதடிக்கின்றனகாணீர். (கஎ)

சகரம்முன்னீர்செம்புனல்வெள்ளந்தடுமாற
மகரந்தம்மின்வந்தனகண்டுமனமுட்கிச்
சிகரம்மன்னயானைகொலென்னச்சிலர்நாணி
நகரம்நோக்கிச்செல்வனகாண்மினமரங்கண். (கஅ)

விண்ணிற்பட்டார்வெற்புறழ்காயம்பலமென்மேல்
மண்ணிற்செல்வார்மேனியின்வீழமடிவுற்று
ணெண்ணிற்றீராவன்னவைதிருமிடமில்லாக்
கண்ணிற்றோன்றார்விம்மியுலைக்கும்படிகாணீர். (ககூ)

அச்சிற்றின்டேராளையின்மாமேற்காலாளின்
மொக்கச்சென்றார்மெய்குருதித்தாரைகள்முட்ட
வுச்சிச்சென்றுறுவிலும்வெய்யோனுதயத்திற்
குச்சிச்சென்றேறுந்துளைருங்குறிகாணீர். (உ0)

காரேய்மேனிக்கண்டகர்கண்டப்படுகாலை
யாறேவென்னவிண்டவர்செஞ்சோரியதாகி
வேறாய்நின்றவெண்மதிசெங்கேழ்நிறம்விம்ம
மாறோர்வெய்யோன்மண்டிலமொக்குமவைகாணீர். (உக)

வேறு.

வானளையமண்ணளையவளைந்தெழுந்தபெருங்குருதிமகரவேலை
தானலைவுற்றெழும்பறவைச்சிறைதெளித்தபுறமலைமயின்றுள்ளிதாங்கி
மீனனையகரும்போரும்வினையருந்துஞ்சிறைவண்டுநிறம்வேறெய்தக்
கானகமுங்கடிபொழிலுமுறியீனப்போன்றொளிர்வகாண்மின்காண்மின்.

வரைபொருதமகவானைத்துணைமருப்புக்கிளர்முத்தமணியும்வாரித்,
திரைபொருதபுறங்குவிப்பத்திறங்கொள்பனைமாமுருட்டிச்சிறைப்புள்ளார்ப்ப, நரைகுடையும்வெண்கொடியுஞ்சாமரையுமெனச்சுமந்துபிணத்தி
னேனலமக், கரைபொருதக்கடன்மடுக்குங்கடுங்குருதிப்போறுகாண்மி
ன்காண்மின். (உஉ)

கைக்குன்றப்பெருங்களையநிருதர்புயக்கற்செறிந்தகதலிக்கான
மொய்க்கின்றபரித்திரையமுரட்கரியின்கொண்மாவமுளரிக்காவின்
மெய்க்கின்றவாண்முகத்தவிழுக்குடரின்பாசடையநிணமேற்செற்ற
வுய்க்கின்றவுதிரநிறக்களங்குளங்களுலப்பிறந்தவுவையுங்காண்மின். (உ௩)

நெடும்படைவாளுஞ்சிலுமுழுமணச்சேற்றிலுதிரநீர்நிறைந்தகாப்பிற்
கடும்பகடுபடிதோய்ந்தகடும்பரம்பினினமள்ளர்பார்த்தகையிற்
படுங்கமலமலர்காலுமுடிபரந்தபெருங்கிடக்கைபரந்தபண்ணைத்
தடம்பணையினறும்பழனந்தழுவினதேயெனப்பொலியுந்தகையுங்காண்மின்

வெளிதீர்த்தவளைபுளையுமிடலாக்கருடல்விழவும்வீரன்வில்லி
னொளிதீர்த்தமுழுநெடுநாணுநமேருபலபடவுமுலகங்கீண்டு
நளிதீர்த்தநாகபுரம்புக்கிழிந்தபகழிவழிநதியினோடிக்
களிதீர்த்துப்புகமண்டுங்கருங்குருதித்தடஞ்சுழிகள்காண்மின்காண்மின்.

கைத்தலமுங்காத்திரமுங்கருங்கழுத்துநெடும்புயமுமுரமுங்கண்டித் [ன்
தெய்த்திலபோய்த்திசைகடொறுமிருநிலத்தைக்கிழித்திழிந்ததென்னினல்லா
மத்தகரிவயமாவின்வாணிருநர்பெருங்கடலின்மற்றிவ்வாளி
தைத்துளவாய்நின்றதெனவென்றேயுங்காண்பரியதகையுங்காண்மின். (உஎ)

வேறு.

குமுதநாறுமுகத்தன்கூற்றன
சமுதரோடுமடிந்தனசாற்றருந்
திமிர்தமாலன்னவின்னனவித்திற
மமிர்தின்வந்தனவையிருகோடியால். (உஅ)

ஏழுநான்முகன்வேழ்வியெழுந்தன
ஆறுமாரியுமோங்கலையோதமு
மாறுமாயினமாமதமாய்வரு
மாறுமாறிலவாறிருகோடியால். (உகூ)

உயிர்மறந்துமுதிரமறந்தது
மயர்வறந்துமதமறவாதன
புயலவன்றிசைப்போர்மதவாணையி
னியல்பரம்பரையேழிருகோடியால். (௩0)

கொடாதுநிற்றலிற்கொற்றநெடுந்திசை
யெடாதுநிற்பனநாட்டமிமைப்பில
வடாதுதிக்கின்மதவரையின்வழி
கடாமுகத்தமுளாரிக்கணக்கவால். (௩க)

வானவர்க்கிறைவன்றிறைதந்தன
வானவர்க்கமோராயிரகோடியுந்
தானவர்க்கிறைவன்றிறைதந்தன
யேனவர்க்கங்கணக்கிலவீதெலாம். (௩உ)

பார்கடற்பண்டயிர்தம்பயந்தநா
ளார்த்தெழுந்தனவாயிரமாயிர
மார்க்கணப்பரியிங்கிவைமாறுசெய்
மேற்கின்வேலைவருணனைவென்றவால். (௩௩)

இருதிக்கிழவன்விழ்ந்தேனை
வரிவயப்பரியாயிரமாயிரம்
விரிசினத்திகல்விஞ்சையர்வேந்தனைப்
பொருதுபற்றியதாமரைபோலுமால். (௩௪)

என்றுகாணினுங்காட்டினுமீதிலறக்
குன்றுகாணினுங்கோதிலதாதலால்
நின்றுகாணுநர்கேயயிருறுழைச்
சென்றுகாண்டுமென்றேகினர்செவ்வியோர். (௩௫)

ஆரியற்றொழுதாங்கவன்பாங்கரும்
போரியற்கைகிளர்ந்தெழுபொம்மலார்
பேருயிர்ப்போடிருந்தனர்பின்புற
காரியத்தினிலைமைகழறுவாம். (௩௬)

பொருந்துபொற்பெருங்கோயிலுட்போர்த்தொழில்
வருந்தினர்கருத்தமன்பினின்வந்தவர்க்
கருந்துதற்கமைவாயினவாக்குவான்
விருந்தமைக்கவமைக்கின்றவேட்கையான். (௩௭)

வானநாட்டைவருகெனவல்லினாந்
தேனநாட்டவரோடும்வந்தெய்தலு
மானநாட்டந்தபோகமமைத்திர்மற்
றானநாட்டினிழத்திருயிரென்றான். (௩௮)

நறவுமூறுநவையறநல்லன
பிறவுமாடையுஞ்சாந்தமும்பெய்மலர்த்
திறமுநானப்புனலொடுசேக்கையும்
புறமுமுள்ளுநிறையப்புகுந்ததால். (௩௯)

நானநெய்யுரைப்பாருநறும்புன
லானகோதறவாட்டியயிர்தொடும்
பானமூட்டிச்சயனம்பாப்பவும்
வானநாடியரியாவரும்வந்தரால். (௪௦)

பாடுவார்கள்பயிலடம்பாவகத்
தாடுவார்களமளியினன்புறக்
கூடுவார்கண்முதலுங்குறைவறத்
தேடினுனெனப்பண்ணையிற்சேர்ந்ததால். (௪௧)

அரசராதியடியவரந்தமாய்
வரைசெய்மேனியிராக்கதர்வந்துளார்
விரைவினிந்திரபோகம்விழைதரக்
கரையிலாதபெருவளங்கண்ணினன். (௪௨)

இன்னதன்மையமைந்தவிராக்கத
மன்னன்மாடுவந்தெய்திவணங்கினா
ரன்னசேனைகளப்பட்டவாறெலாந்
துன்னுதூதர்செவியிடைச்சொல்லுவார். (௪௩)

நடுக்குகின்றவுடலினர்காவலர்த்
தொடுங்குகின்றவுயிர்ப்பினருள்ளலைந்
தொடுங்குகின்றவிழியினரேங்கிமேற்
பிதுங்குகின்றவுரையினர்பேசுவார். (௪௪)

வேறு.

இன்றியார்விருந்திங்குண்பாரிகன்முகத்திமையோர்தந்த
வென்றியாயேவச்சென்றவாயிரவெள்ளச்சேனை
யின்றுளார்புறத்தாராகவிராமன்கையிமிர்ந்தசாப
மொன்றினுன்குமூன்றுகடிகையினுலந்ததென்றார். (௪௫)

வலிக்கடம்வாலுளோனாக்கொண்டுநீவகுத்தபோகங்
கலிக்கடனளிப்பனென்றுவிருதர்க்குக்கருதினாயேற்
பலிக்கடனளிக்கற்பாலையல்லநின்குலத்தின்பாலோ
ரொலிக்கடலுலகத்தில்லையூருளாருளரோயுள்ளார். (௪௬)

ஈட்டருமுலகையீட்டியிருந்தவனிசைத்தமாற்றங்
கேட்டலும்வெகுளியோடுநடுக்கமுமிழிவுங்கிட்ட
மூட்டாக்கனையசெங்கணெருப்புகவுயிர்ப்புவீங்கத்
தீட்டியபடிவமென்னத்தோற்றினன்றிகைத்தநெஞ்சன். (௪௭)

என்னிலும்வலியரானவிராக்கதரியாண்டும்வியா
ருன்னினுமுலப்பிலாதாருவரியின்மனைவினீள்வார்
பின்னொருபெயருமின்றிமாண்டனரொன்றுசொன்ன
வின்னிலையிதுவோபொய்ம்மைவிளம்பினர்போலுமென்ன. (௪௮)

கேட்டயலிருந்துமாலியீதொருகிழமைத்தாமோ
வோட்டுறுதூதர்பொய்யேயுரைப்பரோவுலகம்யாவும்
வீட்டுவதிமைப்பினன்றேவீங்கெரிவிரிந்தவெல்லா
மாட்டுவானொருவனன்றேயிறுதியின்மனத்தாலென்றான். (௪௯)

அளப்பருமுலகம்யாவுமளித்துக்காத்தழிக்கின்றான
னுளப்பருந்தன்மைநன்றுவொருவனென்றுண்மைவேதங்
கிளர்ப்பறுகேட்டுமன்றேயரவின்மேற்கிடந்துமேனுண்
முளைத்தபேரிராமனென்றவீடணன்மொழிபொய்த்தாமோ. (௫௦)

ஒன்றிடினுலகையுண்ணுமுலகத்தினுயிர்க்கொன்றாக
நின்றனவெல்லாம்பெய்தாலுடனுங்குநெருப்புங்காண்டுங்
குன்றொடுமரனும்புல்லும்பல்லுயிர்க்குழுவுங்கொல்லும்
வன்றிறற்காற்றுங்காண்டும்வலிக்கொருவரம்புமுண்டோ. (௫௧)

பட்டதுமுன்னேயுன்னையிந்திரச்செல்வம்பற்று
விட்டதுமெய்யேயையமின்றொருவினையில்லைக்
கெட்டதுன்பொருட்டினாலேயின்றுணைக்கேள்சொல்லாஞ்
சிட்டதுசெய்தியென்றுனைதற்கவன்சீற்றஞ்செய்தான். (ருஉ)

இலக்குவன்றன்னைவேலாலெறிந்துயிர்கூற்றுக்கீந்தே
னலக்கணிற்றலைவரெல்லாமழுந்தினாரதனைக்கண்டா
னுலக்குமாவிராமன்பின்னேயுயிர்ப்பொறையுகவாறுற்ற
மலக்கமுண்டாகினாகவாகையென்வயத்ததென்றான். (ருங)

ஆண்டதுகேட்டுநின்றதூதுவரையமெய்யே
மீண்டவவ்வளவினுவிமாருதிமருந்துமெய்யிற்
றீண்டவுந்தாழ்ந்ததில்லையாருமச்செங்களனைப்
பூண்டனர்மருந்துவெற்பைவீசினான்புக்கதென்றார். (ருச)

தேறிலனாதலாலேமறுகுறுசிந்தைதேற
வேறினன்கனகத்தாளைக்கோபுரத்தும்பரெய்த
ஊறினசேனைவெள்ளமுலந்தபேருண்மையெல்லாங்
காறினவுள்ளனாயக்கண்களாற்றெரியக்கண்டான். (ருரு)

நொய்தலைப்பூசல்பட்டோர்குலத்தியர்குவளைதோற்று
நெய்தலைவென்றவாட்கண்குமுதத்தினீர்மைகாட்டக்
கைதலைவைத்தபூசற்கடலொடுமியிருங்காலைச்
செய்தலையுற்றவோசைச்செயலதுசெவியிற்கேட்டான். (ருசா)

எண்ணினீர்கடந்தவாளைப்பெரும்பிணமேந்தியாணர்
மண்ணினீளவுங்கல்லிநெடுமலைபதித்துமண்டும்
புண்ணினீராறுபல்பேய்புதுப்புனலாடும்பொம்மற்
கண்ணினீராறுமாறக்கருங்கடன்மடுப்பக்கண்டான். (ருஎ)

விண்களிற்சென்றவன்றோட்கணவனையலகைவெய்ய
புண்களிற்கைகணீட்டிப்புதுக்கிணைக்கவர்வநோக்கி
மண்களிற்றொடர்ந்துவானிற்பிடித்துவள்ளுகிரின்மாணக்
கண்களைச்சூன்றுநீக்குமரக்கியர்குழாமுங்கண்டான். (ருஅ)

குமிழிநீரோடுஞ்சோரிக்கனலொடுங்கொழிக்குங்கண்ணான்
றமியொணிவழக்கமன்னதனிச்சிலைவழங்கச்சாய்ந்தா
ரமிழ்பெருங்குருதிவெள்ளமாற்றுவாய்முகத்திற்றேக்கி
யுமிழ்வதேயொக்கும்வேலையோதம்வந்தடற்றக்கண்டான். (ருகூ)

விண்பிளந்தேங்கவார்த்தவானரவீக்கங்கண்டான்
மண்பிளந்தழுந்தவாடுங்கவந்தத்தின்வருக்கங்கண்டான்
கண்பிளந்தகலநோக்கும்வானவர்களிப்புங்கண்டான்
புண்பிளந்தனையநெஞ்சன்கோபுரமிழிந்துபோந்தான். (சா0)

நகைபிறக்கின்றவாயருக்கொடுகடைவாய்நக்கிப்
புகைபிறக்கின்றமூக்கன்பொறிபிறக்கின்றகண்ணன்
மிகைபிறக்கின்றநெஞ்சன்வெஞ்சினத்தீமேல்வீங்கிச்
சிகைபிறக்கின்றசொல்லானரசியலிருக்கைசேர்ந்தான். (௩௧)

களங்காண்படலம்-முற்றிற்று.

ஆ-திருவிருத்தம்-௩௫௭.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௩௩-வது—தேரேறுபடலம்.

பூதாமனையமேனிப்புகைநிறப்புருவச்செந்தீ
மோதரனென்னுநாமத்தொருவனைமுகத்துநோக்கி
யேதுளதிறந்திலாதவிலங்கையுளிருந்தசேனை
யாதினையெழுகென்றுனைமணிமுரசெற்றுகென்றான். (௧)

எற்றினமுரசிறேருடுமேழிருநூறுகோடி
கொற்றவாணிருதர்சேனைகுழீஇயதுகொடித்திண்டேருஞ்
சுற்றுறுதுளைக்கைமாவுந்துரகமும்பிறவுந்தொக்க
வற்றியவேலையென்னவிலங்கையூர்வறளிற்றாக. (௨)

ஈசனையிமையாமுக்கணிறைவனையிருமைக்கேற்ற
பூசனைமுறையிற்செய்துதிருமறைபுகன்றதானம்
வீசினனியற்றிமற்றும்வேட்டனவேட்டோர்க்கெல்லா
மாசறநல்கியொல்காப்போர்த்தொழிற்கமைவதானான். (௩)

வேறு.

அருவியஞ்சனக்குன்றிடையாயிரமருக்க
ருருமிறேருடும்வந்துதித்தனராமெனவொளிரக்
கருவிநான்முகன்வேள்வியிற்படைத்ததுக்கட்டிச்
செருவிலிந்திரன்றந்தபொற்கவசமுஞ்சேர்த்தான். (௪)

வாள்வலம்படமந்தரஞ்சுழன்றமாசுணத்தின்
றுள்வலந்தொளிர்தமனியக்கச்சொடுஞ்சாத்திக்
கோள்வலந்தனகுவிந்தனவாமெனுங்கொள்கை
மீள்வில்கிம்புரிமணிக்கடிசூத்திரம்வீக்கி. (௫)

மறைவிரித்தன்னமாபெருமானமாக்கலுழன்
சிறைவிரித்தன்னகொய்சகமருங்குறச்சேர்த்தி
முறைவிரித்தெனமுறுக்கியகோசிகமுறையே
பிறைவிரித்தன்னவெள்ளெயிற்றரவமும்பிணித்து. (௬)

மழைக்குலத்தொடுவானுருமேறெலாம்வாரி
யிழைத்தொடுத்தனவனையவாளிடைமணியார்த்து
முழைக்கிடந்தவல்லரியினமுழங்குவபோல்வ
தழைக்குமின்றெளிப்பொன்மலர்ச்சதங்கையுஞ்சாத்தி. (௭)

உருமிடித்தழியாவெனக்காக்கமாவலி
யிருநிலத்திடையெவ்வுலகத்திடையாரும்
புரிதரப்படும்பொலங்கழலிலங்குறப்புட்டிச்
சரியுடைச்சுடர்சாய்கலஞ்சார்வுறச்சாத்தி. (௮)

நாலைந்தாவியகரங்களினாந்தலையனந்த
ருலந்தசார்மிடற்றருக்கறைகிடந்தெனவிலங்குங்
கோலஞ்சார்நெடுங்கோதையும்புட்டிலுங்கட்டித்
தாலஞ்சார்ந்தமரகதமெனக்கங்கணந்தழுவ. (௯)

கடல்கிடந்தமால்வரையினைச்சுற்றியகயிற்றி
னுடல்கடந்ததோளலங்குபோர்வலயங்களிலங்க
வுடல்கடந்தநாளொளியவனதிர்த்தபொற்கதிரின்
சுடர்நயங்குறக்குண்டலஞ்செவியிடைத்தூக்கி. (௧௦)

உதையக்குன்றத்தோடத்தத்திறலாவுறுகதிரிற்
றுதையுங்குங்குமத்தோளொடுதோளிடைசூடாப்
புதையிருட்பகைக்குண்டலமனையவைபொலியச்
சிதைவிறிங்களுமீனும்போன்முத்தினந்திகழ. (௧௧)

வேலைவாய்வந்தவெய்யவரினைவரும்வெய்ய
காலையுற்றனராமெனக்கதிர்க்குலங்காலு
மாலைபற்றின்மென்மதியமுநாளிடைப்பலவாய்
முலைமுற்றியவனையமுத்தக்குடையினமைப்ப. (௧௨)

பருத்தபல்வளக்குன்றினின்முளையன்னபருவாய்
விருத்தவான்கடைசடைதொறும்வளையெயிற்றீட்ட
மிருத்தநீலவான்மேகஞ்சூழ்விசும்பிடைத்தசம்போ
டிருத்தசெக்கரிற்பிறைக்குலமுளைத்தனவொக்க. (௧௩)

ஒத்ததன்மையிலொளிர்வனதாரத்திலேறுதக்
கத்துகின்றனவீரபட்டத்தொகைதயங்க
முத்தவோடையின்முரட்டிசைமுழுமதயானை
பத்துநெற்றியுஞ்சுற்றியபேரொளிப்படைக்க. (௧௪)

புலவிமங்கயர்பூஞ்சிலம்பாற்றடிபோக்கித்
தலைமைகண்ணினர்தாழ்கிலர்மலர்முடித்தலங்க
ளுலகமொன்றினைவிளக்குறுங்கதிரினையோட்டி
யலகிலெவ்வுலகத்திலும்வயங்கிருளகற்ற. (௧௫)

நாகர்நாவிலான்முகனுடனயந்த
பாகமூன்றையும்வென்றுகொண்டமார்முன்பளித்த
வாகைமாலையுமருங்குறவரிவண்டோடளாவித்
தோகையன்னவர்விழிசுடர்தும்பையுஞ்சூட்டி. (௧௬)

அகழிவேலையைக்காலத்தையளக்கர்றன்மணலை
நிகழுமீன்களைவிஞ்சையைநினைப்பதேனின்ற
விகழ்வில்பூதங்களிறப்பினுமிறுதிசெல்லாத்தன்
புகழெனச்சரந்தலைவிலாத்தூணியும்பூட்டி. (கஎ)

வருகதேரொனவந்தருவையமும்வாறு
முராகதேயமுமொருங்குடனேறினுமுச்சிச்
சொருகுபூவன்னசுமையதுதாகவின்றெனினு
நிருதர்கோமகனினைந்தூழிச்செல்வதோர்நினைப்பில். (கஅ)

ஆயிரம்பரியமுதத்தின்வந்தவுமருக்கன்
பாய்வயப்பசுங்குதிரையின்வழியவும்படர்நீர்
வாய்மடுக்குமாவடவையின்வயிற்றின்வன்காற்றி
னுயகற்குவந்துதித்தவும்பூண்டதோர்நலத்தின். (ககூ)

பாரிற்செல்வதுவிசும்பிடைப்படர்வதுபரந்த
நீரிற்செல்வதுநெருப்பினுஞ்செல்வதுநிமிர்ந்த
மேருச்செல்வதுபோனெடுமுகட்டிடைவிரிஞ்ச
னூரிற்செல்வதெவ்வுலகத்துஞ்செல்வதோரிமைப்பின். (உ0)

எண்டிசைப்பெருங்களிற்றிடைமணியெனவிசைக்கும்
கண்டையாயிரகோடியின்றொகையதுகதிரோன்
மண்டிலங்களைமேருவிற்குவித்தெனவயங்கு
மண்டம்விற்குநன்காசினுலியற்றியதடங்க. (உக)

முனைவர்வானவர்முதலினரண்டத்துமுதல்வ
ரொனைவரீய்ந்தவுமிகலினிலிட்டவுமியம்பா
வினையின்வெய்யனபடைக்கலவேலையென்றிசைக்குந்
சுனையினுண்மணற்றொகையனவமைந்தவைதொருத்த. (உஉ)

கண்ணனேமியுங்கண்ணுதல்கணிச்சியுங்கமலத்
தண்ணல்குண்டிகைக்கலசமுமழியினுமழியாத்
திண்மைசான்றதுதேவருமுணர்வருஞ்செய்கை
யுண்மையாமெனப்பெரியதுவென்றியினுறையுள். (உங)

அனையதேரினையருச்சனைவரன்முறையாற்றி
யெனையபொன்பதோர்கணக்கிலாமறையவரொவர்க்கும்
வினையினன்னிதிமுதலியவளப்பரும்வெறுக்கை
நினையினீண்டதோர்பெருங்கொடையருங்கடனேர்ந்தான். (உச)

ஏறினன்றொழுதிந்திரன்முதலியவிமையோர்
தேறினர்களுந்தியங்கினர்மயங்கினர்திகைத்தார்
வேறுநாஞ்செயும்வினையிலைமெய்யினைம்புலனு
மாறினர்களுமஞ்சினருலகெலாமறுங்க. (உரு)

மன்றலங்குழற்சனகிதன் மலர்க்கையால்வயிறு
கொன்றலந்தலைக்கொடுநெடுந்துயரிடைகுளித்த
லன்றிதென்றிடின்மயன்மகளத்தொழிலுழத்த
லின்றிரண்டினொன்றுக்குவன்றலைப்படினென்றான். (௨௬)

பலகளந்தலைமௌலியோடிலங்கலிற்பஃறோ
ளலகளந்தரியாநெடும்படைகளோடலங்க
லிலகளந்தருகடற்றானைவிசும்பொடுவியப்ப
வுலகளந்தவன்வளர்ந்தனனுமெனவுயர்ந்தான். (௨௭)

விசும்புவிண்டிருகூறுறக்கற்குலம்வெடிப்பப்
பசும்புண்விண்டெனப்புவிபடப்பகலவன்பசும்பொற்
றசும்புநின்றிடையிரிந்தனமதிதகையமிர்தி
னசும்புசிந்திநொந்துலைவுறத்தோள்புடைத்தார்த்தான். (௨௮)

நணித்துவெஞ்சமமென்பதோருவகையினலத்தாற்
றிணித்தடங்கிரிவெடித்துகச்சிலையைநாணெறிந்தான்
மணிக்கொடுங்குழைவானவர்தானவர்மகளிர்
அழுக்கமெய்தினர்மங்கலநாண்களைத்தொட்டார். (௨௯)

சரிக்குமண்டலர்தாங்குநீர்ச்சுழியுறவீங்க
விராக்கும்பல்லுயிரியாவையுநடுக்கமுற்றிரியப்
பரித்திலன்புவிபடர்சுடர்மணித்தலைபலவும்
விரித்தெழுந்தனனனந்தன்மீதென்பதோர்மெய்யான். (௩0)

தோன்றினன்வந்துசாரர்களோடசுரரோடுடங்கி
மூன்றுநாட்டினுமுள்ளவரியாவருமுடிய
வூன்றினன்செருவென்றுயிருமிழ்தரவுதிரங்
கான்றுநாட்டங்கள்வடவனற்கிருமடிகனல. (௩௧)

உலகிற்றோன்றியமருக்கமுமிமைப்பிலருலைவு
மலையும்வானமும்வையமுநடுக்குறுவலிய
மலைகொள்வேலைகளஞ்சினசலிக்கின்றவயர்வுந்
தலைவனேமுதற்றண்டலினோரெலாங்கண்டார். (௩௨)

பீறிற்றுமண்டமென்பதோராகுலம்பிறக்க
வேறிட்டோர்பெருங்கம்பலைபம்பிமேல்வீங்க
மாறிப்பல்பொருள்வகுக்குறுங்காலத்துண்மருக்க
மேறிற்றுற்றுளதென்னைகொலோவெனவெழுந்தான். (௩௩)

கடல்களியாவையுங்கணைமலைக்குலங்களுங்காருந்
திடல்கொண்மேருவும்விசும்பிடைச்செல்வனசிவண
வடல்கொள்சேனையுமரக்கருந்தேரும்வந்தார்க்குங்
குடல்கொள்பேரொலிக்கம்பலையென்பதுங்கொண்டான். (௩௪)

எழுந்துவந்தனனிராவணனிராக்கதத்தானைக்
கொழுந்துமுற்றியதுற்றதுகொற்றவருளுங்குற்
றழுந்துகின்றதாசம்பலமமாருமஞ்சி
விழுந்துசிந்தினனென்றனன்வீடணன்விரைந்தான். (௩௫)

வேறு.

தொழுங்கையொடுவாய்குழறிமெய்முறைதுளங்க
விழுந்துகவிசேனையிடுபூசன்மிகவின்றோ
ரழுந்துபடுபாலமனிதுஞ்சியெழுமந்நா
ளெழுந்தபடியேகடிதெழுந்தனனிராமன். (௩௬)

கடக்களிறெனத்தகையகண்ணனொருகாலன்
விடக்கயிறெனப்பிறழும்வாள்வலன்விசித்தான்
மடக்கொடிதனக்குநெடுயாளிறுறைவோர்த
மிடர்க்கடலிறுக்குமுடிவின்றெனவிசைத்தான். (௩௭)

தன்னகவசத்துருவுதங்கவொருதன்னிற்
பின்னகவசத்தபொருளில்லைபெரியோனை
மன்னகவசத்துறவரிந்ததெனவென்கோ
வின்னகவசத்தையுமொரீசனெனலாமால். (௩௮)

புட்டிலொடுகோதைகள்புழுங்கியெரிகூற்றி
னட்டிலெனலாயமலரங்கையினடக்கிக்
கட்டியுலகிற்பொருளெனக்கணையில்வாளி
வட்டில்புறம்வைத்தவைபொருந்திடவரிந்தான். (௩௯)

மூண்டசெருவின்றளவின்முற்றுமிகவெற்றி
யாண்டகையுமும்மையினியச்சமகல்வுற்றீர்
பூண்டமணியாழிவயமாகிமிர்பொலந்தேர்
ரீண்டவிடுவீரமரனொன்றனிசைத்தான். (௪0)

தேவரதுகேட்டிதுசெயற்குரியதென்று
ரோவல்புரியிந்திரவெனத்தொழுதிசைத்தார்
மூவுலகுமின்றொருகணத்தின்முறைமுற்றிக்
காவல்புரிதன்பொருவிறேர்கவர்தியென்றான். (௪௧)

மாதலிகொணர்ந்தனன்மகோததிவளாவும்
பூதலமெழுந்துபடர்தன்மையபொலந்தேர்
சீதமதிமண்டிலமுமேனையுளதுந்திண்
பாதமெனநின்றதுபடர்ந்ததுவிசும்பில். (௪௨)

குலக்கிரிகளேழின்வலிகொண்டுயர்கொடிஞ்சின்
மலக்குரியபாரின்வலியாழியினச்சுங்
கலக்கறவகுத்ததுகதத்தரவமெட்டும்
வலக்கயிறுகட்டியதுமுட்டியதுவானை. (௪௩)

ஆண்டினொடுநாளுமதிங்களிவையென்று
மீண்டனவுமேலனவும்விட்டுவிரிதட்டின்
பூண்டுளதுதாரகைமணிப்பொருவுகோவை
நீண்டபுனைதாரினதுமின்றலவுருண்டின். (௪௪)

மாதிரமனைத்தையுமணிச்சுவர்களாகக்
கோதறவகுத்ததுமழைக்குழுவையெல்லா
மீதுறுபதாகையெனவீசியதுமெய்மைப்
பூதமவையைந்தும்வலியிற்பொலிவதம்மா. (௪௫)

வாத்தொடுமருந்துலகில்யாவுமுளவாரித்
நாத்தொடுதொடுத்தகொடிதங்கியதுசங்கக்
காத்தொடுதொடுத்தகடன்மீதுயிர்காலத்
தாத்தொடுகடுத்தகதமோனதையதனேதை. (௪௬)

பண்டரிதனுந்தியயன்வந்தபழமுந்தைப்
புண்டரிகமொட்டனையமொட்டினதுபூத
முண்டனவயிற்றிடையொடுக்கியுறைகின்ற
வண்டசன்மணிச்சயனமொப்பதகலத்தின். (௪௭)

வேதமொருநாலுநிறைவேள்விகளும்வெவ்வே
றோதமவையேழுமலையேழுமுலகேழும்
பூதமவையைந்துமெரிமூன்றுநனிபொய்தீர்
மாதிரமுமாருதமுமைம்புலனுமற்றும். (௪௮)

அருக்கரணமைந்துசுடரார்ந்ததிசைநாலு
மொருங்கரணமூன்றுமுழல்வாயுவொருபத்தும்
பெரும்பகலுநீளிரவுமென்றிவைபிணிக்கும்
பொரும்பரிகளாகநனிபூண்டதுபொலந்தேர். (௪௯)

வந்ததனைவானவர்வணங்கிவலியோய்நீ
யெந்தைதரவந்தனையெமக்குதவுகிற்பாய்
தந்ததவுமென்றியெனநின்றுதகைமென்பூச்
சிந்தினர்கண்மாதலிகடாவிநனிசென்றான். (௫0)

வினைப்பகைவிசைக்கொடுவிசும்புறுவிமான
மனைத்தின்விசைபெற்றுளதுவந்ததெனவானே
டனைத்துலகமுந்தொழவடைந்ததமலன்பால்
நினைப்புமிடையிற்படநிமிர்ந்துயர்நெடுந்தேர். (௫௧)

அலரிதனியாழிபுனைதேரிதெனின்று
லகின்முடிவிற்பெரியவூழொளியிதன்று
விலைகொணெடுமேருகிரியன்றுநெடிதம்மா
தலைவரொருமூவர்தனிமானமிதுதானே. (௫௨)

என்னையிதுநம்மையிடையெய்தலெனவெவ்வினி
மன்னவர்தமன்னன்மகன்மாதலியைவந்தாய்
பொன்னினொளிர்தேரிதுகொடார்புகலவென்றா
னன்னவனுமன்னதனையாகவுலாசெய்தான். (௫௩)

முப்புரமெரித்தவனுநான்முகனுமுன்றா
ளப்பகலியற்றியுளதாயிரமருக்கர்க்
கொப்புடையதாழிதிரிகாலுமுலைவில்லா
விப்பொருவிறேர்வருவதிந்திரனதெந்தாய். (௫௪)

அண்டமிதுபோல்வனவளப்பிலவடுக்கிக்
கொண்டுபெயருங்குறுகுநீளுமவைகோளுற்
றுண்டவன்வயிற்றினையுமொக்குமுவமைக்குப்
புண்டரிகநின்சரமெனக்கடிதுபோமால். (௫௫)

கண்ணுமனமும்நெடியகாலுமிவைகண்டா
லுண்ணும்விசையாலுணர்வுபிற்படரவோடும்
விண்ணுநிலனும்மெனவிசேடமிலதஃதே
யெண்ணுநெடுநீரினுநெருப்பிடையுமெந்தாய். (௫௬)

நீருமுளவேயவையுமேழுகிமிர்கிற்கும்
பாருமுளவேயதனிரட்டியவைபண்பிற்
பேருமொருகாலையிருகாலையிடைபோராத்
தேருமிதுவேயிதுவலாலுலகுசெய்தோய். (௫௭)

தேவருமுனித்தலைவருஞ்சிவனுமுன்னாண்
மூவுலகளித்தமுதலும்முடுகமுன்னின்
றேவினர்சுரர்க்கிறைவனீய்ந்துளவனென்றான்
மாவின்மனமொப்பவுணர்மாதலிவலித்தான். (௫௮)

அய்யனிதுகேட்டிகலரக்கரகன்மாயச்
செய்கைகொலெனச்சிறிதுசிந்தையினினைந்தான்
மெய்தவனுரைத்ததெனவேண்டியிடைபூண்ட
மொய்யுளைவயப்பரிமொழிந்தமுதுவேதம். (௫௯)

இல்லையினியையமெனவெண்ணியவிராம
னல்லவனைநீயெவனையென்னநவில்கிற்பான்
வல்லதனையூர்வதொருமாதலியெனப்பேர்
சொல்லுவனெனத்தொழுதுநெஞ்சினொடுசொன்னான். (௬0)

மாருதியைநோக்கியிளவாளரியைநோக்கி
நீர்கருதுகின்றதைநிகழ்த்துமெனநின்றா
னாரியன்வணங்கியவனாயமிலையையா
தேரிதுபுரந்தரனதென்றனர்தெளிந்தார். (௬௧)

விழுந்தபுரமேவினைநிலத்தொடுவெருவம்பத்
தொழுந்தகையநல்வினைகளிப்பிரொடுதுள்ள
வழுந்துயரக்கமாரர்தலர்கைமுன்துற்
றெழுந்துதலையேறவிவிதேறினனிராமன். (௩௨)

தேரேறுபடலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௩௬௩௧.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

---

௩௪ - வது—இராவணன்வதைப்படலம்.

ஆழியந்தடந்தேர்வீரனேறலுமாசிகூறிப்
பூழியிற்கரித்தன்மைநோக்கியபுலவர்போத
வூழிவெங்காற்றின்வெய்யகனலுமழையொன்றுஞ்சொல்லார்
வாழியவறமன்றேலேயேத்தினார்மலர்கடூவி. (௧)

எழுகதேர்சுமக்கவெல்லோம்வலியும்புக்கின்றேபொன்றி
விழுகபோயரக்கன்வெல்கவேந்தர்க்குவேந்தன்விம்மி
யழுகபோரரக்கெமாரொன்றார்த்தனரமரராழி
முழுகிமீதெழுந்ததென்னச்சென்றதுமூரித்திண்டேர். (௨)

அன்னதுகண்ணிற்கண்டவரக்கனுமமரரீய்ந்தார்
மன்னெடுந்தேரொன்றுன்விவாய்மடித்தெயிறுதின்றான்
பின்னதுகிடக்கவென்றுத்தன்னுடைப்பெருந்திண்டேரை
மின்னிவர்வரிவிற்செங்கையிராமன்மேல்விடுதியென்றான். (௩)

இரிந்தனகவிகளெல்லாமிமையவரிரதமீர்ந்தா
ரிந்தமன்வெல்லுமென்றற்கையுறவில்லென்றஞ்சார்
திரிந்தனமாமுங்கல்லுஞ்சிந்தினர்திசையோடண்டம்
பிரிந்தனகொல்லென்றெண்ணப்பிறந்தனமுழக்கின்பெற்றி. (௪)

வார்ப்பொலிமுரசினோதைவயவர்வாய்ப்புடைப்பினோதை
போர்த்தொழிற்களத்தைமுற்றுஞ்சுற்றியபொம்மலோதை
யார்த்தலிவியாரும்பார்விழ்ந்தடங்கினரிருவராடற்
றேர்க்குரலோதைபொங்கச்செவிமுற்றுஞ்செவிடுசெய்ய. (௫)

மாதலியதனைநோக்கிமன்னர்தமன்னன்மைந்தன்
காதலாற்கருமமொன்றுகேட்டியாற்கனித்தசிந்தை
யேதலன்மிகுதியெல்லாமிடையிற்றபின்றையென்றன்
சோதனைநோக்கிச்செய்திதுடிப்பிலையென்னச்சொன்னான். (௬)

வள்ளலின்கருத்துமாவின்சிந்தையுமாற்றலார்த
முள்ளமுமிமையுமுற்றகுற்றமுமுறுதிதானும்
கள்ளமில்காலப்பாடுங்கருமமுங்கருதேனாகிற்
றெள்ளிதென்விஞ்சையென்னாமலனுஞ்சீரிதென்றான். (௭)

தோன்றினனிராமனீதாற்புரந்தரன்வரந்ததேர்மே
லென்றிருவருக்கும்வெம்போரொய்தியதிடையேயாறே
சான்றெனநிற்றல்குற்றந்தருதியால்விடையீண்டென்றான்
வான்றுடர்குன்றமன்னமகோதரனிலங்கைமன்னை. (௮)

அம்புயமனையகண்ணன்றன்னையாளரியினேறு
தும்பியைத்தலைத்ததென்னத்தலைக்குவன்றுடர்ந்துநின்ற
தம்பியைத்தடுத்தியாயிற்றந்தனைகொற்றமென்றான்
வெம்பிகலரக்கனஃதேசெய்வனென்றவனின்மீண்டான். (௯)

மீண்டவனிளவனின்றபாணியின்விளங்காமுன்ன
மாண்டகைதெய்வத்திண்டோளறுகியதறுகுங்காலை
மூண்டெழுவெகுளியோடுமகோதரன்வெகுண்டுமுட்டத்
தூண்டுதிதேரையென்றான்சாரதிதேர்ந்துசொன்னான். (௧௦)

எண்ணருங்கோடிவெங்கணிராவணரோயுமின்று
நண்ணியபொழுதுமீண்டுநடப்பரோகிடப்பதல்லா
லண்ணறன்றேற்றங்கண்டாலையநீகமலமன்ன
கண்ணனையொழியவிப்பாற்செல்வதேகருமமென்றான். (௧௧)

என்றலுமெயிற்றுப்பேழ்வாய்மடித்தடாவெடுத்துநின்னைத்
தின்றனனெனினுமுண்டாம்பழுதெனச்சீற்றஞ்சிந்துய்
குன்றனதோற்றத்தான்றன்கொடிநெடுந்தேரினேரோ
சென்றனவிராமன்றிண்டேர்விளைந்ததுதுமிலத்திண்போர். (௧௨)

பொற்றடந்தேருமாவும்பூட்கையுமிலங்குவாட்கைக்
கற்றடந்திண்டோளாளுநெருக்கியகடல்களெல்லாம்
வற்றினவிராமன்வாளிவடவனல்பருகவென்று
னொற்றைவன்றடந்தேரோடுமகோதரனொருவன்சென்றான். (௧௩)

அசனியேயிருந்தகொற்றக்கொடியின்மேலாவத்தேர்மேற்
குசையுறுபாகன்றன்மேற்கொற்றவன்குலவுத்தோன்மேல்
விசையுறுபகழிமாரிவித்தினான்விண்ணினோடுந்
திசைகளுங்கிழியவார்த்தான்றீர்த்தனுமுறுவல்செய்தான். (௧௪)

வில்லொன்றாற்கவசமொன்றால்விறலுடைக்கரமோரொன்றாற்
கல்லொன்றுதோளுமொன்றாற்கழுத்தொன்றாற்கடிதின்வாங்கி
செல்லொன்றுகணையாலையன்சிந்தினான்செப்பிவந்த
சொல்லொன்றாய்ச்செய்கையொன்றாய்த்துணிந்தனனரக்கன்றுஞ்சி. (௧௫)

மோதரன்முடிந்தவண்ணமூவகையுலகத்தோடு
மாதிரமெவையும்வென்றவன்றொழிலரக்கன்கண்டான்
சேதனையுண்ணக்கண்டான்செலவிடுசெலவிடென்றான்
சூதனுமுடுகத்தூண்டச்சென்றதுதுரகத்திண்டேர். (௧௬)

பனிப்படாநின்றதென்னப்பாக்கின்றசேனைபாரித்
தனிப்படாறுகிலின்னந்தாழ்கிலனென்றுந்தன்மை
றனிப்படாநின்றவீரனவனென்றுநோக்காவண்ணங்
குனிப்படாநின்றவில்லாலொல்லையினூறிக்கொன்றான். (௧௭)

அடல்வலியரக்கர்க்கப்போதண்டர்களெழுந்துமண்டுங்
கடல்களும்வற்றவெற்றிக்கால்கிளர்ந்தடற்றுங்காலை
வடவரைமுதலவானமலைக்குலஞ்சலிப்பபோன்று
சுடர்மணிவலையஞ்சிந்தத்துடித்தனவிடந்தபொற்றோள். (௧௮)

வேறு.

உதிரமாரிசொரிந்துலகெலா
மதிரவானமிடித்ததருவரை
பிதிரவீழ்ந்தசனியொளிபெருங்
கதிரவன்றனையூருங்கலந்ததால். (௧௯)

வாவும்வாசிநெடுங்கினவாங்கலி
னேவும்வெஞ்சிலைநாணிடையிற்றன
நாவும்வாயுமுலர்ந்தனநாண்மலர்ப்
பூவின்மாலைபுலால்வெறிபூத்ததால். (௨௦)

எழுதுவினைகொடேந்துபதாகைமேற்
கழுதுங்காகமுமொய்த்தனகண்கணி
டொழுகுகின்றனவோடிகலாடன்மாத்
தொழுவினின்றனபோன்றனகுதிமா. (௨௧)

இன்னவாகியிமையவர்க்கின்பஞ்செய்
துன்னிமித்தங்கடோன்றினதோன்றவு
மன்னதொன்றுமதிக்கிலனற்றுமோ
வென்னைவெல்லமனிதனென்றெண்ணுவான். (௨௨)

வீங்குதேர்செலும்வேகத்துவேலைநீ
ரோங்குநாளினுறங்குமுலகுபோற்
றூங்கலாற்றலர்தமொழித்தா
நீங்கினாரிருகாலுநெருங்கினார். (௨௩)

கருமமுங்கடைக்கண்ணுறுஞானமு
மருமைசேருமவிஞ்சையும்விஞ்சையும்
பெருமைசால்கொடும்பாவமும்பேர்கலாத்
தருமமும்மெனச்சென்றெதிர்தாக்கினார். (௨௪)

சிரமொராயிரந்தாங்கியசேடனு
முரவுகொற்றத்தவணத்தரசனும்
பொரவுடன்றனர்போலப்பொருந்தின
ரிரவுநண்பகலும்மெனவேற்றனர். (௨௫)

வென்றியர்திசையானைவெருண்டன
ஒன்றையொன்றுமுனிந்தவுமொத்தன
ரன்றியுங்காசிங்கமுமாதியாம்
யன்றியும்மெனலாயினர்பண்பினாள். (௨௬)
ஆவனவில்லின்பொருட்டொருதொல்லோர
ளெவனவிசனென்பார்பொரவேற்றெதிர்
புவனமூன்றும்பொலக்கழலாற்றொடு
மவனுமச்சிவனும்மெனலாயினார். (௨௭)
கண்டசங்காரனன்முகன்கைத்தலம்
விண்டசங்கிடவண்டம்வெடித்திட
வண்டசங்கத்தமார்தமார்ப்பெலா
முண்டசங்கையிராவணனாதிருன். (௨௮)
சொன்னசங்கினதோசைதுளக்குற
வென்னசங்கென்றிமையவரேங்கிட
வன்னசங்கைபொருமையினாலரி
தன்னவொண்சங்கந்தானுமுழங்கிற்றால். (௨௯)
ஐயனைம்படைதானுமடித்தொழிற்
செய்யவந்தயல்நின்றனதேவயின்
மெய்யனன்னவைகண்டிலன்வேதங்கள்
பொய்யிறன்னைப்புலன்றெரியாமைபோல். (௩0)
ஆசையும்விசும்பும்மலையாழியுந்
தேசமும்மலையும்நெடுந்தேவருங்
கூசவண்டங்குலுங்கக்குலங்கொடார்
வாசவன்சங்கைமாதலிவாய்வைத்தான். (௩௧)
துமிலவாளியரக்கன்றுரப்பன
விமலன்மேனியின்வீழ்வதன்முன்னமே
*கமலவான்முகனாதியர்கட்கடை
யமலமேனியிற்றைத்தவனந்தமால். (௩௨)
சென்றதேரோரிரண்டொடுஞ்சேர்த்திய
குன்றின்வெங்கட்குதிரைகுதிப்பன
வொன்றையொன்றுற்றெரியுகநோக்கின
தின்றுதீர்வனபோலுஞ்சினத்தன. (௩௩)
கொடியின்மேலுறைவீணையுங்கொற்றமா
விடியினேறுமுறையினிடித்தன
படியும்விண்ணும்பரவையும்பன்முறை
முடியுமென்பதோர்மூரிமுழக்கினால். (௩௪)

* கமலமுகவானனாதியர்.

ஏழுவேலையுமார்ப்பெடுத்தென்னலாம்
வீழிவெங்கணிராவணன்வில்லொலி
யாழிதாதன்சிலையொலியண்டம்வின்
றேழ்பேர்வுழிமாமழையொத்ததால். (௩௫)

ஆங்குநின்றவனுமனையாதியாம்
வீங்குவெஞ்சினவீரர்விழித்தன
ரேங்கிநின்றதலாலொன்றிமைத்திலர்
வாங்குசிந்தையர்செய்கைமறந்துளார். (௩௬)

ஆவதென்னைகொலாமென்றறிகிலா
ரேவர்வெல்வதொன்றென்னலரேங்குவார்
போவர்மீள்வர்பதைப்பர்பொருமலாற்
றேவருந்தங்கள்செய்கைமறந்தனர். (௩௭)

சேனைவந்தநோக்கலுந்திண்சரம்
புனைமுற்றினசிந்தினர்பூமழை
கானவந்தகடவுளர்கையெலா
மானவன்றனையாருளராவரோ. (௩௮)

நீண்டவின்னொன்றுவாணெடுநீலவிற்
பூண்டிரண்டெதிர்நின்றவும்போன்றன
வாண்டவில்லிதன்வில்லுமரக்கன்றன்
றீண்டவல்லவரில்லாச்சிலையுமே. (௩௯)

ஆக்கனென்றெடுத்தார்க்கின்றவார்ப்புமப்
பொருப்புமெய்விற்றெழிப்புமுண்டென்பபோற்
குரைக்கும்வேலையுமேகக்குழாங்களு
மிரைத்துடிக்கின்றதின்றுமொரீறிலா. (௪0)

மண்ணிற்செல்வனசெல்விறுமாசற
வெண்ணிற்குன்மழையல்லவிராவணன்
கண்ணிற்சிந்தியதீக்கடுவேகத்த
விண்ணிற்செல்வனவிண்ணின்றுவீழ்வன. (௪௧)

மால்கலங்கலில்சிந்தையமாதிரம்
நால்கலங்கருந்தொறும்நாளொடு
கால்கலங்குவதேவர்கணமழைச்
சூல்கலங்குமிலங்கைகளங்குமால். (௪௨)

இக்கணத்துமெறிப்பதடித்தன
னெக்கமேகத்துதிர்க்குமெருப்பெனப்
பக்கம்வீசம்படர்சுடர்பஃறிசை
புக்கபோதப்பொடிப்பனபோக்கில. (௪௩)

கொற்றம்பிற்கொடுகொள்ளுதல்கோளிலாச்
சிற்றையாளனைத்தேவர்தந்தேரொடும்
பற்றிவாளிற்சுழற்றிப்படியின்மே
லெற்றுவேனென்றுரைக்குமிரைக்குமால். (௪௪)

தடித்துவைத்தனவெங்கணைதாக்கற
வடித்துவைத்தனுமானிடற்கேவலி
யொடித்துத்தேரையுதிர்த்தொருவில்லொடும்
பிடித்துக்கொள்வன்சிறையெனப்பேசுமால். (௪௫)

வேறு.

பதைக்கின்றதொர்மனமும்மிடைபடர்கின்றதொர்சினமும்
விதைக்கின்றனபொறிபொங்கினவிழியும்முடைவெய்யோன்
குதைக்கின்றனநிமிர்வெஞ்சிலைகுழையக்கொடுகடுங்கா
லுதைக்கின்றனசுடர்வெங்கணையுருமேறெனவெய்தான். (௪௬)

உருமொப்பனகனலொப்பனவூற்றந்தருகூற்றின்
மருமந்திறந்துழைகிற்பனமழையொப்பனவானோர்
திருமித்தனபடைபற்றறநிமிர்வுற்றனவமிர்தப்
பெருமத்தினைமுறைசுற்றியபெரும்பாம்பினும்பெரிய. (௪௭)

துண்டப்படுநெடுமேருவைத்துளைத்துள்ளுறைதொங்கா
தண்டத்தையும்பொதுத்தேகுமென்றிமையோர்களுமயிர்த்தார்
கண்டத்தெறுகணைக்காற்றினைக்கருணைக்கடல்கனகச்
சண்டச்சரமழைகொண்டவையிடையேயறத்தடுத்தான். (௪௮)

உடையான்முயன்றொருகாரியமுறுதீவினையுடற்ற
விடையூறெனச்சிதைந்தாங்கெனச்சரஞ்சிந்தினவிடலுந்
தொடையூறியகணைமாரிகள்தொகைதீர்த்தவைதுரந்தான்
கடையூழுறுகணமாமழைகால்வீழ்ந்தெனக்கடியான். (௪௯)

விண்போர்த்தனதிசைபோர்த்தனமலைபோர்த்தனவிமையோர்
கண்போர்த்தனகடல்போர்த்தனபடிபோர்த்தனகலையோ
னொண்போர்த்தனவெறிபோர்த்தனவிருள்போர்த்தனவென்னே
திண்போர்த்தொழிலென்றுனையினுரிபோர்த்தவன்றிலகத்தான். (௫௦)

அல்லாரொடுபெருந்தேவருமறைவாணருமஞ்சி
யெல்லார்களுங்கரங்கொண்டிருவிழிபொத்தினரிரிந்தார்
செல்லாயிரம்விழுங்காலுகும்விலங்கொத்ததுசேனை
வில்லாளனுமதுகண்டவைவிலக்குந்தொழில்வேட்டான். (௫௧)

செந்தீவினைமறைவாணனுக்கொருவன்சிறுவிலைநாண்
முந்திந்ததொருணவின்பயனெனலாயினமுதல்வன்
வந்திந்தனவடிவெங்கணையனையான்வருந்தமைந்த
வெந்தீவினைப்பயனொத்தனவரக்கன்சொரிவிசிகம். (௫௨)

ஆறாயிரம்வடிவெங்கணைதொடியொன்றினின்விடுவா
நூறுவிறன்மறவோனவைதனிநாயகனைநப்பான்
கூறுவினகனல்சிந்தினகுடிக்கப்புனல்குறுகிச்
சேறுவினபொடியாயினசிதராயினகடலும். (௫௩)

வில்லாற்சரந்தாக்கின்றவற்றுடனேமிடல்வெம்போர்
வல்லானெழுமழுத்தோமாமணித்தண்டிருப்புலக்கை
தொல்லார்மிடல்வளைசக்கரஞ்சூலம்மிவைநடக்கத்
தெல்லாநெடுந்தடக்கையெடுத்தெறிந்தான்செருவறிந்தான். (௫௪)

வேலாயிரமழுவாயிரமெழுவாயிரம்விசிகக்
கோலாயிரம்பிறவாயிரமொருகோல்படக்குறைவ
காலாயினகனலாயினவுருமாயினகதிய
சூலாயினமழையன்னவன்றொடைபல்வகைதொடுக்க. (௫௫)

ஒத்துச்செருவிளைக்கின்றதொராளவின்றலையுடனே
பத்துச்சிலையெடுத்தான்கணைதொடுத்தான்பலமுகிலாய்த்
தொத்துப்படுநெடுந்தாரைகள்சொரிந்தாலெனத்துறந்தான்
குத்துக்கொடுநெடுங்கோல்படுகளிறுமெனக்கொதித்தான். (௫௬)

ஈசன்விடுசரமாரியுமெரிசிந்துறுதறுகண்
ணீசன்விடுசரமாரியுமிடையெங்கணுநெருங்கத்
தேசம்முதலைம்பூதமுஞ்செருக்கண்டனசெருக்கிக்
கூசம்மயிர்பொடிப்பற்றனவனலாயினகொடிய. (௫௭)

வேறு.

மந்தரக்கிரியெனமருந்துமாருதி
தந்தவப்பொருப்பெனப்புறங்கடானெனக்
கந்தருப்பன்னகர்விசும்பிற்கண்டன
வந்தாத்தெழுந்ததவ்வரக்கன்றேரரோ. (௫௮)

எழுந்துயர்தேர்மிசையிலங்கைக்காவலன்
பொழிந்தனசாமழையுருவிப்போகலா
லொழிந்ததுமொழியிலதென்னவொல்லெனக்
கழிந்ததுகவிக்குலமிராமன்காணவே. (௫௯)

முழவிடுதோளொடுமுடியும்பஃறலை
விழவிடுவேனினிவிசும்புசேமமோ
மழவிடையனையகம்படைஞர்மாண்டன
ரொழவிடுதேரையென்றிராமன்கூறினான். (௬௦)

அந்துசெய்குவெனெனவறிந்தமாதலி
யுந்தினன்றேரொருமுழிக்காற்றினை
யிந்துமண்டிலத்தின்மேலிரவிமண்டிலம்
வந்தனவந்ததம்மானத்தேரரோ. (௬௧)

இரிந்தனமழைக்குலமிழுகித்திக்கெலா
முரிந்தனவுடுக்குலமுதிர்ந்துசிந்தின
நெரிந்தனநெடுவரைக்குடுமிநேர்முறை
திரிந்தனசாரிகைதேருந்தேருமே. (௬௨)

வலம்வருமிடம்வருமறுகிவாளொடு
நிலம்வருமிடம்வலநிமிரும்வேலையு
மலம்வருங்குலவரையனைத்துமண்டமுஞ்
சலம்வருங்குயவனதிகிரித்தன்மைபோல். (௬௩)

எழும்புகழிராமன்றேரரக்கன்றேரிதென்
றுழுந்துருள்பொழுதினெவ்வுலகுஞ்சேர்வன
தழும்பியதேவருத்தெரிவுதந்திலர்
பிழம்பினதிரிவனவென்னும்பெற்றியார். (௬௪)

உக்கிலாவுடுக்களுமுருள்கடாக்கலி
னெக்கிலாமலைகளுநெருப்புச்சிந்தலில்
வக்கிலாத்திசைகளுமுதிரம்வாய்வழி
கக்கிலாவுயிர்களுமில்லைக்காண்பன. (௬௫)

இந்திரனுலகத்தானென்பனென்றவர்
சந்திரனுலகத்தானென்பர்தாமரை
யந்தணனுலகத்தானென்பரல்லரால்
மந்தரமலையினானென்பர்தானவர். (௬௬)

பாற்கடனடுவினானென்பர்பல்வகை
மாக்கடலினுக்குமவ்வரம்பினானென்பர்
மேற்கடலானென்பர்கிழக்குளானென்ப
ரார்க்கடையுருமென்பரறிந்தவானவர். (௬௭)

மீண்டனவோவென்பர்விசும்புவிண்டுகக்
கீண்டனவோவென்பர்கீழவோவென்பர்
பூண்டனபுரவியோபுதியகாற்றென்பர்
மாண்டனவுலகமென்றணங்கும்வாயினர். (௬௮)

ஏழுடைக்கடலினுந்தீவொரேழினு
மேழுடைமலையினுமுலகொரேழினுஞ்
சூழுடையண்டத்தின்சுவர்களெல்லையா
ஆழியகாற்றெனத்திரிந்தவோவில. (௬௯)

உடைக்கடலேழினுமுலகமேழினு
மிடைப்படுந்தீவினுமலையொரேழினு
மடைக்கலப்பொருளெனவரக்கன்வீசிய
படைக்கலமழைபடுதுளியின்பான்மைய. (௭௦)

ஒருத்தலைகனைத்தையுமுழுவமோட்டிடை
விருத்திலிராவணனெரிந்தவெய்தன
வருத்தகுந்தடுத்தஅமன்றியாரியன்
செருத்தொடையொருதொழில்செய்ததில்லையால். (௭௧)

விலங்கலும்வேலையுமேலுங்கீழுரு
மலங்கொளிதிரிதருமுலகனைத்தையுங்
கலக்குறத்திரிந்ததோருழிக்காலக்காற்
றிலங்கைகையெய்தினவிமைப்பின்வந்தரோ. (௭௨)

உய்த்துலகனைத்திலுமுழன்றசாரிகை
மொய்த்தகுகடவிடைமணலின்மும்மையால்
வித்தகர்கடவியவிசையத்தேர்ப்பரி
யெய்த்திலவியர்த்திலவிரண்டுபாலவும். (௭௩)

இந்திரன்றேரின்மேலுயர்ந்தவெந்தொழி
லந்தரும்பெருவலியுருமினேற்றினைச்
சந்திரனனையதோர்சரத்தினுற்றறா
சிந்தினனிராவணனெரியுஞ்செங்கணான். (௭௪)

சாய்ந்தவல்லுருமுபோயாவத்தாழ்கடற்
பாய்ந்தவல்லுருமெனமுழங்கிப்பாய்தலுங்
காய்ந்தபேரிரும்பின்வன்கட்டிகாலுறத்
தோய்ந்தநீராமெனச்சுருங்கிற்றுழியே. (௭௫)

எழுந்தெனச்சிதைவிலாவிராமன்றேர்ப்பரிக்
குழுக்களைக்கூர்ங்கணைக்குப்பையாக்கினோர்
வழுத்தருமாதலிவயிரமார்பிடை
யழுத்தினன்கொடுஞ்சரமாறொடாறரோ. (௭௬)

மண்டிலவரிசிலைவானவில்லொடு
முண்டவெண்பிறையெனத்தோன்றத்தூவிய
வண்டைவெங்கடுங்கணையொருங்குமுடலாற்
கண்டிலரிராமனையிமைப்பில்கண்ணினார். (௭௭)

தோற்றனனேயினியென்றுந்தோற்றத்தா
லாற்றல்சாலமாருமச்சமெய்தினார்
வேற்றவரார்த்தனர்மேலுங்கீழுமாய்க்
காற்றியக்கற்றதுகலங்கிற்றும்பரோ. (௭௮)

அங்கியுந்தன்னொளியடங்கிற்றார்கலி
பொங்கலதிமிர்த்தனவிசும்பிற்போக்கில
வெங்கதிர்தன்கதிர்விலங்கிமீண்டன
மங்குலினெடும்புனல்மழைவறந்ததால். (௭௯)

திசையிலக்கடகரிசெருக்குச்சிந்தின
வசையிலாவேலைகளார்க்கவஞ்சின
விசைகொடுவிசாகத்தைநெருக்கியேறின
குசனெனமேருவுங்குலுக்கமுற்றதே. (௮௰)

வானரத்தலைவருமிளையமைந்தனு
மேனையத்தலைவனைக்காண்கிலாரினக்
கானகக்கரியெனக்கலங்கினார்கடன்
மீனெனக்கலங்கினாம்புவீய்ந்தநாள். (௮௧)

நீனிறவிருதர்கோனெய்தவீதியிற்
சால்புடைமாதலிமார்பிற்றைத்தன
கோலினுமிலக்குவன்கோலமார்பின்வீழ்
வேலினும்வெம்மையேவிளைந்தவீரற்கு. (௮௨)

எய்தனசரமெலாமிமைப்பின்முந்துறக்
கொய்தனகற்றிவெங்கோலின்கோவையா
றெய்தெனவரக்கனைநெருங்கநொந்தன
செய்தனனிராகவனமரர்தேறினார். (௮௩)

வேறு.

ஞாணுடைநிலாபுனாகரமவைதொறுமக்
கோணுடைமலைநிகர்சிலையிடைகுறையச்
சேணுடைநிகர்கணைசிதறினனுணர்வோ
னூனுடையுயிர்தொறுமுறையுறுமொருவன். (௮௪)

படையுகவிமையவர்பருவரல்கெடவந்
திடையுறுதிசைதிசையிறுகுறவிறைவ
னடையுறுகொடிமிசையணுகினனளவிற்
கடையுகமுடிவெழுகடல்புரைகலுழன். (௮௫)

கயில்விரிவறவருகவசமுமுருவிப்
பயில்விரிகுருதிகள்பருகிடவெயிலோ
டயில்விரிசுடுகணைகடவினனதிவி
னுயிருடலெனவுறைசுடரொளியொருவன். (௮௬)

திசையுறுதுகிலதுசெறிமழைசிதறும்
விசையுறுமுகிழுறவிரிதருசிரனே
டிசையுறுகருவியினினிதுறைகொடியைத்
தசையுறுகணைகொடுதணியுறவிடலும். (௮௭)

பண்ணவனுயர்கொடியெனவொருபறவைக்
கண்ணகனுலகினைவலம்வருகலுழ
னண்ணலுமிமையவர்நமதறுகரும
மெண்ணலமுனிவினினிவதினனெனவே. (௮௮)

ஆயதொரமதியினதிவினதிவா
நாயகனெருவனைகலிலுணர்வா
னேயினவிருளுறுதாமதமெனுமத்
தீய்வினைதருபடைதெறுதொழின்மறவோன். (௯)

நீர்முகமுடையனசிலமுகமூதிரச்
தோய்முகமுடையனசுரர்முகமுடைய
பேய்முகமுடையனபிலமுகநுழையும்
வாய்முகவரியரவனையனவருவ. (௧௦)

ஒருதிசைமுதல்கடையொருதிசையளவு
மிருதிசையெயிறுறவருவனபெரிய
கருதியகருதியபுரிவனகளனும்
பருதியைமதியொடுபெருகுவபகழி. (௧௧)

இருளொருதிசையொருதிசைவெயில்விரியுந்
தருளொருதிசையொருதிசைமழைதொடரு
முருளொருதிசையொருதிசையுருமுரலு
மருளொருதிசையொருதிசைசில்லவருடம். (௧௨)

இனையனநிகழ்வுறவெழுவகையுலகுங்
கனையிருள்கதுவிடவமரர்கள்கதற
வினையுறுதொழிலிடைவிரவலும்விமல
னிலையுறுதகைமையினெறியுறுமுறையின். (௧௩)

கன்றுதலொருவனதுபடைகருதிப்
பன்னவன்விடுதலுமறுதனிபருக
வென்றுறுகனவிலெருவுணர்வெனவிமையிற்
றுன்னெறுநிலையினினெறிபடைதுலைய. (௧௪)

வேறு.

விரிந்ததன்படைமெய்கண்டபொய்யெனவியந்த
வெரிந்தகண்ணினனெயிற்றிடைமடித்தவாயினன்றன்
றெரிந்தவெங்கணைகங்கவெஞ்சிறையன்னதிறத்தா
லிரிந்தமன்றிருமேனிமேலழுத்தினின்றார்த்தான். (௧௫)

ஆர்த்துவெஞ்சினத்தசுரர்தம்படைக்கலமமரர்
வார்த்தையுண்டிருயிர்களான்மறலிதன்வயிற்றைத்
தீர்த்தனிந்திரன்றனுக்குறுதொழிலதுகொடுத்தத்
தீர்த்தன்மேல்வரத்தூரந்தனுலகெலாந்தெரிய. (௧௬)

அசுரப்பெரும்படைக்கலமமரனையமரி
னேசவிப்பதெவ்வுலகமுமெவனாயும்வென்று
வீசவெற்பிறத்தூரந்தவெங்கணையதுவிசையிற்
பூசரர்க்கொருகடவுண்மேற்சென்றதுபோலாம். (௧௭)

ஆங்குகின்றஇவ்வுலகையோர்நொடிவலாயென்ன
வெங்குகின்றுநின்றலம்வருமமரர்கண்டிரைப்ப
மங்குல்வல்லுருமேற்றின்மேலெரிமடுத்தென்ன
வங்கிதன்னெடும்படைதொடுத்திராகவனுய்த்தான். (௯௮)

கூற்றுக்கோடிலுங்கோடலகடலெலாங்குடிப்ப
நீற்றுக்குப்பையின்மேருவைநூறுவநெடிய
காற்றுப்பின்செலச்செல்வனவுலகெலாங்கடப்ப
நூற்றுக்கோடியம்பெய்தனனிராவணனொடியில். (௯௯)

என்னகைக்கடுப்போவென்பர்சிலர்சிலரிவையு
மன்னமாயமேயம்பலவென்பரவ்வம்புக்
கின்னமுண்டுகொலிடமென்பர்சிலர்சிலரிகற்போர்
முன்னமித்தனைமுயன்றிலனுமென்பர்முனிவர். (௫00)

மறைமுதற்றனிநாயகன்வாவினைமறைத்த
சிறையுடைக்கொடுஞ்சரமெலாமிமைப்பொன்றிற்றிரியப்
பொறைசிகைப்பொருந்தலைநின்றம்புக்கத்தினளவும்
பிறைமுகக்கடுவெஞ்சரமவைகொண்டுபிளந்தான். (௫0௧)

அயன்படைத்தபேரண்டத்தினருந்தவமாற்றிப்
பயன்படைத்தவரியாரிலும்படைத்தவன்பலபோர்
வியன்படைக்கலந்தொடுப்பனுனினியெனவிரைந்தான்
மயன்படைக்கலந்தாந்தனன்றயரதன்மகன்மேல். (௫0௨)

விட்டனன்விடுபடைக்கலம்வேரொடுமுலகைச்
சுட்டனன்னெனத்துனுக்கமுற்றமாருஞ்சுருண்டார்
கெட்டனம்மெனவானரத்தலைவருங்கிழிந்தார்
சிட்டர்தந்தனித்தேவனுமதனிலைதெரிந்தான். (௫0௩)

பாந்தட்பஃறலைபாந்தனபுவியிடைப்பயிலு
மாந்தர்க்கில்லையால்வாழ்வெனவருகின்றவதனைக்
காந்தர்ப்பம்மெனுங்கடுங்கொடும்படையினாற்கடந்தா
னேந்தற்பன்மணியெறும்வலித்திண்புயத்திராமன். (௫0௪)

பண்டுநான்முகன்படைத்ததுகனகனிப்பாரைத்
தொண்டுகொண்டதுமதுவெனுமவுணனுந்தொட்ட
துண்டதென்வயினதுஅாந்துயிருண்பனென்றுத்
தண்டுகொண்டெறிந்தானைந்தொடைநடைத்தலையான். (௫0௫)

தாருகன்பண்டுதேவரைத்தகர்த்ததுதனிமா
மேருகந்தாம்புனைவதுவெயிலெனவொளிய
வோருகந்தனினுலகின்றுருட்டினுமுருளாச்
சீருகந்ததுமுகந்ததுவானவர்சிரங்கள். (௫0௬)

பசும்புனற்பெரும்பாவைபண்டுண்டவன்பணிப்புற்
றசும்புபாய்கின்றதருக்கவிறெலுவிரின்றனண்டர்
தசும்புபோலுடைந்தொழியுமென்றனைவருந்தளர
விசும்புபாழ்படவந்தனமர்ந்தாம்வெருவ. (கoஎ)

கண்டதாமரைக்கண்ணனைக்கடவுண்மாக்களைதா
ரண்டர்நாயகனுயிரக்கண்ணிலுமடங்காப்
புண்டரீகத்தின்முனையன்னபுகர்முகம்விட்டா
னுண்டைநூறுடைநூறுபட்டுளதெனவுதிர்த்தான். (கoஅ)

தேயமின்றவன்சிலைவலங்காட்டினன்றீராப்
பேயையென்பலதாப்பதிங்கிவன்பிழையாம
லாயதன்பெரும்படையொடுமடுகளத்தவிய
மாயையின்படைதொடுப்பனென்றிராவணன்மதித்தான். (கoகூ)

பூசனைத்தொழிற்புரிந்ததான்முறைமையிற்போற்று
மீசனைத்தொழுதிருடியுஞ்சந்தமுமெண்ணி
யாசைபத்திலுமந்தரப்பரப்பிலுமடங்கா
வீசினன்செலவில்லிடைத்தொடைகொடுவிட்டான். (ககo)

மாயைபொத்தியவயப்படைவிடுதலும்வாம்பில்
காயமெத்தனையுளநெடுங்காயங்கள்கதுவ
வாயமுற்றெழுந்தாரெனவார்த்தனரமரிற்
றூயகொற்றவர்கடுசரந்தான்முன்புதுணிந்தார். (ககக)

இந்திரற்கொருபகைஞனுமவற்கிளையோனுந்
தந்திரப்பெருந்தலைவருந்தலைத்தலையோரு
மந்திரச்சுற்றத்தவர்களும்வரம்பிலர்பிறரு
மந்தரத்தினைமறைத்தனர்மழையுகவார்ப்பார். (ககஉ)

குடப்பெருஞ்செவித்துன்றமுமற்றுளகுழுவும்
படைத்தமூலமாத்தானையுமுதலினர்பட்டார்
விடைத்தெழுந்தனரானைதேர்பரிமுதல்வெவ்வே
றடைத்தவூர்திகளனைத்தும்வந்தவ்வழியடைய. (ககங)

ஆசிலப்பெருவெள்ளமென்றறிஞரோயறைந்த
காய்சினப்பெருங்கடற்படைகளப்பட்டதெல்லா
மீசனிற்பெற்றவாத்திருலெய்தியதென்னத்
தேசமுற்றவுஞ்செறிந்ததுதிசைகளுந்திகைக்க. (ககச)

சென்றதெங்களுந்தேவருமுனிவருஞ்சிந்த
வென்றதெங்களைப்போலும்யாம்விளிவதுமுளதே
யின்றுகாட்டுதுமெய்தமிழெய்துமினென்னுக்
கொன்றகொற்றவர்தம்பெயர்குறித்தறைகூற. (ககரு)

பாரிடந்துகொண்டெழுந்தனபாம்பெனும்படிய
பாரிடந்தொடர்ந்தெழுந்தனமலையனபடியப்
பேரிடம்பெறலரிதிவ்விசும்பெனப்பிறந்த
பேரிடங்கரின்கடுங்குழையணிந்தன்பெயர்கள். (ககசு)

தாமசத்தினிற்பிறந்தவரறந்தெறுந்தகையர்
தாமசத்தினிற்செல்கிலாச்சதமுகத்தவற்குத்
தாமசத்தினைத்தொடர்ந்தவர்பரந்தனர்தரளத்
தாமசத்திரஞ்சித்திரம்பொருந்தினதயங்க. (ககஎ)

தாமவிந்துமீதெழுந்தவர்க்கிரட்டியின்றகையர்
தாமவிந்துவின்பிளவன்னதயங்குவாளெயிற்றர்
தாமவிஞ்சையர்கடப்பருந்தகையினர்தரளத்
தாமவிஞ்சையர்துவன்றினர்திசைதொறுந்தருக்கி. (ககஅ)

தாமடங்கலுமுடங்குளையாளியின்றருக்கார்
தாமடங்கலுநெடுந்திசையுலகெலாந்தகைவார்
தாமடங்கலுங்கடலுமொத்தார்தரும்பகையைத்
தாமடங்கலுங்கொடுஞ்சுடர்ப்படையெலாந்தரித்தார். (ககக)

இனையதன்மையைநோக்கியவிந்திராகொழுநன்
வினையமற்றிதுமாயமோவிதியதுவினையோ
வனையும்வன்கழலரக்கர்தம்வரத்தினோமற்றோ
நினைதியாமெனிற்பகரென மாதலிநிகழ்த்தும். (கஉ௦)

இருப்புக்கம்பியற்றிழைநுழைபூசியொன்றியற்றி
விருப்பிற்கோடியால்விலக்கெனுந்தன்மையின்விட்டான்
கருப்புக்கார்மழைவண்ணவக்கடுந்திசைக்களிற்றின்
மருப்புக்கல்லியதோளவன்மீளருமாயம். (கஉக)

வீக்குவாயயில்வெள்ளெயிற்றரவின்வெவ்விடத்தை
மாய்க்குமாநெடுமந்திரந்தந்ததோர்வலியி
னோய்க்குநோய்தருவினைக்குநின்பெரும்பெயர்நொடியி
னீக்குவாயுனைநினைக்குவார்பிறப்பெனநீங்கும். (கஉஉ)

வரத்தினாயினுமாயையினாயினும்வலிய
வுரத்தினாயினுமுண்மையினாயினுமோடத்
துரத்தியாலெனஞானமாக்கடுங்கணைதுரந்தான்
சிரத்தினான்மறையிறைஞ்சவுந்தேடவுஞ்செய்யோன். (கஉங)

அறத்தலாற்றுறுஞானமாக்கடுங்கணைதொடர
வறத்தலாதுசெல்லாதுநல்லறிவுவந்தணுகப்
பிறத்தலாற்றுறும்பேதைமைபிணிப்புறத்தம்மை
மறத்தலாற்றந்தமாயையின்மாய்ந்ததுமாயம். (கஉச)

வேறு. நிலங்கொண்டார்கண்டறுநேமிப்படையோடு
மூலங்கொண்டார்கண்டகராவிமுடிவிப்பான்
காலங்கொண்டார்கண்டனமுன்னேசுழிவிப்பான்
ஞாலங்கொண்டானண்டனையெல்லாந்தொழில்கொண்டான். (கஉரு)

கண்டாருலமுற்றுயிராமார்க்கின்றதுகண்ணிற்
கண்டாருலமுற்றும்பர்பதைக்கின்றதுகண்ணிற்
கண்டார்சூலமுற்றுஞ்சுடுமென்றக்கழல்வெய்யோன்
கண்டாவுதன்முன்செல்லவிசைத்துள்ளதுகண்டான். (கஉசு)

எரியாநிற்கும்பஃறலைமூன்றுமெரியஞ்சத்
திரியாநிற்கத்தேவர்களோடத்திரளோட
விரியாநிற்குமெவ்வுலகுந்தன்னொளியேயாய்
விரியாநிற்குநிற்கிலதார்க்கும்விழிசெல்லா. (கஉஎ)

செல்வாயென்னச்செல்லவிடுத்தானிதுநேர்த்தற்
கொல்வாய்நீயேவேறொருவர்க்குமுடையாதால்
வல்வாய்வெங்கட்சூலமெறுங்காலனைவள்ளால்
வெல்வாய்வெல்வாயென்றனர்வானோர்மெலிகின்றார். (கஉஅ)

அனையும்வேகத்தானுருமேறுந்தண்ணென்ன
வனையுங்காலிற்செல்வனதன்னைமறவாதே
நினையுஞானக்கண்ணுடையார்மேனினையாதார்
வினையம்போலச்சிந்தினன்வீரன்சரம்வெய்ய. (கஉகூ)

எய்யுமெய்யுந்தேவருடைத்திண்படையெல்லாம்
பொய்யுமெய்யுமொத்தவைசிந்தும்புவிதந்தான்
வையுஞ்சாபமொப்பனவெப்பின்வலிகண்டா
னையனின்றுன்செய்வகையெல்லாமறிகல்லான். (கஙㅇ)

மறந்தான்செய்கைமற்றெதிர்செய்யும்வகையெல்லாம்
அறந்தானென்றும்பர்துணுக்கந்துடர்வுற்று
நறந்தானஞ்சிக்கால்குலையத்தானழியாதே
பிறந்தாவின்றுன்வந்தகுலம்பிறாஞ்ச. (கஙக)

சங்காரத்தார்கண்டையொலிப்பத்தழல்சிந்தப்
பொங்காரத்தான்மார்பெதிரோடிப்புகலோடும்
வெங்காரத்தான்முற்றுமுனிந்தான்வெகுளிப்பே
ருங்காரத்தானுக்கதுபன்னூறுதிராகி. (கஙஉ)

ஆர்ப்பாரானாரச்சமுமற்றாரலர்மாரி
தூர்ப்பாரானார்துள்ளல்புரிந்தார்தொடர்கின்றார்
தீர்ப்பாய்நீயேநீயெனவேறாய்வருநிமை
பேர்ப்பாய்போலாமென்றனர்வானோருயிர்பெற்றார். (கஙங)

வென்றானென்றேயுள்ளம்வியந்தான்விடுசூலம்
பொன்றானென்விற்போகலதென்னும்பொருள்கொண்டா
னொன்றாமுங்காரத்திடையுக்கோடுதல்காணா
நின்றானந்நாள்வீடணனார்சொன்னினைவுற்றான். (௧௩௪)

சிவனோவல்லனான்முகனல்லன்றிருமாலா
மவனோவல்லன்மெய்வரமெல்லாமடுகின்றான்
றவனோவென்னிற்செய்துமுடிக்குந்தவனல்ல
னிவனோதானவ்வேதமுதற்காரணனென்றான். (௧௩௫)

யாரோனுந்தானாகுகயானென்றனியாண்மை
பேரோவின்றேவென்றிமுடிப்பன்புகழ்பெற்றே
னேரோசெல்லுங்கொல்லுமாக்கனிமிரொய்தி
வேரோநிற்கமீள்கிலனென்னாவிடலுற்றான். (௧௩௬)

நிருதித்திக்கினின்றவன்வென்றிப்படைநெஞ்சிற்
கருதித்தன்பால்வந்ததவன்கைக்கொடுகாணா
விருதிற்சிந்தும்வில்லின்வலித்துச்செலவிட்டான்
குருதிச்செங்கண்டீயுகஞாலங்குலைவெய்த. (௧௩௭)

வையந்துஞ்சும்வன்பிடர்நாகமனமஞ்சப்
பையுங்கோடிப்பஃறலையோடுமளவில்லா
மெய்யும்வாயும்பெற்றனமேருக்கிரிசால
நொய்தென்றோதுந்தன்மையவானநுழைகின்ற. (௧௩௮)

வாய்வாய்தோறுமாகடல்போலும்விடவாரி
போய்வார்கின்றபொங்கனல்கண்ணிற்பொழிகின்ற
மீய்வாயெங்கும்வெள்ளிடையின்றிமிடைகின்ற
பேய்வாயென்னவெள்ளெயிறெங்கும்பிறழ்கின்ற. (௧௩௯)

கடித்தேதீருங்கண்ணகன்ஞாலங்கடலோடுங்
குடித்தேதீருமென்றுலகெல்லாங்குலைகின்ற
முடித்தானன்றேவெங்கணரக்கன்முழுமுற்றும்
பொடித்தானாகுமிப்பொழுதென்னப்புகைகின்ற. (௧௪0)

அவ்வாறுற்றவாடரவந்தானகல்வாயாற்
கவ்வாநின்றமால்வரைமுற்றுமவைகண்டா
னெவ்வாய்தோறுமெய்தினவென்னாவெதிரொய்தான்
றவ்வாமென்மைக்காருடமென்னும்படைதன்னால். (௧௪௧)

எவணைத்தன்மைத்தேகினநாகத்தினமென்னப்
பவணத்தன்னவெஞ்சிறைவேகத்தொழில்பம்பச்
சுவணக்கோலத்துண்டநகந்தொல்சிறைவேல்போ
லுவணப்புள்ளேயாயினவெல்லாமுலகெல்லாம். (௧௪௨)

வேறு. அளக்கரும்புள்ளினமாயவாரழ
அலக்குறும்வாய்தொறுமெரியத்தொட்டன
விளக்குமிலங்கைதீயிடுதுமீண்டென
விளக்கினையெடுத்தனபோன்றவின்னினே. (௧௮௪)

குயின்றனசுடர்மணிக்கவினகுப்பையிற்
பயின்றனகுடர்சுடர்ப்பதுமராகங்கள்
வயின்றொறுங்கவர்ந்தனவண்டவாள்களா
லயின்றனபுள்ளினமுகிரினள்ளின. (௧௮௫)

ஆயிடையரக்கனுமழன்றநெஞ்சினன்
தீயிடைப்பொடித்தெழுமுயிர்ப்பன்சீற்றத்தன்
மாயிருஞாலமும்விசும்பும்வைப்புறத்
தூயினன்கடிசரமுருமின்றேற்றத்த. (௧௮௬)

அங்கவெங்கடுங்கணையயிலின்வாய்தொறும்
வெங்கணைப்படப்படலிசையின்வீழ்ந்தன
புங்கமேதலையெனப்புக்கபோதுமாற்
றங்கவாளரக்கனதாத்திற்றேற்றல. (௧௮௭)

ஒக்கநின்றெதிரமருழக்குங்காலையின்
முக்கணான்றடவரையெடுத்தமொய்ம்பற்கு
நெக்கனவிந்தைசகணிலையிற்றீர்ந்தன
மிக்கனவிராமற்குவலியும்வீரமும். (௧௮௮)

வேதியர்வேதத்துமெய்த்தவத்தக
நீதியுமுறைமையுநெறியுமிற்கலாச்
சாதியினிமிர்ந்தசோர்தலையைத்தள்ளினன்
பாதியின்மதிமுகப்பகழியொன்றினால். (௧௮௯)

மேருவின்கொடுமுடிவீசுகாலெறி
போரிடையொடிந்துபோய்ப்புணரிபுக்கென
வாரியன்சரம்படவரக்கன்வன்றலை
நீரிடைவிழுந்ததுநெருப்பொடன்றுபோய். (௧௯௦)

குதித்தனர்பாரிடைக்குன்றுகூட்டற
மிதித்தனர்வடகமுந்துசம்வீசினர்
அதித்தனர்பாடினராடித்துள்ளினர்
மதித்தனரிராமனைவானுளோரெலாம். (௧௯௦)

இறந்ததோருயிருடன்றருமத்தீட்டினாற்
பிறந்துளதாமெனப்பெயர்த்துமோர்தலை
மறந்திலதெழுந்ததுமடித்தவாயது
சிறந்ததுதவமலாற்செயலுண்டாகுமோ. (௧௯௧)

கொய்தருகொய்திலதென்னுங்கொள்கையி
னெய்தவந்தக்கணைத்தெழுந்தோர்சிரந்
செய்தவெஞ்சினத்துடன்சிறக்குஞ்செல்வனை
வைதருதெழித்ததுமழையினார்ப்பினால். (கருஉ)

இடந்தருகிரிக்குவடென்னவெங்கணும்
படர்ந்ததுகுனாகடல்பருகும்பண்பது
விடந்தருவிழியதுமுடுகிவேலையிற்
கிடந்ததுமார்த்ததுமழையின்கேழது. (கருங)

விழுத்தினன்சிரமெனும்வெகுளிமீக்கொள
வழுத்தினவுயிர்களின்முதலின்வைத்ததோ
ரொழுத்தின்வன்றோள்களினொடேழுகோ
லழுத்தினனசனியேறயிர்க்குமார்ப்பினான். (கருச)

தலையறிற்றருவதோர்தவமுமுண்டென
நிலையுறுநேமியானதிற்றரீசனைக்
கலையுறுதிங்களின்வடிவுகாட்டிய
சிலையுறுகையையுந்தலத்திற்சேர்த்தினான். (கருரு)

கொற்றவெஞ்சரம்படக்குறைந்துபோனகை
பற்றியகிடந்ததுசிலையைப்பாங்குற
மற்றொர்கைபிடித்ததுபோலவவ்விய
வற்றகைபிறந்ததையாரறிந்துளார். (கருசு)

பொன்கயிற்றூர்தியான்வலியைப்போக்குவான்
முன்கையிற்றுறுமயிர்முள்ளிற்றுள்ளுறு
மின்கையிற்கொண்டனன்வில்லைவிட்டிலா
வன்கையைத்தன்கையின்வலியின்வாங்கினான். (கருஎ)

விளங்கொளிவயிரவாளரக்கன்வீசிய
தளங்கிளர்தடக்கைதன்மார்பிற்றுக்கது
முளங்கிளர்பெருவலியுலைவின்மாதலி
துளங்கினன்வாய்வழியுதிரந்துவுவான். (கருஅ)

மாமரத்தார்கையால்வருந்துவானையோர்
தோமரத்தாலுயிர்துலைக்கத்தூண்டினன்
றாமரத்தார்ப்பெறுதவத்தனென்னினுங்
காமரத்தாற்சிவன்கரத்துவாள்கொண்டான். (கருகூ)

வேறு.

மாண்டதின்றெடுமாதலிவாழ்வென
மூண்டவெம்படைசிந்தமுடுக்கினா
னாண்டவில்லியோனமுகவெங்கணை
துண்டினன்றுகளானதுதோமரம். (கசு0)

ஐயகன்றவொருதலைநூற்மறை
பொயகன்றபுராணப்பொருளனை
யாயிரந்தொடுத்தானறிவின்றனி
நாயகன்னைக்கடுமைநடத்துவான். (கசுக)

தீர்த்தாங்கள்கடோறுமிலக்தொறுஞ்
சீர்த்தமால்வரைதோறுந்திசைதொறும்
பார்த்தபார்த்தவிடந்தொறும்பஃறலை
யார்த்துவீழ்ந்தசனிகள்வீழ்ந்தென. (கசுஉ)

தகர்ந்தமால்வரைசாய்வுறத்தாக்கின
மிகுந்தவான்மிசைமீனமலைந்தன
புகுந்தமாமகரக்குலம்போக்கற
முகந்தவாயிற்புணரியைமுற்றுற. (கசுங)

பொழுதுநீட்டியபுண்ணியம்போனபின்
பழுதுசெல்லுமன்றேமற்றப்பண்பெலாந்
தொழுதுசூழ்வனமுன்னின்றுதோன்றவே
கழுதுசூழ்ந்தவிராவணன்கண்ணெலாம். (கசுச)

வாளும்வேலுமுலக்கையும்வச்சிரக்
கோளுந்தண்டுமழுவெறுங்கூற்றமுந்
தோளின்பத்திகடோறுஞ்சுமந்தன
மீளிமொய்ம்பினுருமெனவீசினான். (கசுரு)

அனையவித்தியவாண்டகைவீரனும்
வினைமென்விளியாதுகொல்வெல்லலாம்
நினைவென்னென்றுநிசாசரன்மேனியைப்
புனைவன்வாளியினாலென்றுபொங்கினான். (கசுசு)

மஞ்சரங்கியமார்பினுந்தோளினும்
நஞ்சரங்கியகண்ணினுநாவினும்
வஞ்சன்மேனியைவார்கணையட்டிய
பஞ்சரம்மெனலாம்வகைபண்ணினான். (கசுஎ)

வாய்நிறைந்தனகண்கள்மறைந்தன
மீநிறங்களினெங்குமிடைந்தன
தோய்வுறுங்கணைசெம்புனல்தோய்ந்தில
போய்நிறைந்தனவண்டப்புறமெலாம். (கசுஅ)

மயிரின்காலெறும்வார்கணைமாரிபுக்
குயிருந்திரவுருவினவோடலுஞ்
செயிருஞ்சீற்றமுநீற்கத்திறல்தீர்
நயர்வுதோன்றத்தளங்கியழுங்கினான். (கசுகூ)

வாரிநீர்நின்றெதிர்மகரம்படச்
சோரிசோரவுணர்வுதுளங்கினான்
தேரின்மேலிருந்தான்பண்டுதேவர்த
மூரின்மேலும்பவனியுலாவுவான். (கஎ0)

ஆர்த்துக்கொண்டெழுந்தும்பர்களாடினார்
வேர்த்துத்தீவினைவெம்பிவிழுந்தது
போர்த்துப்பொய்த்தனனென்றுபொலங்கொடேர்
பேர்த்துச்சாரதிபோயினன்பின்றுவான். (கஎக)

கைதுறந்தபடையினன்கண்ணகன்
மெய்துறந்தவுணர்வினன்வீழ்தலு
மெய்திறந்தவிர்ந்தானிமையோர்களை
யுய்திறந்துணிந்தானறமுன்னுவான். (கஎஉ)

தேறினற்பின்னையாருஞ்செயற்கரி
துறுதாலுற்றபோதேயுயாதவ
னூறுவாயென்றுமாதலிநூக்கின
னேறுசேவகனும்மிதியம்பினான். (கஎங)

படைதுறந்துமயங்கியபண்பினு
னிடைபெறும்படிபார்த்திலனீதியி
னடைதுறந்துயிர்கோடலுநன்மையோ
கடைதுறந்ததுபோனொன்கருத்தென்றான். (கஎச)

கூவிரஞ்செறிபொற்கொடித்தேரொடும்
போவாஞ்சினரன்னதொர்போழ்தினி
னேவரஞ்சலியாதவனொண்ணுடைத்
தேவரஞ்சவிராவணன்றேறினான். (கஎரு)

உறக்கநீங்கியுணர்ச்சியுற்றானவன்
மறக்கண்வஞ்சனிராமனைவான்றிசைச்
சிறக்குந்தேரொடுங்கண்டிலன்சீற்றத்தீ
பிறக்கநோக்கினன்பின்னுறநோக்கினான். (கஎசு)

தேர்திரித்தனைதேவருங்காணவே
வீரவிற்கையிராமற்குவெண்ணகை
போவுய்த்தனையேபிழைத்தாயெனச்
சாரதிப்பெயரோனைச்சலிப்புறா. (கஎஎ)

தஞ்சநானுனைத்தேற்றத்தருக்கிலா
வஞ்சர்பெருஞ்செல்வத்துவைகினோ
யஞ்சினானெனச்செய்தனையாதலா
லஞ்சிபோதிகொலாமென்றுருத்தெழா. (கஎஅ)

வாள்கடைக்கணித்தோர்க்கமம்வர்தவன்
ருள்கடைக்கணியாத்தலைதாழ்வுற
றுள்கடைக்கேர்நியின்முனிவொழி
கோள்கடைக்கணித்தென்றவன்கூறுவான். (௧௭௯)

ஆண்டொழிற்றுணிவோய்த்தனையாண்டிறை
யீண்டழிற்றிடினையனேனின்றுயிர்
மாண்டிறக்கவுமென்றிடர்மாற்றுவான்
மீண்டிடித்தொழிலெம்வினைமெய்மையால். (௧௮௦)

உய்வுமூற்றமுநோக்கியுயிர்ப்பொறைச்
சாய்வுநீக்குதல்சாரதிதன்மையால்
மாய்வலிச்சயம்வந்துழிவாளினற்
காய்வுதக்கதன்றேர்க்கடைகாண்டியால். (௧௮௧)

என்றிறைஞ்சலுமென்னவிரங்கினான்
வென்றியந்தடந்தேரினைமீளெனாச்
சென்றெதிர்ந்ததுதேருமத்தேர்த்திசை
நின்றவஞ்சனிராமனைநேர்வுற. (௧௮௨)

கூற்றின்வெங்கணைகோடியின்கோடிக
ளேற்றினான்வலிமும்முறைதோற்றினான்
வேற்றொர்வாளரக்கன்னெனவெம்மையா
னாற்றினான்செருக்கண்டவரஞ்சினார். (௧௮௩)

எல்லுண்டாகிநெருப்புண்டெனுமிகற்
சொல்லுண்டாயதுபோலவன்றேரிடை
வில்லுண்டாகின்வெலற்கரிதாமெனுச்
செல்லுண்டாலன்னதோர்கணைசிந்தினான். (௧௮௪)

நாரணன்படையாகியப்புருப்
பாரணங்கினைத்தாங்கும்பலவகை
வாரணங்களைவென்றவன்வார்சிலை
வாரணங்கையிருதுணியாக்கிற்றே. (௧௮௫)

அயன்படைத்தவில்லாயிரம்பேரினான்
வியன்படைக்கலத்தாலற்றுவீழ்தலு
முயர்த்துயர்க்குதித்தனரும்பராற்
பயன்படைத்தனம்பஃறவத்தாலென்றார். (௧௮௬)

மாறிமாறிவரிசிலைவாங்கினு
னூறினூறிலுடையிருநூறவை
வேறுவேறுதிசையுறவெங்கணை
யாறினாறியிராமனுதைக்கிலன். (௧௮௭)

இருப்புலக்கைகவேறன்றுகோலிட்டவா
னொருப்புலக்கவருநெடுங்கற்பனைந்
திருப்புலக்கவுய்த்தான்றிசையானையின்
மருப்புலக்கவழங்கியமார்பினான். (கஅஅ)

அலைவயனைத்துமமரத்தகன்வேலையிற்
குலைவயனைத்துமெனக்குறித்தான்குறித்
திலைவயனைத்துமிவனைவெல்லாவென
நலைவயனைத்துமறந்தயலோடினான். (கஅக)

கண்ணிலுண்மணிபூடுகழிந்தன
வெண்ணிலுண்மனவிற்பல்வெங்கணை
புண்ணிலுண்ணுறைந்தோடியபுந்தியோ
னெண்ணிலுண்ணியவென்செயற்பாற்றெனும். (கக0)

நாரணன்றிருவுந்தியினான்முகன்
பாரவெம்படைவாங்கியிப்பாதகன்
மாரினெய்வனென்றெண்ணிவலித்தன
னாரியன்னவனாவியகற்றுவான். (ககக)

முந்திவந்துலகின்றமுதற்பெய
ரந்தணன்படைவாங்கியருச்சியாச்
சுந்தரச்சிலைநாணிற்றொடுப்புறு
மந்தரம்புரைதோளுறவாங்கினான். (ககஉ)

புரஞ்சுடப்பண்டமைந்ததுபோற்பனை
மரந்துளைத்ததுவாலியைமாய்த்துள
தரஞ்சுடச்சுடர்நெஞ்சினரக்கர்கோ
னுரஞ்சுடச்சுடரோன்மகனுந்தினான். (ககங)

காலும்வெங்கனலுங்கடைகாண்கிலா
மாலுங்கொண்டவடிக்கணைமாமுக
நாலுங்கொண்டுடன்றதுநான்முகன்
மூலமந்திரந்தன்னொடுமுட்டலால். (ககச)

ஆழிமால்வரைக்கப்புறத்தப்புறம்
பாழிமாகடலும்வெளிபாய்ந்தது
ஊழிஞாயிறுமின்மினியொப்புற
வாழிவெஞ்சுடர்பேரிருள்வாரவே. (ககரு)

அக்கணத்தினயன்படையாண்டகைச்
சக்கரப்படையோடுந்தழீஇச்சென்று
புக்கதக்கொடியோனுரம்பூமியுந்
திக்கனைத்தும்விசும்புந்திரியவே. (ககசா)

வேறு. முக்கோடிவாணாளுமுயன்றுடையபெருந்தவமுமுதல்வன்முன்னா
ளெக்கோடியாராலும்வெலப்படாயெனக்கொடுத்தவரமுமேனைத்
திக்கோடுமுலகனைத்துஞ்செருக்கடந்தபுயவலியுந்தின்றுமார்பிற்
புக்கோடியுயிர்பருகிப்புறம்போயிற்றிராகவன்றன்புனிதவாளி. (௧௯௭)

ஆர்க்கின்றவானவருமந்தணருமுனிவர்களுமாசிகூறித்
தூர்க்கின்றமலர்மாரிதுடரப்போய்ப்பாற்கடலிற்றூய்நீராடித் [ன்று
தேர்க்குன்றவிராவணன்றன் செழுங்குருதிப்பெரும்பரவைத் திரைமேற்சே
கார்க்குன்றமனையான்றன் கடுங்கணைப்புட்டிலினுவெட்கரந்ததம்மா. (௧௯௮)

கார்நின்றமழைநின்றவுருமுதிர்வவெனத்திணிதோட்காட்டினின்றும்
தார்நின்றமலைநின்றும்பணிக்குலமுமணிக்குலமுந்தகர்ந்துசிந்தப்
போர்நின்றவிழிநின்றும்பொறையின்றுபுகையோடுங்குருதிபொங்கத்
தேர்நின்றுநெடுநிலத்தின்முகங்கீழ்ப்படவிழுந்தான்சிகரம்போல்வான்.

வெம்மடங்கல்வெகுண்டனையசினமடங்கமனமடங்கவினையம்வீயத்
தெம்மடங்கப்பொருதடக்கைச்செயலடங்கமயலடங்கவாற்றறேயத்
தம்மடங்குமுனிவரையுந்தலையடங்கநிலையடங்கச்சாய்த்தநாளின்
மும்மடங்குபொலிந்தனவம்முறைதுறந்தானுயிர்துறந்தமுகங்களம்மா.

பூதலத்திருக்குவாய்நீவிடுமிப்பொலந்தேரையென்றபோதின்
மாதலிப்பேரவன்கடவமண்டலத்தினப்பொழுதேவருதலோடு
மீதலத்தபெருந்தானைவிசும்பளப்பக்கிடந்தான்றன்மேனிமுற்றுங்
காதலித்தவுருவாகியறம்வளர்க்குங்கண்ணானன்றெரியக்கண்டான். (௨௦௧)

அலைமேவுங்கடல்புடைசூழவனியெலாங்காத்தளிக்குமடற்கைவீரன்
நிலைமேவுங்கடுங்கணையாற்படுகளத்தேமனத்திமைசிதைந்துவீழ்ந்தோன்
றலைமேலுந்தோண்மேலுந்தடமுடிகின்படர்புறத்துந்தாவியேறி
மலைகின்றுவபோலவாடினவால்வானரங்கள்வரம்பிலாத. (௨௦௨)

தோடுழுதாருந்தெரியற்றொடையுழுதகிளைவண்டின்சுழியத்தொங்கற்
பாடுழுதபடர்வெரிநின்பணியுழுதவணிகிகர்ப்பபணைக்கையானைக்
கோடுழுதநெடுந்தழும்பின்குவைதழுவியெழுமேகக்குழுவின்கோலக்
காடுழுதகொழும்பிறையிற்கறைகழன்றுகிடந்தனபோற்கிடக்கக்கண்டான்.

வேறு.

தனியியல்பொருட்டின்வந்தசீற்றமுந்தருக்கினோன்றன்
ஒளியிலுருவினோடுங்குழிப்புறக்கிளர்ந்துதோன்றும்
வளரியல்வடிவிற்செம்மைத்தன்மையுமருவநின்ற
முளரியங்கண்ணன்மூரன்முறுவலன்மொழிவதானான். (௨௦௩)

வென்றியானுலகமூன்றுமெய்ம்மையான்மேவினாலும்
போன்றியார்கின்றதோளைப்பொருவறநோக்கும்பொற்புங்
குன்றியாசுற்றதன்றேயிவனெதிர்குறித்தபோரிற்
பின்றியான்முதுகிற்பட்டபிழம்புளதழும்பினம்மா. (௨௦௪)

கார்த்தவீரியனென்பானாற்கட்டுண்டானென்னக்கற்றும்
வார்த்தையுண்டதனைக்கேட்டுநாணுறுமனத்தினேற்குப்
போர்த்தலைபுறகிட்டேற்றபுண்ணுடைத்தழும்புபோலா
நேர்த்தநுங்காணலுற்றவிசனாரிருக்கைநிற்க. (உ௦௬)

மாண்டொழிக்குலகினிற்கும்வயங்கிசைமுயங்கமாட்டா
ஆண்டொழிலுயர்ந்ததெய்வர்நகைசெயவுயிரையோம்பிப்
பூண்டொழிலுடையமார்பாபோர்புறங்கொடுத்தோர்போன்ற
வாண்டொழிலோரிற்பெற்றவெற்றியுமவத்தமென்றான். (உ௦௭)

அவ்வுரைக்கிருதிநோக்கிவீடணனருவிக்கண்ணன்
வெவ்வுயிர்ப்போடுநீண்டவிம்மலன்வெதும்புநெஞ்சன்
செவ்வியிற்றொடர்ந்தவல்லசெப்பலைசெல்வவென்று
வெவ்வுயிர்ப்பொறையிறேறுமிரங்கினின்றினையசொன்னான். (உ௦௮)

ஆயிரந்தோளினானும்வாலியுமரிதினைய
மேயினவென்றியின்றோர்சாபத்தின்விளைந்தமேன்மை
தாயினுந்தொழத்தக்காய்மேற்றங்கியகாதற்றன்மை
நோயுநின்முனிவுமல்லால்வெல்வரோநுவலற்பாலார். (உ௦௯)

நாடுளதனையுமோடிநண்ணலார்காண்கிலாமற்
பீடுளகுன்றம்போலும்பெருந்திசையெல்லையானைக்
கோடுளதனையும்புக்குக்கொடும்புறத்தழுந்துபுண்ணின்
பாடுளதன்றித்தெவ்வர்படைக்கலம்பட்டென்செய்யும். (உக௦)

வென்றியாய்பிறருமுண்டேவேலைசூழ்ஞாலமாண்டோர்
பன்றியாயெயிற்றுக்கொண்டபராபரன்முதலபல்லோ
ரொன்றியாமிடுக்கண்டீர்வதென்கின்றாரிவனைவென்றாற்
பொன்றினனென்றபோதும்புலப்படார்பொய்கொலென்பார். (உகக)

அன்னதோவென்றுவீசனையமுறாதுநீங்கித்
தன்னதோளிணையைநோக்கிவீடணாதக்கதன்றா
லென்னதோவிறந்துளான்மேல்வயிரநீயிவனுக்கீண்டு
சொன்னதோர்விதியினாலேகடன்செயத்துணிதியென்றான். (உகஉ)

அவ்வகையருளிவள்ளலனைத்துலகங்களோடு
மெவ்வகையுள்ளதேவரியாவருமிறைத்துப்பொங்கிக்
கவ்வையிற்றீர்ந்தார்வந்துவீழ்கின்றார்தம்மைக்காணச்
செவ்வையினவர்முன்சென்றான்வீடணனிதனைச்செய்தான். (உக௩)

போழ்ந்தெழவரக்கன்செய்தபுன்றொழில்பொறையிற்றமால்
வாழ்ந்தநீயிவனுக்கேற்றவரன்முறைவகுத்தியென்னத்
தாழ்ந்ததோர்கருணைதன்னாற்றலைமகனருளத்தள்ளி
வீழ்ந்தனனவன்மேல்வீழ்ந்தமலையின்மேன்மலைவீழ்ந்தென்ன. (உகச)

ஓவருமுலகத்தெல்லாவுயிர்களுமொழியினென்றுந்
றேவருமுனிவர்தாமுஞ்சிந்தையினிரக்கஞ்சேரத்
தாவரும்பொலநறியிருண்டனறியிருற்றகைக்கின்ற
யாவருந்துயரந்திரவரற்றினன்பகுவாயார். (௨௧௫)

வேறு.

உண்டுதேயுயிருண்ணவொருநஞ்சசனகியெனும்பெருநஞ்சன்னோக்
கண்டுலேநோக்கவேபோகியதேயுயிர்நியுள்ளப்பட்டாயே
பெண்டாதேனென்னனியசொல்லின்றினித்தானென்றறியோவெண்ணிலாற்ற
லண்டுவோவன்றுவோவசுரர்கடம்பிரானேயமையமரர்கூற்றே. (௨௧௬)

ஆசையொருவன்மேலுயிராசைக்குலமகன்மேலுற்றகாத
திராசைபழியென்றேன்றனைமுனிந்தமுனிவாறித்தேறினையே
போராசைப்பட்டேமுன்றகுலமுற்றும்பொன்றவுந்தன்பொங்காமின்ற
பேராசைபெயர்ந்தேபெயர்ந்தாசைக்கரியிரியப்புருவம்பேர்த்தாய். ௨௧௭

மன்றன்மாமனோராலும்வடிமழுவாட்படையோனும்வரங்களீய்ந்த
வொன்றலைதனவுடையமுடியோடும்பொடியாகியுதிர்ந்துபோன
வன்றுதாலுணர்நதிலையோவாறுலும்வாளுட்லடயனுகாகின்ற
வின்றுதாலுணர்ந்தனையேயிராமனுரியாவருக்குமிறைவனுதல். (௨௧௮)

வீரனடுற்றுயோவிரிஞ்சனுயாவருக்குமேலாமன்றன்
பேரனடுற்றுயோபிறைசூடுமொருவன்றன்புரம்பெற்றுயோ
வாரனுவுன்றுயிரையஞ்சாதேகொண்டகன்றுரதெலாதிற்க
மாரனுர்வலியாட்டந்தவிர்ந்தாரோகுளிர்ந்தானேமதியமென்பான். (௨௧௯)

கொல்லாதமைத்துனனைக்கொன்றுயென்றதுகுறித்துக்கொடுமைசூழ்ந்து
பல்லாலேயிதழதுக்குங்கொடும்பாவிநெடும்பாரப்பழிதீர்ந்தாளே
நல்லாருந்தியாருநரகத்தார்சொர்க்கத்தார்நம்பிநம்மோ
டெல்லாரும்பகைஞரேயோர்முகத்தேயழிகின்றுயெளிமையானுய். (௨௨௦)

போர்மகளைக்கலைமகளைப்புகழ்மகளைத்தழுவியகைபொறுமைகூரச்
சீர்மகளைத்திருமகளைத்தேவர்க்குந்தெரிவரியதெய்வக்கற்பின்
பேர்மகளைத்தழுவவாறுயிர்கொடுத்துப்பழிகொண்டபித்தாபின்னைப்
பார்மகளைத்தழுவினையோதிசையானைமருப்பிறுத்தபணைத்தமார்பால். ௨௨௧

என்றென்றேயரற்றுவான்றனையெடுத்துச்சாம்பவனுமெண்கின்வேந்தன்
குன்றென்றுநெடுந்தோளாய்விதிநிலையையறியாதகொள்கைத்தாகிச்
சென்றேனுங்குமுனைர்வினையோதேறுதேயழுங்குதியோவென்னத்தேறி
நின்றனப்புறத்தாக்கனிலைகேட்டான்மயன்பயந்தநெடுங்கட்பாவை (௨௨௨)

வேறு.

அனந்தனாருயிரமாக்கள்மங்கைமார்
புனைந்தபூங்குழல்விரித்தரற்றும்பூசலா
நினைந்துடர்ந்துடன்வரவெய்தினுளென்ப
நினைந்தழுமறந்தவிலாதநெஞ்சினுள். (௨௨௩)

இரக்கமுந்தருமமுந்துணைக்கொண்டின்றுயிர்
புரக்குநன்குலத்தவன்றொருவன்பூண்டதோர்
பரக்கழிவாமெனப்பரந்ததீண்டதா
லரக்கியர்வாய்திறந்தரற்றுமோதையே. (௨௨௪)

நூபுரம்புலம்பிடச்சிலம்புநொந்தழக்
கோபுரந்தொறும்புறங்குறுகினார்சில
ராபுரந்தான்பகையற்றதாமென
மாபுரந்தவிரவின்வழிச்சென்றார்சிலர். (௨௨௫)

அழைப்பொடுமுழக்கெனவழுகுமின்னிடக்
குழைப்பொருநல்லணிக்குலங்கள்வில்லிட
வுழைப்பனவுங்கணீர்த்தாரைமீதுக
மழைப்பெருங்குலமெனவீழ்ந்துமாழ்கினார். (௨௨௬)

தலைமிசைத்தாங்கியகரத்தர்தாரைநீர்
முலைமிசைத்துங்கியமுகத்தர்மொய்த்தவர்
தலைமிசைக்கடலின்வீழன்னம்போலவன்
மலைமிசைத்தோள்கண்மேல்வீழ்ந்துமாழ்கினார். (௨௨௭)

தழுவினர்தழுவினர்தலையுந்தாள்களு
மெழுவியபுயங்களுமார்புமெய்சனுங்
குழுவினர்முறைமுறைகூறுகொண்டன
ரழுதனரயர்த்தனரரக்கிமார்களே. (௨௨௮)

வருத்தமேதெனினதுபுலவிவைகலும்
பொருத்தமேவாழ்வெனப்பொழுதுபோக்குவா
ரொருத்தர்மேலொருத்தர்வீழ்ந்துயிரிற்புல்லினார்
திருத்தமேயெனவவன்சிகரத்தோள்கண்மேல். (௨௨௯)

இயக்கியரரக்கியருரககோதையர்
மயக்கமில்சித்தியர்விஞ்சைமங்கையர்
முயக்கினர்முறைகெடமுயங்கினார்கடந்
துயக்கிலாவன்புபூண்டவருஞ்சோரவே. (௨௩௦)

அறந்தலையுறமனத்தடைத்தசீதையை
மறந்திலையோவினமெமக்குன்வாய்மலர்
திறந்திலைவிழித்திலையருளுஞ்செய்கிலை
யிறந்தனையோவெனவிரங்கியேங்கினார். (௨௩௧)

தரங்கநீர்வேலையிற்றடித்துவீழ்ந்தென
வுரங்கிளர்மறுகையாலுருவினுற்றன
மரங்களுமலைகளுமுருகவாய்திறந்
திரங்கினள்மயன்மகளினையபன்னினாள். (௨௩௨)

வேறு. அன்னேயோவன்னேயோவாகொடியேற்கடுத்தவாறரக்கர்வேந்தன்
பின்னேயோவிறப்பதுமுன்பிடித்திருந்தகருத்ததுவும்பிடித்திலேனே
முன்னேயோவிழுந்ததுவுமுடித்தலையோபடித்தலையமுகங்காட்டாயே
வென்னேயோவென்னேயோவிராவணனார்முடிந்தபரிசிதுவோபாவம்.

வெள்ளெருக்கஞ்சடைமுடியான்வெற்பெடுத்ததிருமேனிமேலுங்கீழு
மெள்ளிருக்குமிடமின்றியுயிரிருக்குமிடநாடியிழைத்தவாறோ
கள்ளிருக்குமலர்க்கூந்தற்சானகியைமனச்சிறையிற்கரந்தகாத
லுள்ளிருக்குமெனக்கருதியுடல்புகுந்துதடவியதோவொருவன்வாளி. ௨௱௪

ஆரம்போர்திருமார்பையகன்முழைகளெனத்திறந்திவ்வுலகுக்கப்பாற்
றூரம்போயினவொருவன்சிலைதுரந்தசரங்களேபோரிற்றோற்று
மீரம்போயுரங்குறைந்துவரங்குறைந்துவீழ்ந்தானேவேறேகெட்டே
னோரம்போவுயிர்பருகிற்றிராவணனைமானிடவனாற்றமீதோ. (௨௱௫)

காந்தையருக்கணியனையசானகியார்பேரழகுமவர்தங்கற்பு
மேந்துபுயத்திராவணனார்காதலுமச்சூர்ப்பனகியிழந்தமூக்கும்
வேந்தர்பிரான்றசரதனார்பணியினால்வெங்கானில்விரதம்பூண்டு
போந்ததுவுங்கடைமுறையேபுரந்தரனார்பெருந்தவமாய்ப்போயிற்றம்மா.

தேவருக்குந்திசைக்கரிக்குஞ்சிவனுக்குமயனுக்குஞ்செங்கண்மாற்கு
மேவருக்கும்வலியானுக்கென்றுண்டாமிறுதியெனவேமாப்புற்றே
னாவற்கனியுமன்றவருந்தவத்தின்பெருங்கடற்கும்வரமென்றுன்ற
காவற்கும்வலியானோர்மானிடனுளனென்னக்கருதினேனோ. (௨௱௭)

அரைகடையிட்டமைவுற்றமுக்கோடியாயுவுமுன்னதினோர்க்கேயு
முரைகடையிட்டளப்பரியபேராற்றற்றோளாற்றற்குலப்போவில்லைத்
திரைகடையிட்டளப்பரியவரமென்னும்பாற்கடலைச்சீதையென்னும்
பிரைகடையிட்டழிப்பதனையறிந்தேனேதவப்பயனின்பெருமைபார்ப்பேன்.

ஆரனுலகியற்கையறிதற்காரணவேயெழுமேழுமஞ்ச
வீரனுடலுறநுவின்புக்கார்கண்புக்கவேழவில்லாள்
நாரநாண்மலர்க்கணையானொல்லாந்தோளெல்லாநையவெய்யு
மாரனார்தனியிலக்கைமனிதனாழிந்தனனோவராத்திலே. (௨௱௯)

வேறு.

என்றழைத்தனளேங்கியெழுந்தவன்
பொன்றழைத்தபொருவருமார்பினைத்
தன்றழைக்கைகளாற்றழுவித்தனி
நின்றழைத்துயிர்த்தாருயிர்நீங்கினாள். (௨௱௰)

வானமங்கையருமற்றுமற்றுமெத்
தானமங்கையருந்தவப்பாலவ
ரானமங்கையருமருங்கற்புடை
மானமங்கையர்தாமும்வழுத்தினார். (௨௱௰௧)

பின்னைவீடணன்பேரொழிற்றம்முனை
மன்னிமுன்னம்வரன்முறையான்மறை
சொன்னவிமம்விதிமுறையாற்றெருத்
தின்னனெஞ்சினோடிந்தனத்தேற்றினான். (உசஉ)

கடன்கள்செய்துமுடித்துக்கனவரோ
டுடைந்துபோனமயன்மகளோடுட
னடக்கவெங்கனலுக்கவியாக்கினான்
குடங்கொணீருங்கண்சோர்குமிழியான். (உசங)

மற்றையோர்க்கும்வரன்முறையால்வருத்
துற்றநீக்கொடுத்துன்குறுநீருகுத்
தெற்றையோர்க்குமிவணலதில்லெனா
வெற்றிவீரன்குரைகழன்மேவினான். (உசச)

வந்துதாழ்ந்தவனைவள்ளலுஞ்
சிந்தைவெந்துயர்திருதிதெள்ளியோய்
முந்தையெய்துமுறைமையிதாமெனா
வந்தமில்விடர்ப்பாசமகற்றினான். (உசரு)

இராவணன்வதைப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ஙஅஅச.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஙரு-வது—மீட்சிப்படலம்.

வருந்துநீதிமனுநெறியாவையும்
பொருந்துகேள்விப்புலமையினோயெனா
வருந்தவப்பயனாலடைந்தாற்கறைந்
திருந்தவத்தினையோற்கியம்பினான். (க)

சோதியான்மகன்வாயுவின்றோன்றன்மற்
றேதில்வானரவீரரொடேகிநீ
யாதிநான்முகனுக்கியநூன்முறை
நீதியோனைநெடுமுடிசூட்டுவாய். (உ)

என்றுகூறியிளவலொடாரையும்
வென்றிவீரன்விடையருள்வேலையி
னின்றதேவர்நெடுந்திசையோரொடுஞ்
சென்றுதத்தமசெய்கைபுரிந்தனர். (ங)

சூழ்கடற்புனலும்பலதோயமு
நீழ்முடித்தொகையும்பிறநீர்மையும்
பாழிதுற்றரிபற்றியபீடமுந்
தாழ்வில்கொற்றத்தமரர்கடந்தனர். (ச)

வாசகான்மலரோன்சொலமான்முகன்
காசமாகிரியுங்கொடுகெங்கைகரு
மசனேமுதலோர்வியர்தேத்திடத்
தேகலாமணிமண்டபஞ்செய்தனன். (௫)

மெய்கொள்வேதவிதிமுறையின்னோர்
தெய்வநீர்புனலாடிருத்திட
வையநூரியனுமிளங்கோளரி
கையிருன்மகுடங்கவித்தானரோ. (௬)

கரியனுன்றுகதிரினைச்சூடியோ
ரெரிமணித்தவிசிற்பொலிந்தென்னவே
விரியும்வெற்றியிலங்கையர்வேந்தனி
டரியணைப்பொலிந்தான்றமரார்த்தெழ. (௭)

தேவர்பூமழைசித்தர்முதலினோர்
மேவுகாதல்விளைமலர்வேதிலா
மூவரோடுமுனிவர்மற்றியாவரு
காவிலர்சிறைமலர்தூவினார். (௮)

முடிபுனைந்தநிருதர்முதலவ
னடிவணங்கியிளவலையாண்டையங்
கொடியகாதலினேற்குயர்சீர்மைசெய்
திடிகொள்சொல்லனலற்கிதியம்பினன். (௯)

விலங்கலுணையிடைதருதோளினு
மிலங்கைமாநகர்யான்வருமெல்லினீ
கலங்கலாநெடுங்காவலியற்றெனு
வலங்கல்வீரனடியிணையெய்தினன். (௧௰)

நூக்குவீரனாசிளங்கோளரி
யாக்கர்கோமகனோடடிதாழ்தலும்
பொருக்கெனப்புகல்புக்கவற்புல்லியத்
திருக்கொண்மார்பனினியனசெப்பினன். (௧௧)

உரிமைமூவுலகுந்தொழவும்பர்தம்
பெருமைமீதியறன்வழிபேர்கிலா
திருமையயாசாளுதியீதிலாத்
தருமசீலவென்றான்மலறதந்துளான். (௧௨)

பன்னுநீதிகள்பற்பலகூறிமற்
றன்னுடைத்தவரோடியேர்சேர்த்தியோய்
மன்னிவாழ்கென்றுரைத்தடன்மாருதி
தன்னைநோக்கினன்றுயர்சொனேக்கினன். (௧௩)

இப்புறத்தினைவெய்துறுகாலையி
லப்புறத்தனையுன்னியனுமனைத்
துப்புறச்செய்யவாய்மணித்தோகைபாற்
செப்புதிப்படிபோயெனச்செப்பினான். (கச)

வணங்கியந்தமின்மாருதிவாரனை
மணங்குதன்கடிகாவுசென்றண்மினு
னுணங்குகொம்புக்குயிர்வருநீரெனச்
சுணங்குதோய்முலையாட்கிவைசொல்லினான். (கரு)

பாடினான்றிருநாமங்கள்பன்முறை
கூடுசாரியிற்குப்புற்றுக்கூத்தாடின்
முடியங்கையிரண்டுமேலங்குறச்
குடிநின்றனன்குன்றனதோளினான். (கசு)

ஏழைசோபனமேந்திழைசோபனம்
வாழிசோபனமங்கலசோபன
மாழியானவரக்கனையாரியச்
சூழியானைதுலைத்ததுசோபனம். (கஎ)

தலைகிடந்தனதாரணிதாங்கிய
மலைகிடந்தனபோன்மணித்தோளொடு
மலைகிடந்தனவாழிகிடந்தன
நிலைகிடந்தவுடனிலத்தேயென்றான். (கஅ)

அண்ணலானையின்வீடணனுமறக்
கண்ணிலாதவன்காதறுடர்தலாற்
பெண்ணலாதுபிழைத்துள்தாகுமென்
றெண்ணலாவதொர்பேரிலதாலென்றான். (ககூ)

ஒருகலைத்தனிவெண்மதிநாளொடும்
வருகலைக்குவருமறுமாறுறப்
பொருகலைக்குலம்பூத்தனபோன்றன
பருகலுற்றவமுதுபயந்தநாள். (உ0)

ஆம்பல்வாயுமுகமுமலர்ந்திடத்
தேம்புநுண்ணிடைநோவத்திரண்முலை
யேம்பலாசைக்கிரட்டிவந்தெய்தினாள்
பாம்புகானற்பனிமதிப்பான்மையாள். (உக)

புந்தியோபெருவகைப்பொருமலோ
வுந்தியோங்குமொளிவளைத்தோள்களோ
சிந்தியோடுகலையுடைத்தேர்கொலோ
முந்தியோங்கினயாவைமுலைகொலோ. (உஉ)

குனித்தகோலப்புருவங்கள்கொம்மைமவேர்
பனித்தகொங்கைமழலைப்பனிமொழி
துனிப்பதொன்றாறுவல்வதொன்றாயினாள்
கனித்தவின்கனிகளினிற்காட்டுமோ. (௨௩)

அனையளாகியனுமனைநோக்கினா
ளினையதின்னதியம்புவதென்பதோர்
நினைவிலாதுநெடிதிருந்தாணெடு
மனையின்மாசுதுடைத்தமனத்தினாள். (௨௪)

யாதிதற்கொன்றியம்புவலென்பது
மீதுயர்ந்தவுவகையின்விம்மலோ
ஆதுபொய்க்குமென்றேவெனச்சொல்லினா
ளீதுவித்தகாங்கைநிகழ்த்தினாள். (௨௫)

மேக்குநீங்கியவெள்ளவுவகையா
லேக்கமுற்றென்றியம்புவதியாதென
நோக்கிநோக்கியரிதெனநொந்துளேன்
பாக்கியம்பெரும்பித்துபயக்குமோ. (௨௬)

முன்னைநீக்குவன்மொய்சிறையென்றநீ
பின்னைநீக்கியுவகையும்பேசினை
யென்னபேற்றினையீகுவதென்பதை
யுன்னிநோக்கியுணாமறந்தோவினேன். (௨௭)

உலகமூன்றுமுதவற்கொருதனி
விலையிலாமையுமுன்னினன்மேலவை
நிலையிலாமைநினைந்தனனின்னையென்
றலையிலுற்றெழுவேதருந்தன்மையோய். (௨௮)

ஆதலாலொன்றுதவுதலாற்றலேன்
யாதுசெய்வதென்றெண்ணியிருந்தனன்
வேதன்மணிவேகடஞ்செய்தன்ன
ஆதவென்விளிச்செய்திறஞ்சொல்லென்றாள். (௨௯)

எனக்களிக்கும்வரமெம்பிராட்டிநின்
மனக்களிக்குமற்றுன்னையம்மானவன்
றனக்களிக்கும்பணியிலுந்தக்கதோ
புனக்களிக்குலமாமயில்போன்றுளாய். (௩௦)

எனவுரைத்துத்திரிசடையாளெம்மோய்
மனையினிற்சுடர்மாமுகமாட்சியா
டனையொழித்திவ்வரக்கியர்தங்களை
வினையினிற்சுடவேண்டுவனியானென்றான். (௩௧)

உரையிலாவுரையுன்னையுரைத்தாராய்
விரையவோடிவிழுங்குவமென்றுளார்
வரைசெய்மேனியைவள்ளுகிராற்பிளந்
திரைசெய்வேன்மறலிக்கினியென்றுமால். (௩௨)

குடர்குறைத்துக்குருதிகுடித்தவ
ருடன்முருக்கியிட்டுண்குவனென்றலு
மடலரக்கியரன்னைநின்பாதமே
விடலமெய்ச்சரணென்றுவிளம்பலும். (௩௩)

அன்னையஞ்சன்மினஞ்சன்மினீதொரு
மன்னுமாருதிமாமுகநோக்கிவே
றென்னதீமையிவரிழைத்தாரவர்
சொன்னசொல்லினதல்லதுதூய்மையோய். (௩௪)

யானிழைத்தவினையினிவ்விடர்
தானடுத்ததுதாயினுமன்பினோய்
கூனியிற்கொடியாரலரோயிவர்
போனவப்பொருள்போற்றலைபுந்தியோய். (௩௫)

எனக்குநீயருளிவ்வரந்தீவினை
தனக்குவாழ்விடமாயசழக்கியர்
மனக்குநோய்செயலென்றனண்மாமதி
தனக்குமாமறுத்தந்தமுகத்தினாள். (௩௬)

என்றபோதினிறைஞ்சிநின்றெம்பிரான்
றன்றுணைப்பெருந்தேவிதயாவென
நின்றகாலைநெடியவன்வீடண
சென்றுதாநமதேவியைச்சீரொடும். (௩௭)

என்னுங்காலையிருளும்வெயிலுங்கார்
மின்னுங்காலையியற்கையவீடண
னுன்னுங்காலைக்கொணர்தியென்றேதவப்
பொன்னின்காற்றளிர்சூடினன்போந்துளான். (௩௮)

வேறு.

வேண்டிற்றுமுடிந்ததன்றேவேதியர்வேதனின்னைக்
காண்டற்குவிரும்புகின்றானும்பருங்காணவந்தார்
பூண்டக்ககோலம்வல்லைபுனைந்தனைவருத்தம்போக்கி
யீண்டுக்கொண்டணைதியென்றானெழுந்தருளிறைவியென்றான். (௩௯)

யானிவணிருந்ததன்மையிமையவர்குழுவுமெங்கள்
கோனுமம்முனிவர்தங்கள்கூட்டமுங்குலத்துக்கேற்ற
வானுவர்கற்பின்மாதரீட்டமுங்காண்டன்மாட்சி
மேனினைகோலங்கோடல்விழுமியதன்றுவீர. (௪௦)

என்றனனிறைவிகேட்டவிராக்கதற்கிறைவனிலக்
குன்றனதோளிறன்றன்பணியினிற்குறிப்பனென்று
மன்றெனநங்கைநேர்ந்தாளுயக்கோலங்கொள்ளச்
சென்றனர்வானநாட்டுத்திலோத்தமைமுதலோர்சேர. (௬௧)

மேனகையரம்பைமற்றையுருப்பசிவேறுமுள்ள
வானகநாட்டுமாதரியாருமஞ்சனத்துக்கேற்ற
நானநெய்பூட்டப்பட்டநவையிலகலவைதாங்கிப்
போனகர்துறந்தையன்மருங்குறநெருங்கிப்புக்கார். (௬௨)

காணியைப்பெண்மைக்கெல்லாங்கற்பினுக்கமைந்தபொற்பா
ராணியையமுதின்வந்தவமுதினையறத்தின்றாயைச்
சேணுயர்மறையையெல்லாமுறைசெய்தசெல்வனென்ன
வேணியையரம்பைமெல்லவாண்முறைசருக்குவிட்டாள். (௬௩)

பாகடர்ந்தமுதிலகும்பவளவாய்த்தாளப்பந்தி
சேகறவிளக்கினார்நீட்டிமண்சேர்ந்தகாசை
வேகடஞ்செய்யுமாபோன்மஞ்சனவிதியின்வேதத்
தோகைமங்கலங்கள்பாடவாட்டினரும்பர்மாதர். (௬௪)

உருவினைபவளவல்லிபாலுணாயுண்டதென்ன
மருவினகலவைபூட்டிக்குங்குமமுலையின்மாட்டிக்
கருவினைமலரின்காட்சிக்காசறுதூசுகாமன்
திருவினையல்குற்கேற்பமேகலைதழுவச்சேர்த்தார். (௬௫)

சந்திரன்றேவிமாரிற்றனையுறுதாளப்பைம்பூ
ணிந்திரன்றேவிக்கேற்பவிசையவனபூட்டியாணர்ச்
சிந்தூரப்பவளச்செவ்வாய்த்தேம்பசும்பாகும்பற்றி
மந்திரத்தயினிரோல்வலஞ்செய்துகாப்புமிட்டார். (௬௬)

மண்டலமதியினுப்பண்மாளிருந்தென்னமானங்
கொண்டனரேற்றிவானமடந்தையர்துடர்ந்துசூட
மண்டிவானருமோடவரக்கரும்புறஞ்சூழ்ந்தோட
வண்டர்நாயகன்பாலண்ணல்விடணனருளிற்சென்றான். (௬௭)

வேறு.

இப்புறத்திமையவர்முனிவரோழையர்
அப்புறச்சிவந்தவாய்விஞ்சைத்தோகையர்
முப்புறத்துலகினுமெண்ணின்முற்றினோ
ரொப்புறக்குவிந்தனரோகைகூறுவார். (௬௮)

அருங்குலக்கற்பினுக்கணியையண்மினார்
மருங்குறுபின்முன்செலவழியின்றென்னலாய்
நெருங்கினர்நெருங்குழிநிருதரோச்சலாற்
கருங்கடன்முழங்கெனப்பிறந்தகம்பலை, (௬௯)

அவ்வழியிராமனுமலர்த்தாமரைச்
செவ்விவாண்முகங்கொடுசெயிர்த்துநோக்குறு
விவ்வொலியாவதென்றியம்பலிற்றெருளுக்
கவ்வையின்முனிவரர்கழறினாரரோ. (௫௦)

முனிவரர்வாசகங்கேட்புருதமுன்
னவியிதழ்துடித்திடாநகைத்துவிடலைன்
றனையெழநோக்கிநீதகாதசெய்தவோ
புனிதநூல்கற்றுணர்புந்தியோயென்றான். (௫௧)

கடுந்திறலமர்க்களங்காணுமாசையா
னெடுந்திசைத்தேவருநின்றயாவரு
மடைந்தனருவகையினடைகின்றார்களைக்
கடிந்திடயார்சொன்னார்கருதுநூல்வலாய். (௫௨)

வேறு.

பாகுடைக்கடவுணேமிப்பண்ணவன்பதுமத்தன்னை
லரசுடைத்தெரிவைமாதாயின்றியேயமைவதுண்டோ
கரைசெயற்கரியதேவனொன்னையோர்கரந்துகாண்பான்
விரகுறின்விலக்குவாமோவேறுளார்க்கென்கொல்வீரம். (௫௩)

ஆதலாலரக்கர்கோவேயடுப்பதன்றுனக்குமுன்னே
சாதுகைமாந்தர்தம்மைத்தடுப்பதென்றருளிச்செங்கண்
வேதநாயகன்றுனிற்பவெய்துயிர்த்தலக்கணெய்திக்
கோதிலாமனனுமெய்யுங்குலைந்தனன்குணங்கடேயோன். (௫௪)

அருந்ததியனையநங்கையமர்க்களமணுகியாடற்
பருந்தொடுகழுகும்பேயும்பசிப்பிணிதீருமாறு
விருந்திடுவில்லின்செல்வன்விழாவணிவிரும்பிநோக்கிக்
கருந்தடங்கண்ணுநெஞ்சுங்களித்திடவினையசொன்னாள். (௫௫)

வேறு.

சீலமுங்காட்டியென்கணவன்சேவகக்
கோலமுங்காட்டியென்குலமுங்காட்டியிஞ்
ஞாலமுங்காட்டியகவிக்குநாளறுக்
காலமுங்காட்டுமேகொல்லென்கற்பென்றாள். (௫௬)

எச்சிலென்னுடலுயிரோகிற்றேயினி
நச்சிலையென்பதோர்நவையிலாளெதிர்
பச்சிலைவண்ணமும்பவளவாயுமாய்க்
கைச்சிலையேந்திநின்றதனைக்கண்ணுற்றாள். (௫௭)

மானமீதரம்பையர்சூழவந்துளாள்
போனபேருயிரினைக்கண்டபொய்யுட
றனதுகவர்வுறுந்தன்மைத்தாமென
வானனங்காட்டுறவவனியெய்தினாள். (௫௮)

பிறப்பினுந்துணைவனைப்பிறவிப்பேரிடர்
அறுப்பினுந்துணைவனைத்தொழுதகாதலை
மறப்பினன்றியுமாறுவேறுவர
திறப்பினன்றனைவேக்கநீங்கிறான். (கூ)

கற்பினுக்கரசினைப்பெண்மைக்காப்பினைப்
பொற்பினுக்கழகினைப்புகழின்வாழ்க்கையைத்
தற்பிரிந்தருள்புரிதருமம்போலிவை
யற்பினீத்தலைவறுமமையநோக்கினான். (க0)

ணங்குறுந்துணைமுலைமுன்பிற்றாங்கிய
வணங்குறுநெடுங்கணீராறுவார்வுற
வணங்கியமயிலினைக்கற்பின்வாழ்வினைப்
பணங்கிளரரவென்னவெழுந்துபார்ப்புறு. (கக)

ஈண்டிறழுவந்தனையொழுக்கம்பாழ்பட
மாண்டிலைமுறைதிறம்பரக்கன்மானக
ராண்டுறைந்தடங்கினையச்சந்தீர்ந்திலன்
மீண்டதென்னினைவெனைவிரும்புமென்பதோ. (கஉ)

உன்னைமீட்பான்பொருட்டுவரிதூர்த்தொளிர்
மின்னைமீட்டுறுபடையரக்கர்வேரறப்
பின்னைமீட்டுறுபகைகடந்திலேன்பிழை
யென்னைமீட்பான்பொருட்டிலங்கையெய்தினேன். (கங)

மருந்தினுமுரியமன்றுயிரின்வான்றசை
யருந்தினையேதறவணமயவுண்டியே
யிருந்தனையேயினியெமக்குமேற்பன
விருந்துளவோவுரைவெம்மைநீங்கினாய். (கச)

கலத்தினிற்பிறந்தமாமணியிற்காந்துறு
நலத்தினிற்பிறந்ததுநடந்தன்மைசால்
குலத்தினிற்பிறந்திலைகோளில்கீடம்போல்
நிலத்தினிற்பிறந்தனைமலிரப்பினாயரோ. (கரு)

பெண்மையும்பெருமையும்பிறப்புங்கற்பெனுந்
திண்மையுமொழுக்கமுந்தெளிவுஞ்சீர்மையு
முண்மையுநீயெனுமொருத்திதோன்றலால்
வண்மையின்மன்னவன்புகழின்மாய்ந்ததால். (கசா)

அடைப்பனாம்புலன்களையொழுக்கமாணியாய்ச்
சடைப்பரந்தலைகந்ததோர்தலைவின்மாதவம்
படைப்பர்வந்திடையொருபழிவந்தாலது
துடைப்பர்தம்முயிரொடுங்குலத்திற்றெரிவைமார். (கஎ)

யாதியானியம்புவதுணர்வையீடறச்
சேதியாநின்றதன்னொழுக்கஞ்செய்வது
சாதியாலன்றெனிற்றக்கதோர்நெறி
போதியாலென்றனன்புலவர்புந்தியான். (௬௮)

முனைவருமமரருமற்றுமுற்றிய
பினைவருமகளிரும்பிருதவொன்றுளா
ஒனைவரும்வானரத்தேவரும்வேறுளா
ரனைவரும்வாய்திறந்தாற்றினாரோ. (௬௯)

கண்ணினையுதிரமும்புனலுங்கான்றுக
மண்ணினைநோக்கியமலரின்மைவருவாள்
புண்ணினிற்கோலுறுத்தனையபொம்மலா
ளண்ணினைப்போவிநின்றுயிர்ப்புவீங்கினாள். (௭௦)

பருந்தடர்சரத்திடைப்பருகும்பீர்நைச
வருந்தருந்துயரினால்மாளலுற்றமா
னிருந்தடங்கண்டதினெய்துருவகைப்
பெருந்தகையுற்றெனப்பேதுற்றுளரோ. (௭௧)

உற்றுநின்றுலகினைநோக்கியோரடி
முற்றுறுநெடுங்கணீராலிமொய்த்துக
விற்றதுபோலும்யானிருந்துபெற்றபே
றுற்றதாலென்றவமின்றென்றேதுவாள். (௭௨)

மாருதிவந்தெனைக்கண்டுவள்ளனீ
சாருதியீண்டெனச்சமையச்சொல்லினான்
யாரினுமேன்மையானிசைத்ததில்லையோ
சோருமென்னிலையவன்றூதுமல்லனோ. (௭௩)

எத்தவமென்னலமென்றன்கற்பும்நா
னித்தனைகாலமுமுழந்தவீதெலாம்
பித்தெனலாயவம்பிழைத்ததாலன்றே
யுத்தமநீமனத்துணர்ந்திலாமையால். (௭௪)

பார்க்கெலாம்பத்தினிபதுமத்தானுக்கும்
பேர்க்கலாஞ்சிந்தையளல்லள்பேதையெ
னார்க்கெலாங்கண்ணவனன்றென்றுலகு
தீர்க்கலாந்தகையதுதெய்வந்தேறுமோ. (௭௫)

பங்கயத்தொருவனும்விடையின்பாகனுஞ்
சங்குகைத்தாங்கியதருமமூர்த்தியு
மங்கையினெல்லிபோலனைத்தும்நோக்கினு
மங்கையர்மனநிலையுணரவல்லரோ. (௭௬)

ஆதலிற்புறத்தினியாருக்காகவென்
கோதறுதவத்தினைக்கூறிக்காட்டுகேன்
சாதலிற்பிறந்ததொன்றில்லைதக்கதே
வேதநின்பணியதுவிதியுமென்றனள். (௭௭)

இளையவன்றனையழைத்திடுதிதீயென
வளையொலிமுன்கையாள்வாயிற்கூறினா
ளுளைவுறமனத்தவனுலகம்யாவுக்குங்
களைகணைத்தொழுதவன்கண்ணிற்கூறினான். (௭௮)

ஏங்கியபொருமலினிழிகணீரினன்
வாங்கியவுயிரினனனையமைந்தனு
மாங்கெரிவிதிமுறையமைவித்தானதன்
பாங்குறநடந்தனள்பரமப்போதனாள். (௭௯)

தீயிடையருகுறச்சென்றுதேவர்க்குந்
தாய்தனிகுறுகலுந்தரிக்கிலாமையால்
வாய்திறந்தரற்றினமறைகளுங்கொடு
மோய்வினல்லறமுமற்றுயிர்கள்யாவையும். (௮௰)

வலம்வருமாலைவயின்மறுகிவான்முத
லுலகமுமுயிர்களுமோலமிட்டன
வலம்வரலுற்றனவலறியையவிச்
சலமிதுதக்கிலதென்னச்சாற்றின. (௮௧)

இந்திரன்றேவியைமுதலமேனைய
ரந்தரவானின்றரற்றுகின்றவர்
செந்தளிர்க்கைகளாற்சேயரிப்பெருஞ்
சுந்தரக்கண்களையெற்றித்துள்ளினார். (௮௨)

நடுங்கினர்நான்முகன்முதலநாயகர்
படர்ந்துறைந்ததுபடிகமந்தபாம்புவாய்
விடம்பிறந்துளதெனவெதும்பிற்றுலக
கிடந்திரிந்தனசுடர்கடல்களேங்கின. (௮௩)

கனத்தினாற்கடந்தபூண்முலையள்கைவளை
மனத்தினால்வாக்கினால்மறுவுற்றேனெனிற்
சினத்தினாற்சுடுதியாற்றீச்செல்வாவென்றாள்
வனத்துழாய்க்கணவற்கும்வணக்கம்போக்கினாள். (௮௪)

நீந்தரும்புனலிடையிவர்ந்ததாமரை
யேய்ந்தனகோயிலேயெய்துவாளெனப்
பாய்ந்தனள்பாய்தலும்பாலின்பஞ்செனத்
தீய்ந்ததவ்வெரியவள்கற்பின்றீயினால். (௮௫)

அழுந்தினனங்கைமற்றங்கையாற்சமந்
தெழுந்தனனங்கிவெந்தெரியுமேனியான்
செழுங்கரத்துணையினன்சுருதிஞானத்தின்
கொழுந்தினைப்பூசலிட்டாற்றுங்கொள்கையான். (௮௬)

ஊடினசிற்றத்தாலுதித்தவேர்களும்
வாடினதில்லையாலுணர்த்துமாறுண்டோ
பாடியவண்டொடும்பனித்ததேனொடுஞ்
சூடினமலர்கணீர்தோய்ந்தபோன்றவால். (௮௭)

திரிந்தனவுலகமுஞ்செவ்வைநின்றன
பரிந்தவருயிரெலாம்பயந்தவிர்ந்தன
வருந்திமுதலியமகளிராடுதல்
புரிந்தனர்நாணமும்பொறையும்நீங்கினார். (௮௮)

கனிந்துயர்கற்பெனுங்கடவுட்டீயினு
னினைந்தனையென்வலிநீக்கினாயென
வனிந்தனைமயங்கினீயாகிலென்னையு
முனிந்தனையாமெனமுறையிட்டாளரோ. (௮௯)

இன்னதோர்காலையிலிராமன்யாரைநீ
யென்னைநீயியம்பியதெரியுட்டோன்றியிப்
புன்மைசாலொருத்தியைச்சுடாதுபோக்கினு
யன்னதார்சொல்லவீதறைதியாலென்றான். (௯௰)

அங்கியானென்னையிவ்வன்னைகற்பெனும்
பொங்குவெந்தீச்சுடப்பொறுக்கிலாமையா
லிங்கணைந்தேனுறுமியற்கைநோக்கியுஞ்
சங்கியாநிற்றியோவெவர்க்குஞ்சான்றுளாய். (௯௧)

வேட்பதுமங்கையர்விலங்கினொளிற்
கேட்பதும்பலபொருட்கையங்கேடற
மீட்பதுமென்வயினென்றுமெய்ப்பொருள்
வாட்பெருந்தோளினாய்மறைகள்சொல்லுமால். (௯௨)

ஐயுறுபொருள்களையாசின்மாசொரீஇக்
கையுறுநெல்லியின்கனியிற்காட்டுமென்
மெய்யுறுகட்டுரைகேட்டுமீட்டியோ
பொய்யறுமாருதியுரையும்போற்றலாய். (௯௩)

தேவருமுனிவருந்திரிவநிற்பவு
மூவகையுலகமுங்கண்கள்மோதிநின்
றூவெனக்கேட்கிலையறத்தைநீக்கிவே
றேவமென்றொருபொருள்யாண்டுக்கொண்டியோ. (௯௪)

பெய்யுமேமழைபுவிபிளப்பதன்றியே
செய்யுமேபொறையறநெறியிற்செல்லுமே
யுய்யுமேயுலகிவனுணர்வுசீறினால்
வையுமேமலர்மிசையயனுமாயுமே. (௯௫)

பாடுறுபன்மொழியிளையபன்னியின்
கூடுறுதேவரோடுலகமார்த்தெழச்
சூடுறுமேனியவவரிதோகையைய
மாடுறக்கொணர்ந்தனன்வள்ளல்கூறுவான். (௯௬)

அழிப்பிலசான்றுநீயுலகுக்காதலா
லிழிப்பிலசொல்லிநீயிவணியாதுமோர்
பழிப்பிலவொன்றனைபழியுமின்றினிக்
கழிப்பிலவொன்றனன்கருணையுள்ளத்தான். (௯௭)

வேறு.

உணர்த்துவாயுண்மையொழிவின்றுகாலம்வந்துளதாற
புணர்த்துமாலையிற்பொதுவுறவின்றவைபுணரா
விணர்த்துழாய்த்தொங்கலிராமற்கென்றிமையவரிசைப்பத்
துணைப்பிருமனாச்சதுருகனுரைசெயச்சமைந்தான். (௯௮)

மன்னர்தொல்குலத்தவரினத்துணையொருமனித
னென்னவுன்னலையுன்னைநீயிராமகேளிதனைச்
சொன்னநான்மறைத்துணிவினிற்றுணிந்தமெய்த்துணிவு
நின்னலாதில்லைநின்னில்வேறுளதிலைநெடியோய். (௯௯)

பருதியென்றுளதியாதிறும்பழையதுபயந்த
விருதிபால்வந்தவினைவுமற்றதற்குமேனின்ற
புருதியாவர்க்குமரியவப்புருடனும்நீயிம்
மிருதியும்பெருமாயையினால்வந்தவீக்கம். (௧௦௦)

முன்புபின்பிருபுடையெனுங்குணிப்பருமுறைமை
தன்பெருந்தன்மைதான்றெரிமறைகளின்றலைகள்
மன்பெரும்பரமார்த்தமென்றுரைக்கின்றமாற்ற
மன்பநின்னையல்லான்மற்றிங்காரையுமறையா. (௧௦௧)

எனக்குமென்வகையொருவற்குமிமையவர்க்கிறைவன்
றனக்கும்பல்பெருமுனிவர்க்குமுயிருடன்றழீஇய
வனைத்தினிற்கும்நீயேபரமென்பதையறிந்தார்
வினைத்துவக்குடைவிட்டிருந்தனைநின்றுமீள்வார். (௧௦௨)

என்னைத்தான்முதலாகியவுருவங்களெவையு
முன்னைத்தாய்தந்தையெனும்பெருமாயையின்மூழ்கித்
தன்னைத்தானறியாமையிற்சலித்ததச்சலந்தீர்ந்
தன்னைத்தாமெனவுணர்வதுமுற்றுவித்தொழிந்த. (௧௦௩)

ஐயஞ்சாகியதத்துவந்தெரிந்தறிவவற்றின்
மெய்யஞ்சாவகைமேனின்றனைக்குமேல்யாரோ
பொய்யஞ்சாவிலதென்றுமீதருமறைபுகலும்
வையஞ்சான்றினிச்சான்றுக்குஞ்சான்றிலைவழக்கால். (௧0௪)

அளவையாலளந்தாமென்றென்றறிவுறுமளமறி
யுளவையாவையுமுனக்கில்லையுபநிடதத்தன்
களவையாய்த்துறத்தெளிந்திலதாயினுங்கண்ணூற்
றுளவையாய்முடியாயவனுளனெனத்துணியும். (௧0௫)

கரணமொன்றுளதன்னைவந்தறிவகாரணம
லரணமல்லவற்றிலைவகடந்தறிவரிதாக
மரணந்தோற்றமென்றிவற்றிடைமயக்குறுமயற்றுன்
சரணமல்லதோர்சரணில்லையன்னவைதவிர்ப்பான். (௧0௬)

தோற்றமென்பதொன்றுனக்கில்லைநின்கணேதோற்று
மாற்றல்சான்முதற்பகுதிமற்றதனுளாம்பண்பாற்
காற்றைமுன்னுடைப்பூதங்களவைசென்றுகடைக்கால்
வீற்றுவீற்றுற்றுவீவுறும்நீயென்றும்விளியாய். (௧0௭)

மின்னைக்காட்டுதல்போல்வந்துவிளியுமெய்யுலகந்
தன்னைக்காட்டவுந்தருமத்தைநாட்டவுந்தனியே
யென்னைக்காட்டுதியிறுதியுங்காட்டுதியெனக்கு
முன்னைக்காட்டிலையொளிக்கினுமிலைமறையுணாயால். (௧0௮)

என்னுருக்கொண்டிவ்வுலகினைப்பூணுதியிடையே
யுன்னுருக்கொண்டுபுகுந்துநின்றோம்புதியுமையோன்
றன்னுருக்கொண்டுதுடைத்திமற்றிதுதனியருக்கன்
முன்னுருக்கொடுபகற்செய்யுந்தரத்ததுமுதலோய். (௧0௯)

ஒங்காரப்பொருடேருவோர்தாமுன்னையுணர்வோ
ரோங்காரப்பொருளென்றுணர்ந்திருவினையறுப்போ
ரோங்காரப்பொருளாமென்றென்றூழிசென்றாலும்
மோங்காரப்பொருளேபொருளென்கிலாவுரவோர். (௧௧0)

இனையதாதலினெம்மைமூன்றுலகையுமீன்றிம்
மனையின்மாட்சியைவளர்த்தவெம்மோயினையாளா
முனையலென்றதுமுடித்தனன்மூந்நீர்முளைத்த
சினையின்பந்தமும்பகுதிகளனைத்தையுஞ்செய்தான். (௧௧௧)

என்னுமாத்திரத்தேறமர்கடவுளுமிசைத்தா
னுன்னைநீயொன்றுமுணர்ந்திலைபோலுமாலுரவோய்
முன்னையாதியாமூர்த்திநீமூவகையுலகி
னன்னைசீதையாமாதுநின்மார்பின்வந்தமைந்தாள். (௧௧௨)

அறக்குந்தன்மையளல்லளாற்றொல்லையெவ்வுலகும்
பிறக்கும்பொன்வயிற்றன்னைமீப்பெய்வளைபிழைக்கி
லிறக்கும்பல்லுயிரிராமனீயிவடிறத்திகட்சி
மறக்குந்தன்மையவென்றனன்வாதர்க்கும்வாதன். (ககங)

பின்னும்நோக்கினன்பெருந்தகைமுன்புறப்பிரிந்த
வின்னலாலுயிர்துறந்திருந்துறக்கத்துளிருந்த
மன்னனங்கவன்சென்றுநீகண்டனைவணங்க
முன்னையுன்றுயர்நீக்குதிமொய்ம்பினேனென்றான். (ககச)

ஆதியான்பணியருள்பெற்றவாசருக்காசன்
காதன்மைந்தனைக்காணியவுவந்தனோர்கருத்தாற்
பூதலத்திடைபுக்கனன்புகுதலும்பொருவில்
* வேதவேத்தனுமவன்மலர்த்தாண்மிசைவீழ்ந்தான். (ககரு)

வீழ்ந்தமைந்தனையெடுத்துத்தன்விலங்கலாகத்தி
னாழ்ந்தழுந்திடத்தழுவித்தன்கண்ணினீராட்டி
வாழ்ந்தகிங்கையின்மனங்களுங்களிப்புறமன்னன்
போழ்ந்ததுன்பங்கள்புறப்படநின்றிவைபுகன்றான். (ககசா)

அன்றுகைகயன்மகள்கொண்டவாமென்றுமயில்வே
லின்றுகாறுமென்னிதயத்தினிடைநின்றதென்னைக்
கொன்றுநீங்கலதிப்பொழுதகன்றதுன்குலப்பூண்
மன்றலாகமாங்காந்தமாமணியின்றுவாங்க. (ககஎ)

மைந்தனைப்பெற்றுவாளுயர்தோற்றத்துமலர்ந்தார்
கந்தரப்பெருந்தோளினுயென்றுனைத்தாளிற்
பைந்துகட்களுமொக்கிலாமெனப்படைத்தா
யுய்ந்தவர்க்கருந்துறக்கமும்புகழும்பெற்றுயர்ந்தேன். (ககஅ)

பண்டுநான்முதூர்தேவருமுனிவரும்பாராய்
கண்டுகண்டெனக்கைத்தலங்குவிக்கின்றகாட்சி
புண்டரீகத்தப்புராதனன்றன்னொடும்பொருந்தி
யண்டமூலத்தோராசனத்திருத்தினையழகா. (ககக)

என்றுமைந்தனையெடுத்தெடுத்திறுகுறத்தழுவிக்
குன்றுபோன்றுளதோளினுன்சீதையைக்குறுகத்
தன்றுணைக்கழல்வணங்கலுங்கருணையாற்றழுவி
நின்றமற்றிலைநிகழ்த்தினனிகழ்த்தரும்புகழோன். (கஉ0)

நங்கைமற்றும்நின்கற்பினையுலகுக்குநாட்ட
வங்கிபுக்கிடென்றுணர்த்தியவதுமனத்தடையேல்
சங்கையுற்றவர்பெறுவதுமுண்டதுசரதந்
கங்கைநாடுடைக்கணவனைமுனிவுறக்கருதேல். (கஉக)

---

* வேத்தன்-என்பது-தற்பவம். வேத்தியன்-என்பது-வடமொழி.

பொன்னைத்தீயிடைப்பெய்தலைப்பொன்றுலைத்தூய்மை
தன்னைக்காட்டுதற்கென்பதுமனக்கொளத்தகுதி
யுன்னைக்காட்டினன்கற்பினுக்கரசியென்றுலகிற்
பின்னைக்காட்டுதற்கரியதொன்றெண்ணிப்பெரியோன். (௧௨௨)

பெண்பிறந்தவாருந்தநியேமுதற்பெருமை
பண்பிறந்தவர்க்கருங்கலமாகியபாவாய்
மண்பிறந்தகமுனக்குநீவானின்றும்வந்தாய்
எண்பிறந்தநின்குணங்களுக்கினியிழுக்கிலையால். (௧௨௩)

என்னச்சொல்லியவ்வேந்திழைதிருமனத்தியாது
முன்னச்செய்யலோர்முனிவின்மைமனக்கொளாவந்தான்
பின்னைச்செம்மலவ்விளவலையுள்ளன்புபிணிக்கத்
தன்னைத்தானெனத்தழுவினன்கண்கணீர்ததும்ப. (௧௨௪)

கண்ணினீர்ப்பெருந்தாரைமற்றவன்சடைக்கற்றை
மண்ணினீத்தமொத்திழிதரத்தழீஇநின்றமைந்த
வெண்ணினீக்கரும்பிறவியுமென்னெஞ்சினிறந்த
புண்ணும்நீக்கினையுமையனைத்தொடர்ந்துடன்போந்தாய். (௧௨௫)

புரந்தரன்பெரும்பகைவனைப்பொராவென்றவன்றன்
பரம்புயர்ந்ததோளாற்றலேதேவரும்பலரும்
இரந்தாம்புகல்கின்றதுநீயிந்தவுலகி
னரந்தையாம்பகைதுடைத்தறம்நிறுத்தினையையா. (௧௨௬)

என்றுபின்னருமிராமனையாறுணர்கிலவ
தொன்றுகூறுதியுயர்குணத்தோயெனவுனையான்
சென்றுவானிடைக்கண்டிடர்தீர்வனென்றிருந்தே
னின்றுகாணப்பெற்றேனினிப்பெறுவதென்னென்றான். (௧௨௭)

ஆயினுமுனக்கமைந்ததொன்றுரையெனவழகன்
றீயவென்றுநீதுறந்தவென்றெய்வமுமகனுந்
தாயுந்தம்பியுமாம்வரந்தருகெனத்தாழ்ந்தான்
வாய்திறந்தெழுந்தார்த்தனவுயிரெலாம்வழுத்தி. (௧௨௮)

வரதகேளெனத்தயரதனுரைசெய்வான்மறுவில்
பரதனன்னதுபெறுகதான்முடியினைப்பரித்திவ்
விரதவேடமற்றுதவியபாவிமேல்விளிவு
சரதம்நீங்கலதாமென்றான்றழீஇயகைதளர. (௧௨௯)

ஊன்பிழைக்கிலாவுயிர்நெடிதளிக்கும்நீளாசை
வான்பிழைக்கிதுமுதலெனுதாள்வுறமதித்து
யான்பிழைத்ததல்லாலென்னையீன்றவெம்பிராட்டி
தான்பிழைத்ததுண்டோவென்றனவன்சலந்தவிர்ந்தான். (௧௩௦)

எவ்வரங்களுங்கடந்தவனைப்பொருளிசைப்பத்
தெவ்வரம்பலரானிடைச்செலுத்திருட்பேர்ந்த
வவ்வரங்களுமிரண்டலவயார்திறற்பேர்ந்த
இவ்வரங்களுமிரண்டென்றூர்தேவருமிரங்கி. (௧௩௧)

வரமிரண்டளித்தருகணையிளவலைமலர்மேல்
விரவுபொன்விளைமண்ணிடைவிருத்தியின்னிடையே
யுரவுமானமிதேகினனும்பருமுலகும்
பரவுமெய்யினுக்குயிரளித்தருபுகழ்படைத்தோன். (௧௩௨)

கோட்டுவார்சிலைக்குரிசிலேயமரர்தங்குழாங்கள்
மீட்டும்போக்குருவிரகிவேண்டுவரங்கள்
கேட்டியாலெனவரக்கர்கள்கிளப்பருஞ்செருவில்
வீட்டமாண்டுளாராங்கெலாமெழுகென விளம்பி. (௧௩௩)

பின்றுமோர்வரம்வானரப்பெருங்கடல்பெயர்ந்து
மன்றுபல்வனமால்வரைக்குலங்கள்மற்றிவர்க
டுன்னிடங்கள்காய்கனிகிழங்கோடுதேன்றுற்று
மின்னினிருளவாகவேவிளம்பிடுமென்றான். (௧௩௪)

வரந்தரும்முதன்மழுவலான்முனிவர்வானோர்
புரந்தராதிமற்றேனையோர்தனித்தனிபுகழ்ந்தாங்
கரங்கைவெம்பிறப்பறுக்கும்நாயகநினதருளாற்
குரங்கினம்பெறுகென்றனருள்ளமுங்குளிர்ப்பார். (௧௩௫)

முந்தைநாண்முதற்கடைமுறையளவையுமுடிந்த
வந்தவானரமடங்கலுமெழுந்தடைந்தார்த்துச்
சிந்தையோடுகண்களிப்புறச்செருவெலாம்விளையா
வந்ததாமரைக்கண்ணனைவணங்கினார்மகிழ்ந்து. (௧௩௬)

கும்பகன்னனோடிந்திரசித்துவெங்குலப்போர்
வெம்புவெஞ்சினத்திராவணன்முதலியவீர
ரம்பின்மாண்டுளவானரமங்குவந்தார்ப்ப
வும்பர்யாவருமிராமனைப்பார்த்திவையுரைத்தார். (௧௩௭)

இடையுவாவினிற்சுவேலம்வந்திறுத்தெயிலிலங்கைப்
புடையவாவுறச்சேனையைவளைப்புறப்போக்கிப்
படையைவீழ்வுறுமரக்கர்தங்குலமுற்றும்படுத்துக்
கடையுவாவினிலிராவணன்றன்னையுங்கட்டு. (௧௩௮)

வஞ்சரில்லையிவ்வண்டத்தினெனும்படிமடித்த
கஞ்சகாண்மலர்க்கையினையன்னைசொற்காரு
மஞ்சொடஞ்சுகாலொன்றெனுமாண்டுபோய்முடிந்த
பஞ்சயிப்பெயர்படைத்தளதிதியின்றுபயந்த. (௧௩௯)

இன்றுசென்றுநீபரதனையெய்தலையென்னிற்
பொன்றுமாலவனெரியிடையன்னதுபோக்க
வென்றிவீரநீபோதியாலென்பதுவிளம்பா
நின்றதேவர்கணீங்கினரிராகவனினைந்தான். (கசo)

ஆண்டுபத்தொருநாலுமின்றோடுறுமாயின்
மாண்டதாமினியென்குலம்பரதனேமாளி
னீண்டுபோகவோரூர்தியுண்டோவெனவின்றே
ஆண்டுமானமுண்டென்றடல்வீடணன்றொழுதான். (கசக)

இயக்கர்வேந்தனுக்கருமறைக்கிழவனன்றீய்ந்த
துயக்கிலாதவர்மனமெனத்தூயதுசார்கள்
வியக்கவான்செலும்புட்பகவிமானமுண்டென்றே
மயக்கிலான்சொலக்கொணருதிவல்லையினென்றான். (கசஉ)

அண்டகோடிகளனந்தமொத்தாயிரமருக்கர்
விண்டதாமெனவிசும்பிடைத்திசையெலாம்விளங்கக்
கண்டையாயிரகோடிகளொலிப்புறக்கஞலக்
கொண்டணைந்தனனொடியினிலரக்கர்தங்கோமான். (கசங)

அனையபுட்பகவிமானம்வந்தவனியையணுக
வினியசிந்தனையிராகவனுவகையோடினிதம்
வினையமுற்றியதென்றுகொண்டெழுந்தனன்விண்ணோர்
புனைமலர்ச்சொரிந்தார்த்தனராசிகள்புகன்றே. (கசச)

வணங்குநுண்ணிடைத்திரிசடைவணங்கவான்கற்பிற்
கிணங்கரின்மையானோக்கியோரிடரின்றியிலங்கைக்
கணங்குதானெனவிருத்தியென்றையன்மாடணைந்தாள்
மணங்கொள்வேலிளங்கோளரிமானமீப்படர்ந்தான். (கசரு)

அண்டமுண்டவன்மணியணியுதரமொத்தனிலன்
சண்டவேகமுங்குறைதரவினைவெனுந்தரத்தாய்
விண்டலந்திகழ்விமானப்புட்பகமெனுமதின்மேற்
கொண்டகொண்டறன்றுணைவரைப்பார்த்திவைகுணித்தான். (கசசு)

வீடணன்றனையன்புறநோக்குருவிமலன்
றோடணைந்ததார்மவுலியாய்சொல்வதொன்றுளதுன்
மாடணைந்தவர்க்கின்பமேவழங்கிநீளரசின்
னூடணைந்தவர்புகழ்ந்திடவீற்றிருநலத்தால். (கசஎ)

நீதியாறெனத்தெரிவுறுநிலைமைபெற்றுடையா
யாதிநாண்மறைக்கிழவனின்குலமெனவமைந்தா
யேதிலார்தொழுமிலங்கைமானகரினுளினிநீ
போதியாலெனப்புகன்றனனான்மறைபுகன்றான். (கசஅ)

சுக்கிரீவனின்றுணைவன்மையாற்றெசர்தொ
சுக்கிரீவனைத்தழீஇத்துவெம்படையிருலைத்த
மிக்கவானரச்சேனையினிளைப்பறமீண்டே
புக்குவாழ்கெனப்புகன்றனனிலாப்புகழோன். (௧௪௯)

வாலிசேயினைச்சாம்பனைப்பனசனைவயப்போர்
நீலனுதியாம்நெடும்படைத்தலைவரைநெடிய
காலின்வேலையைத்தாவிமீண்டருளியகருணை
போலும்வீரனைநோக்கிமற்றிம்மொழிபுகன்றான். (௧௫0)

அய்யனிம்மொழிபுகன்றிடத்துனுக்கமோடவர்கள்
மெய்யுமாவியுங்குலைதரவிழிகணீர்ததும்பச்
செய்யதாமரைத்தாளினைமுடியுறச்சேர்த்தி
யுய்கிலோமுன்னைநீங்கிலென்றினையனவுரைத்தார். (௧௫௧)

பாரமாமதிலயோத்தியினெய்தினின்பைம்பொ
னாரமாமுடிக்கோலமுஞ்செவ்வியுமழகுந்
சோர்விலாதியாய்காண்டுமளவையுந்தொடர்ந்து
பேரவேயருளென்றனருள்ளன்புபிணிப்பார். (௧௫௨)

அன்பினாலவர்மொழிந்தவாசகங்களுமவர்க
ளின்பமெய்தியநடுக்கமுநோக்கிநீர்துளங்கல்
முன்புராவினைத்திருந்தப்பரிசினுமுயற்சி
பின்புகாணுமாறுற்றதென்றுரைத்தனன்பெரியோன். (௧௫௩)

ஐயன்வாசகங்கேட்டலுமரிகுலத்தரசு
மொய்கொள்சேனையுமிலங்கையர்வேந்தனுமுதலோர்
வையமாளுடைநாயகன்மலர்ச்சரண்வணங்கி
மெய்யினோடருந்துறக்கமுற்றாரெனவியந்தார். (௧௫௪)

அனையதாகியசேனையோடரசனையனிலன்
றனையனுதியாம்படைப்பெருந்தலைவர்கடம்மை
வனையும்வார்கழலிலங்கையர்மன்னனைவந்திங்
கினிதினேறுமின்விமானமென்றிராகவனிசைத்தான். (௧௫௫)

சொன்னவாசகம்பிற்படச்சூரியன்மகனு
மன்னுவீரருமெழுபதுவெள்ளவானரருங்
கன்னிமாமதிலிலங்கைமன்னொடுகடற்படையுந்
துன்னினார்நெடும்புட்பகமிசையொருசூழல். (௧௫௬)

பத்துநாலெனவடுக்கியவுலகங்கள்பலவின்
மெத்தியோனிகளேறினும்வெளியிடமிகுமான்
முத்தரானவர்தனிலைமொழிகுவதல்லா
லித்தராதலத்தியம்புதற்குரியவரியாரோ. (௧௫௭)

வேறு. எழுபதுவெள்ளத்தோருமிரவிகான்முளையுமெண்ணி
வழுவிலாவிலங்கைவேந்தும்வாள்பெரும்படையுஞ்சூழத்
தழுவுசீரிளையகோவுஞ்சனகன்மாமயிலும்போற்ற
விழுமியகுணத்துவீரன்விளங்கினன்விமானத்தும்பர். (௧௫௮)

அண்டமேபோன்றலதயன்புட்பகமண்டத்தும்ப
ரொண்டருங்குணங்களின்றிமுதலிடையீறின்றாகிப்
பண்டைநான்மறைக்குமெட்டாப்பரஞ்சுடர்பொலிவதேபோற்
புண்டரிகக்கண்வென்றிப்புரவலன்பொலிந்தான்மன்னோ. (௧௫௯)

தேனுடையலங்கன்மவுலிச்செங்கதிர்ச்செல்வன்சேயு
மீனுடையகழிவேலியிலங்கையர்வேந்தும்வெற்றித்
தானையும்பிறருமற்றைப்படைப்பெருந்தலைவர்தாமு
மானிடவடிவங்கொண்டார்வள்ளறன்வாய்மைதன்னால். (௧௬௦)

குடதிசைமறைந்தபின்னர்க்குணதிசையுதயஞ்செய்வான்
வடதிசையயனமுன்னிவருவதேகடுப்பமானந்
தடையொருசிறிதின்றாகித்தாவிவான்படரும்வேலைப்
படையமைவிழியாட்கையனிளையனபகரலுற்றான். (௧௬௧)

இலங்கையைவலஞ்செய்தேகவெனவினைந்திடுமுன்மானம்
வலங்கிளர்கீழைவாயில்வரப்பிரகத்தனில
னலங்கிளர்கையின்மாண்டதிவணெனநமன்றன்வாயில்
கலந்திடவிக்கிற்கண்டாய்சுபாரிசற்கட்டதென்றான். (௧௬௨)

குடதிசைவாயில்வேகக்குன்றரிந்தவனைவென்றி
விடநிகர்மேகநாதனிளவலால்வீழ்ந்ததென்முன்
வடதிசைவாயின்மேலவ்விராவணன்மவுலிபத்து
முடலமுமிழந்ததிங்கென்றுணர்த்திவேறுரைக்கலுற்றான். (௧௬௩)

நன்னுதனின்னைநீங்கிநாள்பலகழிந்தபின்றை
மன்னவனிரவிமைந்தன்வான்றுணையாகநட்ட
பின்னைமாருதிவந்துன்னைப்பேதுறத்துனதுபெற்றி
சொன்னபின்வானரோசர்தொகுத்ததிச்சேதுகண்டாய். (௧௬௪)

மற்றிதன்றூய்மையெண்ணின்மலரயன்றனக்குமெட்டாப்
பொற்றொடிதெரிவையானென்புகலுகென்கேண்மினன்பாற்
பெற்றதாய்தந்தையோடுதேசிகற்பிழைத்துச்சூழ்ந்த
சுற்றமுங்கெடுத்துளோருமெதிர்தரிற்சுரர்களாவார். (௧௬௫)

இந்திரற்கஞ்சிமேனாளிருங்கடல்புக்குநீங்காக்
கந்தரச்சயிலந்தன்னுட்கண்டவர்வினைகடீர்க்குங்
கெந்தமாதனமென்றோதுங்கிரியிவண்கிடப்பகண்டாய்
பைந்தொடியடைத்தசேதுபாவனமாவதென்றான். (௧௬௬)

கங்கையோடியமுனைகோதாவிரியொடுகளிந்தைசூழ்ந்த
பொங்குநீர்நதிகளியாரும்படிதலாற்புன்மைபோகாச்
சங்கெறிதரங்கவேலைதட்டவிச்சேதுவென்று
மிங்கிதனைதிர்ந்தோர்புன்மையாவையுநீக்குமன்றே. (கசுஎ)

ஆவினைக்குரவரோடுமருமறைமுனிவர்தம்மைப்
பாவையர்குழுவையின்சொற்பாலனைப்பயந்துதம்மின்
மேவினவவரைச்செற்றோர்விரிகடற்சேதுவந்து
தோய்வரேலவர்கள்கண்டாய்சுரர்தொழுஞ்சுரர்களாவார். (கசுஅ)

மாக்கலமியங்கவேண்டிவரிசிலைக்குதையாற்கீறித்
தருக்கியவிடத்துப்பஞ்சபாதகரோனுஞ்சாரிற்
பெருக்கியவேழுமூன்றுபிறவியும்பிணிகளீங்கி
நெருக்கியவமரர்க்கெல்லாம்நீணிதியாவரன்றே. (கசுகூ)

நெற்றியினழலுஞ்செங்கணீறணிகடவுளீடு
கற்றையின்சடையின்மேவுங்கங்கையுஞ்சேதுவாகப்
பெற்றிலமென்றுகொண்டுபெருந்தவம்புரிகின்றுளான்
மற்றிதன்றூய்மையெவ்வாறுரைப்பதுமலர்க்கண்வந்தாய். (கஎ0)

தெவ்வடுஞ்சிலைக்கைவீரன்சேதுவின்பெருமையாவும்
வெவ்விடம்பொருதுமீண்டுமீளிர்தருங்கருங்கட்செவ்வாய்
கொவ்விடைக்குயிலனாட்குறவன்றுழிவருணனென்று
இவ்விடைவந்துகண்டாய்சரணெனவியம்பிற்றென்றான். (கஎக)

இதுதமிழ்முனிவன்வைகுமியறருகுன்றமுன்று
ளதுவளர்மணிமேலோங்கலப்புறத்துயர்ந்துதோன்று
மதிதிக * மூனந்தவெற்பென்றருடரவனுமன்றோன்றிற்
றெறுவெனவணங்கைநோக்கியிற்றெனவிராமன்சொன்னான். (கஎஉ)

வாலியென்றளவிலாற்றல்வன்மையான்மகரநீர்சூழ்
வேலையைக்கடத்தலாயும்விறலுடையவனைவீட்டி
றாலியற்றருமகீதிறுவித்தறங்குனித்தமேலோர்
போலியற்றபனன்மைந்தனுறைதரும்பொறையீதென்றான். (கஎங)

கிட்கிந்தையிதுவேலையகேட்டியாலெனதுபெண்மை
மட்குந்தானுயவெள்ளமகளிரின்றுகிவாறே
ருட்கும்போர்ச்சேனைசூழவொருத்தியேயயோத்தியெய்திற்
கட்கொந்தார்குழலினாயேற்றுதல்கடமைத்தென்றாள். (கஎச)

அம்மொழியிரவிமைந்தற்கண்ணுறுனைப்பவன்றான்
மெய்ம்மைசேராமன்றன்னைநோக்கிநீவிரைவின்வீர
மைமலிகுழலினாரைமரபினாற்கொணர்தியென்னாச்
செம்மைசேருள்ளத்தண்ணல்கொணர்ந்தனன்சென்றுமன்னோ. (கஎரு)

---

* மதங்கவெற்பு.

வரிசையின்வழாமைநோக்கிமாருதிமாதர்வெள்ளங்
கரைசெயலரியவண்ணங்கொணர்ந்தனன்கணத்தின்முன்னம்
விரைசெறிகுழலினார்தம்வேந்தனைவணங்கிப்பெண்மைக்
கரசியையையனோடுமடியிணைதொழுதுநின்றார். (கஎ௬)

மங்கலமுழலவாயமரபினிற்கலப்லைபயாவு
மங்கவர்கொணர்ந்துபெண்மைக்கரசியைத்தொழுதுசூழ
நங்கையுமுவந்துவேறோர்நவையிலையினிமற்றென்றாள்
பொங்கியவிமானந்தானுமனமெனவெழுந்துபோன. (கஎஎ)

வேறு.

போதார்விசும்பிற்றிகழ்புட்பகம்போதலோடுஞ்
சூதார்முலைத்தோகையைநோக்கிமுன்றோன்றுசூழல்
கோதாவிரிமற்றதன்மாடுயர்குன்றுமின்னைப்
பேதாய்பிரிவித்துயர்பீழைபிணித்ததென்றான். (கஎஅ)

வேறு.

சிரத்துவாசவண்டலம்பிடுதெரிவைகேளிதுநீ
டரத்துவாசநவேள்வியர்தண்டகமிதுதான்
வரத்துவாசவன்வணங்குறுசித்திரகூடம்
பரத்துவாசனுறைவிடமிதுவெனப்பகர்ந்தான். (கஎ௯)

மின்னைநோக்கியவீரனிதியம்பிடும்வேலை
தன்னைநேரிலாமுனிவரனுணர்ந்துதன்னகத்தி
லென்னையாளுடைநாயகனெய்தினனென்னாத்
துன்னுமாதவர்சூழ்தரவெதிர்கொள்வான்றுடர்ந்தான். (கஅ0)

ஆதபத்திரக்குண்டிகையொருகையினணைந்துப்
போதமுற்றியதண்டொருகையினிற்பொலிய
மாதவப்பயனுருவுகொண்டெதிர்வருமாபோ
னீதிவித்தகனடைந்தமைநோக்கினனெடியோன். (கஅக)

எட்பகத்தினையளவையுங்கருணையோடிசைந்த
நட்பகத்திலாவரக்கரைநறுக்கிமாமேரு
விட்பகத்துறைகோளரியெனப்பொலிவீரன்
புட்பகத்தினைப்பதிகெனநினைந்தனன்புவியில். (கஅஉ)

உன்னுமாத்திரத்துலகினையெடுத்தும்பரோங்கும்
பொன்னினாடுவந்திழிந்தெனப்புட்பகந்தாழ
வென்னையாளுடைநாயகன்வல்லையினெதிர்போய்ப்
பன்னுமாமறைத்தபோதனன்றாண்மிசைபணிந்தான். (கஅ௩)

அடியின்வீழ்தலுமெடுத்துநலாசியோடணைத்து
முடியைமோயினனின்றுழிமுளரியங்கண்ணன்
சடிலநீடுகளொழிதரத்தனதுகண்ணருவி
நெடியகாதலங்கலசமதாட்டினனெடியோன். (கஅ௪)

கருநும்வார்குழற்சனகியோடிளவல்கைதொழுதே
யருகுசார்தரவருந்தவருசிசன்வழுய்வி
யுருகுகாதலிநெஞ்சுருகக்கண்ணீரினறுவகை
பருகுமாறுதொத்தனங்களித்தனன்பரிவால். (கஅரு)

வானரேசனும்வீடணக்குரிசிலுமற்றை
யேனைவீரருந்தொழுதொழுமாசிகளியம்பி
ஞானநாதனைத்திருவொடுமனைகொணர்ந்தா
னுமாதவர்குழாத்தொடுமருமறைபுகன்றே. (கஅசு)

பன்னசாலையுட்புகுந்தர்ச்சனைபலவுஞ்
சொன்னநீதியிற்புரிந்தபின்சூரியன்மருமான்
றன்னைநோக்கினன்பன்முறைகண்கணீர்ததும்பப்
பின்னொர்வாசகமுரைத்தனன்றபோதரிற்பெரியோன். (கஅஎ)

முனிவர்வாழுளோர்மூவுலகத்துளோர்யாருந்
துனியுழந்திடத்துயர்தருகொடுமனத்தொழிலோர்
தனிமடிந்திடவலகைகளுடனடிப்பக்
குனியும்வார்சிலைக்குரிசிலேயென்னினிக்குனிப்பாம். (கஅஅ)

வேறு.

விராதனுங்கரனுமாலும்விறல்கெழுகவந்தன்றானு
மராமரமேழும்வாலிமார்பமுமகரநீரு
மிராவணனாமுங்கும்பகருணனதேற்றந்தானு
மாவரும்பகழியொன்றாலழித்துலகளித்தாயைய. (கஅகூ)

சித்திரகூடந்தீர்ந்துதென்றிசைத்திசைமீர்த்திட்
டத்திசையடைந்தேயில்லினிறுத்தமையிறுதியாக
வித்தகமறந்திலேன்யான்விருந்தினையாகியெம்மோ
டித்தினமிருத்தியென்றான்மறைகளினிறுதிகண்டான். (கக0)

காதலமதனினீடுகார்முகம்வளையவாங்கிச்
சாதம்வானவர்கடுன்பந்தணித்துலகங்கள்தாங்கு
மரகதமேனிச்செங்கண்வள்ளலேவழுவாநீதிப்
பாதனியல்புமின்றேபணிக்குவன்கேண்மியென்றான். (ககக)

வேறு.

வெயர்த்தமேனியன்விழிபொழிமழையன்றீவினையைச்
செயிர்த்தசிந்தையன்பெருமாலுழந்துழந்திழிவா
னயர்த்துநோக்கிலுந்தென்றிசையன்றிவேறறியான்
பயத்ததுன்பமேவுருவுகொண்டென்னலாம்படியான். (ககஉ)

இந்தியங்களைந்திருங்கனிகாய்நுகர்ந்திவுளிப்
பந்திவந்தபுற்பாயலான்பழம்பதிபுகாது
நந்தியம்பதியிருந்தனன்பரதனின்னும
மந்தியும்பகலதனிலுமறப்பிலனுசி. (ககங)

வேறு. என்றுரைத்தரக்கர்வேந்தனிருபதென்றுரைக்குநீலக்
குன்றனைத்தனையதோளுங்குலவரைக்குவடுமேய்க்கு
மென்றுரைத்தனையமௌலித்தலைபத்துமிறுத்தவீர
நின்றனைப்பிரிந்ததுண்டோயானெனநிகழ்த்தினானால். (௧௯௪)

மின்னையேருழையினானும்விரைமலர்த்தவிசினானும்
நின்னையேபுகழ்தற்கொத்தநீதிமாதவத்தின்மிக்கே
யுன்னையேவணங்கியுன்றனருள்சுமந்துயர்ந்தேன்மற்றிங்
கென்னையேபொருவுமைந்தர்யானலாதில்லையென்றான். (௧௯௫)

அவ்வுரைபுகலக்கேட்டவறிவனுமருளினோக்கி
வெவ்வரம்பொருதவேலோய்விளம்புகேள்கேண்மின்வேண்டிற்
றெவ்வரமெனினுந்தந்தேனியம்புதியெனலுமையன்
கவ்வையின்றாகிவென்றிக்கவிக்குலம்வாழ்கவென்றான். (௧௯௬)

அரியினஞ்சென்றசென்றவடவிகளனைத்தும்வானஞ்
சொரிதருபருவம்போலக்கிழங்கொடுகனிகாய்துன்றி
விரிபுனற்செழுந்தேன்மிக்குவிளங்கெனவிளம்புகென்றான்
புரியுமாதவனுமஃதேயாகெனப்புகன்றிட்டானால். (௧௯௭)

அருந்தவனையனின்றோடனிகவெஞ்சேனைக்கெல்லாம்
விருந்தினிதமைப்பனென்னவிளங்குமுத்தீயிலுப்பண்
புரிந்தொராகுதியையீந்துபுறப்படுமளவிற்போகந்
திருந்தியவானநாடுசேரவந்திறுத்ததன்றே. (௧௯௮)

அரசரோயாதியாகவடியவரந்தமாகக்
கரைசெயலரியபோகந்துய்க்குமாகண்டிராமற்
கரசியல்வழாமைநோக்கியறுசுவையமைக்கும்வேலை
விரைசெறிகமலக்கண்ணனனுமனைவிளித்துச்சொன்னான். (௧௯௯)

வேறு.

இன்றுநம்பதிவருதுமுன்மாருதியீண்டச்
சென்றுநீதின்மைசெப்பியத்தீயவித்திலையோ
வின்றநீர்மையுநினைவுநீதேர்ந்தெம்பினோர்த
னன்றெனாவவன்மோதிரங்கைக்கொடுநடந்தான். (௨௦௦)

தந்தைவேகமுந்தனதுநாயகன்றனிச்சிலையின்
முந்துசாயகக்கடுமையும்பிற்படமுடுகிச்
சிந்தைபின்வரச்செல்பவன்குகற்குமச்சேபோன்
வந்தவாசகங்கூறிமேல்வான்வழிபோனான். (௨௦௧)

வேறு.

இன்றிசைக்கிடமாயவிராகவன்
றென்றிசைக்கருமச்செயல்செப்பினு
மன்றிசைக்குமரியவயோத்தியி
னின்றிசைத்துளதன்மைநிகழ்த்துவாம். (௨௦௨)

நந்தியம்பதியின்றலைநாடொறுஞ்
சந்தியின்றிரந்தாந்தம்முனோர்
பந்தியங்கழற்பாதமருச்சியா
விந்தியங்கலைவென்றிருந்தனரோ. (௨0௩)

அன்புருக்கவுஞ்சாற்றியுருக்கொணு
வென்புருக்குந்தகைமையதிட்டதாய்
முன்புருக்கொண்டொருவழிமுற்றரு
வன்புருக்கொண்டதாமெனலாகுவான். (௨0௪)

நினைக்கவுந்தடங்கண்ணிணைநீர்வா
வினைத்ததண்டலைநாட்டிருந்தேயுமக்
கனைத்தகந்தமுங்காயுங்கனிகளும்
வனத்தவல்லவருந்தலில்வாழ்க்கையான். (௨0௫)

நோக்கிற்றென்றிசையல்லதுநோக்குறு
வேக்குற்றேக்குற்றிரவிருலத்துளான்
வாக்கிற்பொய்யான்வரும்வருமென்றுயிர்
போக்கிப்போக்கியிழைக்கும்பொருமலான். (௨0௬)

உண்ணுநீர்க்குமுயிர்க்குமுயிரவ
னெண்ணுங்கீர்த்தியிராமன்றிருமுடி
மண்ணுநீர்க்குவரம்புகண்டாலன்றிக்
கண்ணினீர்க்கோர்கரையெங்குங்காண்கிலான். (௨0௭)

அனையனாயபரதனலங்கலிற்
புனையுந்தம்முனோர்பாதுகைப்பூசனை
நினையுங்காலினைத்தனனுமரோ
மனையின்வந்தவனெய்தமதித்தநாள். (௨0௮)

ஆண்டுவந்திங்கடுக்குமென்றெண்ணினன்
மாண்டசோதிடவாய்மைப்புலவரை
யீண்டுகூப்பித்தருகென்னவந்தெய்தினு
ராண்டகைக்கின்றவதியென்றாரரோ. (௨0௯)

என்றபோதத்திராமன்வனத்திடைச்
சென்றபோதத்ததவ்வுலாசெல்வத்தை
வென்றபோதத்தவீரனும்வீழ்ந்தனன்
கொன்றபோதத்துயிர்ப்புக்குறைந்துளான். (௨௧0)

மீட்டெழுந்துவிரிந்தசெந்தாமரைக்
காட்டைவென்றெழுகண்கலுழிப்புன
லோட்டவுள்ளவுயிரினைப்பூசலின்
முட்டவும்மலத்தழிந்தனரோ. (௨௧௧)

எனக்கியம்பியநாளுமென்னின்னலுந்
தனைப்பயந்தவனையமுந்தாங்கியவ்
வனத்துறைவகல்செய்யான்வந்தடுத்ததோர்
வினைக்கொடும்பகையுண்டெனவிம்மினான். (௨௧௨)

மூவகைத்திருமூர்த்தியராயினும்
பூவகத்தில்விசும்பிற்புறத்தினி
னேவர்நிற்பரெதிர்நிற்கவென்றுடைச்
சேவகற்கெனவையமுந்தேறினான். (௨௧௩)

என்னையின்னணமாலியவிச்சையா
னன்னனாகினவனதுகொள்கவென்
றுன்னினான்கொலுருவதுநோக்கினு
வின்னதோலனென்றிருந்தானரோ. (௨௧௪)

அனைத்தினங்கொன்றுமாயினுமாருக
வனத்திருக்கவிவ்வையம்புகுதுக
வினைத்திருந்துதுயாமுழக்கிலேன்
மனத்துமாசெனுயிரொடும்வாங்குவேன். (௨௧௫)

என்னப்பன்னியிளவலையென்றுழை
துன்னச்சொல்லுதியொன்றலுந்தூதர்போ
யுன்னைக்கூயினனும்முனோனென
முன்னர்ச்சென்றனன்மூவர்க்கும்பின்னுளான். (௨௧௬)

தொழுதுநின்றதன்றம்பியைத்தோய்கணீ
ரொழுகுமார்பத்திலுகத்தழுவினா
னழுதவேண்டுவதுண்டையவிவ்வரம்
பழுதிலாமையினுற்றரற்பாற்றென்றான். (௨௧௭)

என்னதாருங்கொலவ்வரமென்றியேற்
சொன்னநாளிலிராகவன்றோன்றிலன்
பின்னுதீயிடையானினிவிடுவன்
மன்னனாதியென்சொல்லைமறுதென்றான். (௨௧௮)

கேட்டதோன்றல்கிளர்தடக்கைகளாற்
றேட்டதன்செவிபொத்தித்துணுக்குறு
வூட்டுநஞ்சமுண்டானெனத்துயங்கினான்
நாட்டமுமனமும்நடுக்காகின்றான். (௨௧௯)

விழுந்துமேக்குயர்விம்மலன்வெய்துயிர்த்
தெழுந்துநானுனக்கென்னபிழைத்துள
தழுந்துதுன்பத்தினாயெனச்சாற்றினான்
கொழுந்துவிட்டுமிழ்கின்றகோபத்தான். (௨௨௦)

வேறு. காருளகிலமகளைக்கைவிட்டுப்போவானைக்காத்தப்பின்பு
போனாலுமொருதம்பிபோனவர்கள்வருமவதிபோயிற்றென்று
வானுதவுயிர்விடவென்றமைவானுமொருதம்பியயலேநானு
நியானுமிவ்வரசாள்வனென்னேயிவ்வரசாட்சியினிதேயம்மா. (௨௨௧)

மன்னிற்பின்வளர்கோம்புக்கிருந்துவாழ்ந்தானேபரதனென்னுஞ்
சொன்னிற்குமென்றஞ்சிப்புறத்திருந்தருந்தவமேதொடங்கினுயே
வென்னிற்பின்னுளவினுமென்றேபின்னடிமையுனக்கிருந்ததேது
முன்னிற்பின்னிருந்தவுமொருகுடைக்கீழிருப்பதுவுமொக்குமென்ருன்.

முற்றருக்கொண்டமைந்தனையமுழுவெள்ளிக்கொழுநிறத்துமுளரிச்செங்க
சத்தருக்கனஃதுரைப்பவவனிக்குத்தாட்கின்றதன்மையாவிங் [ட்
கொத்திருக்கலாலன்றேயுலந்தாற்பினிவ்வுலகையுலையவொட்டா
னத்திருக்குங்கெடுமுடனேபுகுந்தானுமரசெரிபோயமைக்கவென்ருன்.

அப்பொழுதினிவ்வுரைசென்றயோத்தியினிவிசைத்தலுமேயரிவையீன்ற
வொப்பெழுதவொண்ணுதகற்புடையாள்வயிறுபுடைத்தலம்வந்தேங்கி
யிப்பொழுதேயுலகிறக்குமியாக்கையினைமுடித்தொழிந்தால்மகனேயென்று
வெப்பெழுதிறலென்னமெலிவுடையாள்கடிதோடிவிலக்கவந்தாள். ௨௨௪

மந்திரியர்தந்திரியர்வளநகரத்தவர்மறையோர்மற்றுஞ்சுற்றச்
சுந்தரியரெனைப்பலருங்கைதலையிற்பெய்திரங்கித்தொடர்ந்துசெல்ல
யிந்திரனேமுதலாயவிமையவருமுனிவருமிறைஞ்சியேத்த
வந்தரமங்கையர்வணங்கவழுதாற்றிப்பரதனைவந்தடர்ந்தாரன்றே. (௨௨௫)

எரியமைக்குமயானத்தையெய்துகின்றகாதலனையிடையேவந்து
விரியமைத்தெருவேவெளிபுறத்தசைந்துவீழ்ந்தொசியமேனிதள்ளச்
சொரியமைப்பதரிதாயமழைக்கண்ணுடேருதலுந்துணுக்கமெய்தாப்
பரிவமைத்தஇருமனத்தானடிதொழுதானவள்புகுந்துபற்றிக்கொண்டாள்.

வேறு.

மன்னிழைத்ததுமைந்தனிழைத்தது
முன்னிழைத்தவிதியின்முயற்சியும்
பின்னிழைத்ததுமென்னிலப்பெற்றியா
லென்னிழைத்தனையென்மகனேயென்ருள். (௨௨௭)

நீயிதென்னினையேனெடுநாடெரி
பாயுமன்னருஞ்சேனையும்பாயுமாற்
றூயவெம்மனவன்றுதனியறந்
தீயின்வீழுமுலகுந்திரியுமால். (௨௨௮)

தருமநீதியின்றற்பயனுவதன்
கருமமேயன்றிக்கண்டிலங்கண்களா
லருமையொன்றுமுணர்ந்திலையரின்
பெருமையூழிதிரியினும்பெருமோ. (௨௨௯)

என்னில்கோடியிராமர்களென்னினு
மன்னவனின்னருளுக்கருகாவரோ
புண்ணியம்மெனும்நின்னுயிர்போயினால்
மண்ணும்வானுமுயிர்களும்வாழுமோ. (உ௩0)

இன்றுவந்திலனேயெனினுமே
யொன்றும்வந்தனையுன்னியுரைத்தசொற்
பின்றுமென்றனைபோற்பிழைத்தானெனிற்
பொன்றுந்தன்மைபுகுந்ததுபோயென்றான். (உ௩௧)

ஒருவன்மாண்டனனென்றுகொண்டுழிவாழ்
பெருமிலைத்தப்பெறலருமின்னுயிர்க்
கருவுமாண்டறங்காணுதியோகலை
தருமநியலதில்லெனுந்தன்மையாய். (உ௩௨)

இறக்கையுஞ்சிலரோகலுமொத்ததால்
பிறக்கையின்கடனென்றுபின்பாசத்தை
மறக்கைகாண்மகனேவலியாவது
துறக்கைதானுமென்றாண்மனத்தூய்மையாள். (உ௩௩)

மைந்தனென்னைமறந்துரைத்தானென
லெந்தையென்னையுமிக்குலச்செய்கையும்
நைந்துபோகவுயிர்விலைச்சிலேன்
முந்துசெய்தசபதமுடிப்பனால். (உ௩௪)

யானுமெய்யினுக்கின்னுயிரீய்ந்துபோய்
வானுளெய்தியமன்னவன்மைந்தனாற்
கானுளெய்தியகாகுத்தற்கேகட
னேனையோர்க்கிதிழுக்கின்வழக்கன்றே. (உ௩௫)

தாய்சொற்கேட்டலுந்தந்தைசொற்கேட்டலும்
பாசத்தன்பிணைப்பற்றறநீக்கலு
மீசற்கேகடனியானஃதிழைக்கிலேன்
மாசற்றேனிதுகாட்டுவன்மாண்டென்றான். (உ௩௬)

என்றுதீயினையெய்தியிரைத்தெழுந்
தொன்றுபூசலிடுமுலகோருட
னின்றுபூசனைசெய்கின்றநேசற்குக்
குன்றுபோனெடுமாருதிகூடினான். (உ௩௭)

ஐயன்வந்தனனாரியன்வந்தனன்
மெய்யின்மெய்யனெனின்னுயிர்விடினு
முய்யுமேயவனென்றுரைத்தூட்புகாக்
கையினாலெரியைக்கரியாக்கினான். (உ௩௮)

ஆக்கிமற்றவரும்மலர்த்தாள்களைத்
தாக்கத்தன்றலைதாழ்த்துவணங்கிக்கை
வாக்கிற்கூடப்புதைத்தொருமாற்றநீ
தூக்கிக்கொள்ளத்தகுமெனச்சொல்லினான். (௨௩௯)

இன்னம்நாழிகையென்னைஞ்சுளதைய
வுன்னைமுன்னம்வர்தெய்தவுரைத்தநா
ளன்னதில்லையெனினடிநாயினேன்
முன்னம்வீழ்ந்திவ்வெரியின்முடிவனால். (௨௪௦)

ஒன்றுதாளுளதன்னடியேன்சொலா
லின்றுதாழ்த்துளநேமிச்சுடர்குலக்
குன்றுதோன்றனவும்மிஅகுன்றமேற்
பொன்றுநீயுமுலகமும்பொய்யிலாய். (௨௪௧)

எங்களையகற்கின்னமுநீருவான்
பங்கயத்துப்பரத்துவன்வேண்டலா
லங்குவைகினனல்லதுநாட்குமோ
விங்குநல்லதொன்றின்னமுங்கேட்டியால். (௨௪௨)

அண்டர்நாதனருளியளித்துள
துண்டொர்போலடையாளமுனக்கது
கொண்டுவந்தனன்கோதற்றசிந்தையாய்
கண்டுகொண்டருள்வாயெனக்காட்டினான். (௨௪௩)

வேறு.

காட்டியமோதிரங்கண்ணிற்காண்டலு
மூட்டியவல்விடமுற்றுமுற்றவார்க்
கூட்டியநன்மருந்தொத்ததாமரோ
வீட்டியவுலகுக்குமிளையவேந்தற்கும். (௨௪௪)

அழுகின்றவாயெலாமார்த்தெழுந்தன
விழுகின்றகண்ணெலாம்வெள்ளமாறிமுன்
றாழுகின்றதலையெலாமுயர்ந்தெழுந்தன
தொழுகின்றகையவாய்க்காலின்சேன்றலை. (௨௪௫)

மோதிரம்வாங்கித்தன்முகத்தின்மேலணைத்
தாதரம்பெறுவதற்காக்கைகயோவென
வோதினர்காணுறவோங்கினன்பெருமூர்
றுதனைமுறைமுறைதொழுதுதுள்ளுவான். (௨௪௬)

ஆதிவெந்துயரலாலருந்தலின்மையா
லூதுறப்பறப்பதாயுலர்ந்தயாக்கைபோ
யேதிலவொருவன்கொலென்னலாயது
மாதிரம்வளர்ந்ததுவயிரத்தோள்களே. (௨௪௭)

அழுஞ்சிரிக்குமனுமனையாழிக்கைகளாற்
றொழுமெழுந்தார்க்கும்வெங்களிதுளங்கலால்
விழுமழிந்தெள்கும்போய்விங்கும்வேர்க்குமக்
குழுவொடுங்குனிக்குந்தன்றடக்கைகொட்டுமால். (௨௪௮)

ஆடுமினாடுமினென்னுமையன்பா
லோடுமினோடுமினென்னுமோங்கிசை
பாடுமின்பாடுமினென்னும்பாவிகாள்
சூடுமின்சூடுமின்றாதன்றோளெனும். (௨௪௯)

வஞ்சனையியற்றியமாயக்கைகையார்
அஞ்சுவரினியெனத்தோளைக்கொட்டுமால்
குஞ்சிதவடிகள்மண்டலங்கள்கூட்டுற
வஞ்சனைக்குன்றுநின்றாடும்பாடுமால். (௨௫௦)

வேதியர்தமைத்தொழும்வேந்தரைத்தொழுந்
தாதியர்தமைத்தொழுந்தன்னைத்தான்றொழு
மேதுமொன்றுணர்ந்திலனிருக்குமிற்குமால்
காதலென்றதுவுமோர்கள்ளிற்றோற்றிற்றே. (௨௫௧)

மறையவர்வடிவுகொண்டணுகவந்தனை
யிறைவரிலொருத்தனென்றெண்ணுகின்றனன்
றுறையெனக்கியாதெனச்சொல்லுசொல்லென்று
னறைகழலனுமனுமறியக்கூறுவான். (௨௫௨)

காற்றினுக்கயல்வந்தகவிக்குலத்துளா
னோற்றனள்வயிற்றின்வந்துதித்தநம்முனாற்
கேற்றிலாவடித்தொழிலேவலாளனேன்
மாற்றினனுருவொருகுராய்க்குமன்னயான். (௨௫௩)

இடித்தொழினாயினேனற்பயாக்கையைக்
கடித்தடந்தாமரைக்கண்ணினோக்கெனப்
பிடித்தபொய்யுருவினைப்பெயர்த்துநீக்கினான்
முடித்தலம்வானவர்நோக்கின்முன்னுவான். (௨௫௪)

வெஞ்சிலையிருவரும்விரிஞ்சன்மைந்தனு
மெஞ்சலிலதிசயமிறவென்றெண்ணினார்
துஞ்சலதாயினுஞ்சேனைதுண்ணென
வஞ்சியதஞ்சனைசிறுவனுக்கையால். (௨௫௫)

ஈங்குநின்றியாமுனக்கிசைத்தமாற்றமத்
தூங்கிருங்குண்டலச்செவியின்சூழ்வர
வோங்கலவாதலிலுலப்பில்யாக்கையை
வாங்குதிவிரைந்தெனமன்னன்வேண்டினான். (௨௫௬)

சுருக்கியவுருவனுந்தொழுதுமுன்னின்ற
வருக்கன்மாமகற்கையனன்பினாற்
பொருக்கெனநிதியமும்புனைபொற்பூண்களு
முருக்கிதழ்மாதருமுறையினல்கினான். (௨௫௭)

கோவொடுசூதற்குலமணிக்குழா
மாவொடும்பரிக்குலம்வாவுதேரினந்
தாவிருமித்தகற்றானிதன்னுட
னேவருஞ்சிலைவலான்யாவுநல்கினான். (௨௫௮)

இளவலைக்கண்ணனுக்கெதிர்கொளென்றுநம்
வளமதிலயோத்தியில்வாழுமாக்களைக்
கிளையொடுமேமெனக்கிளர்த்தியெங்கணு
மளையொலிமுரசினமறைவிப்பாயென்றான். (௨௫௯)

தோரணம்நட்டுமேற்றுகில்பொதிந்துநற்
பூரணபொற்குடம்பொலியவைத்துளை
வாரணமிவுளிதேர்வரிசைதான்வரச்
சேரணியணிகெனச்செப்புவாயென்றான். (௨௬0)

பாத்தவனுறைவிடத்தளவும்பைம்பொனின்
ரத்தொகைமதிற்புறத்திறுதிதேர்தர
வாத்தருதாளமென்பந்தர்வைத்துவான்
புரத்தையும்புதுக்குகபுகுதிபோயென்றான். (௨௬௧)

என்றலுமவனடியிறைஞ்சியெய்தியக்
குன்றுறழ்வரிசிலைக்குவவுத்தோளினு
னன்றுணர்கேள்வியினவையில்செய்கையன்
றன்றுணைச்சுமந்திரற்கறியச்சாற்றினான். (௨௬௨)

அவ்வுரைகேட்டலுமறிவின்வேலையான்
கவ்வையிலன்பினுக்களிக்குஞ்சிந்தையான்
வெவ்வெயில்புரைமணிவீதியெங்கணு
மெவ்வமிலறைபறையெற்றுகென்றிட. (௨௬௩)

வானையுந்திசையையுங்கடந்தவாழ்விகழ்
கோனையின்றெதிர்கொளக்கோலமாநகர்த்
தானையுமாசருமெழுகதானென
யானையின்வள்ளுவர்முரசமெற்றினார். (௨௬௪)

முரசொலிகேட்டலுமுழங்குமாநக
ரரசருமாந்தருமந்தணாளருங்
கரைசெயலரியதோருவகைகைதரத்
திரைசெறிகடலெனவெழுந்துசென்றனர். (௨௬௫)

அனகனையெதிர்கொளென்றறைந்தபேரிசைத்
கனகல்கூர்ந்தவர்கைப்பட்டென்னவுஞ்
சனகனார்க்கெனமுன்னஞ்சாற்றிய
வனைகடிபேரியுமொத்தவாமரோ. (உ௬௬)

அறுபதினாயிரமக்குரோணியென்
றிறுதிசெய்சேனையுமேனைவேந்தருஞ்
செறிநகர்மாந்தருந்தெரிவைமார்களு
முறுபொருளெதிர்ந்தெனவுவந்துபோயினார். (உ௬௭)

அன்னையர்மூவருமமரர்போற்றிடப்
பொன்னினிற்சிவிகையினூர்ந்துபோயபின்
றன்னிகர்முனிவருந்தமருஞ்சூழ்தர
மன்னவன்மாருதிமலர்க்கைபற்றுறா. (உ௬௮)

திருவடியிரண்டுமேசெம்பொன்மவுலியா
யிருபுறஞ்சாமரையிரட்டவேழ்கடல்
வெருவருமுழக்கெனவேழமார்த்தெழப்
பொருவரும்வெண்குடைநிழற்றப்போயினான். (உ௬௯)

எல்லவன்மறைந்தனனென்னையாருடை
வில்லினையெதிர்கொளப்பரதன்மீச்செல்வா
னல்லியங்கமலமேயனையதாள்களிற்
கல்லதர்சுடுந்தகைகதிரினென்னவே. (உ௭0)

அவ்வழிமாருதியங்கைபற்றிய
செவ்வழியுள்ளத்தான்றிருவினாயகன்
வெவ்வழியுறைந்தவச்செயலெலாம்விரித்
திவ்வழியெமக்குநீயியம்புவாயென்றான். (உ௭௧)

என்றலுமாருதிதொழுதிங்கெம்பிரான்
மன்றலர்தொடையினாயயோத்திமாநகர்
நின்றதுமணவினைநிரப்பிமீண்டுதான்
சென்றதுநாயினேன்செப்பவேண்டுமோ. (உ௭௨)

சித்திரகூடத்தைத்தீர்ந்தபின்சிரம்
பத்துடையவனுடன்விளைத்தபண்புதா
னித்தலையடைந்ததேயிறுதியாமென
வித்தகத்தூதனும்விரிக்குஞ்சிந்தையான். (உ௭௩)

குன்றுறழ்வரிசிலைக்குருசிலெம்பிரான்
றென்றிசைச்சித்திரகூடந்தீர்ந்தபின்
வன்றிறல்விராதனைமடித்துமாதவர்
துன்றியதண்டகவனத்துட்டுன்னினான். (உ௭௪)

ஆன்றுறைதபோதனராங்கர்க்காற்றலே
கின்னினர்தவத்துறைநீதியோவெனத்
தீங்குசெய்தவர்களைச்செகுத்தநின்னம்பிர்
வாங்குமின்மனத்துயர்வாய்மையாலென்றான். (உ௭௫)

ஆறுகாலாண்டவணமைதியப்புறத்
தீதிலாமுனிவரரேயவாணையால்
மாதிலாத்தமிழ்முனிவனைத்தைநண்ணினு
குதிலாமுனிவரனுவந்துமுன்வர. (உ௭௬)

குடங்கையில்வாருதியனைத்துங்கொண்டவன்
றடங்கணன்றனையெதிர்தழுவிச்சாபமுங்
கடுங்கணைப்புட்டிலுங்கவசந்தானுமற்
றிடம்படுசிலைகயுஞ்சேரவீய்ந்தனன். (உ௭௭)

அப்புறத்தெருவையினாலைசக்கண்ணுருந்
துப்புறச்சிவந்தவாய்த்தோகைதன்னுடன்
மெய்ப்புகட்டம்பியும்வீரன்றானும்போய்
மைப்பொழிலுறுபஞ்சவடியில்வைகினான். (உ௭௮)

வேறு.

பல்பகலிறந்தபின்றைப்பாதகவரக்கிதோன்றி
மெல்லியலிடையிலுனைவெருண்டெழியிளையவீர
னல்லியதிருவைத்தேற்றியவளுடைச்செவியுமூக்கு
மல்லியமுலையுங்கொய்தான்மதித்தவள்காற்குச்சொன்னாள். (உ௭௯)

காரொளிதிரிசிராவுங்கடியவனுடனாலுங்காந்தி
யெரியுமன்றனலேயொப்பாரொமூர்துவெஞ்சேனையோடும்
விரவினாயன்செங்கைவில்லினைநோக்குமுன்போ
ரெரிதழற்பஞ்சியொத்தாராக்கியுமிலங்கைபுக்காள். (உ௮௦)

இருபதுதடக்கையான்மாட்டிசைத்தலுமெழுந்துபொங்கி
யொருபதுதிசையுமுட்கவஞ்சகவுழையொன்றேவித
தருபதஞ்சமைந்தமுக்கோற்றுபதர்வடிவங்கொண்டு
திருவினையிலத்தோடேந்தித்தென்றிசையிலங்கைபுக்கான். (உ௮௧)

போகின்றபோதுன்காத்தசடாயுவைப்புரட்டிப்போயவ்
வேகின்றவுள்ளத்தானைவெஞ்சிறையதனின்வைத்தா
னேகின்றவஞ்சமாமாரீசற்கொன்றிளவலோடு
பாகின்றதேர்த்தியன்னல்தந்தையைப்பரிவிற்கண்டான். (உ௮௨)

அன்னவன்றனக்குவேண்டுமருங்கடன்முறையினாற்றி
கன்னுதறன்னைத்தேடித்தென்றிசைநடக்குமையன்
மன்னியகவந்தன்றன்னையுயிரொடுஞ்சாபமாற்றித்
தன்னையேமறப்பிலாதசபரிபூசனையுங்கொண்டான். (உ௮௩)

அன்னவன்றனக்குவேண்டுமருங்கடன்முறையினாற்றி
நன்றுதன்றன்னைத்தேடித்தென்றிசைநடக்குமையன்
மன்னியகவந்தன்றன்னையுயிரொடுஞ்சாபமாற்றித்
தன்னையேமறப்பிலாதசபரிபூசனையுங்கொண்டான். (௨௮௪)

ஆங்கவடனதுசொல்லாலருக்கன்மாமகனையெய்திப்
பாங்குறநட்டுவாலிபருவரல்கெடுப்பனென்று
வோங்கியமரமும்வாலியுரமுமூடுருவவெய்திட்
டாங்கவன்றனக்குச்செல்வமரசொடுமருளியீந்தான். (௨௮௫)

காலமாமாரிநீங்கக்கவையறநாடிடவன்காத்து
நீலன்மாமயிந்தன்சாம்பன்சதவலிபனசனீடும்
வாலிமாமைந்தனென்றிவ்வானரத்தலைவராய
கூலவான்சேனைசூழவடைந்தனனெங்கள்கோமான். (௨௮௬)

எழுபதுவெள்ளத்தாற்றகுரங்கினமெழுந்துபொங்கி
யழுவநீர்வேலையென்னவடைந்துழியருக்கன்மைந்தன்
றழுவியதிசைகடோறுந்தனித்தனியிரண்டுவெள்ளம்
பொழுதிறைதடாதுமீளப்போக்கினன்றிருவைநாடி. (௨௮௭)

தென்றிசையிரண்டுவெள்ளஞ்சேனையுமுடன்கொண்டேகி
வன்றிறற்சாம்பனோடுவாலிசேயனோடுமையன்
குன்றிடையிலங்கைபுக்குத்திருவினைக்குறித்துமீண்ட
பின்றைவந்தளக்கர்வேலைப்பெரும்படையிறுத்ததன்றே. (௨௮௮)

அறிவினுக்கறிவுபோல்வான்வீடணனலங்கற்றோளான்
செறிபுயத்தரக்கன்றம்பிதிருவினைவிடாதுகாப்பா
னிறுதியுற்றதுநின்வாணாளெனவவனுலைப்பச்சீறிக்
கறுவுறப்பெயர்ந்துபோந்துகருணையான்சரணம்பூண்டான். (௨௮௯)

ஆங்கவற்கபயநல்கியரசொடுமுடியுமீந்து
பாங்கினல்வருணன்றன்னையழைத்திடப்பதைப்பிலாது
தாங்கினன்சிறிதுபோதுதாமரைநயனஞ்சேப்ப
வோங்கிநீரேழுமன்னுலகமும்வெந்ததன்றே. (௨௯0)

மற்றவனபயமென்னமலர்ச்சரண்கொடுத்தவேலை
வெற்றிவானரர்கள்பொங்கிவெற்பினால்வேலைவேலை
பெற்றிடவியற்றிநீசர்பிறங்கொளியிலங்கைபுக்குப்
பற்றினர்சுற்றியார்த்தார்வானவர்பயங்கடீர்த்தார். (௨௯௧)

மலையினையெடுத்ததோளுமதமலைதிளைத்தமார்பும்
தலையொருபத்துஞ்சிந்தித்தம்பிதன்றோளுந்தாளுங்
கொலைதொழிலரக்கரானார்குலத்தொடுந்தலத்துவீழச்
சிலையினைவளைவித்தையன்றேவர்களிடுக்கண்டீர்த்தான். (௨௯௨)

இலக்குவன்பகழியொன்றாலிந்திரசித்தென்றோதும்
விலக்கரும்வலத்திறைவனிளைஞருங்கிளையும்வீழ்ந்தார்
மலக்கமுண்டுழலுந்தேவர்மலர்மழைதூவியார்த்தார்
உலக்குநர்குழுக்கடோறுமுடற்குறையாடல்கண்டார். (௨௯௩)

தேவருமுனிவர்தாமுஞ்சித்தருந்தெரிவைமாரு
மூவகையுலகுளோருந்தனித்தனிபுகழ்ந்துமொய்ப்பப்
பூவைபோனிறத்திறைவன்விடைப்புலவர்கோமாற்
றியாவையுமியம்பிமாண்டோர்க்கியற்றுதிகடன்களென்றான். (௨௯௪)

நான்முகன்விடையையூருநாரியோர்பாகத்தண்ணல்
மான்முகன்முதலாயுள்ளவானவர்தொழுதுபோற்ற
ஆன்முகக்கெழுவுவேலாயும்பர்நாயகியைச்சீதித்
தேன்முகமலருந்தாரானெரிசொலச்சீற்றந்தீர்ந்தான். (௨௯௫)

மெய்யிருக்குயிராயிந்தவேந்தர்கோன்விமானத்தெய்த
வையறுமிளையகோவுமன்னமுமடியில்வீழக்
கையினாற்பொருந்தப்புல்லிக்கண்ணினீர்க்கலசமாட்டிச்
செய்வரமருளுகென்றான்றிருவிளையகனுங்கொண்டான். (௨௯௬)

என்னுடைக்கருணைதன்னாலீன்றெடுத்தென்னைத்தந்த
வன்னையுமகனுமுன்போலாகெனவருளினீய்ந்து
மன்னவன்போனபின்றைவானரம்வாழ்வுகூரப்
பொன்னெனநாட்டினுள்ளார்வரம்பலவழங்கிப்போனார். (௨௯௭)

வெள்ளமோரேழுபத்துமிலங்கலும்வீராகி
யுள்ளவாறெழுபத்தேழுகோடியுமொற்றையாழி
வள்ளறன்மகனுமுள்ளமகிழ்வுறவிமானமீய்ந்தா
னெள்ளலிலாதசீர்த்திவீடணனிலங்கைவேந்தன். (௨௯௮)

ஆரியன்பின்னைமின்னையன்பினானினைந்துகாதற்
சூரியன்மகனுந்தொல்லைத்துணைவருமிலங்கைவேந்தும்
பேரியற்படையுஞ்சூழப்பெண்ணிருக்கரசியோடுஞ்
சீரியவிமானத்தேறிப்பரத்துவனிருக்கைசேர்ந்தான். (௨௯௯)

அன்பினாலென்னைநின்பாலாழியுங்காட்டியான்ற
துன்பெலாந்துடைத்தியென்றேதுரந்தனனென்றுதோன்றி
முன்பினாலியன்றதெல்லாமொழிந்தனன்முதனீர்தாவி
வன்பினாலிலங்கைமுற்றுமெரிக்குணவாகவைத்தான். (௩௦௦)

காலின்மாமதலைசொல்லப்பரதனுங்கண்ணீர்சோர
வேலிமாமதில்கள்சூழுமிலங்கையில்வேட்டைகொண்ட
நீலமாமுகில்பின்போனானொருவனானின்றுநைவேன்
போதுமாமிவைகள்கேட்பேன்புகழுடைத்தடிமைமன்னே. (௩௦௧)

என்றவனிரங்கியேங்கியிருகணுமருவிசோர
வன்றிறலநுமன்செங்கைவலக்கையாற்பற்றிக்காலிற்
சென்றவனிருளினூடுசெறிபுனற்கங்கைசேர்ந்தான்
குன்றினைவலஞ்செய்தேரான்குணகடற்றோன்றுமுன்னர். (௩௦௨)

இராவணவேட்டைபோய்மீண்டெம்பிரானயோத்தியெய்தித்
தராதலமகளும்பூவிற்றையலுமகிழச்சூடு
மராவுபொன்மவுலிக்கேய்ந்தசிகாமணிகுணபாலண்ணல்
விராவுற்றெழுந்தாலென்னவெய்யவனுதயஞ்செய்தான். (௩௦௩)

காலைதந்திருத்தபின்னர்க்கடன்முறைகமலக்கண்ணன்
கோலநீள்கழல்களேத்திக்குரக்கினத்தரசைநோக்கிச்
சாலவுங்கவிகளன்றோதவதிற்றின்றமதுவாய்மை
மூலமேயுணரினுந்தமொழிக்கெதிர்மொழியுமுண்டோ. (௩௦௪)

எழுபதுவெள்ளஞ்சேனைவானரரிலங்கைவேந்தன்
முழுமுதற்சேனைவெள்ளங்கணக்கிலமுடுகித்தோன்ற
லழுவநீர்வேலைசுற்றுமரவமின்றாகவற்றோ
விழுமிதெம்பிரான்வந்தானென்றுரைத்ததுவீரவென்றான். (௩௦௫)

ஓசனையிரண்டேயன்னபரத்துவனுறையுஞ்சோலை
வீசுதெண்டிரையிற்றூயவெள்ளமோரேழுபத்து
மூசியபழுவமின்னேகடப்பனமூரற்றலின்றிப்
பேசியதமையுமையனெங்குளன்பெருமவென்றான். (௩௦௬)

பரதனஃதுரைத்தலோடும்பணிந்துமாருதியுந்தானை
விரதமாதவன்றன்னோடும்விண்ணுளார்தமையும்வென்ற
வரதனுண்டளித்துவந்தவரத்தினான்மலருந்தேனுஞ்
சரதமேமாந்திமாந்தித்துயின்றதுதானையென்றான். (௩௦௭)

வானவர்கொடுத்துவந்தவரத்தினான்மதுவிற்காலுந்
தேனொடுகிழங்குங்காயுங்கனிகளும்பிறவுந்தெற்றிக்
கானகம்பொலிதலாலேகவிக்குலமதனைமாந்தி
யானனமலர்ந்ததில்லையாணைநீமுனியலென்றான். (௩௦௮)

இனியொருகணத்தினெங்கோனெழுந்தருடன்மையீண்டு
பனிவருங்கண்ணினாலேபாரெனப்பணிந்தானிப்பால்
முனிதனதிடத்துவந்தமுளரியங்கண்ணன்வண்ணக்
குனிசிலைக்குரிசில்செய்ததிற்றெனக்குணிக்கலுற்றாம். (௩௦௯)

அருந்தவன்சுவைகளாறோடமுதினிதளிப்பவையன்
கருந்தடங்கண்ணியோடுங்கிளைகளுந்துணைவரோடும்
விருந்தினிதருந்திநின்றவேலையின்வேலைபோலும்
பெருந்தடந்தானையோடுங்கிராதர்கோன்பெயர்ந்துவந்தான். (௩௧௦)

தொழுதனன்மனமுங்கண்ணுங்களிக்கினன்குழவோடி
யழுதனனலமன்னவடித்தலமதலின்விழ்ந்தான்
றழுவினனெடுத்துமார்பிற்றம்பியைத்தழுவுமாபோன்
வழுவியவலியதன்றேமக்களுமனையுமென்றான். (௩௧௧)

அருளுளனனுனாயேற்கவையெலாமரியவாய
பொருளலவின்னனீக்காப்புணர்ப்பினுற்றுயர்ந்துபோந்து
தெருடருமினியவிரன்செய்வனசெய்கலாது
மருடருமனத்தினேனுக்கினிதன்றேவாழ்வுமன்றே. (௩௧௨)

ஆயனபிறவும்பன்னியமுங்குவான்றன்னையைய
நீயிவையுரைப்பதென்றேபரதனினிவேறுண்டோ
போயினிதிருத்தியென்னப்புளிஞர்கோனிளவல்பொற்றாள்
மேயினன்வணங்கியன்னவிளமலர்த்தாளின்வீழ்ந்தான். (௩௧௩)

தொழுதுநின்றவனைநோக்கித்துணைவர்கடமையுநோக்கி
முழுதுணர்கேள்வியாளன்மொழிகுவான்முதுநீர்க்கங்கை
தழுவிருகரைக்குநாதன்றுயினுமுயிர்க்குநல்லான்,
வழுவிலாவெயினர்வேந்தன்குகனெனும்வள்ளலென்றான். (௩௧௪)

அண்ணலஃதுரைத்தலோடுமரிகுலத்தரசனாதி
நண்ணியதுணைவரியாருமினிதுறத்தழுவிக்கட்டார்
கண்ணகன்ஞாலமெல்லாங்கங்குலாற்பொதிவான்போல
வண்ணமால்வரைக்குமப்பான்மறைந்தனனிரவியென்பான். (௩௧௫)

அலங்கலந்தொடையினுனுமாதியின்கடன்களாற்றிப்
பொலன்குழைமயிலினோடுந்துயிலுறப்புணரிபோலு
மிலங்கியசேனைசூழவிளவலுமெயினர்கோனுங்
கலங்கலர்காத்துநின்றார்கதிரவனுதயஞ்செய்தான். (௩௧௬)

கதிரவனுதயகாலக்கடன்கழித்திளவலோடு
மதிர்பொலன்கழலினுனுமருந்தவன்றன்னையேத்தி
விதிதருவிமானமேவிவிளங்கிழையோடுங்கொற்ற
முதிர்தருகருணையோடுமுனிமனந்தொடரப்போனான். (௩௧௭)

தாவிவான்படர்ந்துமானந்தடையிலதேகும்வேலைத்
திவியகனியவாகிச்செருக்கியகாமச்செவ்வி
யோவியமுயிர்பெற்றென்னவும்பர்கோனகருமொவ்வா
மாவியலயோத்திருமதிற்புறந்தோன்றிற்றன்றே. (௩௧௮)

பொன்மதிற்கிடக்கைசூழப்பொலிவுடைநகரந்தோன்ற
நன்விதிக்கிழவர்தம்மைநோக்கியஞானமூர்த்தி
சொன்மதித்தொருவராலுஞ்சொற்படாவயோத்திதோன்றிற்
றென்னலுங்கரங்கள்கூப்பியெழுந்தனரிறைஞ்சினின்றார். (௩௧௯)

வேறு. அன்னதோரளவையின்விசும்புளாயிரம்
தன்னிருங்கதிரவர்தோன்றினாரெனப்
பொன்னணிபுட்பகப்பொருவின்மானமு
மன்னவர்க்கரசனும்வந்துதோன்றினார். (௩௨0)

அண்ணலேகொண்டியாலலர்ந்ததாமரைக்
கண்ணனும்வானரக்கடலுங்கற்புடைப்
பெண்ணருங்கலமுமின்பின்புதோன்றிய
வண்ணவிற்குமரனும்வருகின்றார்களே. (௩௨௧)

ஏழிரண்டாகியவுலகமேழினும்
பாழ்புறங்கிடப்பதுபடியின்றாயதோர்
சூழொளிமானத்துத்தோன்றுகின்றன
னூழியோனென்றுகொண்டுணர்த்துங்காலையே. (௩௨௨)

பொன்னொளிமேருவின்பொருப்பிற்புக்கதோர்
மின்னொளிமேகம்போல்வீரன்றோன்றலு
மன்னெதிர்வருவர்களார்ப்பிராவணன்
றென்னகர்க்கப்புறத்தளவுஞ்சென்றதால். (௩௨௩)

ஊனுடையாக்கைவிட்டுண்மைவேண்டிய
வானுடைத்தந்தையார்வரவுகண்டெனக்
கானிடைப்போக்கியகமலக்கண்ணனைத்
தானுடையுயிரினைத்தம்பிநோக்கினான். (௩௨௪)

கெட்டவான்பொருள்வந்துகிடைப்பமுன்புதாம்
பட்டவான்படரொழிந்தவரிற்பையுணோய்
சுட்டவான்மானவற்றெழுதருன்னியே
விட்டனன்மாருதிகாத்தைமேன்மையான். (௩௨௫)

அக்கணத்தனுமனுமவனின்றேகியத்
திக்குறுமானத்தைச்செவ்வனெய்தியச்
சக்கரத்தண்ணலைத்தாழ்ந்துமுன்னின்றா
னுக்குறுகண்ணினீரொழுகுமார்பினான். (௩௨௬)

உருப்பவிர்கனலிடையொழுகலுற்றவப்
பொருப்பவிர்தோளனைப்பொருந்திநாயினேன்
திருப்பொலிமார்பநின்வரவுசெப்பினே
னிருப்பனவாயினவுலகம்யாவையும். (௩௨௭)

தீவினையாம்பலசெய்யத்தீர்விலா
வீவினைமுறைமுறைவிளையமெய்ம்மையாய்
நீயவைதடைத்துநின்றளிக்கநேர்ந்ததா
லாயினுமன்பினாயான்செய்மாதவம். (௩௨௮)

என்றுரைத்தனுமனிவிருகப்புல்விறு
னென்றுரைத்திருப்பதெனுனக்குமுர்ரைக்கு
பின்றனைத்தந்தைக்கும்யாய்க்குமென்றனன்
குன்றினைத்தவைவெனக்குலவுதோளினான். (௩௨௧)

ஈடுறுவானுனைவிராமன்சேவடி
சூடியசென்னியன்றொழுதகையின
னாடியிருண்டெனவுலர்ந்தயாக்கையன்
பாடுறுபெரும்புகட்பரதன்றோன்றினான். (௩௩0)

தோன்றியபாதனைத்தொழுதுதொல்லறஞ்
சான்றெனநின்றவனிளையதம்பியை
வான்றுடர்பேராசாண்டமன்னனை
யின்றவள்பகைஞனைக்காண்டியிண்டென்றான். (௩௩௧)

காட்டினன்மாருதிகண்ணிற்கண்டவத்
தோட்டலர்தெரியலானிலைமைசொல்லுங்கா
லோட்டியமானத்துளுயிரிற்றந்தையார்
கூட்டுருக்கண்டனன்றன்மைகூடினான். (௩௩௨)

வேறு.

அவ்வையினயோத்திவைகுஞ்சனமொடுமெக்குரோணி
உவ்வையிருபத்தாயிரமொடுந்தாயரோடு
மிவ்வையினடைந்துளோரைக்காணபனென்றிராமனுன்னச்
செவ்வையினிலத்தைவந்துசேர்ந்ததுவிமானந்தானும். (௩௩௩)

வேறு.

எவ்வெவ்வுயிர்கட்குமிராமனேறிய
திவ்வியபுட்பகமிலத்தைச்சேர்தலு
மவ்வவர்க்கனுகியவமார்நாட்டியக்கு
மெவ்வமின்மானமென்றிசைக்கலாயதால். (௩௩௪)

வேறு.

தாயருக்கன்றுசார்ந்தகன்றெனுந்தகையனானான்
மாயையிற்பிரிந்தோர்க்கெல்லாமனேலயம்வந்ததொத்தா
ருய்வரியார்க்குக்கண்ணுளாடிரும்பாவையானு
னேய்வறத்துலர்ந்தயாக்கைக்குயிர்புகுந்தாலுமொத்தான். (௩௩௫)

எளிவருமுயிர்கட்கெல்லாமீன்றதாயெதிர்ந்ததொத்தா
னளிவருமனத்தோர்க்கெல்லாமரும்பதவமிர்தமானு
னொளிவரப்பிறந்ததொத்தானுலகிலுக்கொண்கணூர்க்குத்
தெளிவருகளிப்புச்செய்யுந்தேம்பிழிதேறலொத்தான். (௩௩௬)

ஆவியங்கவனலான்மற்றின்மையாலனையதீங்கக்
காவியங்கழனிநாடும்நகரமுங்கலந்துவாழு
மாவியலொண்கணூருமைந்தரும்வள்ளலெய்த
வோவியமுயிர்பெற்றுலேயொத்தனருணர்வுபெற்றார். (௩௩௭)

சுண்ணமுஞ்சாந்துநெய்யுஞ்சரிவளைமுத்தம்பூவு
மெண்ணெயுங்கலினமாவிலாழியுமெண்ணில்யானை
வண்ணவார்மதமுந்நீருமான்மதந்தழுவுமாதர்
கண்ணவாம்புனலுமோடிக்கடலையுங்கடந்ததன்றே. (௩௩௮)

அனைவருமினையராகியலடைந்துழியருளின்வேலை
தனையினிதளித்ததாயர்மூவருந்தம்பிமாரும்
புனையுருன்முனிவன்றானும்பொன்னணிவிமானத்தேற
வனைகழற்குரிசில்முந்திமாதவன்றாளில்வீழ்ந்தான். (௩௩௯)

எடுத்தனன்முனிவன்மற்றவிராமனையாசிகூறி
யடுத்தனனன்பரீங்கவனைத்தனைத்தன்புகூர்ந்து
விடுத்துழியினையவீரன்வேதியன்றாளில்வீழ
வடித்தநூன்முனியுமுன்போல்வாழ்த்தினனாசிகூறி. (௩௪௦)

கைகயன்றனையன்முந்தக்காலுறப்பணிந்துமற்றை
மொய்குழலிருவர்தாளுமுறைமையின்வணங்குஞ்செங்க
ணையனையவர்கடாமுமன்புறத்தழுவித்தத்தஞ்
செய்யதாமரைக்கணீரான்மஞ்சனத்தொழிலுஞ்செய்தார். (௩௪௧)

அன்னமுமுன்னர்ச்சொன்னமுறைமையிலடியில்வீழத்
தன்னிகரிலாதவென்றித்தம்பியுந்தாயர்தங்கள்
பொன்னடித்தலத்தில்வீழத்தாயரும்பொருந்தப்புல்லி
மன்னவர்க்கரசனீயேவாழியென்றாசிசொன்னார். (௩௪௨)

சேவடியிரண்டுமென்பினடியுறையாகச்சேர்த்திப்
பூவடிபணிந்துவீழ்ந்தபரதனைப்பொருமிவிம்மி
நாவிடைபெயர்ப்பதொன்றுமுணர்ந்திலனின்றநம்பி
யாவியுமுடலுமொன்றத்தழுவினனழுதுசோர்வான். (௩௪௩)

தழுவினனின்றகாலைத்தத்திவீழருவிக்காலும்
முழுமலர்க்கண்ணீர்மாரிவெள்ளத்தான்முருகற்செவ்வி
வழுவுறப்பின்னிமூசுமாசுண்டசடையின்மாலை
கழுவினனுச்சிமோந்துகன்றுகாண்கறவையன்னான். (௩௪௪)

அனையதோர்காலத்தம்பொற்சடைமுடியடியதாகக்
கனைகழலமரர்கோமாற்கட்டவற்படுத்தகாளை
துனைபரிகரிதேரூர்தியென்றிவைபோலத்தோலின்.
வினையுறுசெருப்புக்கீய்ந்தான்விரைமலர்த்தாளின்வீழ்ந்தான். (௩௪௫)

ஊடுறுகமலக்கண்ணீர்திசைதொறுஞ்சிவிறியோடத்
தாடொடுதடக்கையாரத்தழுவினன்றனிமைநீங்கிக்
காடுறைந்துலைந்தமெய்யோகையுறுகவலையூர
நாடுறைந்துலைந்தமெய்யோநைந்ததென்றுலகளைய. (௩௪௬)

மூவர்க்குயிளையவள்ளன்முடிமிசைமுகிழ்த்தகையன்
றேவர்க்குத்தேவன்றானுஞ்செறிகழலிணைவருளும்
பூவர்க்கம்பொழிற்றவிழ்ந்தானெடுத்தனர்பொருந்தப்புல்லி
வாலிக்குளன்னமன்றன்மலரடித்தலத்தவிழ்ந்தான். (௩௪௭)

பின்வினைக்குறிறன்னைப்பெருங்கையால்வாங்கிவீங்குந்
தன்வினைத்தோள்களாரத்தழுவியதம்பிமாருக்
கின்றுயிர்த்துணைவர்தம்மைக்காட்டினனிருவர்தாமு
மன்றுயிர்க்குவமைகூரவந்தவர்வணக்கஞ்செய்தார். (௩௪௮)

குரக்கினத்தாசைசேயைக்குமுதனைச்சாம்பன்றன்னைச்
செருக்கிளர்நீலன்றன்னைமற்றுமத்திறத்தினோரை
யாக்கருக்காசைவெவ்வேறடைவினின்முதன்மைகூறி
மருக்கமிழ்தொடையின்மாலைமார்பினன்பரதனின்றன். (௩௪௯)

மந்திரச்சுற்றத்துள்ளார்தம்மொடும்வயங்குதானைத்
தந்திரத்தலைவரோடுந்தமரொடுந்தரணியாளுஞ்
சிந்துரக்களிறுபோல்வாரெவரொடுஞ்சேனையோடுஞ்
சுந்தரத்தடந்தோள்வென்றிச்சுமந்திரன்றொன்றினுல். (௩௫௦)

அழுகையுமுவகைதானுந்தனித்தனியமர்செய்தேறத்
தொழுதனனெழுந்துவிம்மிச்சுமந்திரனிற்றலோடுந்
தழுவினனிராமன்மற்றைத்தம்பியுமனையநீரான்
வழுவிலியுளதன்றிந்தமானிலக்கிழத்திக்கென்றான். (௩௫௧)

உரைசெயிலுலகமுண்டான்மணியணியுதரமொவ்வாக்
கரைசெயலரியவேதாருறமுனிகையுமொவ்வா
விரைசெறியலங்கன்மாலைப்புட்பகவிமானமென்றென்
றுரைசெய்துவானுளோர்களொண்மலர்தூவியார்த்தார். (௩௫௨)

அசனியின்குழுவுமாழியேழுமொத்தார்த்ததென்ன
விசையுறுமுரசம்வேதத்தொகையுமவ்விளிகொள்சங்கு
மிசையுறுகுரலுமேற்றினரவமுமெழுந்துபொங்கித்
திசையுறச்சென்றுவானோரந்தரத்தொலியிற்றீர்ந்த. (௩௫௩)

அவ்வையின்விமானந்தாவியந்தரத்தயோத்திநோக்கிச்
செவ்வையிற்படரலுற்றசெகதலமடந்தையோடு
மிவ்வுலகத்துளோர்களிந்திரற்குவமைகூரக்
கவ்வையினேகுமென்றநீர்மையைக்கடுக்குமன்றே. (௩௫௪)

வேறு. ஆனதோரளவையினமரர்கோனொடும்
வானவர்திருநகர்வருவதாமென
மேவிறைவானவர்வீசுபூவொடுந்
தானுயர்புட்பகம்நிலத்தைச்சார்ந்ததால். (௩௫௫)

மீட்சிப்படலம்-முற்றிற்று. ஆ திருவிருத்தம்-௪௨௩௩.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

நம்பியப்பரதனோடுநந்தியம்பதியைநண்ணி
வம்பலர்சடையுமாற்றிமயிர்வினைமுற்றிமற்றத்
தம்பியரோடுந்தானுந்தண்புனல்படிந்தபின்ன
ரும்பருமுவகைகூரவொப்பனையொப்பச்செய்தார். (௧)

பிருதியின்றிசையிற்றோன்றுநந்தியம்பதியைநீங்கிக்
குருதிகொப்புளிக்கும்வேலோன்கொடிமதிலயோத்திமேவச்
சுருதியொத்தனையவெள்ளைத்துரகதக்குலங்கள்பூண்டு
பருதியொத்திலங்கும்பைம்பூண்பருமணித்தேரினானான். (௨)

ஊழியினிறுதிகாணும்வலியினனுயர்பொற்றேரி
னேழுயர்மதமாவன்னவிலக்குவன்கவிகையேந்தப்
பாழியமற்றத்தம்பிபாணிறக்கவரிபற்றப்
பூழியையடக்குங்கண்ணீர்ப்பரதன்கோல்கொள்ளப்போனான். (௩)

வீடணக்குருசில்மற்றைவெங்கதிர்ச்செல்வன்வெற்றிக்
கோடணைக்குன்றமேறிக்கொண்டறேர்மருங்குபோற்றத்
தோடணைமவுலிச்செங்கண்வாலிசேய்ஆசுசெல்லச்
சேடனைப்பொருவும்வீரமாருதிபின்புசென்றான். (௪)

அறுபத்தேழமைந்தகோடியானைமேல்வரிசைக்கான்ற
திறமுற்றசிறப்பராகிமானிடச்செவ்விவீரம்
குறுகுற்றவயவருச்சிபிறங்குவெண்குடையர்செச்சை
மறுவற்றவலங்கன்மார்பர்வானரத்தலைவர்போனார். (௫)

எட்டமையிருத்தபத்தினேழ்பெருவளாகவேந்தர்
பட்டம்வைத்தமைந்தநெற்றிப்பகட்டினர்பைம்பொற்றேரர்
வட்டவெண்குடையர்வீசுசாமரைமருங்கர்வானைத்
தொட்டவெஞ்சோதிமவுலிச்சென்னியர்தொழுதுசூழ்ந்தார். (௬)

வானரமகளிரெல்லாம்வானரமகளிராய்வந்
தூனமில்பிடியுமொண்டார்ப்புரவியும்பிறவுமூர்ந்து
மீனினமதியைச்சூழ்ந்ததன்மையின்விரிந்துசுற்றப்
பூனிறவிமானந்தன்மேன்மிதிலைநாட்டன்னம்போனாள். (௭)

தேவருமுனிவர்தாமுந்திசைதொறுமுறையிற்சிந்த
வோவலின்மாரியேய்ப்பவெங்கணுமுதிர்ந்துவீங்கிக்
கேவலமலரால்வேறோரிடமின்றிக்கிடந்தவாற்றாற்
பூவெனுநாமமன்றிவ்வுலகிற்குப்பொருந்திற்றன்றே. (௮)

கோடையில்வறந்தமேகக்குலமெனப்பதினாலாண்டு
பாடுறூஉமதஞ்செலாதபணைமுகப்பருமயானை
காடுறைந்தண்ணலெய்தக்காத்திருந்துகுத்தவாரி
யோடினவோடிற்றுள்ளங்களிதிறந்துடைந்தவேபோல். (௯)

ஆரகத்தார்புரவியெல்லாமுல்லையர்சொற்பெற்றென்ன
யரவப்போர்மேகமென்னவாலித்தமரங்களான்ற
பருவத்தாற்பூத்தவென்னப்பூத்தனபகையிற்றீரும்
புருவத்தார்மேனியெல்லாம்பொன்னிறப்பசலைபூத்த. (௧௦)

ஆயதோராழியில்செல்வத்தன்னையுமயோத்திநன்னித்
தாயரைவணங்கித்தங்கள்மறையொடுமுனியைத்தாழ்ந்து
நாயகக்கோயிலெய்தினானிலக்கிழத்தியோடுஞ்
சேயொளிக்கமலத்தாளுந்திருவொடுஞ்செய்யக்கண்டான். (௧௧)

வாங்குதற்குவில்களென்றுமனமிலவொளிரும்பல்காற்
றுங்கினவென்றபோதுமைந்தருந்தையலாரும்
வீங்கியவுவகைமேனிசிறக்கவுமென்மேற்றுள்ளி
யோங்கவுங்களியாற்சோர்ந்தவுடையிலாதாரையொத்தார். (௧௨)

வேயருடுத்தகூறைவேதியர்சுற்றவேறப்
பாசிழைமகளிரன்றோளாடையைப்பரிந்துசுற்ற
வாசவெண்கலவைசாந்தென்றினையனமயக்கத்தன்றோர்
பூசினர்க்கிரட்டியானுர்பூசலார்புகுந்துளோரும். (௧௩)

இறைப்பெருஞ்செல்வநீத்தவேழிரண்டாண்டுமியாரு
முறைப்பிலாதலாலேவேறிருந்தொழிந்தமின்னூர்
பிறைக்கொழுந்தனையநெற்றிப்பெய்வளைமகளிர்மெய்யை
மறைத்தனர்பூணின்மைந்தருயிர்களுமறுக்கத்தோன்ற. (௧௪)

விண்ணுறைவோர்தந்தெய்வவெதியொடுவேறுளோர்தந்
தண்ணுறுசாற்றந்தன்விற்றலைதடுமாறுமீரான்
மண்ணுறைமாதரார்க்கும்வானுறைமடந்தைமார்க்கு
முண்ணிறைந்துயிர்ப்புவீங்கியூடலுண்டாயிற்றன்றே. (௧௫)

ஆயதோராளவிலையன்பாதனையருளினோக்கித்
ஆயவீடணற்குமற்றைச்சூரியன்மகற்குஞ்சொல்லி
மேயவானரங்களாயவீரர்க்கும்பிறர்க்குநந்தம்
நாயகக்கோவிலுள்ளநலமெலாந்தெரித்தியென்றான். (௧௬)

என்றலுமிறைஞ்சிமற்றைத்துணைவர்கள்யாவரோடுஞ்
சென்றனனெழுந்துமாடம்பலவொரீஇயுலகிற்றெய்வப்
பொன்றிணிந்தமாரோடும்பூமகளுறைந்துவாழுங்
குன்றெனவிளங்கித்தோன்றுநாயகக்கோயில்புக்கார். (௧௭)

வயிரமாணிக்கநீலமரகதமுதலாயுள்ள
செயிரறுமணிகளீன்றசெழுஞ்சுடர்க்கற்றைசுற்று
மூயிர்துணுக்குற்றுநெஞ்சமுள்ளமுழுமுசலாட
மயர்வறுமனத்தின்வீரரிமைப்பிலர்மயங்கினின்றார். (௧௮)

விண்டுவின்மார்பிற்காந்துமணியெனவிளங்குமாடங்
கண்டனர்பரதன்றன்னைவினவினரவர்க்குக்காதற்
புண்டரீகத்துறைவரும்புராதனன்கன்னற்றோளான்
கொண்டகற்றலந்தன்னாலேயுவந்துமுன்கொடுத்ததென்றான். (௧௯)

பங்கயத்தொருவனிக்குவாகுவிற்களித்தபான்மை
யிங்கிதமலராள்வைகுமாடமென்றிசைத்தபோதி
னெங்களாற்றுதிக்கலாகுமியல்பதோவென்றுகூறிச்
செங்கையைக்கூப்பிவேறோர்மண்டபமதனிற்சேர்ந்தார். (௨௦)

இருந்தனரினையமாடத்தியல்பெலாமெண்ணியெண்ணிப்
பரிந்தனரிரவிமைந்தன்பரதனைவணங்கித்தூயோய்
கருந்தடமுகிலினாற்குக்காப்புநாணணியுநன்னாட்
டெரிந்திடாதிருப்பதென்றோவென்றலுமண்ணல்செப்பும். (௨௧)

ஏழ்கடலதனிற்றோயமிருநதிபிறவிற்றோயந்
தாழ்விலாதிவண்வந்தெய்தற்கருமைத்தோதன்மைத்தென்ன
வாழியொன்றுடையோன்மைந்தனாறுமனைக்கடிதிரைக்கச்
சூழ்புவியதனையெல்லாங்கடந்தனன்காலின்றோன்றல். (௨௨)

கோமுனியோடுமற்றைக்கணிதரைக்கொணர்கவென்ன
வேவினன்றேர்வலான்சென்றிசைத்தலுமுலகமீன்ற
பூமகன்றந்தவந்தப்புனிதமாதவன்வந்தெய்த
யாவருமெழுந்துபோற்றியிணையடிதொழுதுநின்றார். (௨௩)

அரியணைபரதனீயவதன்கணுண்டிருந்தவந்தப்
பெரியவனவனைநோக்கிப்பெருநிலக்கிழத்தியோடு
முரியமாமகளிரோடுமுகந்தனரொருவில்செல்வங்
கரியவன்றுய்த்தற்கேய்ந்தகாப்புநாணுளையென்றான். (௨௪)

இந்திரன்குருவுமன்னாற்கேனையவோனவுநின்ற
மந்திரவிதியினார்க்குமயர்வறவளாந்துவிட்டார்
சந்திரகவிகையோங்குந்தயாதராமன்றுமச்
சுந்தரமவுலிசூடும்வாரமுநாளுந்தூற்றி. (௨௫)

அடுக்கியவுலகமூன்றுமாதாத்தூதர்கூவ
விடுக்கொருபெருமின்றியயோத்திவந்திறுத்ததென்றாற்
றொடுக்குறுகவியான்மற்றைத்துழனியையிறுதிதோன்ற
வொடுக்குறுத்துரைக்குந்தன்மைநான்முகத்தொருவற்குண்டோ. (௨௬)

அவ்வயின்முனிவனோடும்பரதனுமரியின்சேயுஞ்
செவ்வியினிருதர்கோனுஞ்சாம்பனும்வாலிசேயு
மெவ்வமில்லாற்றல்வீரர்யாவருமெழுந்துசென்றாங்
கவ்வியமவித்தசிந்தையண்ணலைத்தொழுதுசொன்னார். (௨௭)

நாளைமேவுறுநலந்திகழ்பெரியநன்னாள்
காளைநீசிச்சமெல்லாங்கழித்தியென்றுரைத்துக்கன்னல்
வேலையேபொடியவாகவிழிக்குநீறுதலின்வெண்பூம்
பூளையேருவானைப்பொருவுமாமுனியும்போனான். (௨௮)

நான்முகத்தொருவனேவலயனரிமயனென்றேனும்
நான்முகத்தோய்குகேள்விநுணங்கியோன்வணங்குநெஞ்சன்
கோன்முகத்துகைந்துகுற்றஞ்செற்றுலகெல்லாங்கொள்ளு
மான்முகத்தொருவனன்றுன்மண்டபம்வயங்கக்கண்டான். (௨௯)

ஆழ்கடலென்றிற்றேயமெழுவகைத்தாகச்சொன்ன
வாழ்துறையாற்றினீரோடமைந்தனவென்னவாமென்
தாழியிலிறுதிசெல்லுந்தாதைபிலுலாவியொன்று
யேழ்கடனிருந்தங்கானிருந்துயமருர்துநர்தான். (௩௦)

எரிமணிக்குடங்கள்பன்னூறியானைமேல்வரிசைக்கான்ற
விரிமதிக்குடையினீழல்வேந்தர்கள்பலருமேந்திப்
புரைமணிக்காளமார்ப்பப்பல்லியந்துவைப்பப்பொங்குஞ்
சரயுவிற்புனலுந்தந்தார்சங்கினமார்ப்பமன்னே. (௩௧)

மாணிக்கப்பலகைதைத்தவயிரத்தின்கால்கள்சேர்த்தி
யாணிப்பொன்சுற்றுமுச்சியமைதரச்சமைத்தபீட
மேனுற்றபளிக்குமாடத்திட்டனரதனின்மீது
சேணுற்றதிரடோள்வீரன்றிருவொடும்பொலிந்தான்மன்னே. (௩௨)

மங்கலகீதம்பாடமறையொலிமுழங்கவல்வாய்ச்
சங்கினங்குமுறப்பாண்டிறண்ணுமையொப்பத்தாவில்
பொங்குபல்லியங்களார்ப்பப்பூமழைபொழியவின்னே
ரெங்களுயகனைவெவ்வேறெதிரபிடேகஞ்செய்தார். (௩௩)

மாதவர்மறைவலாளர்மந்திரக்கிழவர்முற்று
முதறிவாளருள்ளஞ்சான்றவர்முதனீராட்டச்
சோதியான்மகனுமற்றைத்துணைவருமனுமன்றானுந்
நீதிலாவிலங்கைவேந்தும்பின்னபிடேகஞ்செய்தார். (௩௪)

மரகதச்சயிலஞ்செந்தாமரைமலர்க்காடுபூத்துத்
திரைகெழுகங்கைவீசுந்திவலையாலனந்துசெய்ய
விருகுழைதடரும்வேற்கண்மயிலொடுமிருந்ததேய்ப்பப்
பெருகியசெல்விகண்டார்பிறப்பெனும்பிணிகடீர்ந்தார். (௩௫)

தெய்வநீராடற்கொத்தசெய்வினைவசிட்டன்செய்ய
வையமில்சிந்தையானைச்சுமந்திரவமைச்சனோடு
சொய்திணியற்றினோன்பின்மாதவனுனித்துக்காட்ட
வெய்திணியன்றபல்வேறிந்திரற்கேயவென்ன. (௩௬)

அரியணையநுமன்றாங்கவங்கதனுடைவாளேந்தப்
பரதன்வெண்குடைகவிக்கவிருவருங்கவரிவீச
விரைசெறிகுழலியோங்கவெண்ணெய்யூர்ச்சடையன்றங்கள்
மரபுளோர்கொடுக்கவாங்கிவசிட்டனேபுனைந்தான்மௌலி. (௩௭)

வெள்ளியும்பொன்னுமென்போர்விதிமுறைதமெய்யிற்கொண்ட
வொள்ளியநாளினல்லவோரையினுலகமூன்றும்
அள்ளினர்குளிப்பமௌலிசூடினான்கடலின்வந்த
தெள்ளியதிருவுந்தெய்வப்பூமியுஞ்சேருந்தோளான் (௩௮)

சித்தமொத்தனனென்றேனுந்திருநகர்ச்செல்வமென்ன
வுத்தமத்தொருவன்சென்னிவிளங்கியவுயர்பொன்மௌலி
யொத்துமெய்க்குவமைகூறவோங்குமூவுலகத்தோர்க்கும்
உத்தமுச்சியின்மேல்வைத்ததொத்தெனத்தளர்வுதீர்ந்தார். (௩௯)

பன்னெடுங்காலநோற்றுத்தன்னுடைப்பண்பிற்கேற்ற
பின்னெடுங்கணவன்றன்னைப்பிரிந்திடைப்பெற்றமுற்றும்
தன்னிடையாசையாரத்தழுவினளிருகைதாங்கி
நன்னெடும்பூமியென்னுநங்கைதன்கொங்கையோடும். (௪௦)

திருவபிடேகப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௪௨௭௧.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௩௭-வது—விடைகொடுத்தபடலம்.

பூமகட்கணியதென்னப்பொலிபசும்பூரிசேர்த்தி
மாமணித்தூணிற்செய்தமண்டபமதனினுப்பண்
கோமணிச்சிவிகைமீதேகொண்டலுமின்னும்போலத்
தாமரைக்கிழத்தியோடுந்தயரதராமன்சார்ந்தான். (௧)

விரிகடனடுவட்பூத்தமின்னெனவாரம்வீங்க
வெரிகதிர்கடவுடன்னையினமணிமகுடமேய்ப்பக்
கருமுகிற்கரசுசெந்தாமரைமலர்க்காடுபூத்தோ
ரரியணைப்பொலிந்ததென்னவிருந்தனனயோத்திவேந்தன். (௨)

மரகதசயிலமீதுவானிலாப்பாய்வதென்ன
யிருகுழையிடரும்வேற்கணிளமுலையிளநலார்தங்
கரகமலங்கள்பூத்தகற்றையங்கவரிதெற்ற
வுரகருநாருவானத்தும்பரும்பரவியேத்த. (௩)

உலகமீரேழுந்தன்னவொளிநிழல்பரப்பவானிற்
திலகவாணுதல்வெண்டிங்கள்சிந்தைநொந்தெளிதிற்றேயக்
கலகவாணிருதர்கோனைக்கட்டழித்திட்டகீர்த்தி
விலகிமேனிவர்ந்ததென்னவெழுதனிக்குடைநின்றேய. (௪)

மங்கலகீதம்பாடமறையவராசிகூறச்
சங்கினங்குமுறப்பாண்டிறண்ணுமைதுவைப்பத்தாவில்
பொங்குபல்லியங்களார்ப்பப்பொருங்கயற்கருங்கட்செவ்வாய்ப்
பங்கயமுகத்தினார்கள்பணிடம்பயிலமாதோ. (௫)

திரைபொருடடவுநாணச்செழுமணிமகுடகோடி
கரைதெரிவிலாதசோதிக்கதிரொளிபரப்பயாரும்
வரைபொருமாடவாயினெருக்குறவந்துமன்னர்
பரிசியேவணங்குந்தோறும்பதயுகஞ்சேப்பமன்றே. (௬)

மந்திரக்கிழவர்சுற்றமறையவர்கிழவனோடுந்
தந்திரத்தலைவர்போற்றத்தம்பியர்மருங்குசூழச்
சிந்துரப்பவளச்செவ்வாய்த்தெரிவையர்பலாண்டுகூற
விந்திரற்குவமையெய்ப்பவெம்பிரானிருந்தகாலை. (௭)

மயிந்தன்மாதுமிந்தன்குமுதன்கம்பன்மற்றுமன்மாதில்
சயந்தருகுமுதக்கண்ணனைதயவிகுமுதன்றண்டார்
நயந்தெரிததிமுகன்கோதசமுகன்முதலனன்னோர்
வியந்தெழுமதுபத்தேழுகோடியாம்வீரரோடும். (௮)

ஏனையாரிருஞ்சுற்றவெழுபதுவெள்ளத்துற்ற
வானரரோடும்வெய்யோன்மகன்வந்துவணங்கிச்சூழத்
தேனிமிரலங்கற்பைந்தார்வீடணக்குரிசில்செய்ய
மானவாளரக்கரோடும்வந்தடிவணங்கிச்சூழ்ந்தான். (௯)

வெற்றிவெஞ்சேனையோடும்வெறிப்பொறிப்புலியின்வெவ்வால்
சுற்றுறத்தொடுத்துவீக்குமரையினன்கழலுங்கண்ணன்
சுற்றிரள்வயிரத்திண்கோட்கடுந்திறன்மடங்கலன்ன
தெற்றுநீர்க்கங்கைநாவாய்க்கிறைகுகன்றொழுதுசூழ்ந்தான். (௧௦)

வள்ளலுமவர்கண்மேல்வரம்பின்றிவளர்ந்தகாத
றுன்னுறப்பிணிந்தசெங்கையொளிமுகக்கமலங்காட்ட
வுள்ளுறத்தழுவினன்பாலகமகிழ்ந்தினிதிருக்கி
யெள்ளலிலாதமொய்ம்பரீண்டினிதிருத்திரென்றான். (௧௧)

நன்னெறியறிவுசான்றோர்நான்மறைக்கிழவர்மற்றைச்
சொன்னெறியறியுநீரார்தோமறும்புலமைச்செல்வர்
பன்னெறித்தொன்றுதோன்றும்பருணிதர்பண்பின்கேளார்
மன்னவர்க்கரசன்றன்னைமரபினிற்சுற்றமன்னோ. (௧௨)

தேம்புனற்படைப்பைமூதூர்த்திருநகரயோத்திசேர்ந்த
பாம்பணையமலன்றன்னைப்பழிச்சொடும்வணக்கம்பேணி
வாம்புனற்பரவைஞாலத்தரசருமற்றுளோரு
மேம்பலுற்றிருந்தார்நொய்தினிருமதியிறந்ததன்றே. (௧௩)

நெருக்கியவமரரெல்லாநெடுங்கடற்கிறைவின்றேந்தப்
பொருக்கெனவயோத்தியெய்திமற்றவர்பொருமிர
வருக்கமோடரக்கர்யாருமடிதரவரிவிற்கொண்ட
திருக்கிளர்மார்பினன்பின்செய்ததுசெப்பலுற்றாம். (௧௪)

மறையவர்தங்கட்கெல்லாமணியொடுமுத்தும்பொன்னு
நிறைவளம்பெருகும்பூவுஞ்சாயியுநிறைத்துமென்மேற்
குறையிதென்றிரந்தோர்க்கெல்லாங்குறைவறக்கொடுத்துப்பின்ன
ரறைகழலரசர்தம்மைவருகெனவருளவந்தார். (௧௫)

ஐயனுமவர்கடம்மையகமகிழ்ந்தருளினோக்கி
வையகஞ்சிவிகைதொங்கன்மாமணிமகுடம்பொற்பூண்
கொய்யுளைப்புரவித்திண்டேர்குஞ்சரமாடையின்சொன்
மெய்யுறக்கொடுத்தபின்னர்கொடுத்தனன்விடையுமன்றே. (௧௬)

சம்பரன்றன்னைவென்றுதயரதனீன்றகாலத்
தும்பர்கள்பெருமானீய்ந்தவொளிமணிக்கடகத்தோடுங்
கொம்புடைமலையுந்தேருங்குரகதக்குழுவுந்தூசு
மம்பரத்தனந்தர்நீத்தானலரிகாதலனுக்கீய்ந்தான். (௧௭)

அங்கதமிலாதகொற்றத்தண்ணலுமகிலமெல்லா
மங்கதனென்னுநாமமழகுறத்திருத்துமாபோ
லங்கதங்கன்னற்றோளாற்கயன்கொடுத்ததனையீய்ந்தா
னங்கதன்பெருமைமண்மேலாரறிந்துரையகிற்பார். (௧௮)

பின்னருமவனுக்கையன்பெருவிலையாரத்தோடு
மன்னநண்சேமாவுமதமலைக்காசுமீயா
வுன்னைநீயன்றியிந்தவுலகினிலொப்பிலாதாய்
மன்னுககதிரோன்மைந்தன்றன்னொடுமருவியென்றான். (௧௯)

மாருதிதன்னையையன்மகிழ்ந்தினிதருளினோக்க
யாருதவிடுதற்கொத்தார்நீயலாலன்றுசெய்த
பேருதவிக்கியான்செய்செயல்பிறிதில்லைமெய்ப்பூண்
போருதவியதிண்டோளாய்பொருந்துறப்புல்லுகென்றான். (௨௦)

என்றலும்வணங்கிநாணிவாய்புதைத்திலங்குதானை
முன்றலையொதுக்கிநின்றமொய்ம்பனைமுழுதுநோக்கிப்
பொன்றிணிவயிரப்பைம்பூணாரமும்புனைமென்றூசும்
வன்றிறற்கயமுமாவும்வழங்கினன்வழங்குஞ்சீரான். (௨௧)

பூமலர்த்தவிசைநீத்துப்பொன்மதின்மிதிலைபூத்த
தேமொழித்திருவையையன்றிருவருண்முகந்துநோக்கப்
பாமறைக்கிழத்தியீய்ந்தபருமுத்தமாலைகைக்கொண்
டேமுறக்கொடுத்தாளன்னாளிடரறிந்துதவினாற்கே. (௨௨)

சந்திரற்குவமைசான்றதாரகைக்குழுவைவென்ற
வித்திரற்கேய்ந்ததாருமென்னமுத்தாரத்தோடு
கந்துகளிறுவாசிதூசணிகலன்கண்மற்று
முந்திலனென்னின்வேந்தற்குலகமுந்துதவினனே. (௨௩)

நவமணிக்காசமுத்தமாலையுநலக்கொடுசு
முவமைமற்றிலாதபொற்பூணுலப்பிலபிறவுமொண்டார்க்
கவனவெம்பரியும்வேகக்கதமலைக்காசுங்காதற்
பவனனுக்கினியநண்பன்பயந்தெடுத்தவனுக்கீய்ந்தான். (௨௪)

பதவலிச்சதங்கைப்பைந்தார்ப்பாய்பரிபணைத்திண்கோட்டு
மதவலிச்சயிலம்பொற்பூண்மாமணிக்கோவைமுத்து
முதவலித்தகையதன்றியில்லனவுள்ளவெல்லாஞ்
சதவலிதனக்குத்தந்தான்சுமுகத்தவனைத்தந்தான். (௨௫)

பேசரிதொருவர்க்கேயும்பெருவிலையிதனுக்கீதக்
கோசரியிலதென்றெண்ணுமொளிமணிப்பூணுந்தூசு
மூசெரிக்குவமைமும்மைமும்மதக்களிறுமாவுங்
கேசரிதனக்குமீய்ந்தானோர்மணிமுழவுத்தோளான். (௨௬)

வளையணிகலனுந்தூசுமாமதக்களிறுமாவும்
நளனொடுகுமுதன்றனைவயநூபனசன்மற்றோ
ருளமகிழ்வெய்தும்வண்ணமுலப்பிலபிறவுமீய்ந்தான்
களமர்கமலவேலிக்கௌசலைகாதலோனே. (௨௭)

அவ்வகையறுபத்தேழுகோடியாமரியின்வேந்தர்க்
கெவ்வகைத்திறனுநல்கியினியனபிறவுங்கூறிப்
பவ்வமொத்துலகிற்பல்குமெழுபதுவெள்ளம்பார்மேற்
கவ்வையற்றினிதுவாழக்கொடுத்தனன்கடைக்கணோக்கம். (௨௮)

பின்னையேர்மவுலிச்செங்கண்வீடணப்புலவர்கோமான்
றன்னையேயினிதுநோக்கிச்சராசரந்தமக்கசால்பி
னின்னையேயொப்பார்நின்னையலதிலருளரோவைய
பொன்னையேயிரும்புநேருமாயினும்பொருவன்றென்றான். (௨௯)

என்றுரைத்தமரரீய்ந்தவெரிமணிக்கடகத்தோடும்
வன்றிறற்களிறுந்தேரும்வாசியுமணிப்பொற்பூணும்
பொன்றிணிதூசும்வாசக்கலவையும்புதுமென்சாந்து
நன்றுறவவனுக்கீய்ந்தாருகனைத்துயிலைத்தீர்ந்தான். (௩௦)

சிறந்ததுபெரியமென்றேதுஞ்செழுநகர்க்கிறையைநோக்கி
மருங்கினியுரைப்பதென்னோமருவருதமனவர்க்கென்றுக்
கருங்கைமாகளிறுமாவுங்கனகமுந்தூசும்பூணு
மொருங்குறவுதவிப்பின்னருதவினன்விடையுமன்றே. (௩௧)

அருமனைவாலிசேயைச்சாம்பனையருக்கன்றந்த
கனைகழற்காலினானைக்கருணையங்கடவுணோக்கி
யினைவதற்கரிதாநும்மைப்பிரிவென்றனீவிர்வைப்பு
மெனதருகாவற்கின்றென்னையலினேருமென்றான் (௫௨)

இலங்கைவேந்தனுக்குமிவ்வாறினியனயாவுங்கூறி
யலங்கல்வேன்மருகையண்ணல்விடைகொடுத்தருளலோடு
நலங்கொள்பேருணர்வின்மிக்கோர்நலனுறுநெஞ்சர்பின்னர்
கலங்கலரோயசெய்தல்கடனெனக்கருதிச்சூழ்ந்தார். (௫௩)

பரதனையிளையகோவைச்சத்துருக்கனைப்பண்டை
விரதமாதவனைத்தாயர்மூவரைமிதிலைப்பொன்னை
வரதனைவலங்கொண்டேத்திவணங்கினர்விடையுங்கொண்டே
சரதமாநெறியும்வல்லோர்தந்தம்பதியைச்சார்ந்தார். (௫௪)

குகனைத்தம்பதியினுய்த்துக்குன்றினையலஞ்செய்தோளன்
மகனைத்தன்புரத்தில்விட்டுவாளெயிற்றரக்கர்சூழக்
ககனத்தின்மிசையேயெய்திக்கனைகடலிலங்கைபுக்கா
னகனுற்றகாதலண்ணலலங்கல்வீடணனென்றன்றே. (௫௫)

ஐயனுமவரைநீக்கியடிசெறிதுணைவரோடும்
வையகமுழுதுஞ்செங்கோன்மனுநெறிமுறையிற்செல்லச்
செய்யமாமகளுமற்றைச்செகதலமகளுமற்று
மையுமாறின்றிக்காத்தானிலம்புரைகடீர்த்தே. (௫௬)

உம்பரோடிம்பர்காறுமுலகமோரேழுமேழு
மெம்பெருமானென்றேத்தியிறைஞ்சிநின்றேவல்செய்யத்
தம்பியரோடுந்தானுந்தருமமுந்தரணிகாத்தா
னம்பரத்தனந்தனீங்கியயோத்திவந்திருந்தகாலை. (௫௭)

வேறு.

அன்னதானமகிலநற்றனமே
கன்னிதானங்கபிலைநற்றனமே
சொன்னதானப்பலமெனச்சொல்லுவார்
மன்னிராமன்கதைமறவார்க்கரோ. (௫௮)

இருவரம்பிலிராமவென்றாரும்பர்
நிறுவவொன்பதுநிச்சயமாதலான்
மறுவின்மாக்கதைகேட்பவர்வைகுந்தம்
பெறுவரொன்பதுபேசவும்வேண்டுமோ. (௫௯)

வேறு.

இராவணன்றன்னைவிட்டவிராமனாய்வந்துதோன்றித்
தராதலமுழுதுங்காத்துத்தம்பியுந்தானுமாகப்
பராபரமாகிநின்றபண்பினைப்பகருவார்க
ணராபதியாகிப்பின்னுநமனையும்வெல்லுவாரே. (௬0)

வேறு.

இராகவன் கதையிதொருவிருத்தத்தினைகபோதத்தினையுணர்வோர்
பாரவருமலரோனுலகினிலவனூற்பன்முறைவழுத்தவீற்றிருந்து
பாரதனமறையுமண்டர்பொற்பதமும்பொன்னாளாதனிலும்பொன்று
வாரவளையமலனுலகினிலாம்பதத்தினையணுகுவரன்றே. (௪௧)

விடைகொடுத்தபடலம்-முற்றிற்று.

ஆ படலம்- ௬௭.இ- திருவிருத்தம் - ௪௬௨௮.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்

யுத்தகாண்டம்

இரண்டாம்புத்தகம்

முற்றுப்பெற்றது.

உ

புத்தகவிளம்பரம்.

இதனால் இகபரசாதகங்களையடைய விரும்பும் புண்ணியவான்களுக்கு அறிவிப்பதியாதெனில் ம-ா-ா-ஸ்ரீ-இயற்றமிழாசிரியர்-திரு-விசாகப்பெருமாளையர், ம-ா-ா-ஸ்ரீ-வி-கா-சபாபதிமுதலியார், ம-ா-ா-ஸ்ரீ-பு-அஷ்டாவதானம்-சபாபதிமுதலியார், ம-ா-ா-ஸ்ரீ-சி-வி-கோவிந்தபிள்ளை, ம-ா-ா-ஸ்ரீ-கா-வி-கச்சபாலயஐயர்முதலிய சிறந்தவித்வான்களைக்கொண்டு ஆராய்ச்சிசெய்வித்து அச்சியற்றிமுடித்து, தினவர்த்தமானியென்கின்ற பத்திரிகையில் பிரசுரஞ்செய்து இருக்கும். பெரியபுராணம் - கம்பராமாயணம்-எ-காண்டம்முதலிய புத்தகங்களை வேண்டுகிறவர்கள் சென்னை பெத்துநாயக்கன்பேட்டை சின்னகடைக்கடுத்த சாலைவீதியில் - ௨ - வது நம்பர்வீட்டிலிருக்கும் புங்கத்தூர்-கந்தசாமிமுதலியார்-அல்லது நாகமணிமுதலியாருக்கு யெழுதிக்கொள்ளலாம். தபால்முத்திரையனுப்பினால் ரூபா-க-இ-க-அணாவட்டத்துடன் தபால்சிலவுமனுப்பவேண்டுவது, அன்றியும் இப்போது பதிப்பித்துக்கொண்டுவரும் புத்தகங்களுக்காக கையொப்பஞ்செய்ய விருப்பமுள்ளவர்கள் கடிதமூலமாய்தெரிவித்தால் கையொப்பப்புத்தகங்கள் அவர்களுக்கு அனுப்பப்படும். அப்படிக்கையொப்பஞ்செய்தவர்களுக்கு புத்தகங்கள் அனுப்ப தபாற்செலவு அவர்களேகொடுக்கவேண்டியது.